
உலக சைவப் பேரவை

# சிறப்பு மலர்

## நான்காவது
## உலக சைவ மாநாடு
## 1995



கொழும்பு, இலங்கை.

250.98
நான்
SLIPR

சிவசிவ

# World Saiva Council
## உலக சைவப் பேரவை

**Please address all correspondences to : LONDON HEAD-QUARTERS**

**Chief Executive W.S.C.C/O London Meikandar Aadheenam**
72,KING EDWARD ROAD,LONDON E176 HZ UNITED KINGDOM
**(Established in Madras 29-2-92)**

## (W.S.C. CENTRAL EXECUTIVE COMMITTEE AS ON 2-9-95)

PRESIDENT
H.H.SRILA SRI Kasivasi
Muthukumaraswami (India)

VICE PRESIDENT
(Chif Executive)
Swami Siva Nandhi Adik alaar

SECRETARY GENERAL
Dr.K.Loganathan
(Malaysia)

TREASURER
Thiru M. Ramalingam B.Com
(India)

ASST. TREASURER (EUROPE)
Dr.C.Sornalingam (U.K)

ASST. TREASURER (W.S.C)
Head Quarters
Mrs.L.Subashini

PUBLIC RELATIONS OFFICERS:
Thiru K.Thayaparan (Sri Lanka)
Thiru P.S.Patkunarajah (France)
Dr.Sp.Thinnappan (Singapore)
Swami Vivekananda (S. Africa)
Dr.S.Navaratnam (U.K)
Thiru M.Govindan (Mauritius)
Thiru K.Gopal ( Singapore)

## W S C INTERNATIONAL ADVISORY COUN CILON POLICY AS. ON 1-1-94

| Patron | Chairman | Secretary | Asst. Secretary | Asst Treasurer |
|---|---|---|---|---|
| H.H.Sri La Sri Guru Maha Sannidaanam Dharmapuram | Thavath Thiru Santhalinga Ramasamy Adikalaar (Tamil Nadu, India) | Thavath -Thiru Siva Nandhi Adikalaar (U.K) | Swami Premananda (S. Africa) | Dr. S. Navaratnam (U.K) |

## MEMBERS

*(W.S.C.Hd.Qrs officials are ex-officio members)*

**CANADA**
Thiru T.Vignarajah
Dr. E. Vytilingam
Thiru Pon. Nalliah

**INDIA**
Prof . V.A. Devasenapathi
Prof V. Ratnasabapathy
Thiru C.N.Singaravelu
Thiru V.V. Swaminathan
Prof. K.P. Aravaanan
Dr. Avvai Natarajan
Thiru P. Natesan

**U.S.A & U.K.**
Dr. S P Rajah
Dr. S. Navaratnam
Thiru M. Alagappan
Thiru P.S. Patkunarajah
Thiru S. Ganesan
Dr. Raj Chandran

**SRI LANKA**
Thiru K. Thayaparan
Thiru K. Shanmugalingam
Thiru A.M.Duraisamy
Thiru K. Kanagarajah
Arutselvi Thangamma Appakutty

**SOUTH AFRICA**
Thiru A.Pillai
Thirumathi P. Murugan
Thiru Villa Pillai
Swami Premananda

**EUROPE & MALAYSIA**
Dr. K. Loganathan
Thiru M.K.Samy
Thiru T. Rajendran
Thirumathi A. Rajendran
Thirumathi S.Loganathan
Thiru V. Seenivasagam

**FRANCE/RE-UNION/MAURITIUS**
Dr. V. Cumaraswamy
K. Jeyarajasingam
P.S. Patkunarajah
M.Sukumaran

**SINGAPORE**
Dr.S.P.Thinnapan
Thirumathy K. Ambalavanan
Thiru K. Gopal
Prof. R.Kanagasundaram
Thirumathy Gopal
Thiru C.Rajendran
Thiru S. Krishnan

# உலக சைவப் பேரவை

நான்காவது

பொதுச்சபை[illegible] கூட்டமும்

உலக சை[illegible]நாடும்

# சிறப்பு மலர்

**8-10 செப்டெம்பர் 1995**

**மாநாட்டின் கருப்பொருள்**

**"இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற்திட்டங்கள்"**

**இடம்**

இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்

கொழும்பு-6

இலங்கை

**விழா ஒழுங்கமைப்பு**

உல்க சைவப் பேரவை இலங்கைக் கிளை

கொழும்பு மகளிர் இந்து மன்றம்


உ
சிவ சிவ

கயிலைமாமுனிவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்,

திருப்பனந்தாள் — 612 504
(தஞ்சை மாவட்டம்)

ஸ்ரீலஸ்ரீ-காசிவாசி முத்துக்குமார சுவாமிகள்

## வாழ்த்துரை



உலகளாவிய நிலையில், மேன்மை கொள் சைவநீதி பரந்துபட்டு விளங்கிய உண்மையைப் பல சான்றாதாரங்களால் வரலாற்றுப் பேரறிஞர்கள் நிறுவியுள்ளனர். 'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்' 'ஓர்த்துள்ளம் உள்ளது உணர்ந்து' வல்லார் ஆன எம்பிரான் அடியார்புகழ் உலகெங்கும் நின்று நிலவிடவும், மலர்தலை உலகின் மல்கிருள் இரண்டனுள் அகவிருளைப் போக்குகின்ற ஞானநூற் பெருமையை யாவர்க்கும் வலியுறுத்தவும், பழமையும் புனிதமும் மேன்மையும் மிக்குடையதாம் சைவசித்தாந்தச் செம்பொருளைத் தழைக்கச் செய்திடவும், பல்வேறு முயற்சிகள் பல்வேறு அமைப்புக்களால் பல கால எல்லைகளில் எடுக்கப்பெற்று, கனிவுற்றுப் பயனை நல்கி வரும் அரிய காலம் இது. இக்காலை 'உலக சைவப் பேரவை' எனும் ஓரமைப்புக் கண்டு அதன்வழி மேற்கூறிப் போந்த அரிய, நீண்ட பணிகளை விரைந்து ஆற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது. இவ்வமைப்பு 1995 – செப்டம்பர்த் திங்களில் கொழும்பு மாநகரில் நான்காவது உலக சைவ மாநாட்டை நிகழ்த்துவதும் அவ்விழாவில் சமயச் சீர்மைகளை உள்ளடக்கிய படைப்புகளோடு மலரொன்று வெளியிடப்பெறுவதும் அறிந்து மகிழ்ச்சி.

செந்தமிழும், சைவநீதியும் கலந்து குழைத்துத் தரப்பெறும் அற்புதப் படைப்புகளுடன், மலர் பொலிவுடன் வெளிவரவும், உலக சைவ மாநாடு எண்ணிய பயன்களை எண்ணியாங்கு நல்கிடவும், உலக சைவப் பேரவை இத்தகு உன்னதப் பணிகளைத் தொடர்ந்தாற்றிச் சிறப்புறவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவசிவ


உ

தொலைபேசி : 36495
கயிலைமாமுனிவர் வித்துவான்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
தலைவர் கோவை நீலகிரி மாவட்டத்
திருக்கோயில் வாரியம்
தமிழகக் கோயில் சீரமைப்பு
வல்லுநர் குழு
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயம்புத்தூர்-641 010. தமிழ்நாடு

Telephone : 36495
Kailai-Ma-Munivar Vidwan
**Santhalinga Ramasamy Adigal**
President Board of Temples
Coimbatore and Nilgiris Districts
Tamilnadu Temple renovation
Experts Committee,
PERURAATHEENAM, PERUR (P.O.)
COIMBATORE-641 010. TAMIL NADU

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

## உலக சைவ மாநாடு (கொழும்பு) - வாழ்த்துப்பா



உலகிற் தமிழ் மொழி உயர்தனிச் செம்மொழி
நிலவும் இலங்கையில் நெடிது வாழ் தமிழர்
சிவநெறி திருமுறை சைவசித்தாந்தம்
தவநெறிக் கொள்கை தழைத்து பண்பால்
அன்பால் சிறந்த ஆன்றோர் சிவநெறி
தன்பால் கொண்ட தகைமையர் திருமுறை
இல்லந்தோறும் இசைத்திடும் மரபும்
நல்லூர் ஆறுமுக நாவலர் முதல்
பல்லோர் போற்றிய பழம்பெருஞ் சமயம்
திருக்கேதீச்சரம் சேர் கோணமாமலைத்
திருமுறைப் பாடல் திகழும் இந்நாடு
கடலிடை முத்தாய் கவினுறும் இதன்பால்
படரும் செவ்வரி பதியா வண்ணம்
நிலவும் நம் சமய நெறி வளர்த்திடுவோம்.

ஆறுமுக நாவலரும் அடுத்து வந்த சான்றோரும்
வீறுபெறத் திருமுறையின் விளக்கம் அகந்தொறும் பொலிய
பேறுபெற்ற இலங்கையில் பிறங்கு சைவ மாநாடு
நீறணிவார் பேணும் தமிழ் நெறி வளர்க்க வாழ்த்துகின்றோம்.

வண்ணமிகு அம்பலவர் மலரடி போற்றிடுவோர் தம்
எண்ணமெலாம் திருமுறையின் வெளிப்பாடென்றிட உலகில்
உண்ணெகிழ்ச்சி தந்து மிகு உயர் தலங்கள் தமிழ்நெறியில்
புண்ணியம் சேர்வழிபாடு புரியு நிலைதனைக் காண்போம்.

கற்கோயில் கலைக்கோயில் கவின்மிகும் ஓவியம் சிறந்து
சொற்கோயில் திருமுறையாம் தொடர்பாலே வளர்ந்தன்றோ
பொற்பாரும் சிவதலங்கள் பொலிவிழந்து பிறமொழிப்பால்
நிற்பாரின் மயக்கமது நீங்கிடு நற்பணி செய்வோம்.

இலங்கைக் கொழும்பு மாநாட்டில் இடர்கள் நீங்கும் வகைதனிலே
கலகச் செயல்கள் தாம் நீங்கி கன்னித் தமிழால் வழிபடவே
நிலவும் சைவத்திருமுறைகள் நிறைவாழ்வியலில் சேர்த்திடுவோம்
உலகநலம்சேர் தமிழ் மரபில் ஒன்றிப் பணியில் உயர்ந்திடுவோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமி

உ


சிவமயம்

# ஸ்ரீ மௌன மடாலயம்

39, சபாநாயகர் தெரு

***சிதம்பரம்-608 001***

## ஆசியுரை



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

" நான்காவது உலக சைவ மாநாடு இலங்கையில் நடைபெறுங்கால், மாநாட்டுச் சிறப்புமலரொன்று வெளியிடவுள்ளது பாராட்டுதற்குரியது.

திருஞானசம்பந்தர் முதலாக சேக்கிழார் ஈறாக இருபத்தேழு அருளாளர்களின் அருள் நலம் பழுநிய அமுதவாக்காகிய திருமுறைக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் கட்டுரை மலர்களாக அமையட்டும்.


*"ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்*
*நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்- சிசி*
*சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்*
*மனமே உனக் கென்ன வாய்".*

என்றருளிச் செய்த தருமையாதீனம் ஆதி குருமுதல்வரின் அருள் வாக்கிற்கிணங்க மாநாட்டு நிகழ்ச்சிகளில் சிவபூசை அன்பர்கட்கு எழுந்தருளச் செய்தல், திருமுறைகள் முற்றோதல் தொடங்கி வைத்தல், சமயதீட்சை வழங்குதல் முதலானவை நடைபெறச் செய்யலாம்.

மாநாட்டு மலரானது கற்போரை மனத்துக்கண் மாசிலனாக்கும் பெற்றியதாய் அமைய எல்லாம் வல்ல ஸ்ரீமந் ஆனந்த நடராஜப் பெருமான் திருவருளும் ஸ்ரீமௌன தேசிகர் குருவருளும் துணையாகட்டும்.

*மௌனசுவாமிகள்*

உ



குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

குருமஹா சந்நிதானம் - ஆதிமுதல்வர், ஸ்தாபகர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.



அருளோங்கும் சைவமெய்யன்பர்களே

## சைவம்

சைவம் சிவ சம்பந்தமுடையது. சிவசிவ என்று உபாசனை செய்யின் சிவகதிதான் எய்துவர். மிக எளிதாக விளங்கக் கூடிய திருமந்திரம் சான்றுபகரும். சி– மலங்கள் இல்லாதவர். வ– சர்வ வல்லமையுள்ளவர் என்பது பொருள். வேதம் போன்று பரம்பொருளாகிய சிவ பெருமானின் அருட்கடாக்ஷத்தால் மெய்ஞ்ஞானிகள் கேட்டு அறிந்து அருளியதெனவே கொள்ள வேண்டும். சைவத்தின் அருமை, பெருமை ஆழத்தை இன்னும் யாரும் அறிந்ததில்லை. மற்றைய சமயங்களுக்கு முன்னோடியாக முற்காலத்தில் உலகளாவிய சமயம் என நல்லறிஞர்கள் ஆராய்ந்து விளக்கியுள்ளனர். இக் கூற்றுக்குச் சான்றாக அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் சிற்பங்கள், சின்னங்களைக் கண்டு ஆராய்ந்து நிரூபித்துள்ளனர்.

சைவ வழிபாட்டு முறைகள் கிரியைகள் யாவும் விஞ்ஞான முடிபுகளுக்கு ஒப்பானவை. காய்கள் தராத மலர்கள் நிவேதிக்கப்படுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு பாபத்தை நீக்கமுடியுமோ அவ்வளவுக் கவ்வளவு செயற்பாடுகள். விபூதி மேலான ஐஸ்வரியத்தைத் தருவது. அதனை நெற்றியில் நிறையத் தரித்துக் கொண்டால் விஷ வாயுவை உறிஞ்சிக் கொள்ளும். சாஷ்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், பிரதிஷ்டை, வலம் வருதல் எல்லாம் யோகாசன சம்பந்தமுடையவை. ஆதி சைவப் பெருமக்கள் இவற்றை எவ்விதம் கண்டறிந்தனர் என்பது வியப்புக்குரியது. சைவசின்னங்களை அணிவது நாகரீகம் இல்லை எனச் சிலர் எண்ணுகிறார்கள். நல்லறிவு இல்லாத் தன்மை இது. எமது சமய குரவர்கள் திருமுறைகளை ஆக்கித்தந்து சைவத்தின் அளவிலா அற்புதப் பெருமைகளை நிலைநாட்டியுள்ளனர்.

சைவ சமயத்தை நன்கு ஆதரித்துப் பேணிவளர்க்கும் உலக சைவப் பேரவை அன்னைக்கு–தாய்க்கு ஒப்பானது. எமக்கு இவ்வொரு சபை தானுளது. சைவமக்களாகிய யாம் இதற்கு எம்பாலியன்ற ஆக்கமும் ஊக்கமுமளிப்பது எமது தலையாய கடமையாகும்.

வளர்க சைவம், வாழ்க சைவம்!
என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்.

# WORLD SAIVA COUNCIL

LONDON (U.K.) HEADQUARTERS

**President :**
H. H. Thavaththiru Kasivasi
Muthukumaraswamy Thambiran Swamigal

**Vice-President & Chief Executive :**
Swami Siva Nandhi Adikalaar *(U.K.)*
(Chairman, Central Executive (H. Q.)

**Secretary-General & Editor "SAIVA ULAKAM"**
Dr. K. Loganathan *(Malaysia)*

**Treasurer :**
Thiru M. Ramalingam B.Com. *(India)*

**Asst. Secretary-General**
Dr. S. Navaratnam *(U.K.)*

சிவாய நம:

Established in Madras, 29-2-92


உலக சைவப் பேரவை
CENTRAL EXECUTIVE

தலைமைச் செயலகம்

From :
Chief Executive : W.S.C. (H.Q.)
C/o London Meikandaar Aadheenam
72, KING EDWARD ROAD
LONDON E17 6HZ
UNITED KINGDOM

(Ref :-

## வாழ்த்துரை



காலத்தாலும், கருத்தாலும் முதன்மைபெற்று, இன்று உலக சமயங்களுக்கே ஊன்று கோலாக அமைந்து பீடு நடைபோடுவது உலகத்தமிழர்கள் போற்றும் எமது சைவ சமயமாகும். சிவ நடனத்தின் தத்துவம் பொதிந்த அழகொளிரும் சிற்பமும் பரதநாட்டியக்கலையும், தேன் சொரியும் திருவாசக பக்திப் பனுவலும் சைவத்தமிழர்களாகிய நாம் கலை உலகிற்கு அளித்த நன்கொடை. இத்தகைய பெருமை வாய்ந்த பாரம்பரியத்தை மேலும் வளர்த்து நாமும், உலகமும் நலம்பெறச் செய்வதே உலக சைவப் பேரவையின் தோற்றத்திற்குக் காரணம்.

பேரவையின் நான்காவது உலக சைவமாநாடு, கொழும்பு மாநகரில் நடைபெற முன்னின்று உழைத்த பேரவையின் இலங்கைக்கிளை உறுப்பினர்களுக்கும், துணைநின்ற கொழும்பு இந்து மகளிர் சங்க உறுப்பினர்க்கும், மற்றும் அன்பர்களுக்கும் எமது உளமார்ந்த அன்புப் பாராட்டுகள்.

மாநாட்டில் பங்குபற்றும் பல உலக சைவப் பேராளர்கள் பேச்சுக்களோடு அமையாது பல அரிய செயல் திட்டங்களையும் ஆராய்ந்து இன்றைய 20ம் நூற்றாண்டுச் சூழ்நிலைக்கேற்ப உருவாக்க முன்வந்துள்ளது போற்றுதற்குரிய சீரிய சிவப்பணியாகும். எல்லோரும் இன்புற்று வாழ்க.! 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

*அன்பே சிவம்*

*சிவ சிவ*
*சுவாமி சிவநந்தி அடிகளார்*

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, RAMAKRISHNA ROAD
COLOMBO - 6.
Phone : 588253

'நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க!

# வாழ்த்துச் செய்தி



உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை, எதிர்வரும் செப்டம்பர் 8,9,10 ஆம் திகதிகளில், சைவப் பேரவையின் பொதுக்கூட்டம் மற்றும் உலக மாநாட்டை, கொழும்பு நகரில் நடத்தவுள்ளதையறிந்து மகிழ்ச்சியடைகிறோம். துறவிப் பெருமக்களும், அறிஞர்கள் பலரும் கலந்து கொள்ளும் இம்மாநாடு, இலங்கை வாழ் சைவப் பெருமக்களது மனதில் இறைபற்றையும், சமய ஆர்வத்தையும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

சைவ சமயம் மிகத் தொன்மையானது அருட்செல்வர்களாகிய நாயன்மார்களால் கண் எனப்போற்றி வளர்க்கப்பட்ட சமயம் இது. அவர்கள் அருளியுள்ள பக்திரசம் ததும்பும் திருமுறைகள், கோடானு கோடி பக்தர்களது வாழ்க்கையின் ஊன்றுகோலாக இன்றும், என்றும் விளங்குபவை. 'பருகலாம் பரமாயதோர் ஆனந்தம் மருகலானடி வாழ்த்தி வணங்கவே' என்று, இறை வாழ்க்கையின் பரம இரகசியத்தையும், பயனையும் தெள்ளென விளக்கும் இச்சமயத்தை, மக்கள் சரியான முறையில் விளங்கிக் கொள்ளவும், வாழ்க்கையில் கடைப்பிடிக்கவுமே இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என உணரலாம்.

சமயத்தைச் சரியான முறையில் கடைபிடிக்கத் தவறியதன் காரணத்தினாலேயே, இன்று சமுதாயத்தில், அமைதியின்மையும் அராஜகமும் பெருகியுள்ளன. அர்த்தமற்ற சொற்களாகவோ, செயல்களாகவோ, சமயம் மாறிவிடும்போதே இத்தகைய அவலநிலை ஏற்படுகின்றது. தூய்மை, அன்பு, நேர்மை, சுயநலமின்மை போன்ற உயர் பண்புகளின் அடிப்படையில் சமயத்தை அமைக்கும் பொழுது அது சக்தியுடையதாகி சமுதாயத்தின் தீமைகளை வேருடன் களைய வழிவகுக்கிறது. சைவசமயம், அத்தகைய உயர்பண்புகளைக் கொண்ட நாயன்மார்களைப் பெற்ற பெருமை படைத்தது; எனவேதான் சிரஞ்சீவியாக என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்று, திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு சரியான பாதையைக் காட்டுவது அனைத்துப் பெற்றோர், பெரியோர்களினதும் மிக முக்கிய அவசர கடமையாகும். மிக உயர்ந்த நோக்கத்தோடும், மிக்க சிரமத்தோடும் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்திருக்கும் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளையினரை மனமாரப் பாராட்டுகிறோம். அவர்களது உழைப்பு நற்பயனையளிக்க எல்லாம் வல்ல சிவபெருமானது திருப்பாதங்களை வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

இறைபணியில்
சுவாமி ஆத்மகனாநந்தா

ලක්ෂ්මන් ජයකොඩි
සංස්කෘතික හා ආගමික කටයුතු අමාත්‍ය

லக்ஷ்மன் ஜயகொடி
கலாசார, சமய அலுவல்கள் அமைச்சர்

මගේ අංකය / எனது இல. / My No. CA/U4/HA/WSC

ඔබේ අංකය / உமது இல. / Your No.

255, බෞද්ධාලෝක මාවත, කොළඹ 07.
255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07.
255, Bauddhaloka Mawatha, Colombo 07.

දිනය / திகதி / Date 28.8.1995

## Message from Hon. Lakshman Jayakody

Minister Of Cultural & Religious Affairs



I am pleased to send my greetings and best wishes to the Fourth World Saiva Conference scheduled to be held in Colombo from 8 th to the 10 th September 1995.

This is an event of great significance to the Saivites of Sri Lanka in particular and those who are scattered far and wide all over the world.

Sri Lanka is a multi religious, multi cultural society, wherein four of the great religions of the world namely Buddhism,. Hinduism,Islam and Christianity had lived and thrived. Members of these religions have lived in peace and harmony for several centuries in this country. Essence of culture lies when one abides by his/ her religion firmly and be proud of it, while at the same time tolerate and respect the views of others.

It is my fervent hope that the deliberations of the conference will be fruitful and rewarding and will contribute to the avoidance of the repetition of errors of history and stress the pricelessness and blessings of peace.

I wish the conference all success.

*Lakshmam Jayakody*
*Minister of Cultural & Religious Affairs*

# வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு சௌ.தொண்டமான் பா.உ
காலநடை அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர்
ஸ்ரீலங்கா



சைவசமயத்தைப் பேணிப்பாதுகாக்கவும், வளம்படுத்தி உலகறியச் செய்யவும் உலக சைவப் பேரவை முன்னணியில் நின்று உழைக்கின்றது. சைவசமயக் கருத்துக்களும், ஆழ்ந்த தத்துவங்களும் தமிழரின் சமய இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைத் தொகுத்து கூறப்போனால் அவற்றை சைவசித்தாந்தம் என்று குறிப்பிடலாம்.

மக்களின் கல்வியறிவு பெருகிவரும் காலத்தில் பழைய நூல்களையும், தத்துவங்களையும் கற்றறியும் ஆவல் பெருகிக்கொண்டுவருகிறது. கற்றவர்களின் இயல்பு தாம் பெற்ற பேற்றையும், அறிவையும், அநுபவத்தையும் எல்லோரும் அறியச் செய்து இன்புறுவதாகும். அத்தோடு சைவசித்தாந்தத்தை நிறைவு பெறக் கற்றோர்கள், அந்த தத்துவத்தின் வழியில் நின்று ஆன்ம ஈடேற்றத்துக்கு தமது வாழ்க்கையை இட்டுச்செல்வார்கள். தாம் கற்ற கல்வி, வாழ்க்கையின் அநுபவங்களோடு இசைந்து, அவர்களது உணர்வோடு கலந்து, அவர்களின் வாழ்க்கையை முழுமையாக மாற்றி நிறைவு பெறச் செய்து நிலையான உண்மைகளை அறிந்தும், உணர்ந்தும் கொள்ள உதவுகிறது. இத்தகைய முயற்சிக்கு ஊக்கமும், உதவியும் அளிக்க உலக சைவப் பேரவை எடுத்துவரும் முயற்சிகளை சைவ சமுதாயம் வரவேற்கின்றது. அதைப் பாராட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பேரவை தனது நான்காவது சர்வதேச சைவ மாநாட்டை புரட்டாதி மாதம் கொழும்பில் நடத்துவதற்கு எடுத்துவரும் முயற்சிகள் சைவ சமயத்தவர்கள் பாராட்ட வேண்டியதொன்றாகும். சைவ உலகம் என்ற செய்தி மலரை இப் பேரவை ஆழ்ந்த கருத்துக்களடங்கிய கட்டுரைகளோடு வெளியிடுவது எல்லோருக்கும் பயன்படுவதாகும். பேரவையின் நன்முயற்சிகள் யாவும் சீரிய பலனை அளிக்குமென்று எனக்கு நம்பிக்கை உண்டு. எனவே மாநாட்டின் பலாபலன்கள் சைவ மக்களைச் சென்றடைய வேண்டுமென விரும்பி, உலக சைவப்பேரவை பல நாடுகளுக்கும் தனது தத்துவக்கருத்துக்களை பரப்புவதோடு தொடர்ந்தும் தமது அரும்பணியில் ஈடுபட வேண்டுமென்று விரும்பி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


சௌ. தொண்டமான்
*காலநடை அபிவிருத்தி மற்றும்*
*கிராமிய கைத்தொழில் அமைச்சர்*

නිවාස, ඉදිකිරීම් හා මහජන උපයෝගිතා අමාත්‍යාංශය
வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொது வசதிகள் அமைச்சு
MINISTRY OF HOUSING, CONSTRUCTION AND PUBLIC UTILITIES

'සෙත්සිරිපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, බත්තරමුල්ල. 'செத்சிறிபாய', ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பத்தரமுல்லை. 'SETHSIRIPAYA', SRI JAYAWARDENEPURA KOTTE, BATTARAMULLA.
දුරකථන தொலைபேசி Telephone: 86721-2, 86925, 86257 ෆැක්ස් பெக்ஸ் Fax: 86583

தோட்ட வீடமைப்பு, பொதுவசதிகள் பிரதியமைச்சர்
மாண்புமிகு பெ.சந்திரசேகரன் அவர்களின்

## வாழ்த்துரை



உலக சைவப்பேரவையின் நான்காவது மாநாடு செப்டெம்பர் திங்களில் கொழும்பில் நடைபெறவிருப்பதும், " இன்றைய சர்வதேச சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்குச் சாதகமான செயற் திட்டங்கள்" என்ற தலைப்பு தொனிப்பொருளாயமைவதும் சைவத்தின்பால் ஈடுபாடுகொண்டவர்கள் அனைவருக்குமே புத்துணர்வை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மஹோன்னத நிலையிலிருந்த சைவநெறி இன்று உலகளாவிய சித்தாந்தமாக வியாபித்துள்ளது. அதுவே, இம்மாநாட்டின் தொனிப்பொருள் தொடர்பான ஆய்வைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சைவம் தழைக்கவும், கால ஓட்டத்தில் எழுந்துவந்த சோதனைகளை வெல்லவும், தம்முடைய பங்களிப்பால் வரலாற்றில் இடம்பெற்ற மகான்களை நினைவுகொள்ளும் இந்த வேளையில், இப்பணியினை இன்றும் தொடர்ந்து முன்னெடுக்கும் பெரியார்களை பெருமைப்படுத்துவதிலும் சைவ உலகு பின் நிற்காது.

மாநாடு தன் குறிக்கோளில் வெற்றிபெறவும் நினைவுமலர் பயனுள்ள சைவக்கருவூலமாக அமையவும் என் வாழ்த்துக்கள்.

பெ. சந்திரசேகரன்
பிரதியமைச்சர், தோட்டவீடமைப்பு,
பொதுவசதிகள்.

# K. VIKNARAJAH
## Governor, Western Province
## No. 5, Meeraniya Street, Colombo 12, Sri Lanka.

உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுச் சபைக்கூட்டம்
உலக சைவ மாநாடு ஆகியவற்றுக்கு மேல்மாகாண ஆளுநர்
**மாண்புமிகு கே. விக்னராஜா அவர்களின் செய்தி**



உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுச் சபைக்கூட்டம், உலக சைவ மாநாடு ஆகியவற்றுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பும் பேறு கிடைத்ததையிட்டு கழிபேருவகை அடைகின்றேன்.

சிவ சம்பந்தமானது சைவம். அது குறித்த எந்தக் குழுவையும் கட்டாது உலகந்தழுவியது. 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது பெரிய புராணம். 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்' என்பது சிவஞானசித்தியார். உலகம் என்ற சொல்லை மங்களச் சொல்லாகக் கொள்வது சைவத்தமிழ் மரபு.

இத்தகைய சைவத்தின் அருமை, பெருமை, மாண்புகள், பெரும்பாலும் குடத்து விளக்காகவே இருந்து வந்ததனால் உலகத்தினர் அதனால் பெரிதும் பயன் அடையவில்லை. ஜி.யு.போப் போன்ற உலக அறிஞர் சிலரே சைவத்தின் பெருமையை அறிந்திருந்தனர். இப்போது சைவர்கள், தமிழர்கள் ஆகியோரே சைவத்தின் அருமை பெருமைகளை மறந்து விடும் தறுவாயில் இருக்கின்றனர்.

இந்த நிலையைத் திருத்த உலக சைவப் பேரவை பெரும்பணி புரிய முடியும். உலக சைவ மாநாடுகள், சைவர்களும் பிற உலகினரும் சைவ உண்மைகளை அறிந்து உணர்ந்து உய்தி அடைய உதவும். சைவம் பிற சமயங்களோடு முரணாதது; பிணக்கு அற்றது; அவை எல்லாவற்றையும் தன்னுள் அமைத்துக்கொள்ளும் இயல்பைக் கொண்டுள்ளது. இதனால் பிணக்குகள், முரண்பாடுகள் இல்லாத சமுதாயத்தையும் உலகத்தையும் அமைப்பதற்குத் தளம் ஆகக்கூடிய ஆற்றலை அது கொண்டுள்ளது. எனவே சைவம் பற்றிய உண்மைகளைச் சைவரும், உலகமும் அறிந்து பயன்கொள்ளக் கூடியதாக உலக சைவப்பேரவை, உலக சைவ மாநாட்டை நடத்துவது போற்ற வேண்டிய முயற்சி. இம்முயற்சி இனிது நிறைவேற அன்றாலின் கீழிருந்து அறமுரைத்த ஆலமர் செல்வனாம் சிவனை வேண்டித் தாள் பணிகின்றேன்.

*" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."*

கே. விக்னராஜா.
(மேல்மாகாண ஆளுநர்)

கே. ගණේෂලිංගම් සා. වි., නි.බ.
කොළඹ වැඩබලන නගරාධිපති
க. கணேசலிங்கம்
ஜே. பீ. யூ. எம்.
கொழும்பு பதில் மாநகர முதல்வர்
K. GANESHALINGAM J.P., U.M.
ACTING MAYOR OF COLOMBO

නගර ශාලාව, කොළඹ 7.
நகர மண்டபம்,
கொழும்பு 7.
TOWN HALL, COLOMBO 7.

கொழும்பு மாநகர முதல்வர் க. கணேசலிங்கம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



உலக சைவப் பேரவையின் நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டமும், சைவ மாநாடும் இலங்கையின் தலைநகரமான கொழும்பு மாநகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ள இனிய செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியா, திருப்பனந்தாள் ஆதீனகுரு முதல்வர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளைத் தலைவராகக் கொண்டுள்ள இப்பேரவையின் பொதுக்கூட்டமும், சைவ மாநாடும் கொழும்பில் நடைபெறுவது இலங்கை வாழ் சைவ மக்களுக்கு பெருமகிழ்வும், கௌரவமும் தரும் விடயமாகும்.

இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இப்பேரவையின் செயற்பாடுகள் உலகில் பரந்துவாழும் சைவமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. உலக சைவமக்களின் நலன்களையும், முன்னேற்றத்தையும் பேணிக்காத்து வரும் பேரவை, அதன் ஆரம்ப ஆண்டான 1992 முதல் இன்றுவரை தனது நோக்கங்களிலிருந்து தவறாது ஈடுபட்டுவருகிறது. சைவம், சித்தாந்தம் ஆகியவற்றைப் பேணி, இளம் சமுதாயத்தினரிடையே அவை தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வரும் இப்பேரவையின் பணிகள் பாராட்டத்தக்கவை.

இலங்கையில் நடைபெறவுள்ள உலக சைவ மாநாட்டில் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் சமயத் தலைவர்கள், சமயச் சொற்பொழிவாளர்கள், சமயப் பெரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இது, இலங்கை வாழ் சைவ மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

கொழும்பில் நடைபெறும் இவ்வருடத்திற்கான பொதுக்கூட்டமும், மாநாடும், கலைநிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

நன்றி

க.கணேசலிங்கம் J.P.U.M

**P. P. DEVARAJ** MP
Vice - President (Political) CWC

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
மாண்புமிகு பி.பி.தேவராஜ் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



உலகசைவப் பேரவையின் நான்காவது பொதுச்சபைக் கூட்டமும், உலக சைவமாநாடும் செப்டெம்பர் திங்களில் கொழும்பில் நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க்கைநெறியே சமயம் என்பது சைவசித்தாந்த சாரமாகும். சாதனைக்கே சைவம் முதன்மை தருகின்றது. இறையுணர்வோடு வாழ்வாங்கு வாழும்போது அருட்பேறு சித்திக்கும் என சைவம் வலியுறுத்துகிறது. அன்பும் சிவமும் ஒன்றென உணரும் ஞானம் கைகூடினால் அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் நிலை தோன்றும். இத்தகைய நுட்பமான உண்மைகளை உணர்த்தும் சைவசமயக் கருத்துக்கள் மிகமிகத் தொன்மையானவை. இவை தமிழரின் தத்துவக் கருவூலங்கள்!.

இலங்கையின் சைவப்பெருமகனான தவத்திரு சிவநந்தி அடிகளார் லண்டனில் மெய்கண்டார் ஆதீனம் அமைத்து சைவநெறி தழைத்தோங்கிச் செழிக்க அரிய பணிகளை ஆற்றி வருகின்றார். உலகசைவப் பேரவையின் வளர்ச்சிக்கு அடிகளாரின் அயராத பணிகள் பெரும் பங்களித்து வருகின்றன. அவ்வாறே, நீண்ட பாரம்பரியத்தோடும் அருட்சிறப்போடும் திகழும் திருப்பனந்தாள் ஆதீனத்தின், குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் பேரவையின் தலைவராய் விளங்குவது மிகுந்த பெருமைக்குரியது.

அருட்பொலிவும், ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், எளிமைத் தோற்றமும் நிறைந்த பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார் பேரவையின் செயற்பாடுகளோடு இணைந்து பணி செய்வது மகிழ்வு தருகிறது.

இம்மாநாட்டின் நிமித்தம் சைவநெறி தழைக்க தம்மை அர்ப்பணித்துள்ள ஞானியர் பலர் இங்கே வரவிருப்பதும், இன்றைய உலகச் சூழலுக்கேற்ப சைவமறுமலர்ச்சி பற்றி சிந்திக்க விழைவதும் அறிந்து மகிழ்கிறேன்.

இம்மாநாட்டின் சைவமறுமலர்ச்சிக் கருத்துக்கள், அடுத்த நூற்றாண்டின் உலக மேம்பாட்டுக்கு புதியதொரு ஆன்மீக ஒளியைப் பாய்ச்ச வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*பி.பி.தேவராஜ்*

**CEYLON WORKERS' CONGRESS**
No. 19 St. Michael's Road, P.O.Box 1294 Colombo-3
Telephone : 436330/ 436332/436341
Fax: 436341 C.W.C. CE

## සංස්කෘතික හා ආගමික කටයුතු අමාත්‍යාංශය

## கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு

## MINISTRY OF CULTURAL AND RELIGIOUS AFFAIRS

8 வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்

### திரு. இ. யோகநாதன் அவர்களின் ஆசிச்செய்தி



இருபத்தியோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைப்பதற்கு இன்னும் ஐந்து வருடங்கள் மட்டுமே இருக்கின்ற இவ்வேளையில், நான்காவது அகில உலக சைவ மாநாடு இலங்கையில் நடாத்தப்படுவது சைவத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமையும் என்பது எனது துணிவு.

புதிய நூற்றாண்டை நாம் எதிர்கொள்ளத் தயாராகும் வேளையில் விஞ்ஞான, தொழில் நுட்ப, சமூக, பொருளாதார, அரசியல் பரிமாணங்களைக் கருத்திற் கொண்டு அவற்றால் எழக்கூடிய பலம்பொருந்திய காரணிகளையும், வலுவூட்டுகின்ற அம்சங்களையும் எமது சமய மேம்பாட்டுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பேராளர்கள் தமது கூர்மையான அறிவினாலும் பழுத்த அனுபவத்தினாலும் நிர்ணயிக்க வேண்டிய விடயங்களாகும்.

இவை சமயத்துக்கு அப்பாற்பட்டவையென புறக்கணித்துவிட முடியாது. இம்மாற்றங்கள் புதிய நம்பிக்கைகளையும், புதிய சவால்களையும் எம்மிடையே ஏற்படுத்துகின்றன. போரினால் எழுகின்ற அச்சுறுத்தல்களை சமாதானத்தின் மேலுள்ள திடமான நம்பிக்கையைக் கொண்டு விரட்டியடிக்கலாம். குரோதவெறியை அன்போடு கூடிய சகவாழ்வினால் நீக்கமுடியும். சந்தேகப்பிணியைப் புரிந்துணர்வினால் அகற்ற முடியும்.

பொதுவாக, பாரிய மாற்றத்தின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் கடந்துவந்த பாதையை இத்தருணத்தில் உற்று நோக்குவது பொருத்தமானது. ஆரம்பத்தில் நாம் எதிர்கொள்ளும் பலவீனங்கள் எமது முன்னைய செயல்பாட்டால் விளைந்துள்ள குறைபாடுகள் என்பதையும், அதேபோன்று முன்னைய செயல்பாட்டில் கிடைத்த வெற்றிகள் எங்களுக்கு பலத்தை ஊட்டுகின்ற அடித்தளம் என்பதும் வரலாறு புகட்டும் பாடமாகும். உதாரணமாக, பல்லவர் காலத்துக்கு முற்பட்ட களப்பிரர் கால சைவ வரலாற்றை, ஒரு இருள் சூழ்ந்த, பரசமயங்கள் ஊடுருவிய காலமாகக் கொள்ளலாம். இக்காலம் சமயத்தில் காணுகின்ற பலவீனமான அம்சங்களை எங்களுக்குப் புலப்படுத்துகின்றது. அதேபோன்று பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் அவதரித்து திருமுறைகளை எங்களுக்கு அருளி சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது சமயத்தின் பலத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

எனவே, எல்லோரும் இன்புற்று இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ ஒன்றுகூடித் திட்டம் தீட்டும்போது இம்மாற்றமாகிய அலையின் மேல்மட்டத்தைப் பயன்படுத்தி சைவத்தின் வளர்ச்சியாகிய குறிக்கோளை எய்துவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

*இ. யோகநாதன்*
*மேலதிக செயலாளர்*

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர்
செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# ஆசியுரை

## உலக சைவப் பேரவையின் நாலாவது ஆண்டு மாநாடு



" மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்குவதற்கும், சைவசமயத்தின் பெருமையை மக்கள் மத்தியில் நிலைநாட்டுவதற்கும் கடந்த சில ஆண்டுகளாக உலக சைவப்பேரவை ஆற்றிவரும் தொண்டு பாராட்டுக்குரியது. பேரவையின் மகிமைக்குரிய தலைவராக விளங்குகின்ற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்களை கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக எனது ஆன்மீகக் குருவாக வணங்கி வாழ்த்தி வருகின்றேன். இவர்களின் திருவுருவப்படம் ஆண்டாண்டு தோறும் எனது தினக்குறிப்புப் புத்தகத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. சுவாமிகளின் அழைப்பின் பேரில் வட இந்திய யாத்திரையை மேற்கொண்டதும், காசியிலே நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டிற் பங்குபற்றி உரையாற்றியதும் என்றும் என் உள்ளத்தில் பசுமை உணர்வாகப் பதிந்துள்ளது. பிரதித் தலைவர் சிவநந்தி அடிகளார் அவர்களின் பிறந்தகத்தின் பக்கத்தே வாழ்ந்து கல்வி கற்ற பெருமை எனக்குண்டு. அளவெட்டி மண்ணில் அறங்காத்த பரம்பரை இவர்களுடையது. இதேபோன்று இச்சபையைச் சேர்ந்த அனைவரும் சைவத்தையும் தமிழையும் உயிராக நேசிப்பவர்கள்.

*" வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பி*
*தாழ்வெனும் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும்"*

புண்ணியத்தை இவர்கள் அனைவரும் பெற்றவர்கள். இத்தகைய ஆத்மீகக் கட்டமைப்பில் இயங்கிவரும் உலக சைவப் பேரவையின் பணி பயன்தரும் பணியாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இவ்வாண்டு மாநாட்டின் தொனிப்பொருளாக அமைவது" இன்றைய சர்வதேச சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்குச் சாதகமான செயற்திட்டங்கள்" என்பதாகும். காலத்தின் தேவையை ஒட்டி இவை நிகழ இருப்பது மகிழ்ச்சிக்குரியது. உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளையும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து மாநாட்டு ஏற்பாடுகளை மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. சைவமக்கள் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் எழுகின்ற நல்ல கருத்துக்களைச் செயல் வடிவமாக்க முன்வரவேண்டும். ஆதீன முதல்வர்களும், சைவசமய நிறுவனங்களும், ஆலய அறங்காவலர்களும் இம்முயற்சிக்கு உறுதுணையாக முன்னின்று உதவ வேண்டும் என்பதே எனது தலையாய வேண்டுகோளாகும். " சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்று கூறுவதன் அர்த்தத்தை உலகனைத்தும் புரிந்துகொள்ளக் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்வது அனைவரதும் தலையாய கடனன்றோ. எனவே உலக சைவப் பேரவையின் மாநாட்டு நிகழ்வுகள் நன்கு அமையவும், மக்கள் மத்தியில் சைவ உணர்வு ஓங்கவும், சிவப்பணிகள் சிறப்புறவும் திருவருள் துணை புரிய வேண்டுமென்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

*தங்கம்மா அப்பாக்குட்டி*
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பளை.*

உ

சிவமயம்

''சிவநெறிப்புரவலர்''
க. கனகராஜா ஜே. பி,
உரிமையாளர்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தொலைபேசி 23233

''திரு ஆலவாய்''
த. பெ. இல. 77
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(இலங்கை)

சிவநெறிப்புரவலர் க.கனகராஜா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



விமோசனத்திற்கான செயற்திட்டங்கள்

இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயல் திட்டங்கள் என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டு உலக சைவ மாநாடு கொழும்பு மாநகரிலே நடக்கத் திருவருள் கூடியுள்ளது. உலக சைவப்பேரவை தனது நான்காவது பொதுச் சபைக் கூட்டத்துடன் இணைந்து இதனை மேற்கொள்வது பேருவகை தருகிறது.

ஆவணியிற் புகுந்தமை ஆட்கொள்ளவல்ல ஆலவாயில் எம்பெருமான் பாடல் பெற்ற திருத்தலங்களைக் கொண்ட இலங்கையிலே உலக சைவ மாநாடு கூடுவது உலக சைவ மாநாட்டுக்கே பெருமை சேர்க்கிறது. வேண்டத் தக்கது அறிந்து வேண்ட முழுவதும் தரும் முக்கண் முதல்வன் சித்தத்தை எண்ணி வியக்கிறோம்.

தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளாரின் பெருமுயற்சியும், பேராற்றலும் உலக சைவப்பேரவை இலங்கைக்கிளை உறுப்பினரின் அயராத உழைப்பும் இம்மாநாட்டின் சிறப்புக்கும் திருவுக்கும் எத்துணை உறுதியாக நிலைபெற்றுள்ளது என்பதை எம்மால் அறிய முடிகிறது.

ஆனால் சைவப்பேருலகின் உயிர்ப்பாகத்திகழும் மூன்று ஈசுரங்களுக்கும் வடக்கிலும் கிழக்கிலும் சித்தர்கள் பலரின் சமாதிகளையும் சைவத்திருக்கோயில்களையும் இம்மாநாட்டினால் பங்கு கொள்ளும் பிரதிநிதிகள் தரிசிக்க இயலாத நிலை மாற இம்மாநாடும் உலக சைவப் பேரவையின் பொதுச்சபையும் ஆவன செய்ய வேண்டும்.

செல்வச்சந்நிதி முருகன், மாவைக்கந்தன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை, நயினை நாகபூஷணி ஆகிய அருள்மிகு தெய்வங்களின் பிரம்மோற்சவம் மட்டுமன்றி நித்திய பூசைக்கே முட்டு ஏற்பட்டது எத்துணை வேதனையாக இருக்கிறது.

கொழும்பில் கூடும் உலக சைவ மாநாடுதான் விமோசனம் காண வேண்டும்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

வணக்கம்

இப்படிக்கு,
இறைபணியில்,
க. கனகராஜா

# *Deshabandu V.T.V. Deivanayagam Pillai J.P.*

**CHAIRMAN VTV GROUP OF COMPANIES**
**TRUSTEE SRI SIVASUBRAMANIAM SWAMY KOVIL GINTUPITIYA**

அருட்செல்வர் தேசபந்து வீ.ரீ.வீ தெய்வநாயகம் பிள்ளை ஜே.பி
தொழிலதிபர் வீ.ரீ.வீ. குழு நிறுவனம்
அறங்காவலர், ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## வாழ்த்துரை



உலக சைவப்பேரவையின் உலக மகாநாடு கொழும்பில் நடைபெறுவதையிட்டு நமது நாட்டில் வாழ்கின்ற இந்துப் பெருமக்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள். இப் பேரவையின் இலட்சியம் சைவமும் சைவசித்தாந்தமும் வளர்ச்சி காண உதவுவதும், உலகு எங்கணும் வாழ்கின்ற இந்து சமயத்தவர்களின் நலனைப் பேணிப் பாதுகாப்பதும் என்பது யாவரும் அறிந்ததே!.

இன்று எமது நாடு இருக்கும் நிலையில் அமைதியும், சாந்தியும், சமாதானமும் தோன்றச் செய்தல் அத்தியாவசியம். இக் கைங்கரியத்தில் சமயங்களே முக்கிய பங்கு அளிக்க வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பல்வேறு சமயங்களும் வளர்ச்சி காண்கின்ற நாடு எமது இலங்கை. நமது இந்து சமயத்திற்கு இங்கு பூரண பாதுகாப்பும், ஊக்கமும் அளிக்கப்படுகின்றது. இந்து சமய வளர்ச்சிக்காக அரசு பலவற்றைச் செய்து வருகின்றது. வருங்காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக என்ன செய்ய வேண்டும் என்றும் அரசாங்கத்தின் கலாசார அமைச்சு கூறி வருகின்றது. எனவே வருங்காலம் பற்றி நம்பிக்கை கொள்ளலாம். இந்த வளர்ச்சிக் கட்டத்தின் கால்கோளாக உலக சைவ மகாநாடு அமைய போகின்றது என்பதற்கு பிரதம கூட்டு இணைப்பாளரும் தமிழறிஞருமான தலைவர் ஸ்ரீ.கா.தயாபரன் காட்டும் ஆர்வமே தக்க சான்றாகும்.

இம் மாநாடு வெற்றி காணவேண்டும். இதனைத் தொடர்ந்து நமது நாட்டில் சைவம் பெருவளர்ச்சி காணவேண்டும் என ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதார விந்தங்களில் பணிந்து வணங்குகின்றேன்.

*வீ.ரீ.வீ. தெய்வநாயகம்பிள்ளை*

THIRUKETHEESWARAM TEMPLE RESTORATION SOCIETY
திருக்கேதீச்சுவர ஆலயத் திருப்பணிச் சபை
"தொண்டர் நாள்தோறுந் துதிசெய அருள்செய்கேதீச்சர மதுதானே"

Head Office : C/o V. KAILASAPILLAI
130, GLENNIE STREET,
P. O. BOX 76,
COLOMBO - 2,
SRI LANKA.

# வாழ்த்துச் செய்தி



உலகிலுள்ள ஆன்மாக்கள் உய்வதற்காகவுள்ளதே சமயம். பழமையான சமயங்களுள் ஒப்பற்றது சைவசமயம். சிவநெறியாகிய செந்நெறியே சைவநெறி. இந்நெறியின் தத்துவச்சாரமே சைவசித்தாந்தம். தமிழர்களின் பெருஞ்சொத்து; தமிழ் இனம் உலகிற்கு அளித்த பெருங் கொடை.

இன்று இதனை அறியாது இருக்கும் சைவமக்கள் ஏராளம். எனவே சிவநெறியை அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ள வைப்பது எமது இன்றியமையாத கடமையாகும்.

இப்பெருநோக்கில் உலக சைவப்பேரவையின் நான்காவது பொதுச்சபைக் கூட்டமும் உலக சைவ மாநாடும் கொழும்பில் நடைபெறவிருப்பது போற்றுதலுக்குரியது.

திருபனந்தாள் ஸ்ரீகாசிமட அதிபர் காசிவாசி கயிலைமா முனிவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமி அவர்கள் இலங்கைக்கு வருகை தருவது இலங்கை சைவ வரலாற்றில் மாபெரும் நிகழ்ச்சி.

இம்மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு முன்வந்த உலக சைவப் பேரவை இலங்கைக் கிளைக்கும், கொழும்பு மகளிர் இந்து மன்றத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இம்மாநாடு சிறப்பாக நடைபெற வேண்டுமென திருக்கேதீச்சரமுடையார் திருவருள் முன்நின்று அருளத் திருக்கேதீச்சரப் பெருமானை வேண்டுகிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

இ. நமசிவாயம்.
செயலாளர்.
திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்
சபை, அறங்காவலர்குழு

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம்: இல. 101 /1, சேர் சிற்றம்பலம் மாவத்தை, கொழும்பு-2. இலங்கை. தொலைபேசி: 434990

## வாழ்த்துரை



உலக சைவப் பேரவை தங்களின் விடாமுயற்சியினால் இலங்கையிலும் ஒரு கிளையை நிறுவியிருப்பதை அகில இலங்கை இந்து மாமன்றம் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. இம்முயற்சி வெற்றிகரமாக நிறைவேறியதற்கு தங்களுக்கும் ஏனைய ஸ்தாபன உறுப்பினர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

காலத்திற்குக் காலம் உலக சைவப் பேரவை உலகின் பல்வேறு நாடுகளிலும் சைவசித்தாந்த மாநாடு நடத்தி வருவது யாவரும் அறிந்த விடயமாகும். இவ்வாண்டு நாலாவது உலக சைவ மாநாடு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 08.09.95 தொடக்கம் 10.09.95 வரை " இன்றைய சர்வதேச சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்கு சாதகமான செயற்திட்டங்கள்" என்னும் விடயம் பற்றி அலசி ஆராயவிருப்பது குறித்து அகில இலங்கை இந்து மாமன்றம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. இன்றைய சூழ்நிலையில் இதுபோன்ற விடயத்தை மாநாட்டுக் குழு தேர்ந்தெடுத்தமை சாலச்சிறந்த அம்சமாகும்.

இம்மாநாடு சிறப்புடன் நடைபெற்று குறித்த விடயம் பற்றிய சிறந்த கருத்துக்களை வெளியிடுவதற்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

வி. கயிலாசபிள்ளை
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

# இலங்கை இந்துப் பேரவை
## ශ්‍රී ලංකා හින්දු සභාව
## Hindu Council of SriLanka

Telephone, Fax : 588891

*President:*
Dr. S. Sanmugasundaran Tel: 590584
*Immediate Past President*
Yogendra Duraiswamy Tel: 588891
*Secretary General :*
P.Paramapathan Tel: 591633
*Treasurer:*
V.Mahadevan Tel: 582437

9, Castle Lane,
Colombo - 4.
Sri Lanka.

*25-8-'95*



## வாழ்த்துரை

கொழும்பில் நடைபெற இருக்கும் உலக சைவப் பேரவையின் மாநாடு வெளியிடும் சிறப்பு மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

பெருமையும் தொன்மையும் வாய்ந்த சைவமதத்தின் தாற்பரியங்களை அளப்பது சமுத்திரத்தின் ஆழத்தை அளப்பது போலாகும். சைவத்தின் பெருமையையும் மகிமையையும் எடுத்து உலகத்தோருக்கு இயம்ப உதித்த நாயன்மார்களும், அடியார்களும் தம்பால் இயன்ற சைவப் பணிகளை ஆற்றிச் சமயத்தொண்டுகள் பல புரிந்து மறைந்தனர். "நாமார்க்கும் குடியல்லோம்," என்ற அறைகூவலும், " மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்," என்ற திடமான இலட்சியமும், " சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லை," என்ற மாறா நம்பிக்கையும் "ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான்," என்ற பேர் உண்மையும், எமது சமய கருவூலங்களாக பிரகாசிக்கச் செய்தவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவப் பெரியோர்களேயாவர்.

சைவ சமயம் குன்றி, சமண சமயம் மேலோங்கியிருந்த காலத்தில், இவர்கள் தோன்றி மக்களை ஆற்றுப்படுத்தி, சைவ சமயக்கொடியை, விண்முட்டப் பறக்கச் செய்தனர். ஆனால் இன்று கடும் மதமாற்றமும், பொய்ப்பிரசாரமும் நடக்கின்ற பொழுது சைவர்களாகிய நாம் எழுந்து, விழிப்புணர்ச்சியுடன் எமது நலனைப் பாதுகாத்து, உன்னத சமயக் கொள்கைகளை மக்களிடத்தில் மேம்படுத்தி வரவேண்டும். இவ்வாறு செய்யும் வேளையில், சனாதனதர்மத்தின் சமய உட்பிரிவுகளை ஒன்றுபடுத்தி இந்துக்களை உறுதிப்படுத்த வேண்டும்.

இன்றைய இச்சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்குச் சாதகமான செயற்றிட்டங்களை ஆராய்வதற்கு உலக சைவப் பேரவை எடுத்துள்ள முயற்சிகள் வெற்றிபெற எம்பெருமான் வாழ்த்துவாராக.

*வாழ்க எம் சைவ சமயம்! வாழ்க உலகசைவப் பேரவை!!*

*யோகேந்திரா துரைசுவாமி*

விவேகானந்த சபை,
கொழும்பு-13.

# கொழும்பு விவேகானந்த சபைத் தலைவரின் வாழ்த்து



உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுச் சபைக் கூட்டமும் அனைத்துலக சைவ மாநாடும் சிறப்புடன் நிறைவுற எமது வாழ்த்துக்கள்.

பாடல்பெற்ற திருத்தலங்கள் திருவூட்டலால் திருஈழநாடு எனக் கடவுள் மாமுனிவரால் வருணிக்கப்பட்ட எமது நாட்டின் தலைநகராங் கொழும்பில் இந்நிகழ்வு இடம்பெறுதலால்

*"எற்றைக்குந் திருவரு ளுடையேம்"*

மாநாட்டிற்குத் தேர்வு பெற்ற தொனிப்பொருள் " இன்றைய சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்குச் சாதகமான செயற்றிட்டங்கள்" என்பது, இன்று உலகெங்கணும் பரந்து வாழும் சைவப் பெருமக்களின் நிலைப்பாட்டையும் அவர்களின் எதிர்கால சமய நிலையையும் ஆராய வாய்ப்பை வழங்கும் என்பதில் ஐயப்பாடில்லை.

இம்மாநாடு சிறப்புற உழைப்பினை நல்கும், உலக சைவப்பேரவையின் இலங்கைக் கிளையினதும் கொழும்பு இந்து மகளிர் சங்கத்தினதும், இவர்களைச் சார்ந்தோரதும் பணிகள் மேன்மையுற ஆடல் வல்லானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

*க. வேலாயுதபிள்ளை*

உ
*சிவமயம்*

கொழும்பு மகளிர் இந்து மன்றப் போஷகரின்

# வாழ்த்துச் செய்தி



நாலாவது உலக சைவ மாநாடு கொழும்பில் நடைபெற இறையருள் பாலித்தது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதற்கு முந்தைய மாநாடு பாரிசில் நடைபெற்றதாகவும், அடுத்து வரும் ஐந்தாவது மாநாடு தென்னாபிரிக்காவிலுள்ள டர்பனில் நடைபெறவுள்ளதாகவும் அறிகின்றேன்.

உலகின் பலபாகங்களிலும் சைவர்கள் பரந்து வாழும் இக்கால கட்டத்தில் முக்கிய இடங்களில் கிளைகள் அமைத்து கூட்டங்கள் கூட்டி, அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து சைவ சமய தத்துவங்களை விளக்க வல்ல அறிவும் ஆற்றலுமுள்ள பெரியோர்கள் எடுத்துரைப்பது பயன்தரக் கூடியது. இப்படி ஒரு அமைப்பில் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைத்து எமது சமயத்தை வளர்க்க தில்லை நடராசப் பெருமான் பெருங் கருணையை வேண்டி வாழ்த்துகின்றேன்.

8, சாள்ஸ் சேக்கஸ்,
கொழும்பு -3.
14.8.95.

*இங்ஙனம்*
*க. ஆழ்வாப்பிள்ளை.*

# WORLD SAIVA COUNCIL

**LONDON (U.K.) HEADQUARTERS**

**President :**
H. H. Thavaththiru Kasivasi
Muthukumaraswamy Thambiran Swamigal

**Vice-President & Chief Executive :**
Swami Siva Nandhi Adikalaar *(U.K.)*
(Chairman, Central Executive (H. Q.)

**Secretary-General & Editor**
**"SAIVA ULAKAM"**
Dr. K. Loganathan *(Malaysia)*

**Treasurer :**
Thiru M. Ramalingam B.Com. *(India)*

**Asst. Secretary-General**
Dr. S. Navaratnam *(U.K.)*

சிவாய நம:

Established in
Madras, 29-2-92

உலக சைவப் பேரவை
CENTRAL EXECUTIVE

தலைமைச் செயலகம்

From :



## Message from Dr.K.Loganathan

Secretary - General
World Saiva Council

I must congratulate the Sri Lankan branch of World Saiva Council for the grand manner in which they are organising the Fourth World Saiva Conference. This is growing recognition that W.S.C.is the foremost world organisation devoted to the renewal of Saiva Siddhanta. Recently the Chief Executive of W.S.C. T.T. Sivanandhi Adikalar was given a place of great honour in a world Hindu Conference held in Durban, S.Africa.

Saivism has been always distinctive in that it is the only religious endeavour that has addressed itself to the basic question of RELIGIOUS UNIVERSALS - the universalistic aspects of the religious impulses of mankind. It is this search that has resulted in the formulation of fundamental ontology that pati, paces and pacam are uncreated and eternal categories and the universal foundation of every human effort. This discovery must be retold to the world at large so that the animosity that divides man and make him wage wars on religious grounds can be eliminated and let peace prevail on earth.

W.S.C.has to grow in stature and become a powerful force at the international level to accomplish this. This conference will contribute substantially to make this a reality.

*School of Educational Studies,*
*Universiti Sains Malaysia*
*Penang.*

*K.Loganathan*

# இந்து சமய கலாசாரத் திணைக்கள பணிப்பாளரின் வாழ்த்து



உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுச்சபைக் கூட்டமும், மாநாடும் 1995 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு நகரில் நடைபெற உள்ளது. இன்று, சைவசமயம் கடல் கடந்து உலகமெங்கும் வாழும் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சமய நெறியாக விளங்குகிறது. இச்சமய நெறியின் தாயகம், தென் தமிழகமும் அதன் அருகே அமைந்துள்ள இலங்கையுமேயாகும். இந்நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் மலேசியா, சிங்கப்பூர் தென்னாபிரிக்கா முதலிய நாடுகளிலும், இரண்டாம் உலகப் போரின் பின் மேற்கு நாடுகளிலும் தமிழர்கள் குடிபெயர்ந்து வாழத் தொடங்கினர். அவர்களில் பெரும்பான்மையினர் கடைப்பிடிக்கும் சமயமாகிய சைவமும் இந்நாடுகளிற்குப் பரவியது.

தமிழர் மத்தியில் பண்பாட்டு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வரும் காலகட்டத்திலேயே உலக சைவப் பேரவை என்ற அமைப்புத் தோன்றியிருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. "இன்றைய சூழ்நிலையில் சைவத்தின் மறுமலர்ச்சிக்குத் தேவையான செயற்திட்டங்கள்" என்னும் பொருள் மாநாட்டின் ஆய்வுக்குரிய விடயமாகத் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

சைவமரபில் செழித்தோங்கிய விழுமியங்களும், உயர்ந்த கோட்பாடுகளும் உலகம் எங்கும் வாழும் எம் மக்களுக்கு வழிகாட்டுவதாய் அமைவதாகுக.

உலகசைவப் பேரவையின் நான்காவது மாநாடு சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. சண்முகலிங்கம்
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

98, வோட் பிளேஸ்
கொழும்பு-08

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

உலக சைவப் பேரவை பொருளாளரின்

# வாழ்த்துச் செய்தி



இன்பமே எந்நாளும் !

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந்தாரே

(மூன்றாவது திருமுறை – திருஞானசம்பந்தர்)

உலகம் உய்ய வேண்டுமாயின், அனைவரும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நலத்தைப் பேணி வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை. ''நான்'' ''எனது'' என்ற ஆணவத்தை அழித்து, மக்கள் குலத்தை அன்புடன் நேசிக்கத்தக்க பண்பட்ட உள்ளத்தைச் சமயப்பற்றே வளர்க்கவல்லது. இதனை நன்குணர்ந்தே நமது முன்னோர் வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து வந்தார்கள். அதனால், எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் போற்றும் அருளுணர்வு அவர்கள் உள்ளத்தில் நிலைத்திருந்தது. மேலும், தெளிந்த சமயப்பற்று மனித இன ஒருமைப்பாட்டை உரமிட்டுக் காத்து வளர்க்கும். இந்த வகையில் சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் நம் ''உலக சைவப் பேரவை'' தொடங்கப் பெற்றது முதல் சிறந்த தொண்டாற்றி உலகின் பல்வேறு நாடுகளில் சீரிய பணிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

'உலக சைவப் பேரவை' யின் நான்காவது உலக சைவ மாநாடு, ஈழநாட்டின் கொழும்பில் நடைபெற உள்ளது அனைத்து உலக மக்களுக்கும், குறிப்பாக சைவப்பெருமக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இவ்விழாவினையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவது மிக நல்ல முயற்சியாகும். 'உலக சைவப் பேரவை' யின் வளர்ச்சியை உலக மக்கள் அனைவரும் அறியும் படி செய்வதில் இதுபோன்ற வெளியீடுகள் பெரிதும் பயன்படும் என்றே நம்புகிறேன். மேலும் இப்போது உள்ள நிலைமாறி, ஈழநாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இறையருளால் அமைதி நிலவ இந்த மலர் வழிவகுக்கும் என்று திடமாக நம்புவோமாக.

'உலக சைவப் பேரவை' யினை தோற்றுவிக்க மூலகாரணமாக விளங்கும் இலண்டன் சுவாமி சிவநந்தி அடிகள் பல்லாண்டு வாழவும், அறப்பணிகள் மேன் மேலும் செய்யவும், சைவ மக்களை பக்தி நெறியில் ஈடுபடுத்தவும் என் ஆன்மார்த்த மூர்த்தியான தில்லைக்கூத்தன் அருள்பாலிப்பானாக.

இம்மாநாடு இறையருளால் இனிதே நடந்தேறவும், அதனையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் சைவ சமயக் கருவூலமாகத் திகழவும் எனது நல்வாழ்த்துக்கள்.

முருகு இராமலிங்கம்,
திருமுறை,
37, ஆர் ' புளொக்,
அண்ணாநகர்,
சென்னை-40.

முருகு. இராமலிங்கம்

ஓம் சக்தி

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# கொழும்பு மகளிர் இந்து மன்றம்
# Colombo Young Women's Hindu Association

## கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவியின்
## வாழ்த்துச் செய்தி



*வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே!*

அப்பர் தேவாரம் படித்தோர் அனைவரும் இப்பாடலை அறிவர். சைவமதப் பற்றுள்ள அனைவரும் இப்பாடலை உள்ளம் உருகிப் பாடுவர். அதிலே அந்தணர், ஆனினம், வேந்தர் வாழ வேண்டும் என்று வாழ்த்தப்பட்டிருப்பதுடன் "ஆழ்க தீயதெல்லாம்" என்று கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் "வையகமும் துயர் தீர்கவே" என்ற அடிதான் மிகச் சிறந்த தொடராக உள்ளது.

இவ்வாறு உலகம் துன்பம் அற்று இன்பத்துடன் வாழ வேண்டும் என்ற உயரிய கருத்துக்களை எடுத்தியம்பும் சமயமே சைவசமயம். அந்தச் சமய நெறியைத் தழைத்தோங்க வைத்த ஆறுமுகநாவலர் பிறந்த மண்ணில் பிறக்கும் அரிய பேறுபெற்ற நாம், கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறிமுறையை நன்கு உணர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கும் மாநாடு ஒன்றுதான் கொழும்பில் நடைபெறுகிறது. உலக சைவப் பேரவையின் கொழும்புக்கிளை முன்னின்று நடத்தும் இம் மாநாட்டில் இணைந்து பணியாற்றும் பெரும்பேறு எமது கொழும்பு மகளிர் மன்றத்துக்குக் கிடைத்திருக்கிறது.

1965 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட எமது மன்றம், சமூகப் பணியை சமயப் பணியுடன் இணைத்து நடத்தி வருகிறது. நன்நெறிகளை சின்னஞ்சிறு பராயத்திலேயே புகட்டும் பெருவாய்ப்புள்ள மகளிர் அப் பணியினைச் சிறப்புற ஆற்றுவதற்கு ஊக்கமளிக்கும் பொறுப்பினை எம் மன்றம் கொண்டிருக்கிறது. நான்காவது உலக சைவமாநாட்டிற்கு எமது அயரா உழைப்பை நல்கத் தயாராக உள்ளோம்.

ஆன்மீகத் துறையில் தலைசிறந்த பெரியார்கள், கல்விமான்கள் மற்றும் சிவபக்தர்கள் அனைவரும் ஒன்று திரளும் இம்மாநாட்டில் தொண்டாற்ற எமக்கு வாய்ப்பளித்த உலக சைவப் பேரவை இலங்கைக் கிளைக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு மாநாடு சிறப்புற நடந்தேற இறை ஆசியையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி- சற்சொரூபவதி நாதன்.

உலக சைவப் பேரவையின் இலங்கைக்கிளைச் செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி



கொழும்பு மாநகரில் நமது பேரவையின் பொதுக்கூட்டமும், சைவமாநாடும் மிகச் சிறப்பாக நடைபெறவிருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தோடும், அதன் முதல்வர் தவத்திரு சிவநந்தி அடிகளாரோடும் நீண்டகாலமாகக் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகள் காரணமாக இலங்கையின் பேரவைக் கிளையை உருவாக்கிச் செயற்படுத்தும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் நமது கிளை அடைந்துள்ள வளர்ச்சிபற்றி பெருமிதம் கொள்கின்றோம். ஏனைய கிளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், பேரவையின் பணிகளை முன்னெடுப்பதில் இணைந்து செயலாற்றவும் கிடைத்தமை பெரும் பேறாகும்.

கொழும்பில் நடைபெறும் இம்மாநாடு, உலகெங்கும் பரந்து வாழுகின்ற சைவமக்களின் அபிலாஷைகளைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒன்றாக அமைய வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை ஆகும்.

உலக சைவப் பேரவையை திறம்பட வழிநடத்தும் தவத்திரு சிவநந்தி அடிகளார், திருப்பனந்தாள் ஆதீனமுதல்வர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், தமிழ்ச்சான்றோர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா உட்பட பல அருளாளர்களும், அறிஞர் பெருமக்களும் ஒன்று சேர்வது நமது மாநாட்டிற்கு ஆன்மீகச் செழுமை சேர்க்கின்றது.

மாநாட்டை சிறப்புற அமைப்பதில் அர்ப்பணிப்புணர்வோடு பணி செய்கின்ற இலங்கைக் கிளையினர், ஒழுங்கமைப்புக் குழுவினர் கொழும்பு மகளிர் இந்து மன்றத்தினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள் உரியன.

*சைவநெறி தழைத்தோங்குக!*

*ஏ. எம். துரைசாமி*

*33/23 நெல்சன் லேன்*
*கொள்ளுப்பிட்டி*
*கொழும்பு- 03*

## உலக சைவப் பேரவை இலங்கைக் கிளையினதும் மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினதும் தலைவரின் செய்தி



உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுக்கூட்டமும், "இன்றைய உலக சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற்றிட்டங்கள்" மீதான சர்வதேச சைவ மாநாடும் நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் இச்செய்தியை அனுப்பிவைப்பதில் பெருமையடைகின்றேன்.

சைவ மக்கள் பெரும் சவால்களை எதிர்கொள்ளும் இன்றைய சூழ்நிலையில், சைவத்திற்குப் புத்துயிர் வழங்கும் செயற்பாடுகளை ஆராயும்நோக்குடன் இம் மாநாடு நடாத்தப்படுகின்றது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் சைவ சீர்திருத்த முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் தவத்திரு சிவநந்தி அடிகளாரின் தெய்வீக ஊக்கமளிக்கும் தலைமைத்துவத்திற்கு சைவ மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

நாட்டில் இன்று நிலவும் இடர்ப்பாடுகள் நிறைந்த சூழ்நிலை காரணமாக ஆடம்பரமெதுவுமற்ற, அமைதியான முறையில் இம்மாநாடு நடைபெறுகின்றது. இம்மாநாடு நடைபெறுவதற்கு பலவகைகளிலும் உதவிகளை வழங்கிய கலாசார, சமய அலுவல்கள் அமைச்சிற்கும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும், கொழும்பு மகளிர் இந்து மன்றத்திற்கும் உலக சைவப் பேரவை இலங்கைக்கிளை அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். மாநாட்டின் பரிபூரண வெற்றிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

*கா. தயாபரன்*

# World Saiva Council : Back Ground

(Established in Madras on 29-2-92 with Head Quarters in London)

## 1. Policy Statement

The World Saiva Council and its accredited Committees shall:

a) Strictly adhere to the traditional South Indian Saiva Siddhanta Philosophy of the Meikandaar school and confirmed by the International Saiva Siddhanta seminars held in Dharmapuram 1984 and kuala Lumpur (1986) and

b) Promote, foster & protect, nationally and internationally, the welfare and progress both of saivism and saivite Hindus throughout the world.

## 2. Short term action plans

i) Quarterly International Saiva News

ii) New Branches

iii) W.S.C. Annual Calendar of Saiva Festivals

iv) Tamil Archanas Movement


v) Saiva Temple Consecrations with Thirumurai only Movement

## 3. Long Term Action Plans

i) International Saiva Conference/ Seminars/ Charities

ii) Condensed Books on Saiva Theology in English and Tamil

iii) World Saiva University



உலக சைவக் கொடியை
ஏற்றுவோம் வாரீர்!

# உலக சைவக் கொடியை ஏற்றிடுவோம் வாரீர்!



ஆம். காலங் கனிந்துவிட்டது. இந்த உலகு சைவ சமயத்தை தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் பிறந்துவிட்டது. நாம் இந்து சமயத்தைப் பற்றிப் பேசவில்லை. இந்திய உபகண்டத்தில் தோன்றிய எல்லாச் சமயங்களிலும் உன்னதமான, ஆழமான அற்புதமான பல உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் சைவத்தைப் பற்றிதான் இவ்வாறு கூறுகின்றோம். திறந்த உள்ளத்தோடு, ஓர் நூலையோ அல்லது ஓர் மகானையோ தனக்கு ஆதாரமாகக் கொண்டிராது பதி, பசு, பாசம் எனப்பகர் பொருள் மூன்றும் அநாதி என்ற அந்த பேருண்மையை, அநாதிப் பொருளியலை அடிப்படையாகக் கொண்ட ஒரே சமயமாக இவ்வுலகில் இருப்பது சைவ சமயம் ஒன்றுதான். இந்த முப்பொருள் கோட்பாடின்றி உலகத்தில் எதனையும் புரிந்து கொள்ள முடியாது என்ற தெளிவோடு இலங்குவது இந்த சைவ சமயம் ஒன்றுதான். தேவாரத் திருமுறைகள், திருமந்திரம் காலந்தொட்டு, ஏன் அதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டு காலந்தொட்டு இந்த அநாதிப் பொருளியலே நமது பண்பாட்டின் அசைக்க முடியாத கூறாக நின்று வருகின்றது. நாம் உணர்ந்த இந்தப் பேருண்மையை உலகும் அறிந்துகொள்ள, மேன்மைகொள் சைவநீதி உலகெங்கும் தழைத்தோங்கி வளர, இந்த உலக சைவக்கொடியை ஏற்றுகின்றோம்.

இந்தக் கொடியிலே அமைந்திருக்கும் சின்னங்களைப் பாருங்கள். அனாதிப் பொருளியற் கொள்கையோடு சன்மார்க்கம் என்று பகரக் கூடிய நெறியின் கூறுகளை எல்லாம் தன்னகத்தே கொண்டிருப்பதைக் காண்பீர்கள். கொடிக்கம்பமாக இருப்பது ஞானவேலாகும். திருமுருகனின் கையில் தவழ்ந்து நம்மகத்தே செறிந்திருக்கும் அறியாமை அசுரர்களை தான் தரும் அறிவுத் தெளிவால் இல்லாது போக்குவதாம். கொடியிலே திரிசூலமும் குத்துவிளக்கும் சிவநந்தியும் திகழ்கின்றன. எதனையும் செய்வதற்கு வேண்டியது சக்தி என்பதனை திரிசூலம் உணர்த்துகின்றது. குத்துவிளக்கு அன்போடும் அறத்தோடும் நடத்தப்படும் குடும்ப வாழ்க்கையைக் குறிக்கின்றது. சிவநந்தி வீரியத்தை அதாவது உடல் நலத்தையும் உள நலத்தையும் குறிக்கின்றது. அன்றே கூறிய திருமூலர் வாக்கிற்கிணங்க இந்த உடம்பினை உதாசீனம் செய்யாது போற்றி வளர்த்தால்தான்– நந்தி அருளைப் பெற்று திடகாத்திரவுடம்போடு நலமே வாழ்ந்தால் தான், சிறப்பாக பற்பல வினைகளையாற்றி அகத்துச் செறிந்திருக்கும் அறியாமை இருளைக் களைய முடியும். வீரமாக அகத்தும் போராடாவிட்டால் அகத்துள் கிடக்கும் பாசத்தளைகளைச் கிட்டெரிக்க முடியாது.

ஆணிற்கும் பெண்ணிற்கும் நற்சுகத்து பேருடல் இனிதே இல்லறம் நடத்தினால் தான் உண்டு. அழகிய தாம்பத்திய உறவிலேதான் குண்டலினி ஈட்டம். இதற்கு அடிப்படை, இலக்குமியே உடலெடுத்து வெளிப்பட்டு இருப்பது போன்ற அன்பும் பண்பும் நிறைந்த இல்லாள் ஆகும். இதைக் குத்துவிளக்கு காட்டி நிற்கின்றது.

இவ்வாறு இல்லறத்தினாலும் பிறகு எல்லா வேட்கைகளையும் அறநெறி பிறழாது போக்கியபின் இயற்கையாக மலரும் ஆறவற நிலையிலேதான் பராபரையாக ஆதிசக்தி எழுந்து, ஞானசக்தியாக வளர்ந்து வீடுபேற்றிற்கு வழிகாட்டுவாள். சிவஞானத்தை உணர்த்துவாள். இதுவே அந்தத் திரிசூலம் காட்டுவதாகும்.

சிவஞானமே ஞானம். பிறவெல்லாம் அல்ல என்று ஞானவேல் கம்பம் உணர்த்த, பறக்கும் கொடியோ அதன் முக்கிய கூறுகளை உணர்த்தி நிற்கின்றது. பண்பாட்டுச் சீரழிவில் நிலைகெட்டுத் தடுமாறி பிழையான வழியில் போய்க் கொண்டிருக்கும் தமிழ் இனத்திற்கும் உலகசமூகத்திற்கும் இந்த சைவ சமய உண்மையை உணர்த்த உறுதி பிறந்துவிட்டதை அறிவிக்க, தவத்திரு சிவநந்தி அடிகளார் இந்த உலக சைவக் கொடியை ஏற்றுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றார்.

*நன்றி, சைவ உலகம் – 9 வது இதழ்*

# Let's Hoist The World Saiva Flag

Yes, the time has: come for the world to know what Saivite Hinduism is. We are not talking about Hinduism in general. We are talking about the Tamil Saivite Hinduism which is the most refined religious system in the world. Completely open, it is sure of itself not because of any authority in terms of a person or book but because it contains TRUTH in the principle that Pati, Pacu and Pacam are the uncreated eternal categories without recourse to which nothing in the world can be understood. It is the fundamental ontology- the unshakeable metaphysical illumination that has sustained Tamil Saivism at least from the time of Thevaram, Thirumanthiram if not from ancient times itself.

The flag we are hoisting symbolises all these and the true merits of san markam - the true path of authentic knowledge. The staff that holds the flag is the JNANA VEL - the spear of divine illumination, that weapon of Thirumurukan through which illuminating us drives away the beastly, the asuras in us. The flag contains Trisulam, Kuthuvilakku and Sivanandhi. all symbolic elements with profound meanings. The trisulam is Power or Sakti; the Kuthuvilakku the acknowledgement that a decent home life is the mainstay of society and religious life. The Nandhi symbolises virility and hence good health. We are restating here what Thirumular had said long ago: The bodily frame must be maintained in good state to lead an active life without which the ignorance surrounding us cannot be destroyed.

But to attain this there must be a happy home life, lighted up by a woman of beauty and kindness, the goddess Laxmi incarnate symbolised by the Kuthu Vilakku. It is only people who live thus and later in true asceticism founded upon infinite love that the gnostic power of Athi Sakti will arise and lead towards Paramoksa.. All these are the functions of Jnana Vel which is in reality the sparks of light that issues from the forehead of SIVA when he sees UMA with unbounded love, as stated in Kanda puranam.



உலக சைவ பேரவை இலங்கைக் கிளை விழா ஒழுங்கமைப்புக்குழு -1995

இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்:- திரு. குமார் வடிவேல், திரு.பி. எஸ்.சர்மா ( உப தலைவர்), திரு. ஆர். யோக நாதன் ( அமைச்சின் மேலதிக செயலாளர்), திரு. கா. தயாபரன் (தலைவர்) , திரு. ஏ.எம்.துரைசாமி (செயலாளர்), திரு. க. சண்முகலிங்கம் (உப தலைவர்), திரு. ஆர் வைத்தமாநிதி (தனாதிகாரி), திரு. எஸ். தெய்வநாயகம்.

நிற்போர் இடமிருந்து வலம் :- திரு. ந. செந்தூரான், திரு. ரி. கனகரத்தினம், திரு. எஸ். கதிரவேல், திரு.வி. நடராசா, திரு. தே. செந்தில் வேலவர், திரு.கே. நிமலன் கார்த்திகேயன், திரு.பி. விமலேந்திரன், திரு.எஸ்.தனபாலா, திரு.பி.விஜயரத்தினம், திரு.கே.ச.ஆறுமுகம்.

## கொழும்பு மகளிர் இந்து மன்றம் நிர்வாகக் குழு -1995



இடமிருந்து வலமாக அமர்ந்திருப்போர் :- திருமதி வி. அரியக்குட்டி, திருமதி வனஜா தவயோகராஜா (பொருளாளர்), திருமதி யமுனா கனேசலிங்கம், (செயலாளர்), திருமதி பு. கதிர்காமத்தம்பி, திருமதி அ. கைலாசப்பிள்ளை, செல்வி சற்சொரூபவதிநாதன் (தலைவி), திருமதி இ. முதலியார், திருமதி சா. பாலசுப்பிரமணியம், திருமதி வா. சத்தியமூர்த்தி, திருமதி ஸ்ரீ. விஷ்ணுகாந்தன், திருமதி க. ஆழ்வாப்பிள்ளை.

இடமிருந்து வலமாக நிற்பவர்கள்:- திருமதி ந. கனகசபை, திருமதி சா. நடராஜா திருமதி பொ.கந்தசாமி, திருமதி க. கனேசன், திருமதி இ. ரவிகுலராஜன், திருமதி இ. மகாதேவா, திருமதி.ல. கந்தசாமி, திருமதி க. கனகசபை , செல்வி. கோ. சுப்பையா, திருமதி. நீலா தயாபரன்,திருமதி, யோ. யோகேந்திரன், திருமதி. கோ. குணவர்தனா, செல்வி ஸ்ரீ. கதிரித்தம்பி, திருமதி ப. சோமகாந்தன், திருமதி.கா. யோகேஸ்வரன், திருமதி. ம. சுந்தரலிங்கம்

வருகை தராதோர் :- திருமதி. ம. கனகசூரியம். திருமதி கா. அசோகன், திருமதி.சி.பாலசிங்கம்.

# உலக சைவப் பேரவை

நான்காவது பொதுச்சபைக் கூட்டமும் உலக சைவ மாநாடும்

8-10 செப்டெம்பர் 1995

மாநாட்டின் கருப்பொருள்

"இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற்திட்டங்கள்"

**விழா ஒழுங்கமைப்பு**

*உலக சைவப் பேரவை - இலங்கைக் கிளை*

*கொழும்பு மகளிர் இந்து மன்றம்*

................................................................................

## காப்பாளர்கள்

1. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்
2. தவத்திரு சிவநந்தி அடிகளார்
3. பண்டிதை அருட்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
4. மாண்புமிகு பி. சந்திரசேகரன்
5. மாண்புமிகு பி.பி.தேவராஜ்

## உதவிக் காப்பாளர்கள்

1. திரு.வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளை
2. திரு.வி.கைலாசபிள்ளை
3. திருமதி. கே.ஆழ்வாப்பிள்ளை
4. வைத்திய கலாநிதி. கே. வேலாயுதபிள்ளை
5. திரு.ஆர்.யோகநாதன்
6. திரு.கே. கணேசலிங்கம்

## தலைவர்

(மாநாடு ஒழுங்கமைப்புக்குழு)

**திரு.கே. தயாபரன்**

## உதவித் தலைவர்கள் (மாநாடு- ஒழுங்கமைப்பு)

**(உபகுழுக்களின் தலைவர்கள்)**

1. திரு.ஏ.எம்.துரைசாமி (தலைவர் –உலக சைவப் பேரவைக் கூட்டங்கள் உபகுழு)
2. திரு. கே. சண்முகலிங்கம் (தலைவர் – மாநாடு, சிறப்புமலர், உபகுழு)
3. திரு.பி.எஸ்.சர்மா (தலைவர்– இந்துசமயப் போட்டிகள், உபகுழு)
4. திரு. எஸ்.தனபாலா (தலைவர்–நிதி, உபகுழு)
5. திருமதி. என்.பாலசுப்பிரமணியம் (தலைவர் –வரவேற்பு, உபகுழு)
6. திருமதி. வை. கணேசலிங்கம் (தலைவர்– கலை நிகழ்ச்சிகள், உபகுழு)
7. திரு. நிமலன் கார்த்திகேயன் ( தலைவர்– திருத்தலச் சுற்றுலா, உபகுழு)
8. திரு. கே. வடிவேல் ( தலைவர் – இருப்பிடவசதி, போக்குவரத்து, உபகுழு)

## மாநாட்டு இணைச்செயலாளர்கள்/இணைப்பாளர்கள்

1. திரு. எஸ்.தெய்வநாயகம்
2. செல்வி.சற்சொரூபவதி நாதன்

## பொருளாளர்

திரு.ஆர்.வைத்தமாநிதி

# உபகுழுக்கள்

## மாநாடு, சிறப்புமலர்

(உறுப்பினர்கள்)

1. திருமதி. பூமணி குலசிங்கம்
2. திருமதி. சாந்தி நாவுக்கரசன்
3. திரு.ம.சண்முகநாதன்
4. திரு.வி.நடராஜா

## உலக சைவ பேரவைக் கூட்டங்கள்

(உறுப்பினர்கள்)

1. திரு. செ. குணரத்தினம்
2. திரு. கே. இராஜபுவனீஸ்வரன்
3. திரு.ஆர்.நமசிவாயம்
4. திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தி

## கலை நிகழ்ச்சிகள்

(உறுப்பினர்கள்)

1. திருமதி. அபிராமி கைலாசபிள்ளை
2. திருமதி. வனஜா தவயோகராஜா
3. திருமதி. காமினி அசோகன்
4. திருமதி. ஸ்ரீரஞ்சனி விஷ்ணுகாந்தன்

## வரவேற்பு

(உறுப்பினர்கள்)

1. திருமதி. மனோவதனா கனகசூரியம்
2. திருமதி. யோகேஸ்வரி லோகேந்திரன்
3. திருமதி. வாமினி சத்தியமூர்த்தி
4. திருமதி. சுபத்திரா கணேசன்

## சமயப் போட்டிகள்

(உறுப்பினர்கள்)

1. திரு.எஸ்.குமாரசாமி
2. திரு.த.கனகரத்தினம்
3. திருமதி பி. ஞானலிங்கம்
4. திரு.கே.இ.ஆறுமுகம்

## நிதி

(உறுப்பினர்கள்)

1. திரு.எஸ்.கதிரவேலு
2. திரு.பி.விமலேந்திரன்
3. திரு.ஆர்.விஜயபாலன்
4. திரு.ரி.செந்தில்வேள்

## இருப்பிட வசதி, போக்குவரத்து

(உறுப்பினர்கள்)

1. திரு.எஸ்.ரி.எஸ்.அருனானந்தன்
2. திரு.ரி.செந்தில்வேலவர்
3. திரு.பி.விஜயரட்னம்
4. திரு.கே.ஜெகதீசன்

## திருத்தலச் சுற்றுலா, பாதுகாப்பு

(உறுப்பினர்கள்)

1. திரு.எஸ்.விக்னேஸ்வரன்
2. திரு.எச்.எச்.விக்கிரம சிங்க
3. திரு.ரூபன் ரட்ணசிங்கம்
4. திரு.எஸ்.கணபதிப்பிள்ளை

# உலக சைவப் பேரவை

## நான்காவது
## பொதுச் சபைக் கூட்டமும்
## உலக சைவ மாநாடும்

**மாநாட்டின் கருப்பொருள்**

"இன்றைய உலகச் சூழலில் சைவ மறுமலர்ச்சிக்கான செயற் திட்டங்கள்"

**திகதி**

*8-10 செப்டம்பர் 1995*

**நேரம்**

*காலை 9.30 மணி*

**இடம்**

இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்

கொழும்பு -6

**விழா ஒழுங்கமைப்பு**

உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை

கொழும்பு மகளிர் இந்து மன்றம்

# நிகழ்ச்சி நிரல்

**8-09-1995:** **(வெள்ளிக் கிழமை)**

**மு.ப 6.30 :** **விசேடபூசை** பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், பம்பலப்பிட்டி, கொழும்பு-4.

## தொடக்க விழா

**மு.ப.9.30 :** கொடி ஏற்றுதல்

**மு.ப.9.40 :** **மங்கள விளக்கேற்றல்**

**மு.ப.9.50 :** **திருமுறை ஓதல்** – தேவாரப் பண்ணிசை மன்றம்.

**மு.ப.10.00:** **வரவேற்புரை** – செல்வி. சற்சொரூபவதி நாதன்,
தலைவி, கொழும்பு மகளிர் இந்து மன்றம்,
மாநாட்டு இணைச் செயலாளர்/ இணைப்பாளர்.

**மு.ப. 10.10:** **தலைமை உரை** – திரு.கா. தயாபரன்
தலைவர், மாநாட்டு அமைப்புக்குழு,
தலைவர், உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை.

**மு.ப.10.20 :** **தொடக்க உரை** – தவத்திரு சிவநந்தி அடிகளார்
உப தலைவர், பிரதான நிறைவேற்றுனர், உலக சைவப் பேரவை

**மு.ப.10.35 :** **சைவ சமயத் தலைவர்களின் ஆசி உரைகள்**

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
ஆதீன முதல்வர், திருப்பனந்தாள்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
ஆதீன முதல்வர், பேரூர், கோயம்புத்தூர்

தவத்திரு மௌன சுவாமிகள்
முதல்வர், மௌன சுவாமிகள் மடம், சிதம்பரம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
திருஞானசம்பந்த ஆதீன முதல்வர், நல்லை.

சுவாமி ஆத்மகனாநந்தாஜி
தலைவர், இராமகிருஷ்ண மிஷன் , கொழும்பு-6.

**மு.ப. 11. 30:** **சிறப்புரைகள்**

பேராசிரியர் வை. இரத்தினசபாபதி சென்னை (இந்தியா).

பேராசிரியர் ச. கங்காதரன், மதுரைப் பல்கலைக்கழகம் (இந்தியா).

**பி.ப. 12.15 :** **மாநாட்டு சிறப்புமலர் வெளியீடு**

**பி.ப.12.25 :** **நன்றியுரை** – திரு. பா. சி. சர்மா
உபதலைவர், உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை.

**பி.ப.12.30 :** **திருமுறை ஓதல்** – தேவாரப் பண்ணிசை மன்றம்.

# உலக சைவப் பேரவை
# பொதுச் சபைக் கூட்டம்

(உ. சை. பே. உறுப்பினர்களுக்கு மட்டும்)

| | | |
|---|---|---|
| பி. ப. 2.00 | - | **திருமுறை ஓதல்** – தேவாரப் பண்ணிசை மன்றம் |
| பி. ப. 2.10 | - | **வரவேற்புரை** – திரு. ஏ. எம். துரைசாமி<br>செயலாளர், உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை |
| பி. ப. 2.15 | - | **கௌரவ செயலாளர் நாயகத்தின் அறிக்கை**<br>கலாநிதி கே. லோகநாதன் (மலேசியா) |
| பி. ப. 2.25 | - | **கௌரவ பொருளாளரின் அறிக்கை**<br>திரு. எம். இராமலிங்கம் (இந்தியா) |
| பி. ப. 2.40 | - | **உலக சைவப் பேரவைக் கிளைகளின் அறிக்கை வாசித்தல்**<br>இலங்கை - திரு. ஆர். வைத்தமாநிதி (இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா சிங்கப்பூர், மலேசியா, தென் ஆபிரிக்கா நாடுகளின் அறிக்கைகளும் இடம்பெறும்) |
| பி. ப. 3.30 | - | **உரை** – தவத்திரு சிவநந்திஅடிகளார்<br>உபதலைவர், பிரதான நிறைவேற்றுனர், உலக சைவப் பேரவை. |
| பி. ப. 3.50 | - | **பேச்சு, இசை நிகழ்ச்சிகள்**<br>(அகில இலங்கைச் சமயப் போட்டிகளில் பரிசு பெற்றவர்கள்) |
| பி. ப. 4.30 | - | **பரிசு வழங்கல்** (அன்பளிப்பு - லண்டன் மெய்கண்டார் ஆதீனம்) |
| பி. ப. 5.00 | - | **நூல் வெளியீடு** – "சைவ வழிபாடு" |
| பி. ப. 5.10 | - | **சைவப் பெரியார்களைக் கௌரவித்தல்** |
| பி. ப. 5.25 | - | **நன்றி உரை** – திரு. குமார் வடிவேல்<br>நிர்வாக உறுப்பினர், உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை |
| பி. ப. 5.30 | - | **திரு முறை ஓதல்** – தேவாரப் பண்ணிசை மன்றம் |

## கலை நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 6.00 - 8.30 | - | கொழும்பு மகளிர் இந்து மன்றம் -- "**திருமுறைப் பண்ணிசை**"<br>நெறியாள்கை : கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் |

*9. 09. 1995 (சனிக்கிழமை)*

## உலக சைவ மாநாடு

(பதிவு செய்த பங்குபற்றுனருக்கு மட்டும்)

### *முதலாம் அமர்வு*

*(நேரம் – மு. ப. 8.30 – மு. ப. 11.00)*

| | | |
|---|---|---|
| **பொருள்** | – | "சைவமும் இளைஞர்களும்" |
| **தலைமை** | – | திரு. செ. குணரெத்தினம் (இலங்கை) |
| **பிரதான உரை** | – | கலாநிதி கே. லோகநாதன் (மலேசியா) |
| **கருத்துரைகள்** | - | திரு. எம். சுகுமாரன் (பிரான்ஸ்) |
| | - | டீஸ் பிள்ளை (தென் ஆபிரிக்கா) |
| | - | வித்துவான் க. ந. வேலன் (இலங்கை) |
| | - | திரு. எஸ். கிருஷ்ணன் (சிங்கப்பூர்) |

### *இரண்டாம் அமர்வு*

(நேரம் – மு. ப. 11.00 – பி. ப. 1.30)

| | | |
|---|---|---|
| **பொருள்** | – | "சைவமும், சமூகப்பிரச்சினைகளும்" |
| **தலைமை** | – | திரு. வ. சிவராஜசிங்கம் (இலங்கை) |
| **பிரதான உரை** | - | கலாநிதி வி. இராமகிருஷ்ணன் (இலங்கை) |
| **கருத்துரைகள்** | - | திரு. ஏ. குணநாயகம் (இலங்கை) |
| | - | திரு. கு. சோமசுந்தரம் (இலங்கை) |
| | — | திருமதி. சுபாஷினி லோகநாதன் (மலேசியா) |
| | — | திருமதி. பூமணி குலசிங்கம் (இலங்கை) |

## மூன்றாம் அமர்வு

(நேரம் – பி. ப. 2.30 – பி. ப. 5.00)

| | | |
|---|---|---|
| **பொருள்** | – | "சைவமும் புலம்பெயர்ந்தோர் வாழ்வும்" |
| **தலைமை** | – | -திரு. இ. யோகநாதன் (இலங்கை) |
| **பிரதான உரை** | – | கலாநிதி சுப. திண்ணப்பன் (சிங்கப்பூர்) |
| **கருத்துரைகள்** | – | திரு. எம். அழகப்பன் (லண்டன்) |
| | – | வைத்திய கலாநிதி திரு. கே. வேலாயுதபிள்ளை (இலங்கை) |
| | – | திரு. என். திருவாசகம் (மலேசியா) |
| | – | திருமதி. கே. கோபால் (சிங்கப்பூர்) |

### கலை நிகழ்ச்சிகள்

*மாலை : 6.00 மணி முதல் 8.30 மணி வரை*

கொழும்பு மகளிர் இந்து மன்றம் **"தெய்வத்தாய்"** - நாட்டிய நாடகம், கலாபூஷணம் திரிபுரசுந்தரி யோகானந்தம் அவர்களின் மாணவிகள்.

## 10. 09. 1995 (ஞாயிற்றுக்கிழமை)

## நான்காம் அமர்வு

*(மு. ப. 9.00 – மு. ப. 11.30)*

| | | |
|---|---|---|
| **பொருள்** | – | "சைவமும் கலைகளும்" |
| **தலைமை** | – | திரு. க. சண்முகலிங்கம் (இலங்கை) |
| **பிரதான உரை** | – | கலாநிதி க. ப. அறவாணன் (இந்தியா) |
| **கருத்துரைகள்** | – | திருமதி. மைதிலி தயாநிதி (இலங்கை) |
| | - | திரு. சி. குமாரசாமி (இலங்கை) |
| | - | திரு. மோகன் நாயுடு (தென் ஆபிரிக்கா) |
| | - | திருமதி. சாந்தி நாவுக்கரசன் (இலங்கை) |

## நிறைவுப் பொது அமர்வு

(மு. ப. 11.30 – பி. ப. 1.00)

- முக்கிய விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்
- செயற்திட்டம்
- தீர்மானங்கள்
- எதிர்கால வேலைத்திட்டம்
- பேரவையின் ஐந்தாவது பொதுக் கூட்டம், சர்வதேச மாநாட்டின் நிகழ்விடம் பற்றிய தீர்மானம்

**நன்றியுரை**

- திரு. எஸ். தெய்வநாயகம்
  மாநாட்டு இணைச் செயலாளர்/ இணைப்பாளர்.

**ஆலய தரிசனம்**

(பி. ப. 4.00 – பி. ப. 8.30)

- கொழும்பு நகரிலுள்ள முக்கிய ஆலயங்களைத் தரிசித்தல்

## 11. 09. 1995 – 13. 09. 1995

**திருத்தலச்சுற்றுலா**

- வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான திருத்தலச் சுற்றுலா
  (கண்டி, முன்னேஸ்வரம்)

# உலக சைவப் பேரவை இலங்கை கிளையின் அறிக்கை

உலக சைவப் பேரவையின் இலங்கை கிளை ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் நிறைவு பெறும் இத்தருணத்தில், இக்கிளையின் ஏற்பாட்டில், உலக சைவ மாநாடு நடத்துவது, மிகவும் மனமகிழ்ச்சி தரும் செயலாகும். கடந்த மூன்று ஆண்டுகளில், இக்கிளை செய்த செயற்பாடுகளுக்கு அறை கூவலாக இம்மாநாடு அமைகின்றது எனக் கூறலாம்.

பத்து அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளையின் செயற்பாடுகளுக்கு முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ் அவர்கள் உறுதுணையாக இருந்தார். அவரது ஆதரவுடன் அப்போதைய இராஜாங்க அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய திரு.கா. தயாபரன் அவர்களை, தலைவராகக் கொண்டு இக்கிளை ஆரம்பிக்கப்பட்டது. உப தலைவர்களாக திரு.க.சண்முகலிங்கம், திரு.பி.எஸ்.சர்மா ஆகியோரும், செயலாளராக நானும், துணைச் செயலாளராக திரு.எஸ்.தெய்வநாயகம், பொருளாளராக திரு.ஆர்.வைத்தமாநிதி, நிருவாக உறுப்பினர்களாக திரு.குமார் வடிவேல், திரு. இ.கந்தசாமி, திரு.என்.ஹரிதாஸ், திரு.எஸ்.தெய்வேந்திரன், ஆகியோரைக் கொண்ட நிருவாக சபையின் இயக்கத்தில் இக்கிளை தன்னாலான பணிகளைச் செவ்வனவே நிறைவேற்றி வந்தது.

உலகசைவப் பேரவையின் தலைவரும், ஆலோசகருமான, தவத்திரு சிவநந்தி அடிகளாரின் வழி காட்டலில் இலங்கைக்கிளை செயற்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வந்தது. தலைவர் திரு. கா.தயாபரன் அவர்களின் செயற்திறனும், ஏனைய உறுப்பினர்களின் முயற்சியும் ஆலோசனையும் படிப்படியாக இக்கிளையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தன. இன்று ஏறக்குறைய 200 அங்கத்தவர்கள் இக்கிளையில் உள்ளனர். தவத்திரு. சிவநந்தி அடிகளார் கிளையின், செயற்பாடுகளை ஊக்கப்படுத்த ஒரு தொகை பணத்தை ஆரம்பத்தில் அனுப்பி வைத்தார். (இத்தொகை ஏறக்குறைய 35 ஆயிரம்) இதை, வடக்கு-கிழக்கில் உள்ள அனாதை இல்லங்களின் நலனுக்காக பகிர்ந்தளித்து உதவி புரிந்தமை, இக்கிளையின் ஆரம்ப நடவடிக்கைகளுள் ஒன்றாகும். அதைத் தொடர்ந்து அங்கத்தவர்களை சேர்ப்பது தொடர்பான முயற்சியில் இறங்கி, இன்று கணிசமான அங்கத்தவர்கள் சேர்ந்து கொள்ளும் தன்மைக்கு இதன் செயற்திறன் உறுதி கொண்டு உள்ளமை எல்லோர் மனதிலும் மகிழ்வை அளிக்கின்றது.

உலக சைவப் பேரவையின் இலங்கை கிளையின் சார்பில், பாரிஸில் சென்ற ஆண்டு நடைபெற்ற 3 வது உலக சைவ மாநாட்டிலும் கலந்து கொள்ளும் தகுதியையும் இக்கிளை பெற்றது.

இன்றைய கால கட்டத்தில் இக்கிளையும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து நடத்தும் 4 வது உலக சைவ மாநாட்டுக்கு கால்கோளாக அமைந்தது இலங்கைக் கிளையின் அமைப்பேயாகும். சமயப்பெரியார்களும், அறிஞர்களும் கலந்து கொள்ளும் இம்மாநாட்டின், தீர்மானங்கள் இலங்கைக் கிளையின் செயற்பாடுகளுக்கு மேலும் புத்துயிர் அளிக்கும் எனக் கருதுகின்றேன். இதனால் வருங் காலத்தில் சைவ சமய வளர்ச்சியில் இக்கிளையின் பங்கு முக்கிய இடத்தை பெறும் என்பதில் ஐயமில்லை. தவத்திரு சிவநந்தி அடிகளாரின் வழிநடத்தலில் இப்பேரவையின் பணிகளுடன் இணைந்து செயற்படக் கிடைத்தமையை எனது பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

*ஏ.எம்.துரைசாமி*<br>
*செயலாளர்*<br>
*உலக சைவப் பேரவை*<br>
*இலங்கைக் கிளை*

# சைவ சித்தாந்த ஒழுக்கவியல்

(கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
தலைவர், மெய்யியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## தேவிகாலோத்திர ஆகமப் போதனைகள்

சைவசித்தாந்த மெய்யியல் சிந்தனையில் – குறிப்பாக ஒழுக்கவியல் தொடர்பான சிந்தனையில் தேவிகாலோத்திரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஞானத்தைப் பெறுவதால் மட்டுமே ஆன்மா முத்தியடையும் எனக் கூறும் ஆகம நூல்களில் வாதுளாகமத்தின் பேதமான இவ்வாகமமும் ஒன்று. உயிரின் விடுதலைக்கான அறிவு பற்றியும், அவ்வறிவைப் பெறுவதற்கான ஒழுக்க நடைமுறைகள் பற்றியும் இதில் கூறப்படுகிறது.

தேவி, காலம், உத்தரம் என்ற மூன்று சொற்கள் கொண்ட தொடர் மொழியால் இவ்வாகமத்தின் பெயர் ஆக்கப்பட்டுள்ளது. காலம், உத்தரம் என்ற இரு சொற்களும் புணர்த்தப்பட்டு காலோத்தரம் என்றும், உமாதேவியாருக்குப் போதிக்கப்பட்டமையால் தேவி என்ற பெயரையும் பெற்று "தேவிகாலோத்திரம்" எனவும் அழைக்கப்படலாயிற்று. இந்நூல் ஞானம், ஞானசாரம் என்ற இருபிரிவுகளை கொண்டது. ஞானம் என்பது உண்மையறிவு எனவும், ஞானசாரமென்பது அவ்வறிவை அடைவதற்குரிய ஆசாரம் எனவும் பொருள் தரும்.

*"உத்தம குணத்தாய் ஞான மெழுங்கெது பிரண்டினாலே
மொய்த்தவர் முத்தியெய்தும் விதியினை விரித்துரைப்பன்"* (1)

உண்மையறிவான ஞானமும், அதற்குரிய ஒழுக்கமுறைமையுமே இவ்வாகமத்தின் பிரதான போதனைப் பொருளென இச்செய்யுள் தெரிவிக்கிறது. ஒழுக்கவியல் கருத்துக்களைப் போதிக்கும் முதனூலென்ற வகையில் சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் தேவிகாலோத்தரம் குறிப்பிடத்தக்க முக்கியத்து வமுடையது. உமாபதி சிவாசாரியார் தனது சதரத்னசங்கிரகத்தில் இவ்வாகமத்தின் சுலோகம் ஒன்றையும் உள்ளடக்கியிருப்பது மேற்படி கருத்தை அரண் செய்யும். (2)

## காலோத்தரஆகமமும் தேவிகாலோத்தரமும்

சைவசித்தாந்த மெய்யியற் கூடத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் இருபத்தியெட்டு ஆகமங்களில் வாதுளாகமமும் ஒன்று. இவ்வாகமத்தின் பேதங்களாக வாதுளம், உத்தரவாதம், காலக்ஞானம், பிரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேட்டம், நித்தியம், சுத்தம், மகாநனம், விசுவம், விசுவாதமகம் என பன்னிரண்டு உபாகமங்கள் உளவென சைவபூசணம் என்ற நூல் குறிப்பிடுகிறது.(3) இப்பன்னிரண்டு உபாகமங்களிலும் காலோத்தரம் என்ற பெயர் காணப்படவில்லை. இதற்குப்பதிலாக காலாக்ஞானம் என்ற பெயரே காணப்படுகிறது. ஆனால் காலோத்தர ஆகமத்தின் சுவடிகளில் சில சந்தர்ப்பங்களில் காலாக்ஞானம் எனவும், வேறுசில சந்தர்ப்பங்களில் காலோத்தரம் என்றும், குறிப்பிடப்படுவதில் இருந்து இவ்விரு சொற்பிரயோகங்களும் ஒன்றையே சுட்டிநிற்கின்றனவென ஊகிக்கலாம். காலோத்தரம் என்பது காலத்தைக் கடந்து நிற்பது என்ற அர்த்தத்தையும் காலாக் ஞானம் காலத்தைக் கடந்த மெய்யறிவு என்ற அர்த்தத்தையும் கொண்டது. இதுவரை அறியப்பட்ட தரவுகளில் இருந்து பதின்மூன்று காலோத்தராகம பேதங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. (4)

### அவற்றின் பெயர்கள் பின்வருமாறு

01. காலோத்தரம்
02. பிருஹத் காலோத்தரம்
03. அயுதத்ரய சம்ஷதா காலோத்தரம் அல்லது த்ருயயுதகிரந்த சம்ஹிதா் காலோத்தரம்
04. தேவீகாலோத்தரம் அல்லது சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்தரம்
05. துவாதச சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்

06. ஷட்சகஸ்ர சம்ஹிதா காலோத்தரம்
07. த்ரயோகசதி காலோத்தரம்
08. ஸ்பதசதிக காலோத்தரம்.
09. சதுசதிக காலோத்தரம்
10. ஸார்தாத்ரிசதி காலோத்தரம்
11. திரிசதிக காலோத்தரம்.
12. துவிசதிக காலோத்தரம்.
13. ஸ்கந்த காலோத்தரம்

இவற்றில் 1,2,7,8,10,12 இலக்கங்களுடைய காலோத்தர ஆகம பேதங்களும் 3,4,5 இலக்கங்களுடைய காலோத்தர ஆகமத்தின் ஒருசில படலங்களுமே இதுவரை கிடைக்கபெற்றுள்ளது. ஸாத்தாத்திரி சதிகாலோத்தர உரையாசிரியரான ராமகண்டர் தனது உரையில் மேற்கோளாகக் குறிப்பிட்ட இரு சுலோகங்களில் இருந்து சதுசதிட காலோத்தரம் பற்றி அறியக் கூடியதாயுள்ளது. கார்த்திகேயருக்கும் சிவனுக்குமிடையிலான உரையாடலாகவே தேவிகாலோத்தரம் தவிர்ந்த ஏனைய காலோத்தர பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. ஆனால் தேவிகாலோத்தரம் மட்டும் சிவன் பார்வதி உரையாடலாகக் காணப்படுகின்றது.

ரௌவ ஆகமத்தின் உபாகமமான காலக்னமும், புரோத்கீதா ஆகமத்தின் உபாகமமான ஸ்ரீ காலாஞானமும் வாதுளாகமத்தின் சுருக்கங் களேயென்று உரையாசிரியர்கள் சிலர் கருதுவதால் காலக்னமும், ஸ்ரீகாலோஞானமும் காலோத்தர ஆகமத்தையே குறிப்பிடுவதென எண்ணுதல் ஆகாது. வாதுளாகமத்தின் பேதமான காலக்ஞானம் அல்லது காலோத்தரம் மேற்கூறிய இவ்விரண்டிலும் இருந்தும் வேறுபட்டது. "ஸாத்தாத்திரிசதிகாலோத்தரம்" (350 சுலோகங்களைக் கொண்டது) ராமகண்ட பட்டருடைய (கி.பி.1100-1130) உரையுடன் பாண்டிச் சேரியிலமைந்துள்ள பிரெஞ்சு நிறுவன வெளியீடாக வந்துள்ளது. [5]

இந்நூல் த்ரயோதசதிகாலோத்தரத்தின் ( 1300 சுலோகங்களைக் கொண்டது) சுருக்கமாகும்.

காலோத்தரத்தின் பிறிதொரு பேதமான துவிசதிகாலோத்தரராகமத்திற்கு (200 சுலோகங்களைக் கொண்டது) அகோரசிவாசாரியாரின் உரையொன்றும் உளது. அகோரசிவாசாரியாரின் துவிசதிகாலோத்தரம் நானூறு சுலோகங்களைக் கொண்ட சதுதிககாலோத் தரராகமத்தின் சுருக்கமாகும். இவ்விடத்து சோமசம்பு பத்ததியின் உரையாசிரியரான திரிலோசனசிவர் தரும் சுவையானதொரு தகவல் உண்டு. [6] அதாவது முதனூலான காலோத்தர ஆகமத்தின் பேதமான ஸார்தாத்திரிசதியும் துவிசதிகாலோத்தரமும் இருவேறு மரபுசார்ந்த சிந்தனாகூடத்தைச் சார்ந்தவை என்ற குறிப்பாகும். சோமசம்பு சிவாசாரியாரின் பத்ததி துவிசதிகாலோத்தர ஆகமமரபையும், அகோர சிவாசாரியாரின் பத்ததி ஸார்தாத்திரிசதிகாலோத்தர மரபையும் பின் பற்றுவனவாகும். அகோர சிவாசாரியார் துவிசதி காலோத்தரத்திற் கோர் உரைவிளக்கம் தந்த பொழுதும் அவ்விளக்கம் ஸார்த்தாதிரிசதிகாலோத்தர ஆகம பேதத்தின் படியே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவஞானசுவாமிகள் தமது சிவஞான பாடியத்தில் அகோரசிவாசாரியாரின் பத்ததியைக் கண்டித்தும், சோமசம்பு சிவாசாரியாரின் சோமசம்பு பத்ததியே சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடானதென்றும் குறிப்பிடுவதும் இங்கு மனம் கொள்ளத்தக்கது. [7]

தேவிகாலோத்தரம் என அழைக்கப்படும் காலோத்தர ஆகமபேதத்திற்கு சதுர்வியம் சதிஸகஸ்ரகாலோத்தரம் ( 24,000 சுலோகங்களைக் கொண்டது) என்ற பெயரும் உண்டு. கிரியாக்கிரமஜியோதி, ஞானரத்நாவலி ஆகிய நூல்களில் இவ்வாகம சுலோகங்கள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. சதுர்விம்சதிஸகஸ்ர காலோத்திரத்தின் ஞானகண்டத்தின் அறுபத்தைந்தாம் படலத்தில் உள்ளவை மட்டுமே இன்று தேவிகாலோத்தர ஆகமம் என்ற பெயரில் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது. 1901ம் ஆண்டு மராட்டி மொழியில் இவ்வாகமம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மொழியில் நிரஞ்சனசித்த நஞ்சனா என்பவரால் இவ்வாகமத்திற்கு உரைவிளக்கமொன்று எழுதப்பட்டதென்ற தகவல் உண்டு. [8] தேவிகாலோத்தர ஆகமத்தின் வடமொழி மூலத்தை கிரந்தத்தில் முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் ஆறுமுகநாவலரின் மருமகனான த.கைலாயபிள்ளை ஆவார். தேவிகாலோத்தரம் நீண்ட காலத்திற்கு முன்பே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டதென்றும், பாடியவர் பெயர் தெரியவில்லையென்றும் இவ்வாகமத்தின் தமிழ் மொழிப் பதிப்பாசிரியரான முத்தையாபிள்ளை குறிப்பிடு கின்றார். [9]

இவரது பதிப்பில் வெளிவந்த தேவிகாலோத்தர ஆகமம் ஞானம் ஞான் சாரம் என்ற இரண்டு இயல்களை உடையதாய் 69 செய்யுள்களாலானது. இதுதவிர ரமண மகரிஷியின் 85 செய்யுள்களைக் கொண்ட தேவிகாலோத்தரஷி தமிழ்மொழிப்பெயர்ப்பொன்றும் உளது. [10] ரமணரது மொழிப்பெயர்ப்பின் அவதாரிகையில் வடமொழி தேவிகாலோத்தரத்தின் ஞானசார சிசாரப்படலமே இங்கு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதென்ற குறிப்பு உண்டு. சிவாக்கிரயோகிகள் வடமொழி தேவிகாலோத்தரத்திற்கு தமிழுரையொன்று செய்ததாக குறிப்பிடப்படுகிறது.[11]

சர்வஞ்ஞானோத்தர ஆகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் பதிப்பாசிரியரான முத்தையாபிள்ளை அதில் வருகிற காப்புச் செய்யுளும், தனக்கு பதிப்பதற்குக் கிடைத்த தேவிகாலோத்தரத்தில் வருகிற காப்புச் செய்யுளும் ஒன்றேயாதலால் இவ்விரு ஆகமங்களையும் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருக்கலாமெனக் கருதுகிறார்.[12]

எனினும் இவ்விரு ஆகமங்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சர்வஞ்ஞானோத்தர செய்யுட்களில் பெரும்பாலும் வடமொழிக் கலப்பிருப்பதையும், ஆனால் தேவிகாலோத்தர செய்யுட்களோவெனில் சீரான தமிழ் நடையிலிருப்பதையும் அவதானிக்கலாம். நடை வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளின், இவ்விரு ஆகமங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர் ஒருவராயிருத்தல் முடியாது.

## ஒழுக்கவியற் கருத்துக்கள்

சிவாகமங்கள் கூறும் சரியை கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களையும் சமய ஒழுக்கவியல் நோக்கில் நால்வகை ஒழுக்கநெறிகளாக எடுத்துக் காட்டலாம். இவற்றில் சரியையும், கிரியையும், கர்ம மார்க்கங்கள். விதிக்கப்பட்ட சமய நடைமுறைகளை பின்பற்றி ஒழுகுவதென்பதே இதன் தாற்பரியமாகும். சமய நடைமுறைகளை முதன்மைப்படுத்தாது மெய்யறி வினடிப்படையில் ஒழுகுவது ஞான மார்க்கமாகும். சமய இலக்குகளை அடைவதற்குரிய வழிமுறையாக இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் முதலான எட்டு படிமுறைகளினூடாக யோகத்தில் நிற்றல் யோக மார்க்கத்தில் அடங்கும். இவைதவிர திருஞானசம்பந்தர் முதலாகிய சைவ நாயன்மார்களால் கைக் கொள்ளப்பட்ட பத்திமார்க்கமும் சைவமரபினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு சமய ஒழுக்க முறையாகும். தனிமனிதரது. பிரத்தியேகமான நேர ஈடுபாடே பத்திமார்க்கத்திற்கு அடிப்படையானது. ஆனால் ஆகமங்களைப் பொறுத்தவரையில் கர்மமார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்ற மூன்று வழிமுறைகளுமே பிரதான ஒழுக்க நெறிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கர்மமார்க்கமும், யோகமார்க்கமும், ஞான மார்க்கத்தினளவு முக்கியத்துவமுடையதாக மூலாக மங்களில் காணப்பட்டாலும், உண்மையென்று சைவசித்தாந்திகளால் போற்றப்படும் சர்வஞ் ஞானோத்தரம், தேவிகாலோத்தரம் முதலிய ஆகமங்களில் ஞானமார்க்கமே விதந் தோதப்படுகிறது. மெய்யறிவைப் பெறுதலே ஆன்மவிடுதலைக்கு (முத்திக்கு) இன்றியமையாத தென்பது இவ்வாகமங்களின் பிரதான போதனைப் பொருளாக இருக்கிறது. சமய நடைமுறைகளை வலியுறுத்துகிற கர்மமார்க்கமும், யோகமார்க்கமும் ஆன்மவிடுதலைக்கான பொருத்தமான வழி முறைகள் அல்லவெனவும் பயனற்றவை யெனவும் கூறப்படுகிறது.

*"மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம் வேண்டா*
*அந்தமில்லா முத்திக் குபாயமே யறிய வேண்டும்"*[13]

எனக்குறிப்பிடுவதன் மூலம் கர்மமார்க்கத்தையும் யோகமார்க்கத்தையும் முத்தியடைவதற்குரிய பொருத் தமான ஒழுக்கமுறையல்லவென எடுத்துக் கூறும் தேவிகாலோத்தரம்–

*"பெத்தமற ஞானத்தாற் காட்சி பெறிற் சாந்தியுடைச்*
*சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவீ டடையுமால்"*[14]

என ஆன்மவிடுதலைக்கு அல்லது முத்திக்கு ஞானமார்க்கமே சரியான வழிமுறையாகுமெனக் குறிப்பிடுகிறது.

ஆன்ம விடுதலையும், அதனோடு தொடர்புடைய ஞானமார்க்கமும், கிரியைகளை முதன்மைப்படுத்தும் வேதமரபிற்கு எதிராக வளர்ச்சிபெற்றுவந்ததொரு ஒழுக்கவியல் சிந்தனையாகும். ஞானமார்க்கம் ஆன்மாக்களின் இறுதி இலட்சியத்தை அடைவிக்கும் வழிமுறையாக சைவமரபினாலும் போற்றப்படுகின்றது. ஆனால் வேதமரபினால் விதந்துபோற்றப்படும் கிரியைசார் ஒழுக்கமோ நற்பலாபலன்களை எதிர்பார்த்து

குறிப்பாக வளமான இவ்வுலக வாழ்க்கைக்கான வழிமுறையாகவே பரிந்துரைக்கப்பட்டது.

ஆன்மவிடுதலைக்கு வேதங்களில் கூறப் பட்டுள்ள வேள்விக் கிரியைகள் எந்த வகையிலும் உதவுவனவல்லவென்ற குறிப்பு உபநிடதங்களிலும் காணப்படுகின்றது. சாங்கிய தரிசனமும் இதனைக் கண்டிக்கிறது. சாங்கியின் அபிப்பிராயப்படி பௌதீகவதீத உண்மைகள் பற்றிய அறிவே மனிதரை மறுபிறப்பாகிய பந்தத்திலிருந்து விடுவிக்கும். ஆன்மவிடுதலைக்கான இம்முயற்சி "நிவிர்த்தி" மார்க்கம் என அழைக்கப்படும். நிவிர்த்தி மார்க்கம் வேதங்களினாலும் தர்மசாஸ்திரங்களாலும் போதிக்கப்படும் "பிரவிர்த்தி" மார்க்கத்திற்கு முற்றிலும் எதிரானது. புற உலகு பற்றிய உளச்சாய்வு அல்லது புலன்களதும் உளத்தினதும் விடய நாட்டம் பிரவிர்த்தி எனப்படும். வேதங்களினாலும் தர்மசாஸ் திரங்களினாலும் முன்மொழியப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம் இவ்வுலக வாழ்க்கையை முதன்மைப்படுத்தி அவ்வாழ்க்கையில் அனைத்து நற்பேறுகளையும் பெறுவதை பிரதான இலக்காகக் கொண்டது. ஆனால், மோட்சம் அல்லது ஆன்மவிடுதலை என்ற ஒழுக்கக் கருத்தோ கடந்த நிலையான உண்மை பற்றிப் பேசுகிறது. மனித உளத்தை புறப்பொருட்களிடம் நாட்டமடையச் செய்வதாக பிரவிர்த்தி மார்க்கம் உளது. வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் போதிக்கும் தருமம், நற்பேறு, இன்பம் (காமம்) போன்ற விழுமியங்கள் பிரவிர்த்தி மார்க்கத்திற்குரியனவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆன்மவிடுதலையை சுட்டும் ஞானமார்க்கமோ (நிவிர்த்தி மார்க்கம்) புறப் பொருட்களுடனான தொடர்பை மனம் முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறது. அகநிலைப்பட்ட முறையில் ஆன்மாவின் உண்மையியல்பைக் கண்டறிந்து கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்துகிறது. நிவிர்த்தி மார்க்கத்தை வற்புறுத்தும் ஒழுக்கக் கொள்கையினரில் சாங்கியர் முதன்மை ஸ்தானத்தைப் பெறுகின்றனர்.

பிரவிர்த்தி மார்க்கம் ஆன்மவிடுதலையைத் தராதென தேவிகாலோத்தரமும் குறிப்பிடுகிறது. மனமானது புறத்தேயுள்ள விடயங்களில் செல்லாது கருத்தடங்கி தன்னிடத்தே நிற்றல் வேண்டுமெனவும், அவ்வாறு நிற்றலே முத்திக்கு வழியாகுமெனவும் அது கூறுகிறது. [15]

*"கருத்தடங்கில் முத்தியது கையகலிற் கட்டாகும்*
*விரித்த பொருளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர்*
*திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திரும்பாமல்*
*அருந்தியுட னிலைநிறுத்து மஃதறிவின் பயனாமால்"* – [16]

துன்பமே பிறவிக்குக் காரணமென்று பின்வரும் செய்யுள் குறிப்பிடுகிறது. [17]

*"யாவ ராயின மெப்பிறப் பெய்திலும்*
*ஆவ தாவ தருத்துய ராதலால்*
*தீய துன்பஞ் செறுத்தற் பொருட்டந்தத்*
*தூய ஞானச் சுடரைத் தொடர்வரே"*

எவராயினும், எப்பிறப்பு எய்தினாலும் அடைவது துன்பமே. எனவே துன்பத்திலிருந்து விடுபடுதற் பொருட்டு மெய்யறிவின்படி ஒழுகுதல் வேண்டுமென்பது இச்செய்யுளின் தாற்பரியமாகும். பிறப்பு துன்பத்திற்கேதுவானதென்ற கருத்து சாங்கிய தரிசனத்திலிருந்து சைவசித்தாந்திகளால் பெறப்பட்ட கருத்துக்களில் ஒன்றாக இருக்கலாம்.[18] ஒவ்வொரு ஆன்மாக்களும் விடுதலையடைய வேண்டுமென்பது சாங்கியத்தின் நிலைப்பாடாகும்.

பிறவியாகிய துன்பத்திலிருந்து விடுபட மனதையடக்குதல் வேண்டும். மனமானது ஓரிடத்தில் நிலைத்து நிற்பதல்ல. அது குரங்கு போல் ஒன்றைவிட்டொன்றைப் பற்றி அலைந்து திரியும். [19]

*"மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்சரித்துத்*
*திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச் சூனியத்தே நின்றால்*
*மருவினோர் பிரிதலின்றி வானவ ரறிவுக் கெட்டாப்*
*பொருவிலா நித்தசுத்தப் பொருளினை யடைவரன்றே"*

என மனத்தின் இயல்பையும் அதனை அலையவிடாது ஓரிடத்தில் நிலைநிறுத்தலும் ஆன்ம விடுதலைக்கு இன்றியமையாததெனத் தேவி காலோத்தரம் குறிப்பிடுகிறது. மனம் ஓரிடத்தில் நிலை பெறவேண்டுமாயின் தேகப்பற்றும், போகப்பற்றும் அகலுதல் வேண்டும். போகப்பற்று பலவிதமான அவஸ்தைகளுக்கு காரணமாகிறது. அவஸ்தை பிறவிக்கேதுவாகிறது. எனவே மனதை நிலைபெறச் செய்து காப்பவரே நல்ல தவத்தையுடையவராவார்.

*"பற்றினாற் சலிக்குமுள்ளம் பற்றாதே பண்ணிக்கொள்க*
*நிற்றலின் றெனிறுந்தந்த நிலையினில் நிறுத்திக்கொண்டால்*
*பெற்றன மென்று பேணிப் பின்னைப் பேராமல் காக்கும்*
*நற்றவ ரன்னியந்த வுலகினில் லோரியாரே*

என்பது தேவிகாலோத்தரச் செய்யுள். [20]

ஆன்மவிடுதலையாகிய முத்திநெறிக்குரிய உபாயம் மனவடக்கமே என்று கூறுவதன் மூலமே புலனடக்கத்தை ஒழுக்க நடத்தைக்கான முன்நிபந்தனையாக தேவிகாலோத்திரம் எடுத்துக்காட்டுகிறது. புலனடக்கம் பந்தங்களிலிருந்து விடுதலையடையச் செய்கிறது. இவ்விடுதலை பிறப்பிறப்பிலிருந்து ஆன்மாவை விடுதலை செய்கிறது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் ஆன்மவிடுதலைக் கோட்பாடு சாங்கியம். நியாய, வைசேடிகம் ஆகிய தரிசனங்கள் ஆன்ம விடுதலைக் கோட்பாட்டை ஒத்திருப்பதுபோலத் தோன்றுகிறது. எனினும் சைவசித்தாந்த நிலைப்பாட்டிற்கும் சாங்கியம், நியாய, வைசேடிகம் ஆகியனவற்றின் நிலைப்பாட்டிற்குமிடையில் அடிப்படையானதொரு வேறுபாடுண்டு. சாங்கியத்தின்படி விடுதலையடைந்த ஆன்மா லைபினிட்சுவின் "மொனாடுகள்" போன்றிருக்கும். அது பிறப்பிறப்பாகிய பந்தத்திலிருந்தும் விடுபட்ட "கைவல்ய" நிலையாகும். "சரீரசம்பந்தமில்லாத ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிவைதம் என்ற மூன்று விதமான துக்கங்களற்ற நிலையை புருஷன் அடைவதே மோட்சம் அல்லது "கைவல்யம்" என சாங்கிய தத்துவ கௌமுதி மோட்சத்தை விளக்குகிறது.[21] நியாயவைசேடிகம் ஏற்றுக் கொள்கிற ஆன்மவிடுதலையும் சாங்கியர் கூறுகிற கைவல்ய நிலையை ஒத்ததாக இருப்பினும் ஆன்மா மோட்சத்தில் நிர்க்குணனாக இருக்கிறானென்பது இவர்களது நிலைப்பாடாகும்.

ஆனால் சைவசித்தாந்தமோ பிறப்பிறப்புக்களை எக்காலத்துக்குமாய்த் துறந்து சிவனோடு இரண்டறக் கலத்தலே ஆன்மவிடுதலை என்பதன் தாற்பரியம் எனக் கருதுகிறது. சிவனைப் பற்றி நிற்பவனே சிவயோகி என்றும், தூல சூக்கும சரீரங்களைத் தனக்கு வேறாக அறிந்தவனுக்கு சிவஞானம் விளங்கித் தோன்றுமெனவும் சைவசித்தாந்தம் ஏற்றுக் கொள்கிறது.

சிவனே தானென்று உணர்வதாகிய சிவ ஞானத்தினால் ஆன்மவிடுதலையான பரமுத்திப் பேறு ஆன்மாக்களிற்குக் கிடைக்குமென தேவிகாலோத்தரம் குறிப்பிடுகிறது. [22]

*"நித்தனாம் பரமேசன் யாரென்று நிச்சயிக்கின்*
*முத்தனல வெனி னுமவன் முத்தனா முயிருடம்பின்*
*பெத்தமற ஞானத்தால் காட்சிபெறிற் சாந்தியுடையச்*
*சித்தனாய்ப் பொருட்பற்றுத் தீர்ந்துவீடடையுமால்"*

இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்தால் ஆன்மவிடுதலையைப் பெறும் உயிரானது அத்தகைய விடுதலையை அடைவதற்கான ஒழுக்கநெறி யாதென்ற வினாவிற்கு இவ்வாகமத்தின் ஞானாசாரவியல் விடைதருகிறது. இதன்படி பரமுத்தியடைவதற்கான ஞானத்தைத் தவிர பசுஞானமோ பாசஞானமோ, அல்லது சிவபூசையோ, ஓமமோ அல்லது இவற்றிற்கு அங்கமான கிரியைகளோ தேவைப்படுவதில்லை. நியமனம் முதலிய சரியைகளும் விரத ஒழுக்கமும் வேண்டப்படுவதில்லை. நிவர்த்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர் உலகசம்பந்தமான செயல்கள் அனைத்தையும் செய்யாது விடுதலே தக்கதெனக் கூறப்படுகின்றது. ஆசையை அடக்குதல் வேண்டும்[23]. உயிர்களிடத்து அன்புடையன வாயிருத்தல் வேண்டும்[24]. மந்திர தந்திரங்களை விரும்புதல் ஆகாது[25]. விருப்புவெறுப்பின்றி சமநிலையில் நிற்றல் வேண்டும். [26]

*"ஆசையினை யறவிட்டெப் பொருட்குமொத்துச் சுகதுக்கம்*
*பேசிநட் டாரபகைஞர் பீடுடையோர் பீடில்லோர்*
*மாசிலொளி வளருமணி காஞ்சனன் கல்லோட்டினிலும்*
*நேசமறப் பார்த்துணர்ந்து சமநிலத்தே நிலைநிற்பான்."*

என சம நிலையாளுமையுடையவனாயிருத்தல் வேண்டுமென இவ்வாகமம் கூறுகிறது. இதனால் உலகத்துப் பொருட்களிடத்து அச்சமோ அல்லது அதிசயமோ ஞானசாதகனுக்கு இல்லாது போய்விடுகிறது. வாதம் செய்தலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலும், பிறருடன் விரோதமாயிருத்தலும் இல்லாதிருக்கும். விதிக்கப்பட்டவையும் விலக்கப்பட்டவையும் பற்றிய நூல்களை ஓதுதலிலிருந்தும் விடுபட்டு நன்மை, தீமை என்று சொல்லப்பட்ட கன்மம் அனைத்தையும் ஒருசேர விட்டிருப்பான். இவ்வாறு நிவிர்த்தி மார்க்கத்திலீடுபட்டவனது ஒழுக்கவியல் பற்றி தேவிகாலோத்திரம் விளக்குகிறது. [27]

*"வாதுரைபயனில் சொல்லும் பிறருடன் மகிழ்ந்திருத்தல்*
*பேதுறு பிணக்கநீங்கிப் பெரியவ ளருளினாலே*
*ஓதுநா லோதலோவி யுலகினினன்று தீதென்*
*றாதியி லுரைத்த வெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான்"*

பிறிதொரு செய்யுள்மூலம் ஆசை, கோபம், பயம், சோகம், பொறாமை, பயம், ஆற்றாமை, பிறருக்கு தீங்குபயக்கும்படி பேசுதல், சிறுமை என்பன இல்லாதிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது. [28]

*"ஆசை கோபம் பயஞ்சோக ராகமாம்*
*மாசு மாட்சியுள் ளோராக்கமாற்றாமை*
*பேசு தீமை பிறர்க்குத் தமக்கிலாத்*
*தேசி முக்குடன் றீர்வார் சிறந்தவர்"*

## முடிவுரை

இதுவரை கூறியவற்றிலிருந்து சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படையில் ஆன்ம மையவாதமாக விருப்பதைக் காணலாம். இவ்வுலக வாழ்க்கை பாசத் தொடர்புகளைக் கொண்டது. துன்பமானது ஒருவனது வாழ்க்கை பிறப்பிறப்புத் தொடர்பில் இருந்து விடுபடுதலையே இலக்காகக் கொண்டதால் ஒழுக்கவியலும் அதனடிப்படையிலேயே விளங்கிக் கொள்ளப்படுகிறது. மிக உயர்தரத்திலுள்ள சுயகட்டுப்பாடும், தூய்மையான உள்ளமும் விடுதலைக்கான இன்றியமையா நிபந்தனைகளாக வற்புறுத்தப்படுகிறது. ஒருவன் ஆன்மிக நாட்டத்தை தனது சுயமுயற்சியாலேயே அடைதல் வேண்டுமென்ற இச்சிந்தனைப் போக்கு, ஒழுக்கவியலில் தனியுரிமைச் செயலாற்றக் கோட்பாடாக இருப்பதுடன் ஒருவன் தன் பற்றுக்கள் மனச் சாய்வுக்கு அல்லது சுயாதீன சித்தம் என்பனவவற்றின் மீது ஆளுகை செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையும் வெளியிடுவதாக உள்ளது.

வேதங்களில் கூறப்பட்ட பிரவிர்த்தி மார்க்கம், சமய ஒழுக்கத்தையும் வர்ணாச்சிரம தர்மம் போதிக்கும் சாதிஒழுக்கத்தையும் வற்புறுத்துவதன் மூலம் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அங்கீகரிக்கின்றது. இதனால் போலும் வேதங்களைப் பயிலுதல் முதன்மூன்று வர்ணத்தவர்க்கு மேயுரியதென்ற நிலைப்பாட்டை வேதமரபு போதிக்கின்றது. ஆனால் சைவசித்தாந்தத்தின் முதல்நூல்களான ஆகமங்களோ நால்வகை வர்ணத்தவர்க்கும் அவை உரியனவென்று அறுதியிட்டுக் கூறுவதன் மூலம் சாதிப் பாகுபாட்டிலமைந்த சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கின்றது. இதன் மூலம் ஆன்மவிடுதலைக்கான ஒழுக்கம் அனைவருக்கும் ஒன்றேயென சைவசித்தாந்தம் விதிப்பதை தேவிகாலோத்தரம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

## பிற்குறிப்பு

இக்கட்டுரையை எழுதுங்கால் காலோத்தர ஆகமத்தின் பகுதிகளை வாசித்து விளக்கிய பேராசிரியர் வி. சிவசாமிக்கு நன்றி.

## அடிக்குறிப்புக்கள்

01. **தேவிகாலோத்தர ஆகமமும் உரையும்,** பதிப்பாசிரியர் பொ. முத்தையாபிள்ளை (1935), பக் 8

02. Sataratnasangraha of Umapati Sivacarya (ed) P. Thirugnanasampandhan (1973), Madras University Press. P. 102

03. **சைவ பூஷணம், வடமொழி மூலமும் தமிழ் வியாக்கியானமும்,** தேவகோட்டை, சிவாகம சித்தாந்த வெளியீடு (1925), பக். 163.

    திருமந்திரத்தில் ஒன்பது ஆகமங்கள் பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது. அவற்றில் காலோத்தரம் ஒன்று. திருமூலர் குறிப்பிடும் ஆகமங்கள் வருமாறு. காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம்.

04. Sardhatrisatikalottaragama ed. N.R.Bhatt (1979) Institute Francais D indologie, Pondichery P. 4

05. மேலே குறிப்பிட்ட நூல்

06. மே.கு., பக். 08

07. **சிவஞான சுவாமிகள் விஞ்ஞான பாடியம்,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1952) பக் 25–26

08. O. Cit, P. 7

09. **தேவிகாலோத்தரம்** மு. கு., பக். 12

10. **ரமணர் நூற்திரட்டு** ( இரண்டாம் பதிப்பு 1934) திருவண்ணாமலை, பக். 53–58.

11. **சிவாக்கிரயோகிகள் சிவநெறிப்பிரகாசம்** (முன்னுரை, திருவாவடுதுறை ஆதினம் 1968) பக். 17.

12. தேவிகாலோத்தரம் மு. கு., முன்னுரை

13. மே.கு., பக். 23

14. மே.கு., பக். 61

15. மே.கு., பக். 14

16. மே.கு. பக். 33

17. மே.கு., பக். 33

18. சாங்கிய தத்துவ கௌமுதியில் வருகிற பின்வரும் சுலோகத்தை மேற்படி தேவிகாலோத்தரச் செய்யுளுடன் ஒப்பிட்டு நோக்கவும். "...... லிங்க சரீரத்துடன் கூடிய புருஷன் லிங்கசரீரம் தொலையும் வரையில் ஜனனமரணங்களால் ஏற்பட்ட துக்கத்தை அடைகிறான். ஆகையால் சிருஷ்டி இயற்கையில் துக்க சாதனமாகவே இருக்கிறது. பார்க்க, "ஸாங்கிய தத்துவ கௌமுதி" பதிப்பாசிரியர்கடலங்குடி நடேச சாஸ்திரிகள் (1925) பக். 199.

19. **தேவிகாலோத்தரம்** மு.கு., பக். 36

20. மே.கு., பக். 45

21. **சாங்கிய தத்துவ கௌமுதி**, மு-கு., பக். 226

22. **தேவிகாலோத்தரம்** மு-கு., பக். 61

23. மே.கு., பக். 81

24. மே.கு., பக். 82

25. மே.கு., பக். 86

26. மே.கு., பக். 87

27. மே.கு., பக். 91

28. மே.கு., பக். 92



# சித்தாந்த சைவம்

பண்டிதர், இணுவையூர்
கா. செ. நடராசா B.A.(Hons), இலங்கை

## சொற்பொருள்

**சி**த்தாந்த சைவம் என்பதனைச் சைவ சித்தாந்தம் எனவும் கூறுவர். சித்தாந்த சைவம் என்பது ஆத்மனின் உள்ளார்ந்த நிறை நிலைக்குரியது. இத்தகைய சிறப்பினால், காலம், இடம், நிகழ்வு என்பவற்றால் எத்தகைய தாக்குறவுக்கும் உள்ளாகாதிருப்பது. இந் நெறியை பன்மைக் காட்சிப் பொருட் கோட்பாடு ( Pluralistic realism) எனலாம்.

சித்தம், ஆத்மனின் அனைத்து இயக்கத்திற்கும் தூண்டுதலாக இருந்து ஆத்மனைத் துலங்க வைப்பது அந்தமென்றால் நிறைநிலை பெற்ற முடிவிடம். அதற்கு அப்பால் எதுவுமேயில்லை. சைவம் என்பது ஈடு எடுப்பற்ற இன்பநிலை. இவையே சித்தாந்த சைவம் கூறும் துணி பொருள். இது கடன் வாங்கப்பட்டதன்று; தமிழர் வாழ்வியலாய்த் தொடர்ந்து வருவது . ஆகமங்களையோ– வேதங்களையோ –அன்றி உபநிடதங்களையோ அடியொற்றி உருவானதன்று. இவை அனைத்தும் சித்தாந்த சைவத்தின் வாழ்வியலை விளக்க எழுந்த தத்துவங்களேயன்றி அவற்றில் இருந்து தோன்றிய வையல்ல.

இலக்கியத்தின்வழி இலக்கணம் தோன்றுகின்றது. வாழ்வியலை ஒட்டி ஒழுக்கவியல் தோன்றுகின்றது. சிந்தனையை ஒட்டிச் செயல் நிகழ்கின்றது. செயலை மையமாகக் கொண்டு தத்துவக் கோட்பாடுகள் உருவாகின்றன. அஃதே போன்றுதான் சித்தாந்த சைவமாகிய வாழ்வியலுக்கு ஆகமங்களும், வேதங்களும், உபநிடதங்களும், இலக்கணம் கூறின. இம்மரபினை ஒட்டியும் வெட்டியும் அவற்றை விஞ்சிய நிலையில், கி.பி. 13ம் நூற்றாண்டளவில் கனிந்து, தமிழர் வாழ்வியல் விழுமியங்களை விளக்கும் கருவூலமாகச் சிவஞான போதம் முகிழ்த்தது.

## பன்மைக் கோட்பாடு

தம்மைத் தாம் உணராதவை சடம் என்றும் அசத்தென்றும் பெயர் பெறும். தம்மை உணர்பவை சித்தெனப்பட்டன. இவை அனைத்தையும் கடந்தது கடவுள் எனவும், கடந்த நிலையோடு அனைத்திலும் இயைவுற்று நிற்பதனால் இயைவுள் எனவும் பெயர் கொண்ட பேரறிவு சிவம் எனப்பட்டது.

சித்துப் பொருளான ஆன்மா பஞ்ச பூதச் செயலால் உருவானதன்று. பஞ்சபூதப் பொருட் களுக்கு உணரும் தன்மை இல்லை. ஆன்மா அறிநிலை உடைய சித்துப் பொருள். அதனால் அது என்றும் கூர்ப்புடையதாக இருக்கின்றது. இக்கூர்ப்பு, பேரறிவு நிலைக்கு உட்படும் பொழுது ஆத்மன் எனப் பெயர் பெறும். இவ்வாத்மன் தன்னிருப்பை உணர்த்தி நிற்கும் தன்மையினை சிவஞானபோதம் மூன்றாம் கொழுவில், (சூத்திரம்)

*'உளது இலது என்றலும் எனது உடல் என்றலின்*
*ஐம்புல ஒழுக்கம் அறிதலில் கண்படில்*
*உண்டி வினை இன்மையின் உணர்த்த உணர்தலின்*
*மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"*

என மெய்கண்ட தேவர்நவில்வர். சிற்றாற்றலின் துணை கொண்டு (சிற்சக்தி) கனவுலகிலும் பேராற்றலின் துணை கொண்டு (மகாசக்தி) நினைவுலகிலும் ஆத்மன் அறிநிலைக்கு உரியவன் ஆகின்றான். இதனைச் சித்தாந்த சைவம் அளவை (தர்க்கம்) வழிநின்றும், அறிவளவைக் கோட்பாட்டின் வழிநின்றும் உண்மைப்படுத்தும்.

ஆன்மாக்கள் எண்ணிறந்தன என்ற கூற்றினை இயற்கையின் செயற்பாட்டின் மூலம் அறிகின்றோம். இன்றைய உலகின் மக்கட் பெருக்கம் இதனைத் தெளிவுற விளக்கி நிற்கின்றது. சீவனின் இயல்பு பற்றிச் சித்தாந்த சைவம் சீரிய கோட்பாட்டினைக் கொண்டுள்ளது.

தான் என்றும், நான் என்றும், இரண்டு அற்ற சுத்த அத்வைதமாகிய சைவ நிலை அடையும் பொழுது ஆற்றுதற்கு அரியதாகிய ஐம்புல வேட்கை அடங்கிப் பேறிவாகிய ஞானம் மேல் ஓங்கும்.

அதுவே பதியாகிய சிவத்தினை அடையும் நிலை. அதன் இயல்பை மட்டிட்டு அறிதல் இயலாது. அதனை;

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிர் ஒன்றுடன் நூறுடன் கூறிட்டு = 1/100
மேவிய கூறு அது ஆயிரம் ஆயினால் = 1/100 x 1/1000
ஆவியின்கூறு நூறாயிரத்து ஒன்றே = 1/100000

எனத் திருமந்திரம் (2011) கூறும்.

சீவனின் அறிவு சுத்த அறிவாக மாறும் பொழுது (சீவபோதம்–சிவபோதம்) சீவன் என்றோ சிவம் என்றோ வேறுபட்ட ஒன்று இல்லை. அதுவே சித்தாந்த சைவத்தின் முடிந்த முடிபு. அதனைத் திருமூலர்;

*சீவன் எனச் சிவன் என வேறு இல்லை*
*சீவனார் சிவனாரை அறிகிலர்*
*சீவனார் சிவனாரை அறிந்தபின்*
*சீவனார் சிவனாய் இட்டிருப்பாரே*
(திருமந்திரம் 2017)

எனப்பாட்டாய்ப் பரவுகின்றார். சித்துப் பொருளான ஆன்மா சடப்பொருள்களில் இருந்தும் அகப்புற உறுப்புக்களில் இருந்தும் வேறானது. இதனைச் சித்தாந்த சைவம் , அளவை இயல் நெறி கொண்டு நிறுவியுள்ளது. சடப் பொருளில் இருந்து ஆன்மா முற்றும் வேறுபட்டிருப்பதால் மனம் இறந்து செயல்கடந்து நிலையான முடிவிடத்தினை (அந்தம்) அடைந்து புனிதர் (சைவர்) ஆகின்றனர். இதனை வீடு பேறெனவும், விதேக முத்தி யெனவும் சித்தாந்த சைவம் பகரும்.

## இறையுண்மை

சித்தாந்த சைவம் கூறும் பன்மைக் கோட்பாட்டில் இடம் பெற்ற பொருட்களில் முதற் பொருள், இறையாகிய பதியே. அடுத்துப் பசுவும் மூன்றாவதாகப் பாசமும் இடம் பெறுகின்றன. சிவம் தானாக நிற்கும் தனிப் பெரும் பரம் பொருள். பசுவாகிய ஆன்மா எண்ணற்றவை. பாசம் பல்வகைத் தோற்ற வெளிப்பாட்டினை உடையது. சித்தாய், சத்தாய் விளங்கும் தன் பேராற்றலின் வெளிப்பாட்டால், எங்கும் செறிந்து சிவமாக நிற்பது. அச்சிவம் வடிவு வண்ணம் உடையதாக, பசுக்களாகிய ஆன்மாக்கள் உணரும் வண்ணம் அறியப்படும் நிலைக்கு வருகின்றது. உருவற்ற நிலையில் அன்பு–சைவம்– பேராற்றல்– திருவருள் என்ற பெயர்களைப் பெறுகின்றது. இது அனைத்துச் சமயக்கணக்கர் கோட்பாடுகட்கும் ஒப்ப முடிந்த முடிபு.

சைவம், ஒலி யென்றும் நாதம் என்றும் விரிவுபடுகின்றது. இவற்றிற்கு ஓங்காரமாகிய மூலப் பேரொலியே வித்தாக அமைகின்றது. இதற்கு மறு பெயரே சைவம். ஒலியாகிய நாதம் சொற் பிரபஞ்சமாகவும் ஒளியாகிய தோற்ற வெளிப்பாடு பொருட் பிரபஞ்சமாகவும் விரிவடைகின்றது. இதுவே சிவம்– சக்தி, நாதம்– விந்து என்றும், ஓங்காரப் பொருள் என்றும் பகரப்பட்டது. இதில் இருந்தே வேதங்களும் ஆகமங்களும் உருவாயின. எனவே தான் சித்தாகிய ஆன்மாக்களும் அந்தமாகிய இறையும் சைவத்தின் மூலம் விளக்கம் பெற்றன எனக் கூறப்பட்டது. இதுவே சித்தாந்த சைவம்.

## பாசத்தளைகள்

இவை ஆணவம், கன்மம் , மாயை என மூவகைப்படும். அதனால் மும்மலங்கள் எனப் பெயர் பெறும். இம்மலங்களே பிறவிக்கு ஏதுவாக அமைகின்றன. ஆணவம் தன் முனைப்பினைக் குறிப்பது. கன்மம்– நல்வினை தீவினைப் பயனைக் குறிப்பது. மாயை, மயக்க நிலையைக் குறிப்பது. இத்தளைகள் நீங்கும் பொழுதே ஆத்மன் **சைவன்** ஆகின்றான்.

## நிறைவுரை

ஒருமைக் கோட்பாட்டில் இருந்து பன்மைக்கோட்பாடுவரை அனைத்துத் தத்துவங் களையும் அளவை இயல், அடிப்படை அளவை இயல் என்பவற்றின்மூலம் சித்தாந்த சைவ நெறியினை விளக்குவதே சைவசித்தாந்தக் கோட்பாடு; இது தமிழர்க்கேயுரிய முது சொத்து.

# பூத்து நிற்கும் பேரருள்

வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்
இலங்கை

"அன்னை மணிக்கையின் ஆணையைக் காட்டினால் அனலையும் விழுங்கிடுவோம்" என்பது வீரத் திருமகன் பாரதியின் மணிவாக்கு.

"மாத்ரு தேவோ பவ" "பித்ரு தேவோ பவ" "ஆசார்ய தேவோபவ" "அதிதி தேவோ பவ" என்பன உபநிடதக் கட்டளைகள்.

*"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்"*
*"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை."*
*"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனி சிறந்தனவே."*

இந்த மெய்மொழிகள் தியாகத்தின் தனி விளக்கமாம் தாயைக் குறித்த தனித்தொடர்கள். பூரணமான தூய்மை, பூரணமான அன்பு, பூரணமான பொறுமை, பூரணமான தியாகம் இவ்வார்த்தைகள் உருப்பெறும் பொழுது அங்கு தாய்மை பளிச்சிடுகின்றது; பரிணமிக்கின்றது. நீதி சாஸ்திரங்களில் சிறந்த மனுதர்மம் கூட, ஆசிரியனை விட பத்து மடங்கு ஆசார்யன் உயர்ந்தவன், ஆசார்யனை விட நூறு மடங்கு தந்தை உயர்ந்தவன், தந்தையைவிட ஆயிரம் மடங்கு தாய் உயர்ந்தவள் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றது.

*"உபாத்யாயன் தசாசார்யா*
*ஆசார்யானாம் சதம் பிதா*
*ஸஹஸ்ரந்து பித்ரன் மாதா*
*கௌரவேண த்ருச்யதே"*

மதிப்பிலும், மரியாதையிலும் பலமடங்கு தாயே உயர்கிறாள். "தாயின் திருவடியில் சுவர்க்கம் மலர்கிறது." என்பது நபிகள் பெருமானாரின் திருவாக்கு. தாயை தெய்வமாகக் கருதும் பொழுது ஏன் தெய்வத்தைத் தாயாகக் கருத முடியாது? அகம் நெகிழ்ந்து உருகவும், குறைகளைச் சொல்லிக் கதறவும், பக்தன் 'சிவன்' என்னும் தந்தையைவிட 'சக்தி' என்ற தாயிடமே நெருக்கம் அதிகம் கொள்கிறான். அம்பிகையை ஆயிரம் நாமங்களால் பாராட்டிப் புகழ்ந்த வசினீ முதலிய வாக்தேவதைகள் முதலிலே கூறச் சிறந்த நாமத்தை அவைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்தார்கள். அதுதான் "ஸ்ரீமாதா" என்ற ஒப்பற்ற மந்திரம். துன்பம் வரும்பொழுது நம்மையும் அறியாமல் நமது வாயிலிருந்து வெளிவருவது "அம்மா" என்ற சொல். தயையின் உறைவிடமான அத்தாயை, உலகெலாம் பூத்தவளை தாயாகக் கருதி வணங்குவது மற்றொரு தாயின் கருவினுட் செல்வதைத் தடுக்கும். வயிற்றில் கருவாகத் தங்கிய நாளிலிருந்து வெளியேறும் வரை மரணத்துக் கீடான துன்ப வேதனையைத் தான் அனுபவித்த போதிலும், அச்சிசுவினைக் காப்பாற்ற தன் சுகமனைத்தையும் துறக்கின்ற ஊனிற்கு உறவான அன்னையினும், அந்த உயிருக்குள் உயிரான அகிலாண்டேஸ்வரியின் கருணை எழுத்திற்கும், சொல்லிற்கும் அடங்காதது.

*"ஈயறியாப் பூந்தேனே! எழுத்தறியா மறைப்பொருளே!*
*காயறியாச் செழுங்கனியே! கற்பகத்தின் பசுங் கொழுந்தே!*
*தாயறியாக் கருவிலிருந்து உயிரூட்டும் தாய்த்துணையே!*
*நீயறியாச் செயலுண்டோ நிகில பரம்பர மூர்த்தி."*

என்று போற்றி வழுத்துவதல்லாது வேறு செய்வகை அறியோம்.

## வேதகாலம்

வேதகாலத்திலேயே சக்தி வழிபாடு இருந்தது என்பதற்கு 'ரிக்' வேதத்தில் சில குறிப்புக்கள் உண்டு. தேவி ஸூக்தத்தில் உஷஸ் –இராத்ரி –அதிதி– வாக்– புரந்தி– திஷசு– ஈளா – வாருணி போன்ற பெண் தெய்வங்களின் குறிப்புக்கள் காணப்படுவதிலிருந்து ரிக்வேத காலத்திற்கும் முன்பிருந்தே சக்தி வழிபாடு– தாய்த்தெய்வ வழிபாடு நிலவியிருந்ததை உணரலாம். வாக் தேவியை முழுதும் புகழும் சூத்திரம் ரிக்வேதத்திலே உண்டு.

கேனோபநிடதம் உமாதேவியின் துணையினால்

இந்திரன் பிரம்மத்தை அறிந்தான் என்று கூறுகின்றது. வாஜசனேய சம்ஹிதையில் உமை உருத்திரனின் சகோதரியாகச் சொல்லப்பட்டிருக்கின்றாள். ஸ்ரீ கண்டரும், பட்ட பாஸ்கரரும் "ஒம்" என்ற சொல்லினின்று தோன்றியதே 'உமா' என்ற சொல் என்பர்.

## தொல்லியல் ஆய்வு

தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேரறிஞர் சர். ஜான் மார்ஷல் சிந்து வெளிப் பகுதியில் கிடைத்த பெண் தெய்வச் சிலைகளை ஆராய்ந்து கி.மு. 4000 ற்கும் முற்பட்ட காலப் பழைமையை உடையது "சக்தி வழிபாடு" என்று கூறி இருக்கிறார். மேலும் சிந்து வெளிப் பகுதியில் கிடைத்த தேவியின் சிலைகளைப் போன்றே, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், எகிப்து, கிறீஸ் முதலிய இடங்களில் கிடைத்த சிலைகளும் ஒத்து இருக்கின்றன. "சிந்துநதி தீரத்திலும் சுமேரியாவிலும் இவ்வழிபாடு ஒன்று போலவே இருப்பது வியப்பிற்குரியது" என்பார் வி.ஆர்.தீட்சிதர். இரு நாடுகளிலும் தேவியின் வாகனம் சிங்கம். அது போலவே சிவனது வாகனம் காளையாகக் காணப்படுகின்றது. போருக்குரிய தெய்வமாகிய அவள் கன்னியாகவும், மனைவியாகவும், மலைகள், காடுகளிலே வசிப்பவளாகவும் கருதப்படுகின்றாள். இதனால் சக்திவழிபாடு உலகந் தழீஇய வழிபாடாகக் காணப்படுகின்றது.

## தந்திர நூல்களில் சக்தி

கி.பி. 4ம் நூற்றாண்டிற்குப் பின் சக்தி வழிபாட்டை விளக்கி பல தந்திர நூல்கள் எழுந்தன. அவற்றின் எண்ணிக்கை 64 என்று கூறுவர். வேதநெறிகளுள் கர்ம காண்டம் விதித்த சடங்குகளின் வளர்ச்சியைத்தான் பெரும்பாலான தந்திர நூல்கள் சுட்டுகின்றன. சியாமள ரகசியம், சார திலகம், காளிகா தந்திரம், குலசூடாமணி, குலார்ணவம் போன்ற சாக்த தந்திர நூல்கள் சாக்தமதப்பிரிவாகிய வாமாசாரம் தக்ஷிணாசாரம் பற்றி சிறப்பாகக் கூறுகின்றன.

## ஆதிசங்கரரின் தொண்டு

அன்னை வழிபாட்டில் ஒளிநெறியை ஊட்டியவர் ஆதிசங்கர பகவத் பாதர். வாமமார்க்கத்திலே கட்டுண்டிருந்த மக்களை அன்புவழியாகிய தக்ஷிணாசார நெறியிலே இட்டுச் சென்றார். ஸ்ரீ வித்யையின் தத்துவத்தை மக்களிடை பரப்பினார். தேவி உபாசகர்கள் தன்னை தேவியாகவே பாவித்து, தாய்மைக்குரிய பொறுமை, சகிப்புத்தன்மை, அடக்கம், கருணை முதலியவற்றையே அணிகலன்களாகக் கொண்டனர். லலிதா தியான சுலோகமும்,

***"அஹமித்யேவ பாவயே பவானீம்"***

என்று கூறுகின்றது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் இந்த பாவனைநிலையின் அதி உன்னத நிலையை எட்டியவர். இந்த பாவனை யான், எனது என்ற எண்ணம் அடங்க மனம் அடங்கும் மார்க்கத்தைக் காட்டுகின்றது.

***" யான் எனது என்று அற்ற இடமே திருவடியாய்"*** என குமரகுருபரரும் கூறுவார்.

அடங்காத மனமே ஒருவனுக்கு மரணத்தை உண்டு பண்ணுகின்றது. அடங்கிய மனமே அவனை முக்தி நிலைக்குக் கூட்டுவிக்கின்றது.

*அலையு மனத்தை யகத்தடக்கு மவனே சரியை கடந்தோனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்குமவனே கிரியை முடித்தோனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்கு மவனே யோக தற்பரனாம்*
*அலையு மனத்தை யகத்தடக்கு மவனே ஞானியதி சூரன்*

தேகமே யக்ஞசாலை. ஞானேந்திரியங்கள் யக்ஞ பாத்திரங்கள். கர்மேந்திரியங்கள் உபகரணங்கள்; சுகத்தையும் துக்கத்தையும் சமமாக நோக்கும் சமதிருஷ்டியே தீக்ஷை. இந்திரியங்களுக்கு உரிய தேவதைகளே அந்தணர்கள். ஜீவனே யஜமான். புத்தியே பத்னி. கோபம் யாகப் பசு.

*"யஜதோ புருஷோ யஜமான் புத்திம் பத்னீம்*
*பரிக்ருஹ்யதாம் தீக்ஷாம் ஸந்தோஷம் தீந்திரியாணி*
*யக்ஞபாத்ராணி கர்மேந்திரியான் யுபகரணாநி*
*ஸத்ரே சரீரகே தத்தத் தேவதா ஏவ த் விஜருஸ்*
*தடஸ்தா ஏவ யதாதேசம் பிரயஜமான மனுயஜந்தே"*

என்று கர்போபநிஷதமும் மனம் அடங்க வேண்டும் என்றே உபதேசிக்கின்றது.

ஆதிசங்கரரின் ஸௌந்தர்யலஹரி, மூகரின் மூக பஞ்சசதி, லலிதாசஹஸ்ரநாம் இம்மூன்றும் ஸ்ரீவித்தையின் பிரஸ்தானத்ரங்கள். ஆதிசங்கரர் இமயத்திலிருந்து குமரிவரை சாந்த வழிபாடாக சக்தி வழிபாட்டு முறையை விதைத்துச் செழிக்கச் செய்தார்.

## உலகின் முதல்

சக்தி தத்துவமே உலகின் முதல் தத்துவம், இதனை அடியொற்றியே ஏனைய தத்துவங்கள் முகிழ்த்தன. சக்தியே நாதம் முதல் மண்ஈறாக முப்பத்தாறு தத்துவங்களோடு இயைந்து நிற்கிறாள். சக்தனாகிய பரமசிவன் நினைத்தவற்றை ஈடேற்றுபவள் அம்பிகையே.

*"சக்திதான் நாதம் ஆதி தானாகும் சிவமும் அந்த*
*சக்திதான் ஆதியாம் தரும் வடிவான எல்லாம்*
*சக்தியும் சிவமும் ஆகும் சக்திதான் சத்தனுக்குச்*
*சத்தியாம் சத்தன் வேண்டிற்றெல்லாம் ஆம் சக்திதானே"*

இதனை மணிவாசகப்பெருமான் திருப்பொற் சுண்ணத்தில்,

*"எம்பெருமான் இமவான் மகட்குத்*
*தன்னுடையக் கேள்வன் மகன், தகப்பன்*
*தமையன் எம் ஐயன் தாங்கள் பாடி"*
என்றும்

திருக்கோவையாரில்,
*"தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல்*
*தன் ஒரு பாலவள் அத்தனும், மகனுமாம்*
என்றும் குமரகுருபரர்,

*"கனகமார் கவின்செய் மன்றில்*
*அனக நாடற்கு எம் அன்னை*
*மனைவி, தாய், தங்கை, மகள்*
என்றுங்,

கூறுவார்கள். அபிராமிப் பட்டரும்,

*"தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்*
*அவளே அவர்தமக்கு அன்னையும் ஆகினள்"*

என்று சக்தியின் ஏற்றத்தையும் முதன்மையையும் குறிப்பிடுவார்கள்.

## முப்பெருஞ்சக்தி

மூவர்க்கும் முதலாகி, முத்தொழிற்கும் வித்தாகி, நாவிற்கும், மனத்திற்கும் நாடறிய பேரறிவாய் விளங்கும் அன்னை பகவதி (தர்மம், கீர்த்தி, செல்வம், ஆளுந்தன்மை, வைராக்கியம், அன்பு ஆறு செல்வங்கள்) வீரத்தையும், வெற்றியையும் அருளுவதில் கொற்றவையாகவும், செல்வத்தையும் செழிப்பையும் அருளுவதில் திருமகளாகவும், ஞானத்தையும் பக்தியையும் அருளுவதில் கலைமகளாகவும் இலங்குகின்றாள். வீரம், செல்வம், கல்வி, மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள். இம்மூன்றனுள் ஒன்று இல்லாவிட்டாலும் வாழ்வு முழுமை பெறாது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ செயலூக்கம் தேவை. செயலூக்கத்தின் சின்னமே மகிஷாசுர மர்த்தனி– தாமதம், சோம்பல், மடமையை பாதத்தின் கீழிட்டு நிமிர்ந்து நிற்கும் ஞானத்தின் பேருரு–மனித வாழ்க்கையின் அற்புத விளக்கம்.

சுருங்கக் கூறின், ஒருவனுடைய பிறவியின் இறுதி நிலையிலேயே, இனிப் பிறவாத பெருநிலை வந்துறும் பொழுதே ஒருவனுக்கு சக்தி வழிபாட்டில் நாட்டம் ஏற்படுகின்றது. அன்னை வழிபாடே ஒருவனை மிக விரைவாக முக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

# பிச்சை உகக்கும் பெம்மான்

பா.சி சர்மா B.sc.(Cey), Dip. in. Ed.(Cey)
அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு.

சிவனுடைய திருக்கோலங்களுள் பிச்சை உகக்கும் பெம்மானாக விளங்கும் கோலம் அநேகமான சிவத்தலங்களில் காணப்படும் முக்கியமான மூர்த்தி பேதங்களுள் ஒன்றாகும். தாருகாவனத்து ஆச்சிரமத்துக்கு அருகில், சிவன் பிச்சை ஏந்தும் கோலத்தை இப் பிட்ஷாடன மூர்த்தம் சித்தரிக்கும். ஆகமங்களில் கங்கான மூர்த்திக்கும் பிட்ஷாடன மூர்த்திக்கும் உள்ள விபரங்களின்படி இவ்விரு மூர்த்தங்களுக்கிடையில் வேற்றுமைகளை விட ஒற்றுமைகளே கூடுதலாகக் காணப்படுகின்றன. பிரம்மாண்ட புராணம்[1], வாமன புராணம்[2],கூர்ம புராணம்[3], போன்ற புராண நூல்கள் இம் மூர்த்தம் பற்றிய விரிவான விளக்கங்களைத் தருகின்றன.

சிவன் பைரவர் கோலத்தில் பிரம்மனின் ஐந்தாவது தலையை வெட்டியதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் அகல விஷ்ணுவைச் சந்திக்கும் வரை கொய்த மண்டையோட்டோடு அலைந்த வரலாறு குறிப்பிடத் தக்கது.[4].

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனின் தலையைக் கொய்த பிரம்ம சிரச்சேத மூர்த்தி, கபால நடனம் ஆடியதைக் கலித்தொகை காட்டுகிறது[5]. இச்சம்பவத்தை ஞானசம்பந்தர்,

"*அறுத்தான் அயன்தன் சிரம் ஐந்திலும் ஒன்றை*"........எனவும்,

அப்பர்,

"*விளங்கு மலர் அயன் சிரங்கள் ஐந்தில் ஒன்றைச் சேதியனை*"......எனவும்,

சுந்தரர்,

"*இன்னுயிர் பார் படைத்தான் சிரம் அஞ்சில் ஒன்றைச் சேர்ந்தவா*"......

எனவும் காட்டுகின்றனர்.

தொடர்ந்து விஷ்ணுவைச் சந்திக்க சென்ற வேளையில், வாயிற்காப்போனாகிய விஷ்வசேனனையும் கொல்ல நேரிட்டது. பின்பு, விஷ்வசேனனுடைய உடலையும், சூலத்திலே குத்திக் கொண்டு, காசிக்குச் சென்று, பிரம்மஹத்தி தோஷம் அகன்றது என்பர். இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"*ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து நிறைக்க*
*மா உதிரத்தினை ஏற்றுத்*
*தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்*
*சுமந்த மாவிர தந்த கங்காளன்*"

என்று தமது பதிகத்தில் கூறுகின்றார்.

ஒரு முறை தாருகாவனத்து ரிஷிகள், இறைவனையே மதிக்காமல் யாகம் ஒன்றைச் செய்தனர். அனைத்தையும் அறிந்த, முற்றுந் துறந்த முனிவர்களானாலும் அகந்தையினால் மதிமயங்கினர். இதனால் அவர்களது செருக்கை அடக்கி அருள்பாலிக்க இறைவன் பிச்சை ஏந்திய வடிவினனாகவும், திருமால் மோகினி வடிவமும் கொண்டு தாருகாவனம் புகுந்தனர். மோகினியின் எழிலில் தம்மை மறந்த முனிபுங்கவர்கள் மதிமயங்கினர். இறைவனது அழகிய திருவுருவில் முனிவர்களின் மனைவியர் தங்களை மறந்து தங்கள் கற்பையும் இழந்தனர். இதனை அறிந்த முனிவர்கள் தங்கள் வேள்வியினைத் தடுக்க வந்த சிவனையே அழிக்க இன்னொரு யாகம் தொடங்கினர். யாகத்திலிருந்து உடுக்கை, மான், யானை, புலி, சிங்கம், முயல்கள் முதலியவற்றைத் தோற்றுவித்து சிவன் மீது ஏவினர். அவற்றைத் தம் அணிகலன்களாக ஏற்றுக் கொண்டார் சிவன். இறுதியில் இறைவனின் சக்தியை முனிவர்கள் ஏற்று நற்பேறடைந்தனர். இதனை சுந்தரமூர்த்தி அடிகள் தமது பதிகத்தில்,

"*தங்கிய மாதவத்தின் சுழல் வேள்வியின்று எழுந்த*
*சிங்கமும், நீள் புலியுஞ் செழுமால் கரியொடு அறைப்*
*பொங்கிய போர்புரிந்து பிளந்து ஈருரி போர்த்தது*'..................

எனக் காட்டுகின்றார்.

காமிகாகமம்[6] இம்மூர்த்தியின் வடிவத்தை விளக்கமாகத் தருகிறது. காரணாகமமும்[7] இவ்வடிவம் பற்றிய விபரங்களை விரிவாகக் காட்டுகிறது.

சிவனுடைய இக்கோலம் திகம்பரனாக தாருகாவனம் சென்ற கோலத்தைக் காட்டும். மூர்த்தத்தின் இடது கால் தரையில் பதிந்து வலது கால் நடப்பது போன்ற பாவனையில் வளைந்தும், தளர்ந்தும் இருக்கும். தலையில் சடாபாரம் அல்லது சடாமண்டலம் விளங்கும். இடுப்பில் பாம்பைக் கொண்ட சூத்திரமும், மார்பில் முப்புரி நூலும், வலக்காலில் வீரக்கழலும், பாதங்களில் வேத பாதுகைகளும் காணப்படும். நெற்றியில் பட்டமும், முக்கண்களும், கழுத்தில் நீலகண்டமும் காணப்படும். இடது காதில் சங்க பத்திரமும், வலது காதில் குண்டலங்களும் தொங்கும்.

ஆனந்தத் தோற்றத்துடன் பொலிவுறும் இம்மூர்த்தத்தின் இடது பக்கத்தில் பலிபாத்திரத்தை தாங்கியவாறு பூதம் சித்தரிக்கப்படும். வலது புறத்தில் உண்ணும் நிலையில் மூஞ்சியை உயர்த்திய நிலையிலமைந்த மான் சித்தரிக்கப்படும். மூர்த்தியின் முன் இடக்கையில் மண்டை ஓடும், பின் வலது கையில் உடுக்கையும், பின் இடக் கையில் சூலமும், முன் வலக்கை மானின் வாய்வரையிலும் நீண்டிருக்கும்.

மேலும் இம்மூர்த்தத்தைச் சுற்றி மங்கையர் பலரும் முனிவர்களும் சித்தரிக்கப்படுவது வழக்கம். இம்மூர்த்தம் பிச்சைத் தேவர் என்றும் குறிப்பிடப்படும். பிட்ஷாடன மூர்த்தத்தில் சிவனும் மானும் ஒரு பீடத்தில் அமைய, பூதம் பிறிதொரு பீடத்தில் அமையலாம். அல்லது இம்மூன்றும் தனித்தனியான பீடங்களில் அமையலாம். சிற்ப நூல்களும் ஆகம முறைகளுக்கிணங்க மேற் கூறியவாறே இம்மூர்த்தத்தைச் சித்தரிக்கின்றன. இம்மூர்த்தத்தின் வடிவமைப்புக்கான பிரமாண அளவு விபரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

சிவனின் பிட்ஷாடன மூர்த்தத்தை மாணிக்கவாசகர்,

"*அருமையில் எளிய அழகே போற்றி* ...... என்றும்,

ஞானசம்பந்தர்,

"*உலர்ந்தார் என்பு அணிந்தே ஊர் இடு பிச்சையராகி*" எனவும்,

"*பற்றி ஒரு தலை கையினில் ஏந்தி பலி தேரும்*<br>*வெற்றி அதுவாகித் திரிதேவர் பெருமானார்*" ...... எனவும் கூற

திருநாவுக்கரசர்,

"*பூதங் கொடு கொட்டி கொட்டிக் குளித்துப்பாட*<br>*உள்ளங் கவர்ந்திட்டுப் போவார்*" எனவும்,<br>"*கருத்து அழித்து வளை கவர்ந்தார்*" ........என்றும்

பாராட்டி பரவசம் அடைகிறார்.

சுந்தரமூர்த்தி அடிகள் இம்மூர்த்தம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"*குரவம் நாறிய குழலினார் வளை கொள்வதே தொழிலாநீர்*<br>*இரவும் இம்மனை அறிநீரே இங்கே நடந்து போகவும் வல்லீரோ*" ......

சிவனின் வேறு எந்தக் கோலத்தின் மீதும் சுந்தரமூர்த்தி அடிகள் ஒரு பதிகமும் பாடியது கிடையாது.

திருக்கருவைக் கலித்துறை அந்தாதி, பிச்சாண்டி பெருவாழ்வு அளிக்க வல்லான் என்பதைப் பின்வருமாறு காட்டும்.

"*பாரிடஞ் சூழ்வரத் தான் பலி கொண்டு பாத மலர்*<br>*சேர் அடி யார்க்குப் பெருவாழ்வு அளிப்பான்*".

பிச்சைத் தேவரின் கபாலம் மக்கள் அன்பையே பிச்சையாக ஏற்க விரும்பியதை திருஞான சம்பந்தர் பின்வருமாறு காட்டுகின்றார்.

"*சுடல் வெண் பிறையினர் சடா முடியர்*<br>*கண்ண வெண் ணீற்றினர் சுடர் மழுவர்*<br>*பாடல் வண்டிசை முரல் கொன்றையந்தார்*<br>*பாம்பொடு நூலலை பசைதிலங்கக்*<br>*கோடனன் முகிழ்விரல் கூப்பி நல்லார்*<br>*குறையுறு பலியெதிர் கொணர்ந்து பெய்ய*<br>*வாடல் வெண்டலை பிடித்தவராணீர்*<br>*வாய்மூ ரடிகள் வழுவாரே*"

சிவனது உயர்ந்த தத்துவத்தை உணரச் செய்யும் தெய்வீக வரலாற்றுக் கதைகளோடு தொடர்புடைய இவ்வடிவம் சிவனது வடிவங்களின் வரிசையில் இன்றியமையாத இடத்தைப் பெறுவதோடு தென்னிந்திய, ஈழத்துச் சிவாலய வழிப்பாட்டிலும் நிரந்தர இடம் பெறுகின்றமை ஈண்டு கவனிக்கத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


1. பிரம்மாண்ட புராணம்
2. வாமன புராணம்
3. கூர்ம புராணம்
4. காமிகாகமம்
5. காரணாகமம்
6. South Indian bronzes - Sivaramamoorthy C.
7. சில்பரத்தினம்
8. காசியப சில்ப சாஸ்திரம்
9. சிவாகமங்களும் சிற்பங்களும் சித்தரிக்கும் சிவவிக்கிரகவியல்– கலாநிதிப்பட்டத்திற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு – ப. கோபாலகிருஷ்ண ஐயர்.

# பண்ணார் தேவாரத்திருமுறைகள்

*சி. குமாரசாமி, எம்.ஏ*
*செயலாளர்*
*தேவாரப் பண்ணிசை மன்றம்*
*கொழும்பு*

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகியோர் பாடியன தேவாரங்களாகும். இம்மூவரின் பாடல்களும் முதல் ஏழு திருமுறைகளுள் அடங்குவன. " தோடுடைய செவியன்" என்ற முதல் தேவாரத்தினைப் பாடியருளிய சம்பந்தப் பெருமான் புறசமயத் தாக்குதல்களில் இருந்து சைவசமயத்தினை மீட்டவர். அப்பரும் சம்பந்தரும் ஒரே காலத்தவர்கள். சம்பந்தர் வயதில் இளையவர்; அப்பர் முதியவர்.

திருஞானசம்பந்தர் இறைவன் அருளால் பொற்றாளம், முத்துச் சிவிகை, முத்துப் பல்லக்குப் பெற்றவர். ஆலயங்கள் தோறும் அடியார் புடைசூழச் சென்று தேவாரப்பதிகங்களைப் பாடியவர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தரின் பாடல்களைத் தமது யாழில் இட்டு வாசித்து வந்தார்.

தேவாரங்கள் பாடப்படுவது "பண்" முறையில். பண் என்றால் என்ன? பண் என்பது தமிழ்ச்சங்க காலத்தில் இருந்து வந்த இசைமரபாகும். தமிழர் நிலத்தினை ஐந்தாகப் பிரித்தார்கள். ஐந்திணைகளுக்கும் பண்கள் வெவ்வேறாக இருந்தன. மேலும் பகலில் பாடக்கூடிய பண்களை பகற் பண் என்றும், இரவில் பாடப்படுவதை இரவுப்பண் என்றும் பகலிலும் இரவிலும் பாடக்கூடியனவற்றை "பொதுப்பண்கள்" என்றும் வகுக்கப்பட்டன.

பண்களை இசைத்தோர் பாணர் எனப்பட்டனர். இவர்களின் பெண்பாலார் "விறலி" எனப்பட்டனர். இவர்கள் இசைத்த இசைக் கருவிகள் "யாழ்" என்ற பொதுப் பெயரில் "சீறியாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டு யாழ், தந்திரியாழ், சகோடயாழ், எனப்பட்டன. யாழ் என்பது நரம்பு அல்லது தந்திகளைக் கொண்ட இசைக்கருவி. சில யாழ்களில் குறிப்பிட்ட ஒரு பண்ணையே வாசிக்க முடிந்தது. இந்த இசை நுணுக்கங்களை எல்லாம் ஆராய்ந்து எமக்கு அளித்தவர் முத்தமிழ் வித்தகர் எனப் புகழ் பெற்ற விபுலானந்த அடிகள் ஆவர்.

அப்பெருமகனார் பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து யாத்த "யாழ் நூல்" இசைக்கலையின் பொக்கிஷம் எனலாம். யாழ்நூலில் ஐந்தாம் அத்தியாயத்தில் "பண்ணியல்" பற்றியும் ஆறாம் அத்தியாயத்தில் " தேவார இயல்" பற்றியும் விரிவான விளக்கங்களைத் தந்துள்ளார். முற்காலத்தில் 103 பண்கள் இருந்தன என்றும் தேவாரப்பண்கள் உள்ளத்தை உருக்க வல்லன என்றும் கூறிய சுவாமியவர்கள் ஆளுடையபிள்ளை (சம்பந்தர்) யின் ஆற்றலை வானளாவப் புகழ்ந்துள்ளார். 16 வயதில் முத்திப் பேற்றினைப் பெற்ற ஆளுடைய பிள்ளை சுமார் 4000 தேவாரங்களை 23 பண்களில் பாடியது அற்புதமன்றோ! " கருவிலே திருவுடையவர்" என்ற காரணத்தால் மட்டுமே இவ்வருஞ் சாதனையை அவர் செய்திருக்கலாம்.

தேவாரப் பண்கள் பற்றி இசைப்பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் "தேவாரப் பதிகங்களே மிக்க பழமையான இன்னிசை உருப்படிகள் ஆகும். வேதகானம் தேவாரத்திற்கு முந்தியதாயினும் அது தாளத்திற்கு அமையப்பாடப்படவில்லை. ஆகவே தேவாரப் பண்களைப் பற்றி எல்லோரும் கவனிக்கவேண்டியது அவசியமாகும். இன்னும், தேவாரங்கள் அருளிச் செய்யப்பட்ட காலத்தில் இந்தியாவில் வட இந்திய சங்கீதம், தென்னிந்திய சங்கீதம் என்ற பாகுபாடுகள் இருக்கவில்லை. ஓதுவார்கள் சிறந்த பக்திமான்கள் சைவாலயங்களில் பரம்பரை பரம்பரையாக மரபு வழுவாமல் தேவாரங்களை ஓதி வந்தவர்கள். பிற்காலத்தில் கர்நாடக இசையின் இராகங்கள் தோன்றுவதற்கு தேவாரப்பண்களே வழிவகுத்தன" எனக் கூறியுள்ளார்.

"பண்" என்பது பாவோடு அணைதல் என்று கூறப்படுகிறது.

*"பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்*
*மேவார் பெருந்தான மெட்டானும்– பாவாய்*
*எடுத்தல் முதலா இரு நான்கும் பண்ணிப்*
*படுத்தமையாற் பண்ணென்று பார்"*

பண்ணுதல் எனும் வினையடியாகப் பிறந்தது பண். இது ஆன்மாக்களை இறைவனோடு ஒன்றுபடுத்தவல்லது.

பண் அமையும் பெருந்தானம் எட்டாவன நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை ஆகும். பண்ணிசை ஓதப்படவேண்டிய எண் வகை இலக்கணங்களும் மேல் வருவனவாம்.

| | | |
|---|---|---|
| 1. | **எடுத்தல் :** | **ஆரோகணம் (மேல் ஸ்தாயி குரல் எடுத்துப் பாடுதல்)** |
| 2. | **படுத்தல் :** | **அவரோகணம்** |
| 3. | **நலிதல்:** | **மெலிதல், ஓர் ஒலிவிகர்ப்பம்** |
| 4. | **கம்பிதல்:** | **அசைவு, கமகம்** |
| 5. | | **குடிலம்:பொருள்விளங்கச் சொற்களைக் கொண்டு கூட்டல், நிரவல் செய்தல்** |
| 6. | **ஒலி :** | **தொனியைக் குறிப்பது** |
| 7. | **உருட்டு :** | **பிர்க்கா சங்கதிகள் போன்றவை** |
| 8. | **தாக்கு:** | **அடி, அதிர்ச்சி, வேகம் முதலியன** |

பண்ணுக்கும் பிற்காலத்தில் வந்த இராகத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பார்ப்போம். உதாரணமாக, "தோடுடைய செவியன்" என்ற தேவாரம் நட்டபாடைப் பண்ணில் அமைந்தது. இதற்குரிய இராகம் கம்பீர நாட்டையாகும். தாளம் ரூபகம். நாம் சற்று உன்னிப்பாகப் பார்த்தால் பண்ணுக்குள் இராகமும் தாளமும் அடங்குகின்றன அல்லவா? இதே பண்ணில் அமைந்த "அங்கமும் வேதமும்" என்ற தேவாரத்தின் பண் நட்டபாடையானாலும் தாளம் ஆதியாகும். பண்ணில் எங்கே தாளம் உள்ளது? என்ற கேள்வி எழுகிறது. இதனையே ஓதுவார்கள் கட்டளை பேதம் என்று கூறுகிறார்கள். தாளம் என்பது சொற்களின் அடுக்கில் உள்ளது இவை எல்லாம் பண்ணின் நுணுக்கங்கள் ஆகும்.

சிவபாதசேகரன் எனக் காரணப்பெயர் கொண்ட முதலாம் இராசராசச் சோழ மன்னன், தேவாரங்களை அழிவினின்றும் காப்பாற்றியதோடு அமையாது, ஆலயங்களில் கட்டாயமாக அவை ஓதப்பட வேண்டும் எனவும் கட்டளை இட்டுள்ளான். ஓதுவார்களுக்கு நெல்விளையும் நிலங்களும் வசிப்பதற்கு வீடுகளும் பசுக்களும் நிவந்தமாக நல்கினன் என்று கல்வெட்டுக்கள் மூலமும் செப்புச் சாசனங்கள் மூலமும் நாம் அறிய முடிகிறது. தஞ்சாவூரில் உள்ள பெரிய கோவிலில் தேவாரம் ஓதுவதற்கும் மத்தளம் வாசிப்பதற்கும் என 49 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். தேவாரங்கள் ஓதப்படும்போது குழல், யாழ், கொக்கரை போன்ற வாத்தியங்களும் உபயோகப்பட்டன.

தமிழகக் கோயில்களில் பண்ணார் இன் தமிழாய் பாட்டகத்து இசையாய் உள்ள இறைவன் திருமுன் ஓதுவார்களைக் கொண்டு தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் போன்றன ஓதுவார்களினால் ஓதப்படுகின்றன. அப்பாடல்கள் மரபு வழுவாமல் பண்கள் மாறாமல் பாடப்படவேண்டும் என தமிழக அறநிலையத்துணை விரும்புகிறது.

மேலும் தேவாரங்கள் இறைவனுக்குரிய சிறந்த தோத்திரங்களாகும். அவை:

1) ஓதவும் உன்னவும் உலப்பிலா மகிழ்ச்சியைத் தருவன.

2) சொல்லாட்சி, கருத்தாட்சி உள்ளன.

3) செந்தமிழ் மொழிவளம் நிரம்பியன.

4) இசை வளம் மிக்கன.

5) தத்துவக் கருத்துக்கள் மலிந்தன.

6) அகப்பொருள் புறப்பொருள் இலக்கணம் உடையன.

7) மெய்யன்போடு ஓதுபவருக்கு இம்மை மறுமைப் பயன்களைப் பயப்பன.

திருமயிலையில் பூம்பாவையை உயிர் பெறச்செய்ததும் திருமருகலில் வணிகனை உயிர் பெறச்செய்ததும் தேவாரங்களே!

தேவாரங்கள் வேதசாரமானவை, அவை தமிழ் வேதங்கள்.

இத்தகைய தமிழ் வேதங்களைப் பொன்போலக் கருதி பண்ணுடன் அவற்றை ஓதுவோமாக!!

# பெரியபுராணமும் சைவசித்தாந்தமும்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

தலைவர், துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

*"இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்*
*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"*

என்பது ஔவையாரின் வாக்கு. நினைப்பவர் மனம் கோவிலாய்க் கொண்டவன் பெருமான். இதனாலேயே அடியவர்களின் பெருமை ஆண்டவனின் பெருமையிலும் பார்க்க விஞ்சி நிற்கிறது. இத்தகைய பெருமையுடைய வர்களைப் பற்றிப் பேசிய புராணம் பெரியபுராணம் என்று போற்றப்படுகிறது. முதற் பதினொரு திருமுறைகளும் இறையின்பத்தின் நிலைமையை எடுத்தோதுவன. ஈற்றிலுள்ள பன்னிரண்டாந் திருமுறை மாத்திரந்தான் இறையின்பத்திற் திளைத்த அடியார்களைப்பற்றிக் கூறுவது. அவர்கள் இறையின்பத்தில் திளைத்தவர்கள்.

*"காலையும் மாலையும் கைதொழு வார்மனம்*
*ஆலய மாமே அரநெறி யார்க்கே".*

என்னும் திருமுறைக்கேற்ப அடியவர்களின் உள்ளமே ஆண்டவனுக்குரிய இடமாகும். இறைவன் திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும் சிறப்பாக வெளிப்பட்டு விளங்குவது சிவனடியார்களிடத்திலேதான் என்று அறிகிறோம். இதனை நீதிவெண்பா என்ற நூல் அழகான முறையில் விளக்குகிறது. வெப்பமானதாகிய சூரியனது கிரணத்தில் நின்றாலும் நிற்கலாம். அக்கிரணத்தைப் பெற்று வெப்பமாக விளங்கும் மணலின்மேல் நிற்றல் முடியாது. அதே போன்று இறைவனுடைய அருளாற்றலிலும் பார்க்க அவ்வருளைப் பெற்று நிற்கும் அடியவர்களின் அருளாற்றல் வியத்தற்குரியதாகும்.

*"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த*
*நேசரெதிர் நிற்ப தரிதாமே– தேசுவளர்*
*செங்கதிர்முன் நின்றாலும் செங்கதிர வன்கிரணம்*
*தங்குமணல் நிற்பதரிதே தான்."*

இவ்வாறு நீதிவெண்பா என்ற நூல் அழகாக விளக்குகிறது.

## சேக்கிழார் நற்பணி

தோத்திரங்களுக்கும் சாத்திரங்களுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்திலேயே சேக்கிழார் சுவாமிகள் வாழ்ந்தார். மெய்கண்ட சாத்திரங்களுள் முடிமணி போன்று விளங்கும் சிவஞான போதத்தையருளிய மெய்கண்ட தேவநாயனாருக்கு எழுபது வருடம் முந்தி வாழ்ந்தவர் இவர். காலத்தை நோக்கி இவர் ஆற்றிய இந்தச் சேவையினால் சைவத்தமிழுலகம் மூன்று பெரும் பயன்களை அடைந்ததெனலாம். முதலாவது, ஆட்சி பீடத்திலே சைவத்தை ஏற்றிவைத்த பெருமையாகும். இரண்டாவது, நாயன்மார்கள் வரலாற்றை உலகுக்குக் காட்டிய சிறப்பாகும். மூன்றாவது, சைவசித்தாந்தத்துக்கு விளக்கங் கொடுத்த பெருமையாகும். இதனாலேயே சைவசித்தாந்த சாத்திரங்களில் எட்டு நூல்களை ஆக்கிய உமாபதிசிவாச்சாரியார் அவர்கள் சேக்கிழாருக்கு ஒரு தனிப்புராணம் இயற்றினார். மாதவச் சிவஞான சுவாமிகளும் "எங்கள் பாக்கியப் பயன் சேக்கிழார்" என்று போற்றினார். இன்னும்,

*''தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி*
*வாக்கினாற் சொல்ல வல்ல பிரான்".*

என்று குறித்தருளினார்.

## நூலின் தோற்றம்

அரசன் அநபாயசோழன் திருமுறை முதலிய நூல்களில் ஈடுபட்டுத் திருவருளைப் பெற்று உய்யாமற் சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களிலே ஈடுபாடு கொண்டு சுவைப்பதைச் சேக்கிழார் உணர்ந்தார். இந்த ஈடுபாட்டை மாற்றவேண்டுமென்று கருதி அரசனுக்குச் சிவகதைகள் பற்றிச் சுருக்கமாக விளக்கினார். இதனால் திருத்தொண்டர்களது வரலாற்றை விரிவாகப் பாடித்தரும்படி அமைச்சராகிய இவரை அரசனே வேண்டிக்கொண்டான். அவனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு திருத்

தொண்டர்களது வரலாற்றை எடுத்துப் பாடுவதில் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆனால் பாடுவதற்குத் தனக்குத் தகுதியுண்டா என்று எண்ணி, ஏங்கி இறைவனை நினைந்தார்.

*"ஊனக்கண் பாசம் உணராப் பதியை*
*ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"*

என்னும் சைவசித்தாந்த விளக்கப்படி இறைவனே தனக்கு உள்நின்று உணர்த்த வேண்டுமென்று நினைத்தார். தில்லையை நோக்கிச் சென்றார். அதன் எல்லையிலே வீழ்ந்து வணங்கினார். திருக்கோயிலில் புகுந்து வலம் வந்து கனகசபையிலே கூத்தப் பெருமானைக் கண்டு வணங்கி "எம்பெருமானே! உன்னடியார்களது பெரும்புகழைப்பாட அடியேனுக்கு அடியெடுத்துக் கொடுத்தருளல் வேண்டும்" என்று வணங்கினார்.

## உலகெலாம்

தில்லையம்பலவன் திருவருளால் அப்பொழுது "உலகெலாம்" என்ற பேரொலி அசரீரியாக எழுந்தது. இதனை அறிந்து கொண்ட தில்லைவாழந்தணர்கள், சேக்கிழாரது திருவருட் பெருமையை வியந்து கூத்தப் பெருமானது திருமாலையைத் திருநீற்றுடன் அவருக்கு அளித்துப் பரிவட்டங்கட்டி வாழ்த்துக்கூறி நின்றார்கள். அவையனைத்தையும் ஏற்றுக்கொண்டு ஆயிரங்கால் மண்டபத்தையடைந்து "உலகெலாம்" என்ற அச்சொல்லையே முதலாகக் கொண்டு புராணத்தைப் பாடத் தொடங்கினார்.

*"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."*

கூத்தப் பெருமான் எடுத்துக் கொடுத்த இந்த ***உலகெலாம்*** என்ற தொடரை முதலாகக் கொண்டு பாடிய சேக்கிழார் இறைவனது திருவடியையே அதன் பொருளாகக் கொண்டு முதற் பாடலை பாடிமுடித்தார்.

## முதற்பாடல்தரும் சித்தாந்த விளக்கம்

உலகு என்பது உயிர்களைக் குறித்து நிற்கிறது. இறைவன் உயிர்களின் சொல்லையும் நினைவையும் கடந்தவன். அதனாலேயே கடவுள் எனப்படுகிறான். பாச ஞானங்களுக்கும் பசு ஞானங்களுக்கும் அப்பாற் பட்டவனாகிய இறைவனை அரியவனாகக் காட்டிய அடிகள், உணர்தல் என்பதால் மனத்தையும், ஓதுதல் என்பதால் வாக்கையும் காட்டி வாக்குமனாதீதன் என்பதை விளக்குகிறார். இது இறைவனுடைய சொரூப நிலையாகும். ஆனால் உணர்வதற்கு அரியவனாயினும் எளியவனாக உருவந்தாங்கி நிற்றலால் இரண்டாவ தடியில் "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" என்கிறார். எனவே இது இறைவனது தடத்த நிலையைக் கூறுகிறது. அத்தடத்த நிலையில் அனந்தசக்தி எனப்படும் அளவில்லாத ஆற்றல்களை உடையவனாய் உயிர்களைப் பஞ்சகிருத்தியம் செய்து உய்விப்பதை விளக்கி "அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என மூன்றாமடியில் அருளுகிறார். 'மலர் சிலம்படி' என்பதால் எல்லாப் பொருள்களும் அவனது திருவடியினின்றே தோன்றுவது உணர்த்தப்படுகிறது. பக்குவமுள்ள அன்பர்களின் உள்ளத்திலே மலர்கின்ற சிலம்படி இதுவாகும். நினைத்தல், வாழ்த்தல், வணங்கல் ஆகிய முக்கரண வழிபாட்டையும் சிலம்படிக்குக் கூறித் தொடங்குகிறார். கூத்தப் பெருமான் எடுத்துக் கொடுக்க 'உலகெலாம்' என்பதை முதலாகக் கொண்டு தமது வியாபாரத்தை நன்கு செய்தார் என்று மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடிச் சேக்கிழாரைச் சிறப்பிக்கின்றார். இவ்வாக்கினை முதல், நடு, முடிவு என்னும் மூன்றிடத்திலுஞ் சிறப்பாக அமைத்து முடித்திருக்கிறார். திருஞானசம்பந்தர் இறைவன் அளித்த முத்துச்சிவிகையை ஏற்று அதனை வலம் வந்து வணங்கி அஞ்செழுத்து ஓதி அதன் மீது அமர்ந்தார் என்பதை எடுத்துக்காட்டிய இடத்தில்,

*"சோதி முகத்தின் சிவிகை சூழ் வந்துபார்*
*மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றி நின்(று)*
*ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்(து)*
*ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்."*

எனப் பாடியுள்ளார். நாலாயிரத்து இருநூற்று எண்பத்தொரு பாடல்களில் ஏறக்குறையப் பாதி அளவில் மேற்காட்டிய பாடல் அமைந்து நடுவில் 'உலகெலாம்' என்பது விளங்குகிறது. திருத்தொண்டத் தொகையை அருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் திருவாரூர்ப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்தார். வகைநூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் திருநாரையூர்ப் பிள்ளையார் அருள் அளித்தார் விரிபாடிய சேக்கிழாருக்கும் அம்பலவாணனே அடியெடுத்துக் கொடுத்தார்.

சுத்தாத்துவித சைவசித்தாந்தப் புதையல்.

சைவத்தின் குலக் கவிஞராகிய சேக்கிழார் சித்தாந்த உண்மைகளைத் தெளிவுபட இந்நூலில் விளக்கியுள்ளார். இவர் காலத்துக்குமுன் சமயாசாரியார்களின் பாடல்களும் திருமந்திரமும் ஞானாமிர்தம் போன்ற சித்தாந்த சாத்திரங்களும் தோன்றியிருந்த போதிலும் சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளையும் சாதனம், பயன் முதலிய இயல்புகளையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாத விளக்கங்களையும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டு விளக்கங்களையும் மிகச் சிறப்பாக விளக்கிய பெருமை சேக்கிழார் சுவாமிகளுக்கே உண்டு. உயிரின் இயல்புகளையும் பசு, பாச, ஞானங்களின் இயல்புகளையும், பதிஞானத்தின் உயர்வையும், அணைந்தோர் தன்மையையும், அடியார்களின் பெருமையையும், அவர்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்த தன்மையையுந் தெளிவுற விளக்கியுள்ளார்.

## இருவகை ஞானம்

திருத்தோணிபுரத்தில் ஞானப்பாலூட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் தவமுதல்வர் சம்பந்தர் ஞானம் பெற்ற தன்மையை விளக்குமிடத்திற் பாடிய,

*" சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கிய ஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"*

என்ற பாட்டில் விளக்கிய ஞானவாய்மையே சிவஞானசித்தியாரில் அப்படியே அடியொற்றிக் கூறப்படுகிறது.

*" கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை*
*கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்"*

என்கிறார் அருணந்திசிவம். கேட்டல், சிந்தித்தல் இரண்டும் நூல் பற்றியதாகையால் அபரஞானம் என்றும், தெளிதல், நிற்றல் இரண்டும் நூல் பற்றாததாகையால் பரஞானம் என்றுங் கூறப்படும். உவமையில்லாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்றும் பிரித்துச் சேக்கிழார் காட்டியபடியே அருணந்திசிவமும் பிரித்து விளக்கியுள்ளார்.

## திருப்பாசுர விளக்கம்

திருஞானசம்பந்தர் சமணருடன் புனல்வாதஞ் செய்யச் சித்தங்கொண்டு சைவத்தின் பெருமையை உலகிற்குக் காட்டி அருளிய பதிகம் திருப்பாசுரமாகும். இது ஞானபாத முடிவாய்ச் சிவஞானபோதத்தின் விளக்கமாய் அமைந்துள்ளது. முதல் மூன்று பாட்டுக்களும் பொதுவகையிலும், பின்பாட்டுக்கள் சிறப்பு வகையிலும் அமைந்துள்ளன. ' வாழ்க அந்தணர்' என்ற பாட்டின் விளக்கத்தில் சங்காரக் கடவுளாகிய சங்கரனே முதல்வன் என விளக்கி வேள்விகள், அர்ச்சனைகள், வழிபாடுகள் யாவும் அவனுக்கே உரியதெனக் காட்டுகிறார்.

*"அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்கவென்று*
*இந்தமெய்ம் மொழிப்பயன் உலக மின்புறச்*
*சந்தவேள் விகள்முதற் சங்க ரர்க்குமுன்*
*வந்த வர்ச்சனை வழிபாடு மென்னுவாம்"*

எனக்கூறி அடுத்தபாட்டில் ' உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம், பெரிய நல்லடையா ளங்கள் பேசினர்' என விளக்கி இறைவன் உண்மையன்பர்க்கே காட்சி கொடுப்பான் என்பதையுங் கூறி, பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்த பெருமையையும் விளக்கியுள்ளார். சிவஞானபோதம் 8ம் சூத்திரப் பொருளைச் சேக்கிழார் மெய்கண்டாருக்கு முன்னமே கூறிப்போந்தார்.

*"தம்மையே சிந்தியா வெனுந் தன்மைதான்*
*மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென*
*இம்மையே நினை வார்தம் இருவினைப்*
*பொய்ம்மை வல்லிருள் போக்குவா ரென்றதாம்"*

இவ்வாறு பல சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்து விளக்கும் திட்பத்தைத் திருப்பாசுர விளக்கத்திற் காட்டியுள்ளார்.

## மும்மலங்கள் பற்றிய விளக்கம்

சைவசித்தாந்த சாத்திரங்கள் மும்மலங்கள் பற்றி விளக்கி நிற்கின்றவெனினும் அவற்றுக்கெல்லாம் முன்னோடியாக நின்று விளக்கந்தந்தவர் சேக்கிழார். நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலே போடுகிறார்கள். " கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று பதிகம் பாடுகிறார். கல் மிதக்கிறது. தெப்பம் போல் அதன்மேல் உட்கார்ந்து வருகிறார் நாவரசர். இந்த இடத்திற் சேக்கிழார் அதிசயத்தோடு உணர்ந்த ஒரு உணர்வைத் தருகிறார். ' இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின், வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட, அருளும் மெய்யஞ்செழுத்து' என்று கூறி வினையாகிய

கர்மம், பாசமாகிய மாயை, மலம் எனப்பட்ட ஆணவம் மூன்றையும் இணைத்து பிறவியென்னும் கடலில் தடுமாறும் மக்களைக் கரையேற்றும் சக்தி திருவைந்தெழுத்துக்கு உண்டு என்பதை விளக்கி அத்தகைய ஐந்தெழுத்து திருநாவுக்கரசரை ஒரு கல்லோடு பிணிக்கப்பட்ட போது கரையேற்றாமல் இருக்கமுடியுமா என்கிறார். கண்ணப்பநாயனார் புராணத்தில் இன்னும் சிறப்பாக மும்மல விளக்கத்தைக் காண்கிறோம்.

*"முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்*
*இன்புறுவே தத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கை*
*தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற*
*அன்புபிழம் பாய்த்திரிவர் அவர்கருத்தின் இளவினரோ"*

திருக்காளத்தி அப்பரைத் தரிசித்த மாத்திரத்திலே திண்ணனாரிடத்திற் காணப்பட்ட மாற்றங்களைக் கூறுகிறார். யாக்கை தன்பரிசு என்பது மாயையாகும். மும்மலக்கழிவு குறித்துச் சிவச்சார்பு பற்றி நின்றதைக் காட்டுகிறார். அன்புப் பிழம்பாகிய அடியவரின் மலநாசத்தினால் ஏற்பட்ட மாற்றம் இரசவாதத்தால் இரும்பு பொன்னானாற் போன்ற பெருமாற்றமாகும். பேணுதத்துவங்களென்னும் பெருகுசோ பனமேறி, ஆணையாம் சிவத்தைச் சாரச் சென்றவர் அவர். இங்கே தத்துவங்களின் படிமுறையினையும் தசகாரியம் எனப்படும் சோபன முறையையுஞ் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்.

கூன்பாண்டியன் வெப்புநோய் காரணமாக அல்லலுற்ற நேரத்தில் ஞானசம்பந்தர் பாண்டியனுக்குத் திருநீற்றினைப் பூசிப் பதிகம் பாடி வெப்பை நீக்கிய இடத்திலும் இக்குறிப்பு வருகிறது.

*"தென்னவன் மாறன் தானும் சிவபுரத் தலைவர் தீண்டிப்*
*பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப் பெற்று*
*முன்னைவல் வினையும் நீங்கி முதல்வனை யறியுந்தன்மை*
*துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்ற லாலே."*

ஞானசம்பந்தரால் நோக்கம் பெற்றவுடனேயும் அவர் நாமம் கேட்டவுடனேயும் திருநீறு பூசப்பட்டுப் பரிசதீட்சை பெற்றவுடனேயும் முன்வினை நீங்கி இறைவனை அறியுந் தன்மையை அடைந்தான் பாண்டியன் எனக் காட்டுகிறார். இளையான் குடிமாறநாயனார் தமது வீட்டுக் கொல்லையில் உள்ள கீரைவகைகளைப் பிடுங்கிச் சிவனடியாருக்குத் திருவமுதூட்ட நின்ற சமயத்தில்,

*"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்*
*பழி முதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"*

என்பதால் நாயனாருடைய பாசம், பழிபாவங்கள் அனைத்தையும் வேரோடு களைவது போல அங்கிருந்த குறும்பயிரைக் களைந்தாரெனக் கூறப்பட்டுள்ளது.

## உய்வானுளன்

சாக்கியநாயனார் புராணத்தில் மற்றொரு சைவசித்தாந்தக் கருத்தைக் காண்கிறோம். சாக்கியநாயனார் புத்தர்களது அறத்தின் வழியைச் சார்ந்து நல்ல ஞானமடைவதற்குப் பலவழிகளையும் ஆராய்ந்து அச்சமய முடிவுகளெல்லாம் உண்மைப் பொருளை உணர்த்தாவென்றும் ஈற்றில் சிவ நன்னெறியே மெய்ப் பொருளாவதென்றும் உணர்ந்தார். சிவனை அடைவதே உய்யும்வகை என்றும் உணர்ந்து கொண்டார்.

*"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்*
*மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே*
*இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென*
*உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்."*

அதாவது செய்யும் வினை ஒன்று; செய்பவனாகிய கருத்தா ஒன்று; அதன் பயன் ஒன்று, அதனைக் கொடுத்து ஊட்டுபவனாகிய முதல்வன் ஒன்று என எண்ணப்படும் நான்குமே உண்மைக் கூறுபாட்டால் துணியப்பட்ட பொருள் எனக் கொண்டு இந்தச் சிறப்பு சைவநெறிக்கே உண்டென்றும் ஏனையவற்றுக்கு இல்லையென்றும் துணிந்து திருவருளால் உண்மைப் பொருள் சிவனெனத் தெளிந்தார் என்பதாம். உமாபதிசிவம், திருவருட் பயனில் இக்கருத்தின் விளக்கமாகவே,

*"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்*
*உய்வா னுளன்என் றுணர்"*

எனப் பாடினார்.

## முடிவுரை

திருமுறைகளின் இறுதியாக விளங்கும் இப்பெரிய புராணமும் சிவஞான போதத்தின் இறுதிச் சூத்திரமும் பொருத்திக் காட்டும் உண்மைப்பொருள் யாதெனில் சிவனடியாரையும் சிவாலயங்களையும் சிவனெனவே கண்டு வழிபடுதல் வேண்டும் என்பதாகும்.

*"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா*
*அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானு மரனெனத் தொழுமே"*

என்னும் 12 ஆம் சூத்திரப் பொருளுக்கு

இலக்கியமே பெரிய புராணம் என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இறைவனுடைய சிவந்த தாமரைமலர்கள் போன்ற திருவடிகளை அடையவிடாது தடுத்து நிற்கும் மலத்தினின்றும் விடுபட்டுச் சிவனடியார்களோடு மருவி மேலும் மயக்கம் நீங்குவதால் சிவனடியார்களின் திருவேடத்தையும் திருக்கோயிலையும் சிவபிரானே எனக் கண்டு தொழுது நிற்பர் என்பது சூத்திரப் பொருளாகும். இத்தகைய நிலையில் சீவன்முத்தர்களாக வாழ்ந்தவர்களே பெரிய புராணம் போற்றும் சிவனடியார்களாவர். இவர்களைப் பற்றி எழுதப்பட்ட இந்நூலுக்கு 'மாக்கதை' என்று பெயர் குறிக்கிறார் சேக்கிழார்.

*"எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்*
*நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்*
*தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்*
*கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்."*

பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடப்பட்ட இச்சிவனடியார் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பிறவியிலிருந்து மீளக்கூடிய பெரும் பேறு கிடைக்கும் என்பதையே முதலடியில் 'எடுக்கும் மாக்கதை' என்பதால் விளக்குகிறார். 'எடுக்கும்' என்பது பிறவிக் கடலிலிருந்து தூக்கி எடுக்கும் என்னும் பொருள் விளக்கத்துக்குரியது. 'எடுக்கும் மாக்கதை' என்று இதனைக் குறிப்பிடுவதால் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் உய்தியளிப்பது இந்நூல் என்று புலனாகிறது.

இத்திருவருட் காவியத்தில் எக்கருத்தை எடுத்துக் கொண்டாலும் சைவசித்தாந்த அடிப் படையிலேயே அவை கூறப்பட்டுள்ளன. 'தோடுடைய செவியன்' என்று ஓங்காரத்தில் தொடங்கி 'உலகெலாம்' என மகர ஒற்றில் முடிக்கிறார். இதனால் திருமுறைகளனைத்தும் ஓங்காரத்தின் விரிவாதல் விளங்கும். ஆண்டவன் பெருமையில் தொடங்கி அடியவர்கள் பெருமையில் முடிவதைத் திருமுறைகளின் தொகுப்பிற் காண்கிறோம். திருமுறைகளை எமது உயிராகப் பேணி இறைகளோடு இசைந்த இன்பமும், இன்பத்தோடு இசைந்த வாழ்வும் வாழ்ந்து நற்பயனடைவோமாக.

*"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்*
*ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட*
*மன்று ளாரடி யாரவர் வான்புகழ்*
*நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்".*

# "அத்தன் எனக்கு அருளியவாறு... !"

முனவர் ச. சாம்பசிவனார், எம்.ஏ., பிஎச்.டி.,
*சிறப்பு நிலைப் பேராசிரியர், சைவ சித்தாந்தத் துறை,*
*மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.*

## முன்னுரை

*"நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ !*
*மனம்நின் றுருக்கும் மதுர வாசக !*
*........ ........ நீபுகழ்ந் துரைத்த*
*பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்*
*புகழ்ச்சி விருப்பினன் போலும் !"*
(நால்வர் நான்மணிமாலை)

என்பது சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கு. 'மதுர வாசகம்' எனப்படும் தெய்வத் திருவாசகத்தை இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துருகும்; தொடு மணற்கேணிபோலக் கண்கள் அருவிநீர் சொரியும் ! இத்தகு வாசகத்தை, மன்பதைக்கு அருளிய மணிவாசகப் பெம்மான், தாம்பெற்ற சிவானந்தப் பேற்றினைக் குறித்துப் பல்வேறு பாக்களில் எடுத்துரைக்கின்றார். 'அத்தன்' எனப்படும் ஆனந்த நடராசப் பெருமான், தமக்கு அருளிய பான்மையை ஒரு திருப்பாட்டில் சுருக்கமாகவும் தெளிவாகவும் மொழிகின்றார். இதுகுறித்து ஒருசிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பார்த்து இனிது இருந்த பரமன்:

பாண்டியன் வேண்டுதலால், குதிரை வாங்கச்சென்றார் வாதவூரர். அவரை வலியவந்து ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டான் சிவபெருமான். எனவே, திருக்கயிலை விட்டு நீங்கித், தன் திருவடியால் நடந்துவந்து, திருப்பெருந்துறை நண்ணினான். பிறவி எனும் கடலில் வீழ்பவர்கள், ' நமசிவாய ' எனும் நற்றுணை பிடித்து ஏறி, இறைவனின் அருட்கரையினை அடைதற்குரியது ஆதலின் ' திருப்பெருந்துறை' எனும் பெயர்பெற்றது அத் திருத்தலம் ! சோலை சூழ்ந்த ஓர் இடத்தின் நடுவே, அழகான குருந்தமரத்து நீழலில், அடியவர் புடைசூழ முனிவராய் வீற்றிருந்தான் பரமன்! வாதவூரர் அவ்வழியே வந்தார் !

*"அடுத்திட அடுத்திட அகத்துவகை வெள்ளம்*
*மடுத்திட முகிழ்த்தகைம் மலர்க்கமலம் உச்சி*
*தொடுத்திட விழிப்புனல் துளித்திட வினைக்கே*
*விடுத்திடு மனத்து அருள் விளைந்திட நடந்தார்"*
(திருவி. புராணம்)

வாதவூரர், தாம் வந்த செயலை மறந்தார்; சீடர்களோடு சீடராக ஆனார். நீழலில் அமர்ந்தார். உவமையில்லாப் பெம்மான், தன்பாலிருந்த "பொய்ம்மையிலாச் சிவஞான போதப்" (திருவாதவூரர் புராணம்) பொருளைச் சிந்தை உருகும் வகை உரை செய்தார். இறைவனின் 'ஞான வாக்கு' ப் (உபதேசம்) பெற்றபோது, வாதவூரரின் ஆனந்தநிலையைச் சித்தரிக்கும் பாடல் இது ;–

*"தொழுத கையினர்; துளங்கிய முடியினர்; துளும்ப*
*அழுத கண்ணினர்; பொடிப்புறும் யாக்கையர்; நாக்குத்*
*தழுத முத்த அன்பு உரையினர்; தமையிழந்து அழல்வாய்*
*இழுதை அன்ன மெய்யினர்; பணிந்து ஏத்துவா ஆனார்!"*

நெருப்பிலிட்ட நெய் என உருகிய உடம்பினரான வாதவூரர், பன்முறை பரமனைப் பணிந்து ஏத்தினார். அப்போது வாதவூரர்க்குப் பெம்மான் சூட்டிய திருப்பெயரே 'மாணிக்கவாசகர்' !

பழுதிலாச் சொல்லாகிய மணிகளை வரிசையாகப் பதித்து, அன்பாகிய வடத்தினால் முறையாகத் தொடுத்து, அம் மாலையைச் சாத்தும் அன்பர் ஆதலின்,

*"வழுவிலாத பேர் மாணிக்க வாசகன்"* (திருவி. புராணம்) என்றார்.

இறைவன், மணிவாசகருக்காகக் குதிரைச் சேவகனாக வந்தான்; பிட்டுக்கு மண் சுமந்தான்; பிரம்படியும் பெற்றான்.

*"இத்தனை எலாம் செய்தது இவன் பொருட்டு! இந்த வேத*
*வித்தகன் தன்மை ஒன்றும் அறிந்திலை! வேட்கை எம்பால்*
*வைத்து, உனக்கு இம்மை யோடு மறுமையும் தேடித்தந்த*
*உத்தமன்! தொடைசந்து ஆதிப் புறப்பற்றும் ஒழிந்த நீரான்"*

என எம்பெருமானே, மணிவாசகர் பெருமையைப் பாண்டியனுக்கு உணர்த்தினார் எனின் வாதவூரர் மேன்மை ஒருவாறு புலப்படும்.

## இருவகை நெறிகள் :

இறைவனின் அருள்பெறும் நிலைகள் இரண்டாகும். ஒன்று, 'குரங்கு நெறி'; மற்றது 'பூனை நெறி'. குரங்குக்குட்டியானது தன் தாய்க்குரங்கை இறுகப் பற்றிக் கொள்ளும்; ஆனால், 'பூனைக்குட்டியின் நிலை வேறுபட்டது. தாய்ப்பூனைதான், தனது குட்டியை வாயால் இறுகப் பற்றிக்கொள்ளும். குரங்குக்குட்டி தன் தாய்க் குரங்கை இறுகப்பற்றுவதுபோல, அடியார், இறைவனைத் தேடித் தேடி அவனை இறுகப் பற்றுதல் ஒருநிலை; தாய்ப் பூனையானது, தன் குட்டியை இறுகப்பற்றுவதுபோல, ஆண்டவனே, அடியார் இருக்கும் இடம் நாடித் தானே வந்து தலையளி செய்வது மற்றொரு நிலை. இவ்விரண்டில், முன்னதைக் 'குரங்குநெறி' என்பர்; பின்னதைப் 'பூனைநெறி' என்பர்.

மணிவாசகரைத் தேடி இறைவன் தானே எழுந்தருளிவந்து ஆட்கொண்டான் ஆதலின் அதனைப் 'பூனை நெறி' எனல்வேண்டும். ஆனால் இஃது எல்லோருக்கும் வாய்ப்பதன்று!

## இனிக்கும் இன்றமிழ்ப் பாட்டு :

மணிவாசகர் அருளிய அனைத்துப் பாக்களுமே இனிக்கும் இன்றமிழ்ப்பாட்டுக்களாம்.

*"வான்கலந்த மாணிக்க வாசக ! நின் வாசகத்தை*
*நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து*
*ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!"*
(திருவருட்பா)

என வள்ளல் இராமலிங்க அடிகளார், திருவாசகத்தின் இனிமையை அருமையாக எடுத்து மொழிகின்றார். திருவாசகம், மணிவாசகரின் வாழ்வில் நிகழ்ந்த அனுபூதிநிலையை எடுத்துரைப்பது.

*"யானே பொய், என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;*
*ஆனால், வினையேன் அழுதால் **உன்னைப்** பெறலாமே!"*
( திருச்சதகம் : 90)

*"தந்தது **உன் தன்னைக்** கொண்டது என்தன்னைச்*
*சங்கரா ஆர்கொலோ சதுரர்?",* (கோயில் திருப்பதிகம் :10)

என்ற பாடல்களைக் கூர்ந்து கவனித்தால், இறைவனோடு நேருக்குநேர் பேசுகின்ற பான்மை புலப்படும். அதனாற்றான், இப்பாடல்கள் அனைத்தும் படிப்போர்தம் உள்ளத்தைப் பெரிதும் ஈர்க்கின்றன எனலாம்.

## தெய்வத் திருப்பாட்டு:

*"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்*
*சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"*
(திருவாசகம்–அச்சோப்பதிகம்)

இத் தெய்வத் திருப்பாட்டு, திருவாசகத்தில் இறுதியில் அமைந்த 'அச்சோப்பதிகத்' தின் இறுதிப் பாட்டு.

மணிவாசகர், திருத் தில்லையில் விருப்புற்று எழுந்தருளியிருந்த காலத்துச் சிவபெருமான், தம்மைச் சிவமாக்கி ஆட்கொண்டருளிய பேரருட்டிறத்தை வியந்து பாடிய பதிகம் இது!

" முத்தி அடைவதற்கான சிவநெறியினை அறியாத மூர்க்கர்களோடும் சேர்ந்து, அவரது நெறியினை மேற்கொண்டு உய்திபெற முயலும் எனக்குப் பத்திநெறி இன்னது என அறிவித்து, என்னுடைய பழைய வினைமுழுதும் கெட்டொழியுமாறு, என் மனமாசினையும் அறும்படி செய்து, என்னைச் சிவமயமாக்கி, ஆண்டருளிய அப்பன் இவன்! இத்தகையான் எனக்கு அருள்செய்த பான்மையினை இவ்வுலகில் வேறுயார்தான் பெறமுடியும்? இஃது ஓர் அதிசயமன்றோ?"

என்பது இதன் பொதுவான பொருள். இதனை ஊன்றி நோக்கினால், இதன்கண் சைவ சித்தாந்த நுண்பொருள் பல பொதிந்து நிற்றல் காணலாம்.

இப் பாடலில், மணிவாசகர், தமக்கே இயல்பாகவுள்ள 'அடக்கமுடைமை'யை வெளிப் படுத்துகின்றார்.

*"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்*
*புழுத்தலைப் புலையனே "* ( பிடித்த பத்து :3)

*"பாவியேனுடைய"* ( பிடித்த பத்து : 9)
*"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு"* (சிவபுராணம்:60)

எனப் பல்வேறிடங்களிலும் மணிவாசகர், தம்மை மிகமிகத் தாழ்த்தி உரைப்பன காணலாம். அவ்வாறே ஈண்டும்,

*" மூர்க்கரொடு முயல்வேனை"*

என்றார். இதுகொண்டு " இவரது இயல்பு இதுபோலும்" என எண்ணிவிடுதல் மடமையாம் !

*" பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு "* (குறள்: 963)

எனும் வள்ளுவர் வாக்கை ஈண்டு எண்ணுதல் வேண்டும்.

இத் திருப்பாட்டில் மணிவாசகர் கூறும் கருத்துக்களை வரன்முறைப்படுத்திப் பார்த்தல் வேண்டும்:-

1) "முத்திநெறி அறியாத" என்பதால், "முத்திநெறி இன்னதென அறிந்திருத்தல் வேண்டும்" என்பது பெறப்படுகின்றது.

2) " மூர்க்கரொடு முயல்வேனை" என்பது, பல்வேறு பொருளையும் தன்பாற் கொண்டுள்ளது:

" கடவுளே இல்லை" என்போர்; ' உண்டு' என்றாலும், சிவப்பரம்பொருளை நிந்திப்போர் ; துறவு எனும் போர்வையில் ' கூடா ஒழுக்கம்' கொண்டோர்; அல்லனவே செய்தொழுகுவோர்; தவறான வழியில் பொருள் ஈட்டுவோர்; செய்ந்நன்றி சிதைப்போர்; கொலை களவு முதலான தீச்செயல் புரிவோர் ; கொடிறு உடைக்கும் கூன்கையர்; பிறஉயிர்க்குத் தீங்கிழைப்போர் – என்றெல்லாம் விரிவான பட்டியல் தரும்படி இத்தொடர் அமைந்துள்ளது.

" பெறுதற்கரிய இம் மானிடப் பிறப்பெடுத்தும், இதன் விழுமிய பயனை – அதாவது பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேரும் அருள்நிலையைப் பெறாமல், வீணே பாழ்படுத்துகின்றார்களே இவ்வுலக மக்கள்" என்று எண்ணி இரங்கும் அருளாளர் மணிவாசகர், உலகமக்களைச் சாடாமல், தம்மையே நிந்திப்பவராக, "மூர்க்கரொடு முயல்வேனை" என்றார்.

வள்ளுவப் பெருந்தகையும், "பெரியாரைத் துணைக்கோடல்" என்றதோர் அதிகாரம் அமைத்ததனோடு " சிற்றினம் சேராமை" என்றதோர் அதிகாரத்தையும் அமைத்த நுட்பம் இவண் ஒப்புநோக்கத்தகும்.

எனவே, ' முத்திநெறி' இன்னதென்றறிய, முதற்கண், மூர்க்கரின் சேர்க்கையை விட்டொழிக்க வேண்டும் என்பது கருத்து. மூர்க்கர் சேர்க்கையை விட்டொழித்தல் மட்டும் போதாது; நல்லவர்களின் சேர்க்கையை – சான்றோர்களின் சேர்க்கையை – மெய்யடியார்களின் சேர்க்கையை நாடவேண்டும் என்பது கருத்து.

' முத்தி நெறி' அஃதாவது சிவபெருமானின் திருவடிப்பேறு அடைவதற்குரிய எளிய வழி யாது எனில், என்றும் சிவனடியார் திருக்கூட்டத்தோடு சேர்ந்திருத்தலேயாகும். இதனை, அருளாளர் மெய்கண்டார்,

*" செம்மலர் நோன்தாள் சேர லொட்டா*
*அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ*
*மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே"*
( சிவஞானபோதம்: 12)

என அருளிச் செய்வாராயினர்.

"செங்கமல மலர்போல விரிந்து விளங்கும் முதல்வனது வலிமை மிக்க திருவடியைச் சேரவிடாமல் தடுக்கும் இயல்பினது 'மும்மல' அழுக்கு. அதனை ஞானநீரால் கழுவி, அயரா அன்பு செலுத்தும் மெய்யடியாரோடு கலந்து கூடவேண்டும்; அதனால் மலமயக்கம் நீங்கும்; அப்போது அன்புமிக்க அவ்வ டியாரது திருவேடத்தையும் சிவன் திருக்கோயிலையும் சிவனே எனக்கண்டு வழிபட்டு நிற்றல் வேண்டும். " என்பது இதன் பொருள்.

வள்ளுவப் பெருமான்,

*" நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் ; மாந்தர்க்*
*கினத்தியல்ப தாகும் அறிவு"* ( குறள் : 452)

என்றார்.

நல்ல– தூய்மையான மழைநீர், பூமியில் வீழ்ந்ததும், அந்த நிலத்தின் நிறத்தையும் குணத்தையும் பெற்றுவிடும். அதுபோலக் கீழான கயவரோடு சேர்ந்தால் கயமைக்குணமும்; சான்றோரோடு சேர்ந்தால் சான்றாண்மைப் பண்பும்; மெய்யடியாரோடு சேர்ந்தால் சிவ சிந்தனையும் உண்டாதல் இயல்பு. ஆதலின், மெய்கண்டாரும்,

"அன்பரொடு மரீஇ"

என அளபெடை கொடுத்துக் கூறினார். அஃதாவது, நல்லுயிர்க்குப் பயன், சிவனடியாரோடு

மரீஇ – சேர்ந்தே இருத்தலாம் என்பது கருத்து.

மணிவாசகப் பெருந்தகையும் மூர்க்கரொடு முயன்ற தம்மைச் சிவனடியாரொடு ஒன்றுவித்தலாகிய பெருஞ்செயலைச் செய்வித்தவன் இறைவன் என்கின்றார்.

(3) "மூர்க்கரொடு முயன்ற என்னைப் பிரித்து மெய்யன்பரொடு கூடச்செய்த அவ்வள்ளல், பத்திநெறி இன்னதென்றும் எனக்கு அறிவித்தான்" என்கின்றார் அடிகளார். 'பத்தி நெறி' என்பது அன்பு நெறி.

*"பத்தியால் யான் உனைப் பலகாலும்*
*பற்றியே மாதிருப் புகழ்பாடி"* (திருப்புகழ்)

என அருணகிரிநாதரும் பத்தி நெறிபற்றிக் கூறுவர். இறைவனை அடைய எளிய நெறி பத்திநெறி அல்லது அன்புநெறி. காட்டுக்குப் போகாமல், கடுந்தவம் செய்யாமல், நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனையும்படி அழுது அழுது அரற்றினால், ஆண்டவன் கருணைகூர்வான். அன்புநெறியினாலே ஆண்டவனை அடைந்தவர் கண்ணப்பநாயனார்! "வினையேன் **அழுதால்** உன்னைப் பெறலாமே" என மணிவாசகர் கூறியதும் இதனை உட்கொண்டேயாம். ஆனால் 'அழுகை' என்பது அத்துணை எளியசெயலன்று. எளிதில் சிரித்துவிடலாம்; எளிதில் அழுகை வாராது, அழுதாலும் கண்ணீர் வாராது. அன்பின் 'உரு' கண்ணீர் என்பர் வள்ளுவர். (குறள்:71) ஆண்டவனை நினைந்து அழுதல், அருமையினும் அருமை! ஆனால் மணிவாசகரோ, "அழுது அவனடி அடைந்த அன்பர்" ஆவர்!

(4) பத்திநெறி அறிவித்த இறைவன், தம் முன்னைய வினைகளையும் இல்லாமற் செய்தான் என்கின்றார் மணிவாசகர்! "பழவினைகள் பாறும்வண்ணம்" என்பது எண்ணத் தக்கது.

(5) பழவினைகளை நீக்கிய அருளாளன், உயிர்கட்கு இயல்பாய் உள்ள ஆணவமலத்தின் செயற்பாட்டையும் நீக்கிவிட்டான் என்பது தோன்றச் "சித்தமலம் அறுவித்து" என்றார்.

(6) இறுதியில் மணிவாசகர் மொழிவது: "சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்பது! 'சிவமாக்கி' என்பது திருவடியின்பத்தில் திளைக்கச் செய்வது என்பதாகும்.

சைவ சித்தாந்தம், இறைவனை அடைய நால்வகை நெறிகளைக்கூறும். அவை: சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம் என்பன. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் இந்நால்வரும் இந்த நால்வகை நெறிகளைக் கொண்டவர்கள். இவருள் மாணிக்கவாசகர் கொண்ட நெறி, 'சன்மார்க்க நெறி' ஆகும். இந் நால்வகை நெறிகளை "ஞான பாதம், யோக பாதம், கிரியா பாதம், சரியா பாதம்" என்றும் கூறுவர். (சிவஞான சித்தியார் சுபக்கம் : 270 திருவிளங்கம் உரை) சிவனடியாரையும் சிவலிங்கப் பெருமானையும் மெய்யன்போடு வழிபடுதல், "ஞானத்திற் சரியை" எனப்படும் என்றும் கூறுவர்.

இத்தகைய நெறியில் நின்றால், பழவினைகள் பாழ்படும்; அதனால் 'ஆணவமலம்' தன் வன்செயலை ஒழித்துநிற்கும். அதன் பின்னர்க் கிட்டுவது சிவானந்தப் பேறு.

" இங்ஙனம் எம்பெருமான் என்பொருட்டு எளிவந்து ஆட்கொண்ட வித்தகன். இவன் எனக்கு அருளிய இவ் அருட்டிறத்தை உலகில் வேறு யார் பெறக்கூடும்? இஃது ஒரு வியப்பன்றோ?" என இறைவனின் பேரருட்டன்மையை வியந்து பாடுகின்றார் மணிவாசகர்!

இவ்வுலகில் நண்பன் ஒருவனைப் பார்த்து, "எப்போதும் அப் பெரியவர் பின்னாலேயே சுற்றித் திரிகிறாயே! அவரைவிட்டால் வேறு யாரும் உனக்கு இல்லையோ?" என்று கேட்பதாகக் கொள்வோம். அந்த நண்பர் இவ்வாறு கூறுகின்றார்:

"நானோ, தாயுமிலி: தந்தையிலி! தன்னந் தனியாக – அனாதையாகச் சுற்றித் திரிந்தேன்: சேரத் தகாதவரோடு அலைந்தேன். அப்போது என்பால் கருணைகொண்ட இப் பெரியவர், என்னை அழைத்தார்; தம் வீட்டில், உண்ண உணவு அளித்தார்; உடுக்க உடை வழங்கினார்; இருக்க, உறையுள் தந்தார். தமது தொழிற்சாலையில் வேலையும் நல்கினார். எனக்கு நல்ல பெண்ணைப்பார்த்து மணமுடித்துவைத்தார். இம்மட்டோ?

இப்போது என் பிள்ளைகட்கும் இவரே எல்லா உதவிகளும் செய்கிறார். இத்தகைய அருளாளரை விட்டுவிட்டு யார்பக்கம் செல்வேன்? இவர் செய்த இவ்வுதவிகளை வேறு யார் தான் எனக்குச் செய்திடுவார்? நீயே கூறு!"

என்று சொல்வது போல, மணிவாசகரும், தம்மை ஆட்கொண்டு, தம்மடிக்கீழ் வைத்த ஈசனின் அருட்டிறத்தை இந்த நான்கடிப்பாடலில் அருமையாகச் சித்தரித்துள்ளார்.

***"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்***
***பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்***
***சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட***
***அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!"***

முடிவுரை:-

*"அத்தன் எனக்கருளியவாறு"* என்ற தொடரில் தான் எத்துணை உருக்கம்? எண்ணி எண்ணி இன்புறத்தக்க திருப்பாட்டு இது! சைவ மெய்யன்பர்கள் பின்பற்றத்தக்க, சைவ சித்தாந்த உண்மைகளை உணர்த்தும் தீந்தமிழ்ப்பாட்டு இது!

**மணிவாசகர் திருவடி போற்றி!**



# பொலநறுவைக் காலத்தில் சதுர்வேதி மங்கலங்கள்: ஒரு குறிப்பு

இரா.வை.கனகரத்தினம்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை, பேராதனைப்பல்கலைக்கழகம்

சங்க காலத்தின் பின் தமிழ்நாட்டுக்கு வடக்கிலிருந்து வருகை தந்த பிராமணர்கள், பிற்காலத்தில் தமிழ்நாட்டின் வைதிக மதங்களை வழிநடத்திச் செல்பவர்களாகவும் ஆண்டவனைக் காணத் துணை புரிபவர்களாகவும் கருதப்பட்டனர். மன்னர்களினதும் அரமனைக் கணங்களினதும் இகபர நலன்களுக்காக காமிக வேள்விகளை செய்வதையே, இவர்கள் தம் பெருந் தொழிலாகக் கொண்டிருந்தனர். "நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரம்" என்ற கோட்பாடு, அரண்மனை மத்தியில் வலுவான இடத்தினைப் பெற்ற பொழுது அரசவைப் பணியாளர்களுள் முதன்மையான இடத்தைப் பிராமணர் பெற்றுக் கொண்டனர். இவர்களால் பரப்பப்பட்ட இராமர் காதையையும் தெய்வீகத் தன்மையையும் இக்கால மன்னர்கள் நம்பத் தலைப்பட்ட பொழுது தமிழ் மக்களின் சமூக, சமய உறவுகளில் பிரிக்க முடியாத இடத்தை இவர்கள் வகித்தனர். மன்னர்களின் தெய்வீகக் கோட்பாட்டிற்கு இக்கதையே முன்னோடியாக அமைந்தது.

சோழர் காலத்தில் பிராமணர்களின் பணிகள் துரிதம் அடைந்தன. இதனாலே இவர்களை ஆதரிப்பது பெரும் புண்ணியமாகக் கருதப்பட்டது. இவர்கள் வேதங்களிலும் சாத்திரங்களிலும் வல்லுநராக இருந்தமையினால் அம்பலங்களிலும் திருக்கோயில் மண்டபங்களிலும் அமர்ந்து வடமொழியுள்ள மகாபாரதம், பதினெண் புராணங்கள் முதலானவற்றைப் படித்துப் பொது மக்களுக்கு விளக்கி வந்தனர். இவர்களது புலமையினை உணர்ந்த மன்னரும் மக்களும் இவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஊர்ப் பொது நிலங்களில் சிலவற்றை வேதவிருத்தி, பட்டவிருத்தி, பாரத விருத்தி, புராண விருத்தி என்ற பெயர்களோடு அவர்களுக்கு வழங்கி ஆதரித்து வந்தனர். காலப் போக்கில் பிராமணர்கள் அதிகமாக வாழ்ந்த பகுதி பிரமதேயங்கள் என்றும், சதுர்வேதி மங்கலங்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஒவ்வொரு சதுர்வேதி மங்கலங்களும் ஊர், நகரம், குடும்பு என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இங்கமைந்த மன்றுகள் குறி, பெருங்குறி, மகாசபை என வழங்கப்பட்டன. இச்சபையின் உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். இவர்களின் உள்ளூராட்சிகள் சிறப்பாக நடைபெற்றன. இதற்கான நிலங்களை மன்னர்கள் ஏகப்பிரமானமாகக் (ஏகபோகப் பிரமதேயம்) கொடுத்தமையும் இங்கு நினைவு கூரத் தக்கதாகும். வைணவப் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அக்கிரகாரம் என அழைக்கப்பட்டது.

சோழராட்சிக் காலத்தில் தமிழகத்தில் பிராமணர்கள் எவ்வாறு ஆதரிக்கப்பட்டார்களோ அவ்வாறே ஈழநாட்டிலும், சோழர் ஆட்சியிலும் பின்னரும் பிராமணர்கள் ஆதரிக்கப்பட்டனர். சோழர்கள் தமது 2ம் சிவ தேவாலயத்தின் நிர்வாகத்தின் பொருட்டு தில்லை நாயக்கப்பட்டன் பன்மகேஸ்சுவரர் போன்ற அதிகாரிகளை நிர்வாகத்தின் பொருட்டு நியமித்தமை போல் பிராமணர்களை கிரியையின் பொருட்டு அமர்த்தினர். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், சமுகத்தின் சமய வளர்ச்சியின் பொருட்டும் சதுர்வேதி மங்கலங்களை அமைத்துக் கொடுத்தனர்.

இராஜராசனின் ஆட்சி ஆண்டுகளில் அநுராதபுரம் (கிரிண்டிகம), பொலநறுவை முதலான இடங்களில் சதுர்வேதி மங்கலம் அமைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழநாட்டில் சைவசமய சோழப் பேரரசின் பிரதிநிதியாக பொலநறுவையில் ஆட்சிபுரிந்த மன்னன் சங்க போதி வர்மன் என்று அழைக்கப்பட்டான். இம்மன்னனின் பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலமே முதன் முதலாக இங்கமைந்த சதுர்வேதி மங்கலம் பற்றியும் அதன் நடவடிக்கை பற்றியும் அறிந்து கொள்ள

முடிகின்றது. "**ஸ்ரீ சங்க வன்மரான, உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கு, யாண்டு பத்தாவது. ஸ்ரீ ராஜராஜச் சதுர்வேதி, மங்கலத்துப் பெருங்குறி மக்களாம்.... செவ்வாய்க் கிழமையும் பெற்ற ஆயிலெயத்து நாளன்றிரவு நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில் மாணி......**" என அக்கல்வெட்டுக் குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத் தக்கதாகும். முன்பு கூறியது போல சோழப் பேரரசின் உள்ளூராட்சியின் ஒரு பகுதியாக சபை, மகாசபை அல்லது சதுர்வேதி மங்கலம் விளங்கிற்று. இக்கல்வெட்டில் வரும் பெருங்குறி என்பது பிராமணர்களின் மகாசபையை குறிக்கும். பெருங் குறிப்பெருமக்கள் என்பது அச்சபையின் அங்கத்த வர்களைக் குறித்து நிற்கின்றது. அவர்கள் ஒருநாள் இரவு கூடி தமது நன்செய் நிலத்து வேண்டிய நீரைப் பெறுவ தற்காக நீர்ப்பாசனக் கால்வாய்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளைப் பற்றியும் அவற்றின் செலவினங்கள் பற்றியும் இக்கல்வெட்டுக் குறிப்பிடும். எனவே இங்கிருந்த பிராமணர்களும் தமிழ் நாட்டைப் போலவே தனிக் குழுமங்களாகவும் தனி அதிகாரம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களைக் கொண்டவர் களாகவும் விளங்கினர்.

சோழர் ஆட்சியில் மேற்கூறிய இரு சதுர்வேதி மங்கலங்கள் பற்றிய செய்திகளையே அறிய முடிகின்றது. சோழர்களை முதலாம் விஜயபாகு விரட்டி, சிங்கள ஆட்சியை ஏற்படுத்திய பொழுதும் அவனிடத்தில் சமூக, சமயப் பகை உணர்வுகள் இருக்கவில்லை. சைவத்தை பௌத்தத்தோடு ஒப்ப மதித்தான். சைவ வைணவக் குடியிருப்புக்களில் அமைதியைப் பேணினான். அரச மட்டத்தில் பிராமணர்களுக்கு தகுந்த மரியாதை அளித்தான். ஆட்சி பீடம் ஏறிய பிற்பாடு வைதீக வழிபாட்டு முறைகளை அவனால் புறக்கணிக்க முடியவில்லை. அவன் சமயத் தாபனங்களை தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதித்ததோடு, தனது காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களுக்குத் தானங்களையும் வழங்கினான் என, பரணவிதானை அவர்கள் குறிப்பிடுவது இங்கு மனங் கொள்ளத் தக்கதாகும். இம்மன்னன் கந்தளாயில் இருந்த சதுர்வேதி மங்கலப் பிராமணர்களை நன்கு ஆதரித்தான். அங்கமைந்த சிவன் கோயிலை நன்கு போற்றி வந்தான் எனவும் பாலமோட்டைச் சாசனம் குறிப்பிடும். "***ஸ்ரீ சங்கபோதி வருமரான உடையார் ஸ்ரீ ஸ்ரீ விஜயவாகு தேவர்க்கு யாண்டு 42வது தென்கைலாசம் ஸ்ரீ விஜயராஜ ஈஸ்வரம்***" எனக் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கது. இம்மன்னனுடைய 42வது ஆட்சியாண்டில் இங்கிருந்த சதுர்வேதி மங்கலம் "**விஜயராஜச் சதுர்வேதி மங்கலம்**" எனப் புதிய பெயரையும் இங்கிருந்த ராஜராஜேஸ்வரம் "**விஜயராஜேஸ்வரம்**", எனவும் புதிய நாமங்களைப் பெற்றன. எது எவ்வாறு இருப்பினும் விஜயபாகு பிராமணர்களை நன்குமதித்தான் என்பதும், பிராமணர்கள் முன்பு போலவே மகாசபாக்களை உடையவர்களாகவும் இருந்தனர் என்பதும், அவன் ராஜராஜேஸ்வரத்தை, விஜயராஜேஸ்வரம் என மாற்றியதன் மூலமும் பல மானியங்களை அதற்கு அளித்ததன் மூலமும் அவன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான் என்பதும் வரலாற்று உண்மைகளாம்.

முதலாம் விஜயபாகு மன்னனின் பின்னர், இரண்டாம் விக்கிரமபாகு (கி.பி. 1111 – 1132) இரண்டாம் கஜபாகு (கி.பி. 1132 – 1153) மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்து சமயமும் சமயக் கிரியைகளும் முக்கியத்துவம் பெற்றன. குறிப்பாக அரண்மனை மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்கின. பூஜாவலியா, ராஜவலியா முதலான நூல்கள் இம்மன்னர்கள் பற்றிய செய்திகளைத் தரவில்லை. அதேசமயம் சூழவம்சம் விக்கிரபாகு பற்றிக் குறிப்பிடும் பொழுது "***அவசியமான யாகத்தையும் கிரியைகளையும் வேதம் முதலானவற்றில் தேர்ச்சிமிக்க புரோகிதர்களையும் பிராமணர்களையும் கொண்டு செய்வித்தான்***" எனக் குறிப்பிடும். இக்குறிப்பின்படி விஜயராஜ சதுர்வேதி மங்கலத்தில் இருந்த பிராமணர்களே இக்கிரியை முறையினை நிறைவேற்றி வைத்திருத்தல் வேண்டும். அவ்வகையில் பிராமணர்கள் சதுர்வேதி மங்கலம், ஆலயம் ஆகிய நிர்வாக நிலையங்களின் கடமைகளோடு அரசவை புரோகிதத்தையும் அவ்வப்பொழுது நிறைவேற்றி வந்தனர். இதனால் அவர்கள் அரசவை பட்டார குருவாகவும் இருந்து வந்தனர். இப்பட்டார குருக்களின் செல்வாக் கினாலேயே பௌத்த மன்னர்கள் தம்மை தெய்வீக அம்சம் உடையவர்களாகக் கருத முற்பட்டனர் போலும். விக்கிரமபாகு தன்னை 'பராயன்ய ராஜ நாராயண' என அழைத்துக் கொண்டான் என்று காகம்பிலியாவக் கல்வெட்டுக் குறிப்பிடுவது இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கதாகும்.

இரண்டாம் கஜபாகுவின் ஆட்சிக் காலம், சோழர் ஆட்சியின் பின் சைவசமயம் சற்று மேலோங்கி வளர்ந்து நின்ற காலமெனக்

குறிப்பிடலாம். இவன் சிங்கள பௌத்தனாகப் பிறந்த பொழுதும் தன்னை முழுமையாக சைவத்துக்கு அடிமைப் படுத்திக் கொண்டான். தன் வாழ்நாளை திருக்கோணேசுவரத்துடனும் கந்தளாயுடனும் இணைத்துக் கொண்டான். இரண்டாம் கஜபாகு தனது வாரிசைத் தெரிந்தெடுத்த பின் பொலநறுவையில் வாழ்வதற்குப் பதிலாக கந்தளாயில் வாழ விரும்பியது அவனது இந்துமத ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றது' என்ற சிறீமா கிருபாமுன அம்மையாரின் கூற்றும் இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும். அவன் கந்தளாய், அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் அமைந்த சதுர்வேதி மங்கலங்களுக்குப் புத்துயிர் அளித்தான். அத்துடன் திருக்கோணேசுவரத்தில் பிராமணர்களோடு பாசுபதர், பௌத்தர் ஆகியோர் நடத்திய போராட்டங்களை இம்மன்னனே தீர்த்து வைத்தான் என்றும் பிராமணர்களை அவ்வாலயத்தின் நிரந்தர பூசகராக நியமித்தான் என்றும் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடும்.

பொலநறுவையில் ஆட்சி செய்த கலிங்க வம்சத்தவனாகிய நிசங்க மல்லன் (கி.பி. 1187 – 1196) பிறப்பால் சைவனாக இருப்பினும் பௌத்தத்தில் அதிக பற்றுடையவனாக விளங்கினான். அதனால் அவன் சைவத்தை வெறுத்தானல்லன். பொலநறுவை, கந்தளாய் ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற அவனது கல்வெட்டுக்கள் தரும் குறிப்புக்கள், அவன் சைவத்தின்மேல் கொண்ட பற்றை வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

பொலநறுவைக் கல்வெட்டுக்களுள் ஒன்று இம்மன்னன் முதலாம் சிவதேவாலயத்தில் ஆராதனை செய்தான் என்றும், பிறிதொன்று பிராமணரை அநுசரிக்கும் பொருட்டு பிராமண சத்திரமொன்றினையும் கட்டினான் என்றுங் குறிப்பிடும். கந்தளாய்க் கல்வெட்டுக்கள் இங்கு அவன் சதுர்வேதி பிரம புரம்' என்னும் பிராமணக் குடியிருப்பொன்றினை அமைப்பித்தான் எனவும்' பார்வதி தர்மசாலா என்னும் தருமசாலை ஒன்றினை நிறுவி தானம் அளித்தான் எனவும் இங்கமைந்த கல்லாசனத்தில் இருந்து விழாக்களைக் கண்டு களித்ததோடு பார்வதி தர்மசாலாவில் அளிக்கப்பெற்ற தானங்களையும் அவதானித்து வந்தான் எனவும் குறிப்பிடுகின்றன.

கந்தளாய் சதுர்வேதி பிரமபுரம் என்பது 'ராஜராஜ சதுர்வேதி மங்கலத்தின் பிறிதொரு வடிவமேயாகும். காலந்தோறும் பொலநறுவையை ஆண்ட மன்னர்கள் சதுர்வேதியின் மீது கொண்ட நம்பிக்கையின் நிமித்தம் தம் பெயர்களுடன் இச்சதுர்வேதியை இணைத்து பெயரிட்டு வந்தனர். ஆனால் நிசங்க மல்லன் அவ்வாறு செய்யாது இச்சதுர்வேதி மங்கலத்தின் மறு பெயராக பிரமதேயம் என்பதனை சிங்கள மொழிக்கமைய அதனை சதுர்வேதி பிரபுரம் என அழைத்தான். அவ்வகையில் கந்தளாய் சதுர்வேதி மங்கலம் கந்தளாய் சதுர்வேதி புரம் ஆயிற்று. இக்குறிப்பு இம்மன்னன் காலத்திலும் இச்சதுர்வேதி மங்கலம் சிறப்பான முறையில் பேணப்பட்டதென்பதை வலியுறுத்தும். சிலர் சதுர்வேதி பிரமபுரம், பார்வதி சத்திரம் ஆகியவற்றை ஒரு நிறுவனமாகவும் தனித்தனி நிறுவனமாகவும் கருதுவர். சிறிமா கிரிபமுன அம்மையார் சதுர்வேதி பிரமபுரம், பார்வதி சத்திரம் ஆகியவற்றைத் தனித்தனி நிறுவனங்களாகக் கருதுவதோடு, நிசங்க மல்லன் இந்நிறுவனங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து அவற்றின் நடவடிக்கைகளைப் பார்வையிட்டு வந்தான் என்றுங் குறிப்பிடுவார். ஆனால் சிலர் இவற்றினை ஒரு நிறுவனமாகக் கருதி சதுர்வேதி பிரமபுரம் என்ற இடத்தில் பார்வதி சத்திரம் அமைக்கப்பட்டதென்பர். ஆனால் நிசங்க மல்லன் திரிபுவனச் சத்திரம், நிசங்க சத்திரம், பௌத்த சத்திரம் முதலான சத்திரங்களை அமைப்பித்தானெனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதாலும் சத்திரம் என்னும் சொல் தங்குமிடம், தானம் அளிக்குமிடம் என்னும் பொருள்களைத் தருவதாலும், புரம் என்னும் சொல் இடம், வசிப்பிடம் முதலான பொருள்களைத் தருவதாலும் பார்வதி சத்திரமும், சதுர் வேதி பிரமபுரமும் தனித்தனி சைவ அமைப்புக்க ளென்றே கொள்ளுதல் வேண்டும்.

சோழப் பெருமன்னர்கள் வட இந்திய பிராமணர் வகையைத் தொடர்ந்து பிராமணியக் கோட்பாடுகளிலும் தரும சாத்திரங்களிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் "அரசன் தெய்வீகம் சார்ந்தவன்" என்று கற்பித்த கருத்தில் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாயினர். இதன் பொருட்டு வேட்கப் பெறும் சடங்குகளை இவர்களைக் கொண்டு நடப்பித்தனர். இதனாற்போலும், பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்த்திரியார் மன்னர்களுக்கும் வட இந்திய சைவக் கோட்பாடுகளுக்கும் ஒருவித தொடர்பு இருந்ததாகக் குறிப்பிட்டார். இச்சடங்கினால் அரண்மனை மட்டத்தில் உயர்நிலை பெற்றனர் பிராமணர்கள். இதனால் தம்மைத் தனியானதொரு இனமாகக் கற்பிக்கத் தொடங்கினர். இதன் விளைவால் தமிழ் நாட்டில் இவர்களுக்கெனத்

தனியான குடியிருப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகைய குடியிருப்புக்களே பிரமதேயம், அக்கிரகாரம், சதுர்வேதி மங்கலம் எனப்பட்டன. மரபு வழிப்பட்ட கோயிற் கிரியைகளோடு பிராமணர்களது சடங்குகள் இணைந்த பொழுது சமுதாயத்திலும் பிராமணர்கள் முக்கியத்துவம் பெற்றனர்.

பொலநறுவையில் சோழப் பேரரசர்கள் கட்டிய ஆலயங்களுக்குப் பூசாரியார்களாகப் பிராமணர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களின் தனித்துவத்தைப் பேண கந்தளாய் சதுர்வேதி மங்கலம் என்னும் பிராமணக் குடியிருப்பு அமைக்கப்பட்டது. சோழப் பேரரசின் பின் இலங்கையை ஆண்ட சிங்கள-பௌத்த மன்னர்களும், மரபுவழிப்பட்ட சைவ சமய நெறியைப் பேண விழைந்தமையினால் பிராமணர்களும் சதுர்வேதி மங்கலங்களும் பேணப்பட்டன. ஆனால் நிசங்க மல்லனின் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொலநறுவை மன்னர்கள் சமயப் பொறுமையை பெரிதும் கடைப்பிடித்தனர் என்று கூறுவதற்கில்லை. அதற்கு மாகனின் அதிதீவிர வைதீகப் பற்றும் ஒரு காரணம் எனலாம். பௌத்த மன்னர்கள் பௌத்தத்தைப் போற்றினர். அதன் எழுச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தனர். இதனால் சைவமும் அதனோடு இணைந்த துறைகளும் வீழ்ச்சி அடைந்ததோடு பிராமணர்களின் செல்வாக்கும் படிப்படியாகக் குறைந்தது. சதுர்வேதி மங்கலங்கள் கலைக்கப்பட்டன. குழுமங்களாக இயங்கிய பிராமணர்கள் பொது மக்களோடு இணைந்து அவர்களுள் ஒருவராக வாழத் தலைப்பட்டனர். ஆயினும் அரசமட்டத்தில் அவ்வப்பொழுது தமது செல்வாக்கை அவர்கள் செலுத்தத்தவறவில்லை.



# ***** சைவ சித்தாந்தச் செந்நெறி *****
***   ***
*****   *****

ஆ.குணநாயகம்
இலங்கை

உலகத்தில் தொன்மை வாய்ந்த சமயங்களுள் சைவ சமயமும் ஒன்று. இப்போது உலகில் நிலவி வரும் சமயங்களுள் சைவ சமயமே மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் ஒரு நோக்கும் உள்ளது. இஃது எவ்வாறாயினும் சைவ வழிபாடு 4,000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்து நதிப் பள்ளத்தாக்கில் நிலவியிருந்ததற்கு அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உள்ளன. இப்பள்ளத் தாக்கின் கண்ணேயுள்ள சிதைவுச் சின்னங்களை ஆராய்ந்த சேர். ஜோன் மார்ஷல் என்னும் பெரியார் இவ்வாறு கூறுவர்.

*" மொகெஞ்சதாறோ, ஹறப்பாப் பகுதிகளிற் காணப்பட்டனவற்றுள் மிகவும் அதிசயத்திற் குரியதான விடயம், சைவ சமயத்தின் வரலாறு கற்காலம், உலோக காலம் என்பனவற்றிற்கு முற்பட்டது என்பதேயாகும். உலகத்தின் கண்ணே உள்ள சமயங்களுள் மிகவும் தொன்மையானது இது என்பதனை இவ்வாராய்ச்சி புலப்படுத்திற்று."*

இப்பெரியாருடன் இணைந்து செயலாற்றிய டாக்டர் பிரான் நாத் என்பவர், சாசனப் பொறிப்புக்களிலிருந்து சுதந்திரமாகத் தன்னாற் பெறப் பெற்றுள்ள ஆராய்ச்சியின் பயனாக, சிவ வழிபாடும், அன்னை வழிபாடும் கி.மு. 3,000 ஆண்டு வரையில் இருந்ததாகக் கூறியுள்ளார்.

இந்து மதத்தின் இருபெருங் கூறுகள் வேதாந்தம், சித்தாந்தம் என்பனவேயாகும். வேதாந்தக் கோட் பாட்டின்படி, பிரமம் ஒன்றே உண்மைப் பொருள். ஏனையவையெல்லாம் இப்பிரமத்தின் பிரதி பிம்பமேயாகும்.

சைவ சித்தாந்தத்தின்படி கடவுள், உயிர், உலகம் என முப்பொருள்கள் உண்டு. சைவ சித்தாந்த இலக்கியம் இரு கூறாக அமைந்துள்ளது. ஒன்று, சைவத் திருமுறைகள். மற்றது மெய்கண்ட நூல்கள். முன்னையது தோத்திரம் எனப்படும். பின்னையது சாத்திரம் எனப்படும். தோத்திரங்கள் அடியவரின் உணர்ச்சிப் பிரவாகத்தால் எழுந்தவை. பின்னையவை, அறிவின் ஆராய்ச்சியால் தோன்றியவை. உணர்ச்சிக்குக் காரணம் கிடையாது. ஆராய்ச்சி கிடையாது. அன்பின் நெகிழ்ச்சி மாத்திரமே அதற்குத் தோற்றமும் ஆதாரமுமாகின்றது. அறிவு அப்படியான தொன்றல்ல. ஒன்றினை மேற் கொள்வதற்கு முன்னர், தனக்கு வாய்த்துள்ள ஐம்பொறிகள், ஐம்புலன்கள், உட்கருவிகள் முதலிய சாதனங்களும் பிறவும் எவை உளவோ, அவற்றின் துணை கொண்டு, இயன்ற வரையிற் சரி, பிழை, நன்று, தீது என்பனவற்றை ஆராய்ந்து, இறுதியில் ஒரு முடிவுக்குவந்து அதன்படி செயலாற்றும். உலகத்தின் தன்மையையும், உயிர்களின் இயல்பையும், இவற்றுக்கு உயிராய் விளங்கும் பேருயிரையும் விளங்கிக் கொள்ளும் முயற்சியில் அறிவு ஒரு அளவு மாத்திரமே செல்ல முடியும், அப்பாற் செல்ல இயலாது என்ற உண்மையை உணர்ந்த நம் முன்னோர்கள், ***" நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறியேன், உடையாய் அடியேன் உன்அடைக்கலமே"*** என்ற முடிவுடன் அன்பு நெறியாய் வந்த தோத்திர நூல்களுக்கு முதலிடம் அளித்தனர்.

ஆனாலும், பகுத்தறிவு படைத்த மக்கள், அறியவேண்டியவற்றைத் தமது அறிவின் துணைகொண்டு, அறியக் கூடிய அளவுக்கு அறிதல் வேண்டும் என்னும் தேவையையும் உணர்ந்தனர். தமது அறிவை ஒன்றன்பாற் செலுத்தி உணருதல் வேண்டும் என்பதற்கு "உய்த்து உணருதல்" என்னும் சொல் வழக்கே சான்று பகருகின்றது. அன்புக்குத்தானும் அறிவு ஒரு அளவு வேண்டப்படுகிறது. அறிவுத் துணையில்லாத பைத்தியக்காரனுக்கு அன்பு செலுத்த முடியாது.

உய்த்து உணருதல் என்னும் பிரயத்தனத்தால் எழுந்ததே சைவ சித்தாந்தச் செந்நெறி. 'சித்'

என்பது, பெறப்பட்டது என்னும் பொருளுடையது. 'அந்தம்' என்பது, முடிபு. இதுகாறும் பல்லாற்றானும், பலராலும் பெறப்பட்ட முடிபுகளைத் துருவி ஆராய்ந்து, அறிவு விளக்கத்தாலும் அனுபவ ஞானத்தாலும் இறுதி முடிவாகப் பெறப்பெற்ற முடிபே சித்தாந்தம் எனப்படுகிறது. காணப்படும் உலகத்தைக் கொண்டு காணாத கடவுளை உணருகிறது. பிற சமயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதால் சமயாதீதம் எனப்படுகிறது. "சைவ சமயமே சமயம்" என்று அருளினார் தாயுமானவ அடிகளார்.

***" இந்திய நாட்டின் சகல சமயங்களுள்ளும் மிக்க விரிவானதும், செல்வாக்குடையதும், தங்கு தடையின்றித் தன்னளவில் மேன்மதிப்புடையதும் சைவ சித்தாந்த நெறியேயாகும்"*** என்று போற்றும் மேல் நாட்டு ஜி.யூ.போப் என்னும் வணக்கத்திற்குரிய பாதிரியார், "தமிழரின் சமயம் இதுவே" என்று மேலுங் கூறியுள்ளார்.

சித்தாந்தி எவரும் "நான் இதனைக் கூறுகின்றேன். இதுவே சரி, எனவே கேள்வியின்றி இதனையே ஒப்புக்கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தார். மெய்கண்டதேவ நாயனார் அருளிய "சிவஞானபோதம்" என்னும் தலைசிறந்த மெய்ந்நூலின் 12 சூத்திரங்களின் முதற் சூத்திர முடிவில் "என்மனார் புலவர்" என்றும், 6ம் சூத்திர முடிவில் " இசைக்கும் மன்னுலகே" என்றும் ஏனைய பெரியோர்களின் வாக்குகளாகக் கூறினாரேயொழியத் தனதுரையாகக் கூறியதில்லை. உபதேசிப்பது, ஆசிரியரின் கடமை; ஏற்பது, விடுவது மாணவரின் பொறுப்பு.

உண்மையாராய்ச்சியின் போது சைவ சித்தாந்தம் கையாளும் முறை தனித்தன்மை வாய்ந்தது. சிவஞான சித்தியார் பாட ஒழுங்கு அமைந்திருக்கும் முறையைப் பார்த்தால் இது நன்கு புலனாகும்.

*முதற்பிரிவு, **பிரமாணவியல்** - இதனால் மெய்ப்பொருள் உண்மை உணர்த்தப்பெறுகிறது.*
*இரண்டாம் பிரிவு, **இலக்கணவியல்** - இதனால் மெய்ப்பொருளின் இயல்பு உணர்த்தப் பெறுகிறது.*
*மூன்றாம் பிரிவு, **சாதனவியல்**- இதனால் மெய்ப்பொருளை அடையும் நெறி உணர்த்தப் பெறுகிறது.*
*நான்காம் பிரிவு, **பயனியல்** - இதனால் மெய்ப்பொருளை அடைவதால் பெறும் பயன் யாது என்பது உணர்த்தப் பெறுகிறது.*

இதனை வேறு வகையாற் சொன்னால், இவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் என வரிசைக் கிரமமாய் அமைவதைக் காணலாம். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது சித்தாந்தக் கோட்பாடு. ஆராய்ந்து அறிதலுக்கு முன்னிடம் கொடுத்தனர் நம்முன்னோர்கள். "ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்" என்றோதினார் வள்ளுவனார். ஓர்த்து என்பதற்கு ஆராய்ந்து என்பது பொருள்.

இவ்வாறு சைவ சித்தாந்தம் கண்டறிந்த பொருள்கள் மூன்று. அறிவிக்காமலே அறியும் பொருள் ஒன்று; அறிவித்தால் அறியும் பொருள்; அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள் ஒன்று; அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் ஒன்று. இந்த மூன்று பொருள்களும் கடவுள், உயிர், உலகம் என்று அமைகின்றன. சித்தாந்த மரபில் இவை பதி, பசு, பாசம் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் இலக்கணத்தை விவரிக்க வியாபகம், வியாப்பியம், வியாப்தி என்ற மூன்று பதங்கள் கையாளப்படுகின்றன. ஒரு நீர் குடிகுவளையை எடுத்துக் கொள்வோம். இதனுள் எங்கும் பரவியிருக்கும் ஆகாயம், வியாபகத்துக்கு உதாரணம். குவளையில் நிறைந்திருக்கும் தேநீர், வியாப்பியம். தேநீரிற் கலந்துள்ள சீனி, பால், சாயம் மூன்றும் வியாப்தி. பாத்திரத்தினுள் ஆகாயம் போல உள்ளது கடவுள். பால், சீனி, சாயம் ஆகிய மூன்றும் தன்னுள்ளே அடங்கியிருப்பதற்கு இடம் கொடுத்து, இவற்றினுள்ளே விரவியும் இருக்கிறது இவ் ஆகாயம். இடமாகிய வியாபகத்துடன் ஒன்று கூடி நிறைந்து நிற்கும் தேநீர், உயிருக்கு உவமையாகின்றது. உயிராகிய வியாப்பியத்துள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் வியாப்தியாயுள்ளன.

விஞ்ஞான ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் அமைந்துள்ளது சைவ சித்தாந்தச் செந்நெறி. Law of the Conservation of Energy என்ற ஒரு அடிப்படை விதி விஞ்ஞானத்தில் உள்ளது. இதனைச் சித்தாந்தம் சொல்லும் முறை, **"உள்ளது போகாது, இல்லது வாராது"** என்பதேயாகும். இந்த விதியின் அடிப்படையிலேயே, கடவுள், உயிர், உலகம் மூன்றையும் உள்பொருளாகச் சித்தாந்தம் கைக் கொண்டுள்ளது. இங்கு, உலகம் என்பதனை உள்பொருளாகக் கொள்ளும் போது ஒரு மலைப்பு ஏற்படலாம். இவ்விடத்தில் நாம் உலகம் என்று கூறுவது, வெளித்தோற்றமாய் அமைந்துள்ள புற

உலகத்தையன்று. சைவசித்தாந்தக் கொள்கையின்படி, இவ்வுலகத் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாயுள்ளது "மாயை" என்று அழைக்கப்படும் நுண்ணாற்றல் வஸ்துவேயாகும். இது அழியாத உள்பொருள்.

இந்நெறியை விளக்கும் சாத்திர நூல்கள் பதின்னான்கு. இவைமெய்கண்ட சாத்திரங்கள் என அழைக்கப்படும். இவற்றுள் சிறந்தது, சிவஞானபோதம். இதற்கு வழி நூலாகவும், சார்பு நூலாகவும் முறையே சிவஞானசித்தியாரும், சிவப்பிரகாசமும் அமைந்துள்ளன. பதின்னான்கு சாத்திரங்களுள்ளும் காலத்தால் முந்தியவை, திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாருமாகும். இந்நூல்கள் யாவும் 12ம் 13ம் நூற்றாண்டுகளில் எழுந்தவை. ஆனாலும் சைவ சித்தாந்த நெறியோ மிகமிகத் தொன்மையான காலத்திலேயே நிலவிவந்துள்ளது. திருமூலர் காலத்திலேயே நிலவியநெறி இது. எனவே, மெய்கண்ட சாத்திரங்களே சைவ சித்தாந்தத்திற்கு ஆரம்பம் என்று சொல்லின், அது பிழையாகும். மெய்கண்ட நூல்கள் பதின்னான்கும், எவ்வளவோ காலத்திற்கு முன்பதாக நிலவி வந்துள்ள கோட்பாடுகளை ஒரு நெறிப்படுத்தி நூல்வடிவு கொடுத்தனவே எனலாம்.

மெய்கண்ட நூல்கள் கூறும் பொருட் சுருக்கத்தைப் பார்ப்போம். உலகத்துக்கு முழுமுதலாகிய கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரே உடையான். உயிர்கள் அவரது உடைமைகள். உயிரை அநாதியே ஆணவ மலம் என்னும் அறியாமை இருள் பற்றி நிற்கின்றது. இந்த அறியாமை இருளைப் போக்கிச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வை அருளும் நோக்குடன், உடம்பும் உடற்கருவிகளும், உலகமும், உலகத்துப் போகப் பொருள்களும் இறைவனால் அருளப் பெறுகின்றன. இவற்றைச் சாதனமாகக் கொண்டு, தனது முயற்சியால் உய்தி பெற வேண்டியது உயிரின் பொறுப்பு. உய்தற்குரியது, உயிர். உண்மைச் சார்பு எது என்பதனை உணர்ந்து, பொய்ச்சார்பு கெட ஒழுகுதல் வேண்டும். பொய்ச் சார்பு கெடுதற்கு உதவும் ஒழுக்க நெறிகள் நான்கு உள்ளன. உடலாற் பணி செய்யும் சரியைநெறி. உடலும் உயிரும் சேர்ந்து இயற்றும் கிரியை நெறி. உள்நோக்குடைய யோக நெறி. இவற்றுக்கு அப்பாற்பட்ட ஞான நெறி.

கண் காண்கின்றது, வாய் பேசுகின்றது, காதுகேட்கின்றது. இவை தாமாகவே தம் தொழிலைச் செய்கின்றனவா, அல்லது பிற உதவியோடு செயற்படுகின்றனவா? உயிர் பின்னணியில் நின்று இயக்காவிட்டால் கண்காணாது, வாய்பேசாது, காது கேட்காது. அதுபோலவே, உயிர்க்குயிராகிய கடவுளின் சகாயம் இல்லாது போனால், உயிர் செயற்படாது.

*"விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு*
*அளந்தறிந்து அறியா; ஆங்கவை போலத்*
*தாம் தம் உணர்வின் தமியருள்*
*காந்தம் கண்ட பசாசத்தைவையே"* – சிவஞானபோதம்

தமியருளினாலேயே நாம் செயற்படு கின்றோம் என உணர்தலே சமய நெறியின் முதற்படி. பூமியிலே நடந்து வரும் ஒருவரைப் பார்த்து, நீர் யாருடைய உதவியுடன் நடந்து வருகின்றீர் என்று கேட்டால், அவர் கோபத்துடன் "நானாகத்தானே நடந்து வருகிறேன்" என்பார். ஆரச் சோரப் பார்த்தால் உண்மை புலனாகும். பூமியின் திண்மையின்றேல் அவர் நடந்து வர முடிந்திருக்குமா? திண்மை தரும் பூமியை, அண்ட வெளியில் தாங்கி நிற்கும் திருவருட் சகாயம் இன்றேல், நடந்து வருபவருக்கு என்னாகும்?

*"தரையை உணராது தாமே திரிவார்*
*புரையை உணரார் புவி"*
–திருவருட்பயன்

"புரை" என்பதற்குத் திருவருள், அல்லது குற்றம் என இருபொருள்கள் உள. உண்மையான தன்மையை உணராது தாமே நடப்பவராகக் கருதுகின்றவர்கள், திருவருட் சகாயத்தை உணராத உலக மக்கள் என்பது ஒருபொருள். அல்லது, தமது அறிவின் குறைபாட்டை உணராதவர் என்பது இன்னொரு பொருள்.

இவ்வாறு, பூமியின் தன்மையையும், வானவெளியின் தன்மையையும், திருவருள் நன்மையையும் அறிந்து கொள்ளாதவர் தமக்குத் தாமே கேடு செய்கின்றவராவர்.

*"மலை கெடுத்தோர், மண் கெடுத்தோர், வான்*
*கெடுத்தோர், ஞானத்தலை கெடுத்தோர், தற்கேடர் தாம்"*
–திருவருட்பயன்

சைவ சித்தாந்தச் செந்நெறியை விளக்கும் நூல்களுள் மெய்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதம் தலையானது என முன்னர்க் குறிப்பிட்டோம். மொத்தம் நாற்பது அடிகளை மாத்திரமே உள்ளடக்கிய பன்னிரண்டு

சூத்திரங்களைக் கொண்டுள்ள மிகச் சிறிய நூல் இது. எனினும் சைவ சித்தாந்தப் பிழிவு முழுமையும் இதனுள் அடங்கும். இதன் சூத்திரம் ஒவ்வொன்றும் யாது கூறுகின்றது என்பதனைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| *சூத்திரம்* | *1 –* | *பதியாகிய கடவுளின் உண்மையைக் காண்பிக்கிறது.* |
| *சூத்திரம்* | *2 –* | *பாசமாகிய ஆணவ அறியாமை இருளின்உண்மையைக் காண்பிக்கிறது.* |
| *சூத்திரம்* | *3 –* | *பசுவாகிய உயிரின் உண்மையைக் காண்பிக்கிறது.* |
| *சூத்திரம்* | *4 –* | *பசுவின் இலக்கணம் கூறுகின்றது.* |
| *சூத்திரம்* | *5 –* | *பாசத்தின் இலக்கணம் கூறுகின்றது.* |
| *சூத்திரம்* | *6 –* | *பதியின் இலக்கணம் கூறுகின்றது.* |
| *சூத்திரம்* | *7 –* | *பதியைஅடையும் இன்றியமையாமையைக் கூறுகின்றது.* |
| *சூத்திரம்* | *8 –* | *பக்குவ ஆன்மாவுக்குச் சிவமேகுருவாக முன்வந்து அருளுவது கூறப்படுகின்றது.* |
| *சூத்திரம்* | *9 –* | *ஆன்மா பக்குவம் அடையும்பரிசு கூறப்படுகின்றது.* |
| *சூத்திரம்* | *10 –* | *பாச நீக்கத்தின் பயன் கூறப்படுகின்றது.* |
| *சூத்திரம்* | *11 –* | *சீவன் முத்தராம் சிறப்புக் கூறப்படுகின்றது.* |
| *சூத்திரம்* | *12 –* | *சீவன் முத்தர் நிலையினின்றும்பிறழாது நிற்றற்குரிய உபாயம் கூறப்படுகின்றது.* |

இந்தத் தலைசிறந்த நூலின் முதலாவது சூத்திரத்தைச் சிறிது பார்ப்போம்.

*"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்"*

அவனென்றும், அவளென்றும், அது என்றும் சுட்டிக் கூறப்படும் தொகுதியாகிய உலகம், தோன்றுதல், இருத்தல், மறைதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையினால் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருள்களேயாம். இப்பிரபஞ்சத் தொகுதி, ஆணவமலம் காரணமாக முன்னர்த் தோன்றி நின்ற முறைப்படியே ஒடுங்கிப்போக, அவ்வாறு ஒடுங்கிய இடமாகிய கடவுள் இடத்தினின்றும், மீண்டும் தோன்றுவதாகும். இங்ஙனமாக, அந்தத்தைச் செய்யும் கடவுளே, முதற்கடவுள் என்று கூறுவர் அறிவுடையோர்.

உலகப் பொருள்கள் இருவகையன. ஒன்று அறிவுடைச் சித்துப் பொருள். மற்றது அறிவற்ற சடப்பொருள். சித்துப் பொருள் தன்வயத்ததாக மாத்திரமே இயங்காது. அது எப்போதும் சடப் பொருளுடன் சேர்ந்து தான் இயங்க வல்லது. உதாரணமாக உயிர் தன் மட்டிலே தானாகவே தனித்து இயங்காது. சடமாகிய உடலுடன் கூடியே இயங்கும். இச்சடமாகிய உடல் தானாகவே உயிருடன் வந்து சேராது. இதனை ஒன்று சேர்ப்பதற்கு அறிவுடைய பொருள் ஒன்று வேண்டப்படும்.

சடப்பொருள் இருப்பதால் மாத்திரமே ஆக்குவோன் வேண்டும் என்றதில்லை. ஆனால் சடப் பொருளில் மாற்றம் ஏற்படுமாயின் அதனை அவ்வாறு மாற்றம் செய்யும் ஒருவர் வேண்டப்படும். சடம் தன்னைத் தானாகவே மாற்றிக்கொள்ளும் ஆற்றல் உடையதன்று.

உதாரணமாக, மண் தானாகவே குடமாக மாற முடியாது. குயவன் ஒருவன் வேண்டும். மேலும், ஒரு சக்கரம் வேண்டும். இங்கு மண் முதற்காரணம், சக்கரம் துணைக்காரணம், குயவன் நிமித்த காரணம்.

அவன், அவள், அது என்பன உள்பொருளாகக் கொள்ளப்பட்டன. ஏனெனில், இல் பொருளிலிருந்து உள்பொருள் ஆகாது. இது அடிப்படை விஞ்ஞான விதியை ஆதாரமாகக் கொண்டது. **"உள்ளது போகாது; இல்லது வாராது".**

எமது கண்ணுக்குப் புலப்படும் இவ்வுலகமானது, சைவ சித்தாந்தத்தில் "மாயை" என்று அழைக்கப்படும் நுண்ணாற்றல் வஸ்துவினின்று தோற்றுவிக்கப்படுகிறது. நிலம்,நீர், தீ,காற்று,ஆகாயம் என்னும் ஐம்பூதச் சேர்க்கையாலும் உலகம் பரிணமிக்கின்றது. இவை யாவும் சடப் பொருள்கள். இவற்றைச் செயற்படுத்தும் அறிவுடைப் பொருள் ஒன்று இருத்தல் வேண்டும். இதுவே "பதி" என்று போற்றப்படுகிறது. சூத்திரத்தில் "தோன்றிய" என்று செய்வினையாகச் சொல்லப்படவில்லை. "தோற்றிய திதி" என்று செயற்பாட்டு வினையாற் சொல்லப்பட்டுள்ளது. இதன் தாற்பரியம், உலகிற் காணும் அவன், அவள், அது எனச் சுட்டி

உணரப்படும் முப்பொருள்களும் ஒருவனாற் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள்களேயாம். எனவே, உலக தோற்றத்தின் பின்னணியில் அறிவுடைய ஒருவர் உளர் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு தர்க்க ரீதியாக கடவுள் உண்மை நிரூபிக்கப்படுகிறது. ஒடுக்க நிலையில் காரண வடிவான நுண்ணிய நிலையிலிருந்து, காரிய வடிவாகிய தூல வடிவைத் தருபவர் இவரேயாம்.

சித்தாந்தச் செந்நெறியை மேற்கொள்ள வேண்டிய முறைமையையும் பயனையும் சிவஞான சித்தியார் விளக்குகிறது.

*"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்*
*தாழ்வெனும் தன்மையோடும் சைவமாஞ் சமயஞ் சாரும்*
*ஊழ் பெறல் அரிது; சால உயர் சிவ ஞானத்தாலே*
*போழிள மதியி னானைப் போற்றுவார் அருள் பெற்றாரே"*

வாழ்வெனும் மையல் – குலம், கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் செருக்கு. வறுமையென்றது அறிவின்மையாகிய வறுமை; அறிவின்மை சிறுமையைத் தரும்; சைவ சமயம் சார்ந்தால், வறுமை நீங்கும்; சிறுமை பெருமையாக மாறும். பெருவாழ்வு கிட்டும்.



# சேக்கிழார் காட்டும் அடியார் வழிபாடு

******

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
இணைப்பேராசிரியை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

## அடியார் - பொருள் விளக்கம்.

அடி என்பது இறைவனின் திருவடியைக்குறிக்கும். ஆர்தல் என்பது இடையறாது சிந்தித்தல் எனப்பொருள். முழுமுதற் பொருளான இறைவனின் திருவடிகளை இடையறாது சிந்திப்பவர்களே அடியார்கள். இதனைத் திருமூலர்,

"அடியார் பவரே யடியவ நாம்" [1] என்று கூறுகின்றார்.

## அடியார் வழிபாடு - பொருள் விளக்கம்

அடியவர்கள் திருவேடம் சிவவேடத்தை எதிரொலிப்பது. எனவே அடியவர் வேடத்தில் சிவசொரூபத்தைக் கண்டு வழிபடுவதையே அடியார் வழிபாடாகக் கூறுவர்.

"பக்தரது திருவேடத்தைப் பரமேசுவரனெனக் கண்டு வழிபடுக" [2] என்று மெய்கண்டார் கூறுகின்றார்.

வழிபாடு என்ற சொல் வழிபடுதல், பின்நிற்றல், திருக்குறிப்பின் வழி ஒழுகுதல் எனவும் பொருள்படும். [3] எனவே அடியவர்களின் குறிப்பறிந்து அவர்கட்கு வேண்டுவன கொடுத்துதவுதலும் அடியார் வழிபாடு எனலாம்.

## அடியார் வேடம்: இலக்கணம்

அடியார் வேடம் என்பது திருநீறு, உருத்திராக்கம், சடாமுடியைக் குறிக்கும். மூர்த்தி நாயனார் இம்மூன்றும் கொண்ட வேடத்தால் ஆட்சி செய்தமையால் "மும்மையால் உலகாண்ட மூர்த்தி" [4] என்று போற்றப்படுகின்றார்.

"*பூசு நீறு*" [5] "*ஆரம் கண்டிகை*" [6] என்று, சேக்கிழார் அடியார் வேடத்தைக் குறிப்பிடுகின்றார்.

"*தூய வெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமும்*
*நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்*
*பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்*
*மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே*" [7]

என்றும்,

"*சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்*
*கந்தம் மிகையாங் கருத்தும் கைஉழ வாரப் படையும்*
*வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்*
*அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய*" [8]

என்றும்,

சேக்கிழார் திருநாவுக்கரசரை வர்ணிப்பது அடியார் வேடத்தின் இலக்கணத்தை உணர்த்தும். திருவேடத்தின் இயல்பினை விளக்கவந்த மாதவச் சிவஞான முனிவர், சேக்கிழாரின் இப்பாடலையே மேற்கோள்களாகக் காட்டுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

திருநீறு தூய்மையின் அடையாளம். இஃது அடியவர்களின் உள்ளத்தூய்மையை உணர்த்தும். பொருட்கள் யாவற்றையும் எரித்தாலும் எஞ்சி நிற்பது திருநீறு. உலகு உயிர்கள் ஒடுங்கினாலும் நிலைத்து நிற்பவன் சிவபெருமான். பசுவின் மலத்தை நீறாக்கி தயாரிக்கப்படும் திருநீறு, பசுக்களின் மும்மலங்களை நீறாக்குபவன் சிவபெருமான் என்னும் உண்மையை உணர்த்துவதால் அது சிவ வேடங்களில் ஒன்றாகும்.

உருத்திராக்கம் இரக்கத்தின் அடையாளம். அடியார்கள் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கும் பண்பினர். கணவனை மணந்த கற்புடையாளுக்கு எவ்வாறு மங்கலநாண் இன்றியமையாததோ அதுபோல இறைவனை நாயகனாகக் கொண்ட உயிர்கட்கும் இது மிக வேண்டப்படுவதாயிற்று. இவ்விரண்டும் இறைவனும் அணிபவை. எனவே அவை சிவவேடமாயிற்று.

உலகத்தார் சிவபெருமானின் உண்மைத்

தன்மையை நேரே அறியமுடியாது. மனம், வாக்கு. காயம் இவற்றைக் கடந்துள்ள இறைவன், மக்கள் தன்னையுணர்ந்து வழிபடுதற் பொருட்டுத் தன்வடிவாகிய திருநீறு, கண்டிகை முதலியவற்றைத் தன்னடியாருக்குக் கொடுத்துள்ளான் என்று மெய்கண்டதேவர் கூறுகின்றார்.[9]

## அடியார் வழிபாட்டின் அவசியம்

காண்பதற்கரிய கடவுளைக் காண்பதற்குரிய உபாயமாகத் திகழ்பவர்கள் அடியார்களாதலால் அவரை "பராவு சிவர்" என ஞானசம்பந்தரும்,[10] அருணந்திசிவாசாரியாரும்[11] குறிப்பிடுவர். திருக்கோயில் போன்று சிவசொரூபத்தைப் புலப்படுத்தி நிற்பதால் அடியவர்களை "நடமாடுங் கோயில்"[12] என்பார் திருமூலர். எனவே அடியவர்களை அரனாகக் கருதி வழிபடவேண்டும்.

தீயானது தன்னைச் சேர்ந்த இரும்பைத் தன்னுள் அடக்கித் தன்வண்ணமாம்படிச் செய்வதுபோல, சிவோகம் பாவனையால் தன்னை உணர்ந்த அடியவர்களை இறைவன் தன் வியாபகத்துள் அடக்கித் தானாக்கிக் கொள்கின்றான். இவ்வகையிலும் அடியார்கள் சிவனேயாதலால் அவர்களை வழிபடவேண்டும்.

அடியார்களின் மனம், வாக்கு, காயம் மூன்றும் சிவனையே எப்போதும் சார்ந்திருப்பதால், சிறிய ஆலம் விதை பெரிய ஆலமரத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதுபோல, கண்ணையும், கருத்தையும் கடந்த கடவுளை அடியவர்கள் தம் உள்ளத்தில் அடக்கியவர்கள் [13] எனவே அவர்களை வழிபடவேண்டும்.

அடியார் வழிபாட்டினால் உயிர்கள் அடையும் பயன்கள் யாவை என்பது சிந்திக்கத்தக்கது. சிவனடியார்களைச் சிவமென வழிபடுகிறவர்கட்கு மூவினைகளும் இல்லை. [14] அடியார்கள் பற்றற்று மனம், மொழி, மெய் முதலிய மூன்றாலும் திருவருளில் தோய்ந்திருப்பதால் அவர்களை வழிபடும் உயிர்கள் 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்ற தம் இயல்பிற்கேற்ப பற்றிலிருந்து விடுபட்டு அருள்வழியில் நின்று வீடுபேறடையும். மாணிக்கவாசகர் இறைவனிடம் " அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரிவாய்"[15] என வேண்டுகின்றார். மெய்கண்டதேவர் சீவன் முத்தர்கட்கும் பண்டைய மலவாதனை வந்து தாக்காதிருக்க அடியார் வழிபாடும் கூட்டுறவும் தேவை எனக் கூறும்பொழுது நம்போன்றோர் அடியார் வழிபாடு செய்யாதிருக்கலாமா?

> *"குருலிங்க வேடமெனக் கூறில் இவைகொண்டார்*
> *கரு வொன்றி நில்லார்கள் காண்"* [17]

என்று உண்மை விளக்கம் கூறுகின்றது. எனவே முக்தியைத் தரும் அடியார் வழிபாடு அனைத்துயிர்க்கும் அவசியம்.

## அடியார் வழிபாட்டினால் முக்தி பெற்றவர்கள்.

சேக்கிழார் போற்றும் நாயன்மார்களுள் பின்வந்தோர் அடியார் வழிபாடு செய்து முக்தியடைந்தவர்கள் ஆவர் [18]

1. திருநீலகண்டநாயனார்.
2. இயற்பகை நாயனார்.
3. மூர்க்க நாயனார்.
4. சிறுத்தொண்ட நாயனார்.
5. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்.
6. விறன்மிண்ட நாயனார்.
7. இடங்கழி நாயனார்.
8. முனையடுவார் நாயனார்.
9. சத்தி நாயனார்.
10. அமர்நீதி நாயனார்.
11. மெய்ப்பொருள் நாயனார்.
12. ஏனாதிநாத நாயனார்.
13. புகழ்ச்சோழ நாயனார்.
14. மானக்கஞ்சாற நாயனார்.
15. இளையான் குடிமாற நாயனார்.
16. காரைக்கால் அம்மையார்.
17. நரசிங்க முனையரையர் நாயனார்.
18. கலிக்கம்ப நாயனார்.
19. நேச நாயனார்.

மேலே கூறிய நாயன்மார்களின் வரலாறுகளை உற்று ஆராயும் பொழுது அடியார் வழிபாட்டினை நாம் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1. அடியார் வேடத்தை வழிபடுதல்
2. அடியவர்கட்கு அமுது அளித்தல்
3. அடியவர்கட்கு வேண்டும் பொருள் கொடுத்தல்
4. அடியார் வழிபாட்டிற்கு இடையூறு செய்பவர்களைத் தண்டித்தல்.

## அடியார் வேடத்தை வழிபட்டவர்கள்

மூர்க்க நாயனார், மெய்ப்பொருள் நாயனார், ஏனாதிநாத நாயனார், நரசிங்க முனையரைய நாயனார், கலிக்கம்ப நாயனார் போன்றோர் அடியார் வேடத்தை வழிபட்டவராவர். மூர்க்க நாயனார், "ஆதிமுதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்" [19] என அறிந்தவர்.

மெய்ப்பொருள் நாயனார் அடியார் திருவேடத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டவர். மெய்ப்பொருள் வேந்தரின் சீலம் அறிந்தே அவரைப் போரில் வெல்லமுடியாத அவரின் பகைவனான முத்தநாதன் வெண்ணீறு சாத்தும் அப்பெரு வேடத்தில் வந்து வஞ்சனையாகக் அவரைக் கொன்றான். வாயிற் காவலன்கூட தீயவன் என்று அறிந்து கொள்ளக்கூடிய ஒருவனை மெய்ப்பொருள் மன்னர் அறிந்து கொள்ளாமல் இருப்பாரா? வந்தவன் யாரென்று அறிந்திருந்தும் அதனைப்பற்றிக் கவலைப்படாமல் அடியவர் வேடத்திற்கு மதிப்புக் கொடுத்தார் எனலாம். தான் இறந்து கொண்டிருக்கும் அந்நிலையிலும் தன் மெய்க்காவலன் தத்தனை அழைத்து "இவர் நம்மவர்" என்று கூறி அவருக்கு இடையூறு வராதபடி நகருக்கு வெளியே பத்திரமாக விட்டுவரப் பணித்து "விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" [20] என்று அரசியல் ஆயத்தார்க்கும், சுற்றத்தார்க்கும் உரைத்தவர் மெய்ப்பொருள் நாயனார்.

ஏனாதிநாத நாயனார் தன்னோடு போர் புரியவந்த பகைவனான அதிசூரனின் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனைக் கொல்லாமல் அவனால் தான் கொல்லப்படும்படி நடந்து கொண்டார். [21]

நரசிங்க முனையரைய நாயனார் சிவவேடம்பூண்ட தூர்த்தனிடமும் அன்பு காட்டிய பெருந்தகையார் [22]

அடியவர்கட்கு, அமுது படைக்கும் திருத்தொண்டு செய்து வந்த கலிக்கம்ப நாயனார் தனது பழைய வேலையாள் சிவனடியாராக வந்தபோது அவனையும் வழிபட்டவர். [23]

மேலும் சிவலிங்க வழிபாட்டு நெறியில் நின்ற கழறிற்றறிவார் நாயனார் (சேரமான் பெருமாள் நாயனார்) உழமண்பூசிய சலவைத் தொழிலாளனை, சிவவேடத்தை நினைப்பூட்டியதால் வணங்கியதாகச் சேக்கிழார் கூறுகின்றார். [24]

## அடியார் வேடச் சிறப்பு

முப்புரம் எரித்த சிவபெருமான், "உருத்திராக்க மாலையும், விபூதியும் பூண்டு எம்மை வணங்கும் சிவனடியாரை நீ அணுகாதே" [25] என்று எமனிடம் கூறியதாக கச்சியப்ப சிவாசாரியார் கூறுவது அடியார் வேடச் சிறப்பை உணர்த்தும்.

மாதவச் சிவஞான முனிவர் தமது சிவஞானபோதப் பேருரையில், "காமக்கிழத்தியர் வடிவில் காணப்படும் ஆடை., சாந்து, அணிகலன் முதலியன காமுகரை வசீகரித்து இன்பம் செய்யுமாறுபோல, திருநீறும், தாழ்வடமும், கல்லாடையும் ஆகிய திருவேடம் மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரத்தால் வசீகரித்து இன்பம் செய்யும்" [26] என்று திருவேடத்தின் இயல்பையும் சிறப்பையும் எடுத்துரைக்கின்றார்.

## அடியவர்கட்கு அமுது அளித்தல்

அடியவர்கட்கு அமுதளித்தலும் அடியார் வழிபாடேயாகும். மூர்க்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், முனையடுவார் நாயனார், இளையான் குடிமாற நாயனார், காரைக்காலம்மையார், கலிக்கம்ப நாயனார் முதலியோர் அடியவர்கட்கு அமுதளிக்கும் தொண்டு செய்தவர்கள்.

மூர்க்கநாயனாரை "காதலடியார்க் கமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும் நீதிமுறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார்" [27] என்று சேக்கிழார் கூறுகின்றார்.

'அடியாரை நாடோறும் முறைமையினில் திரு அமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்' நியதியுடையவர் சிறுத்தொண்ட நாயனார். [28] இறைவனே அவரை, "தொண்டனார்க் கெந்நாளுஞ் சோறளிக்கும் திருத்தொண்டர்" [29] என்று குறிப்பிட்டதாக சேக்கிழார் கூறுவார். பிள்ளைக் கறி கேட்ட பைரவர்க்குத்தன் மகனையே கறியாக்கிச் சமைத்தவர். [30]

முனையடுவார், கூலிக்குப் போர் செய்து அக்கூலி கொண்டு ஈசனடியார்கட்கு அமுது செய்வித்தார். [31]

இளையான்குடிமாற நாயனார், செல்வம் மிக்க காலத்தில் மட்டுமல்லாமல், வறுமையுற்ற போதும், தமக்கே உணவில்லாது , கடன் கொடுப்பார் யாரும் இல்லாத நிலையிலும், மாரிக்காலத்தில் நள்ளிரவில் சிவனடியார் தம் வீட்டிற்கு வர அன்று பகலில் வயலில் விதைத்த விதை நெல்லை அள்ளி வந்து, சுத்தம் செய்து

குத்தி அரிசியாக்கி, வீட்டின் கூரையை அரிந்து விறகாக்கி எரித்து, சோறு சமைத்து, தோட்டத்தில் தாமாகவே முளைத்து வந்த கீரைகளைப் பறித்து வந்து கறி அமுது செய்து, அடியவரை உண்பிக்க முனைந்தவரல்லவா? [32]

காரைக்காலம்மையார் பசியோடு வந்த சிவனடியாருக்கு திரு அமுது ஆக்கப்பட்டு, கறியமுதாக்கப்படாத நிலையில் கணவனார் அனுப்பிய மாங்கனி படைத்து விரைந்து பசியாற்றினார் [33].

கலிக்கம்பர், "அரனார் அன்பர்க்கமுது செய்ய மேன்மை விளங்கு போனகமும் விரும்புகறி நெய் தயிர் தீம்பால் தேனினிய கனிகட்டி திருந்த ***அமுதுசெய்வித்தே*** [34] ஏனைய நிதியம் வேண்டுவன எல்லா மின்பமுற அளிப்பார் என்று சேக்கிழார் கூறுகின்றார்.

நரசிங்கமுனையரையரும் அடியவருக்கு அமுது செய்வித்தார். [35]

## அடியார்க்கு அமுதளித்தலின் சிறப்பு

அடியார்க்கு அமுதளித்தலின் சிறப்பைத் திருமூலர்,

*"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்*
*சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்*
*பகரு ஞானி பகலூண் பலத்துக்கு*
*நிகரிலை என்பது நிச்சயந்தானே"* [36]

என்று கூறுகின்றார்.

ஆயிரம் அகரம் கட்டி (அகரம் – அந்தணர்கள் வசிக்கும் இடம், அக்கிரகாரம்) அந்தணர்கட்கு ஈவதால் பயன் என்ன? ஆயிரம் திருக்கோயில்களைக் கட்டி முடித்தலால் பயன் என்ன? யாவரும் பாராட்டிப் பகரும் சிவஞானி ஒருவர் பகற்பொழுது உண்ணும் உணவால் விளையும் பயனுக்கு அவை ஒப்பாகா.

வேதவிதிப்படி வேள்வி செய்யும் கோடி அந்தணர்கட்கு உணவளிப்பதால் உண்டாகும் புண்ணியம் ஒரு ஞானிக்கு ஒரு பிடி உணவளிக்க எண்ணும் போது உண்டாகும் புண்ணியத்திற்கு ஈடாகாது. [37]

சேக்கிழார், மண்ணில் பிறந்தார் பெறும் பயன்கள் இரண்டு எனக் கூறி அவற்றுள் முதலாவதாக, "மதிசூடும் அண்ணலார் அடியார் தமக்கு அமுது செய்வித்தல்" [38] என்று கூறுவது அடியவர்கட்கு அமுதளித்தலின் சிறப்பை உணர்த்தும்.

## அடியவர்கட்கு வேண்டும் பொருள் கொடுத்தல்

அடியவர்கட்கு வேண்டும் பொருள் கொடுத்தலும் அடியார் வழிபாட்டின் கண் அடங்கும்.

திருநீலகண்ட நாயனார் அடியவர்கட்குத் திருவோடு கொடுக்கும் திருப்பணி செய்தவர். [39]

இயற்பகை நாயனார் அடியவர்கள் கேட்கும் எப்பொருளையும் இல்லையெனாது வழங்கியவர். [40] தம் மனைவியையே தானமாகக் கொடுத்தவர். [41]

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் அடியார்களின் ஆடைகளைத் துவைத்து அழுக்கு நீக்கி உதவியவர். [42]

இடங்கழி நாயனார் அடியார்க்கு அமுது செய்ய நெல் திருடினவர்க்கு நெற்பண்டாரத்தையும், குறைவில் நிதிப் பண்டாரத்தையும் தந்தவர். [43]

முனையடுவார் நாயனார் தம் பகைவர்களை வென்று திரட்டிய பொருளை அடியவர்கட்காக வழங்கியவர். [44]

அமர்நீதிநாயனார் அடியவர்களுக்குப் போர்வையும், அரைஞாணும், கோவணமும் வழங்கியவர். [45] (அமுதும் அளித்தார்.)

மானக்கஞ்சாற நாயனார் கலியாணம் தொடங்கும் வேளையில் மணமகளான தன் மகளின் நீண்ட கூந்தலை அறுத்து சிவனடியாரின் பஞ்சவடிக்காகக் கொடுத்தவர். [46]

நரசிங்கமுனையரைய நாயனார், "நீறணியுந் தொண்டர் அணைந்தார்க்கெல்லாம் நிகழ் பசும் பொன் நூறு குறையாமல் அளித்தவர்"[47].

நேசநாயனார் சிவனடியார்கட்கு உடை, கோவணம் முதலியன நெய்து கொடுத்தவர். [48]

## அடியார்க்கு வேண்டுவன கொடுத்தலின் சிறப்பு

இறைவனுக்கு ஏதேனும் செய்தால் அது சிவனடியார்க்கு வந்தமையாது. ஆனால் சிவனடியார்க்கு ஏதேனும் கொடுத்தால் அது இறைவனையும் சாரும்.

*"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடக் கோயில் பகவற்க தாமே"* [49]

என்று திருமூலர் சிவவழிபாட்டினும் அடியார் வழிபாட்டினைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

## அடியார் வழிபாட்டிற்கு இடையூறு செய்பவர்களைத் தண்டித்தல்

சத்திநாயனார் சிவனடியார்களைக் குறை கூறுபவர்களின் நாவை தண்டாயுதத்தால் இழுத்துக் கத்தியால் அரிந்தவர் [50]

புகழ்ச்சோழ நாயனார் தாம் வெட்டிய பகையரசர்களின் தலையொன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனம் நொந்து தீப்புகுந்தவர் [51].

தனது பழைய வேலையாள் சிவனடியானாக வந்தபோது திருவடிகளைக் கழுவ கரகத்திலிருந்து நீர்வார்க்கத் தயங்கிய மனைவியின் கையையே வெட்டியவர் கலிக்கம்பர். [52]

ஆண்டவனை வழிபடச்செல்லும் அவசரத்தில் திருவாரூர்ப் பூங்கோயிலிலுள்ள தேவாசிரிய மண்டபத்திலுள்ள அடியவர்களை வழிபடாமல் சென்ற சுந்தரரைப் புறம்பு என ஒதுக்கியவர் விறன்மிண்ட நாயன்ார். [53] இவரே, சுந்தரர் அடியார் வழிபாட்டிற்கு வித்திட்டு திருத்தொண்டத் தொகை பாடக் காரணமானவர்.

உமாபதி சிவம் தம் திருத்தொண்டர் புராண வரலாற்றில் சிவலிங்கத்தால் முக்தியடைந்த முப்பது பேர்களுள் ஒருவராக எறிபத்த நாயனாரைக் குறிப்பிடுகின்றார் [54]. எறிபத்தரை இப்பகுதியில் குறிப்பிடுவதும் பொருந்தும். அவர் கருவூரில் அரனாரை வழிபடும் அன்பர்களின் இடர்களைத் தடுக்கும் திருத்தொண்டில் ஈடுபட்டவர். அடியவர்கட்கு தீங்கிழைப்பவர்களை அறிந்து வீழ்த்த கோடரி என்னும் படையை ஏந்தியிருப்பார். அன்பர்கட்கு அடாதன அடுத்தபோது, அதனை விலக்குவதற்காக எடுக்கப்பட்ட கருவி அதுவாதலால் அதனைத் "தூயபரசு" [55] என்கின்றார் சேக்கிழார். எறிபத்தர் சிவகாமியாண்டார் என்னும் சிவனடியாரிடமிருந்து பூக்குடலையைப் பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையையும் அவ் யானையை அடக்காதிருந்த பாகர்களையும் கொன்றார். [56]

## அடியார் வழிபாட்டிற்கு இடையூறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டிய அவசியம் ஏன்?

*"ஈச னடியார் இதயங் கலங்கிடத்*
*தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்*
*வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்*
*நாசம தாகுமே நந்நந்தி யாணையே"* [57]

என்று திருமூலர் கூறுவதே இதற்கு விடையாகும். மூர்த்தி நாயனார் திருக்கோயிலுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் திருத்தொண்டிற்கு இடையூறு செய்த கடுக நாட்டு மன்னன் மூர்த்தி நாயனார் இதயம் கலங்கிய அன்றே இறந்தது [58] இங்கு நினைவு கூரத்தக்கது.

### முடிவுகள்

1. இறைவனின் திருவடிகளை இடையறாது சிந்திப்பவர்களே அடியார்களாவர்.

2. அடியார்கள் அரனே ஆவர்.

3. அடியார் வழிபாடு முக்தி அடைவதற்குரிய சாதனங்களுள் ஒன்றாகும்.

4. அடியார் வேடத்தை வழிபடுதல், அடியவர்க்கு அமுதளித்தல், அடியவர்கட்கு வேண்டும் பொருள் கொடுத்தல், அடியார் வழிபாட்டிற்கு இடையூறு செய்பவர்களைத் தண்டித்தல் முதலியனவும் அடியார் வழிபாட்டின் வகைகளே.

5. சேக்கிழார் போற்றும் நாயன்மார்கள் தம் வாழ்விலும், தாழ்விலும், சோதனைகள் பல சூழ்ந்தபோதிலும், அடியார் வழிபாட்டில் உறுதியுடன் நின்றனர். அவர்கள் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கும், அவனடியார்கட்கும் உரிமையுடையதாய்க் கருதியமையே அதற்குக் காரணமாகும்.

6. அடியார் இதயம் கலங்காமல் காப்பது அரச கடமைகளுள் ஒன்று.

## அடிக்குறிப்புகள்


1. திருமந்திரம், 2740.
2. சிவஞானபோதம் சூத். 12, மூன்றாம் அதிகரணம், மேற்கோள்.
3. க. வச்சிரவேல் முதலியார், சைவம், சைவமும் வைணவமும், ப. 35.
4. திருத்தொண்டத் தொகை, 3, மூர்த்தி நாயனார் புராணம், 46.
5. திருக்கூட்டச் சிறப்பு, 6.
6. மேலது, 9.
7. திருநாவுக்கரசு நாயனார் புராணம், 140.
8. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம், 270.
9. சிவஞானபோத உதாரண வெண்பா, 76.
10. திருஞானசம்பந்தர் தேவாரம், 3: 325: 6.
11. சிவஞானசித்தியார் சுபக்கம், 287.
12. திருமந்திரம், 1857.
13. திருக்களிற்றுப்படியார், 48.
14. திருமந்திரம், 1862.
15. திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம், 1.
16. சிவஞானபோதம், சூத். 12.
17. உண்மை விளக்கம், 51.
18. உமாபதிசிவம், திருத்தொண்டர் புராண வரலாறு, 45.
19. மூர்க்கநாயனார் புராணம், 3.
20. மெய்ப்பொருள் நாயனார் புராணம், 22.
21. ஏனாதிநாத நாயனார் புராணம், 37 - 40.
22. நரசிங்கமுனையரைய நாயனார் புராணம், 7.
23. கலிக்கம்பநாயனார் புராணம், 6 - 8.
24. கழறிற்றறிவார் நாயனார் புராணம், 17 - 19.
25. கந்தபுராணம், 2261.
26. சிவஞானமாபாடியம், ப். 110.
27. மூர்க்கநாயனார் புராணம், 3.
28. சிறுத்தொண்டர் நாயனார் புராணம், 13.
29. மேலது, 36.
30. மேலது, 48 - 73.
31. முனையடுவார் நாயனார் புராணம்,2 - 4.
32. இளையான்குடி மாற நாயனார் புராணம், 6 - 24.
33. காரைக்காலம்மையார் புராணம், 18 - 20.
34. கலிக்கம்பநாயனார் புராணம், 3.
35. நரசிங்க முனையரைய நாயனார் புராணம், 4.
36. திருமந்திரம், 1860.
37. மேலது, 1861.
38. திருஞானசம்பந்தநாயனார் புராணம், 1087.
39. திருநீலகண்ட நாயனார் புராணம், 3.
40. இயற்பகை நாயனார் புராணம், 2.
41. மேலது, 8
42. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்,114.
43. இடங்கழி நாயனார், 6 -8.
44. முனையடுவார் நாயனார் புராணம், 2 - 4.
45. அமர்நீதி நாயனார் புராணம், 3.
46. மானக்கஞ்சாற நாயனார் புராணம், 27 - 30.
47. நரசிங்கமுனையரைய நாயனார் புராணம், 4.
48. நேசநாயனார் புராணம், 3.
49. திருமந்திரம், -1857.
50. சத்திநாயனார் புராணம், 3.
51. புகழ்ச் சோழநாயனார் புராணம், 33 - 39.
52. கலிக்கம்ப நாயனார் புராணம், 8.
53. விறன்மிண்ட நாயனார் புராணம், 7.
54. உமாபதிசிவம்,திருத்தொண்டர்புராணவரலாறு, 43.
55. எறிபத்த நாயனார் புராணம், 7.
56. மேலது, 23 - 25.
57. திருமந்திரம், 534.
58. மூர்த்தி நாயனார் புராணம், 18 - 24.

# வள்ளுவம் ஒரு ஞான நூல்

வித்துவான் க. ந. வேலன், இலங்கை

திருக்குறள் ஓர் அறநூல். ஏனெனில் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுவதுண்டு. மேற்கணக்கு என்பது வாழ்வு எப்படி இருந்தது என்பதை விளக்குவது. கீழ்க்கணக்கு வாழ்வு, எப்படி இருக்க வேண்டு மென்பதைக் கூறுவது.

இந்த நியதியை வைத்தே திருக்குறளையும் கீழ்க்கணக்கு நூல்களுள் ஓர் அறநூலாக வைத்துக் கணித்து வந்திருக்கின்றோம். ஆனால் திருக்குறள் ஒரு ஞான நூல் என்பதும் திருவள்ளுவர் ஒரு சீவன் முத்தர் என்பதும் நன்கு உணரப்படவேண்டிய உண்மை களாகும்.

ஏனெனில், அறநூல்களைவிடச் சமய நூல்கள் மேலானவை என்றும் சமய நூல்களைவிடத் தத்துவநூல்கள் மேலானவை என்றும் நாம் கருதுகின்றோம். இந்தவகையிலேயே திருவள்ளுவரும் மதிக்கப்படுகின்றார்.

திருமந்திரம், சிவஞான போதம், தேவாரம், திருவாசகம் முதலிய ஞானதத்துவ நூல்களை அருளிய ஞானிகளைப் போலவே திருக்குறளினை அருளிய திருவள்ளுவரும் ஓர் ஒப்பற்ற ஞானியாவார்.

கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்காகிச் சீவகரணமற்றுச் சிவகரணம் பெற்றநிலையிலேயே ஞானிகள் இவற்றை அருளிச் செய்துள்ளனர்.

*தேவர்குறளும் திருநான் மறைமுடிவும்*
*மூவர் தமிழும் முனிமொழியும்– கோவை*
*திருவாசகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவா சகமொன்று உணர்.*

என்பது ஞான சிரோன்மணியாகிய ஔவைத் தாயின் அருள்வாக்காகும். திருக்குறள், உபநிடதம், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகிய ஆறு நூல்களும் ஒரு பொருளாகிய மெய்ப்பொருளைக் கூறும் ஒரு வாசகமாகும். இவற்றுள் திருக்கோவையாரை முனிமொழியும் கோவை எனக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது. திருக்கோவையார் 'காமநன்னூல் இது' என ஒரு சாரார் கருதிய காரணத்தாலேயே முனியாகிய காமத்தை முனிந்த காம கோடியாகிய மாணிக்க வாசகர் கூறியது திருக்கோவையார் என்பதறிக என்னும் குறிப்புத் தோன்றுமாறு கூறப்பட்டுள்ளது. குமரகுருபரர், "திருக்கோவையார் காமம் சான்ற பனுவல் அல்ல, காமம் சான்ற ஞானப்பனுவல்" எனக் கூறியுள்ளார்.

சீவகரணமற்றுச் சிவகரணம் பெற்று அருளிச் செய்த திருக்குறளின் 'உண்மைப் பொருளைச்' சிவகரணமுடையாரே முற்றுமுணரவல்லவராவர். அத்தகையோருள் ஒருவராகிய மணக்குடவர் தம்முரையில் ***வள்ளுவக்கடவுள்*** எனக் குறித்துச் செல்கின்றார். கடவுள் அனைய வள்ளுவர் என உவமைத் தொடராகக் கூறுவதற்கும் வள்ளுவக் கடவுள் என உருவகத் தொடராகக் கூறுவதற்கும் உள்ள வேறுபாடு உள்ளுவோர் உள்ளத்திற்கேற்ப விரிந்து செல்வதாகும்.

சமயதத்துவ நூல்களில் சொல்லப்படாத பல உண்மைகளை, அறநூலாகிய திருக்குறளில் வள்ளுவக்கடவுள் கூறியுள்ளார். ஞானநூல்களில் மறை பொருளாகக் கூறியவற்றை வள்ளுவக்கடவுள் நேரிடையாக, வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல், தவம் , நிலையாமை முதலிய அதிகாரங்களிற் காணப்படும் கருத்துக்கள் ஞானநாட்டமுடையார் பசிதீர்க்கும் தரத்தன.

*"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்போடு உயிரிடை நட்பு".*

என்னும் குறள், உடம்பின் நிலையற்ற

தன்மையைக் கூறுகின்றது. குடம்பை என்பதற்கு மணக்குடவர், பரிதியார், காளிங்கர் போன்ற உரையாசிரியர், பறவையின் கூடு என்றே பொருள் கொண்டனர். ஆனால் பரிமேல் அழகர் என்னும் ஞானி, பறவையின் முட்டை எனப் பொருள் கொண்டு,"குடம்பை என்பதற்குக் கூடு என்று உரைப்பாருமுளர். அது (கூடு) புள்ளுடன் தோன்றாமையானும் ( உடம்பு உயிரோடு தோன்றுவது போலக் கூடு புள்ளோடு தோன்றுவதில்லை) அதன் கண் ( கூட்டின்கண்) அது (புள்) மீண்டும்புகுதல் உடைமையானும் உடம்பிற்கு (கூடு) உவமையாகாமை அறிக" என ஞானவரம்பில் நின்று மறுத்துக் கூறிய உரையும் உள்ளுதோறுள்ளுதோறுள்ளம் உவப்பதாகும்.

பரிமேலழகரின் இவ்வுரையினைத் தமது முதுமையிற் செவியுற்ற மணக்குடவர் என்னும் பெருமான், பரிமேல் அழகர் வாழும் திசை நோக்கித்தம் கரம் கூப்பித் தொழுதார் எனவும், அடியேனுக்குக்குறள் கற்பித்த காலை, யாழ், நல்லூர் பண்டிதர் க. இராசையா அவர்கள் கூறியதையும் இங்கு நினைவு கூருகின்றேன்.

நிலையாமை பலவற்றுள்ளும் யாக்கை நிலையாமை முக்கியமானது. யாக்கை நிலையாமையை உணராதார்க்கு மெய் உணர்தல் இல்லை. மேற்காட்டிய குறளை விட யாக்கை நிலையாமையை எளிதாக அழுத்தமாகக் கூறினார் எவருமில்லை.

வள்ளுவக் கடவுள் பாடிய கடவுள் வாழ்த்து ஞானவழிபாடாகும். எடுத்த காரியம் இனிதுவேறற் பொருட்டே கடவுளை வழுத்துதல் வழக்கமாகும். வள்ளுவர் அம்மரபினைப் பின்பற்றவில்லை. போற்றி போற்றி என்றோ, வாழ்த்தி வணங்குவாம் என்றோ அவர் வாழ்த்தவில்லை.

இறைவன் பெருமையினைக் கூறி அவனை வாழ்த்த வேண்டும், வணங்க வேண்டுமெனக் கூறி அவற்றால் வரும் பயனும் கூறி முடிக்கின்றார். இந்த ஞானவணக்கம் வள்ளுவக் கடவுள் போன்றார்க்கே பொருந்துவதாகும். ஏனெனில் சீவகரணங்கள் சிவகரணங்களாகப் பெற்ற சீவன்முத்தராக நின்றே திருக்குறளினை அவர் அருளிச் செய்துள்ளார். திருவள்ளுவர் திருக்குறளை இயற்றவில்லை; பாடவில்லை; அருளிச் செய்துள்ளார்.

தமிழர்களின் ஞானநூலாகிய சிவஞான போதத்துக்குப் பேருரை, சிற்றுரை அருளிய சிவஞான முனிவர், சீவன் முத்தராகிய மெய்கண்டார் அதாவது கடவுள் தன்மை பெற்ற மெய்கண்டார் தாம் அருளியநூலுக்கு ஏன் கடவுள் வாழ்த்துப்பாட வேண்டும். என்னும் ஓர் வினாவினை எழுப்பிக் கொண்டு, " சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் தமக்கு இடையூறு வாராது என்பது அறிந்தாராயினும், மரபுகாத்தற் பொருட்டும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பொருட்டும் கடவுள் வாழ்த்துக் கூறுவாராயினார்" எனக் கூறியுள்ளமையை நாம் உளம் கொண்டு இவ்விளக்கமே வள்ளுவக் கடவுளும் கடவுள் வாழ்த்துக் கூறியதற்கு விளக்கமாகவும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சிவஞான போதத்தைப் போலவே திருக்குறளும் பேருரை, சிற்றுரை காணவேண்டிய ஒரு பெரு நூலாகும். ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு நூலாக விரிந்து பொருள்தரும் ஆழமுடையது.

விருத்தியுரை வரைவதில் தமக்கு நேரின்றி விளங்கியவர் மாதவச் சிவஞானமுனிவர். இவர் வழியில் சோழவந்தனூர் அரசன் சண்முகனார் என்னும் பேரறிஞர் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, நூல் மரபு விருத்தி, எழுத்துவிருத்தி, திருக்குறள் சண்முகவிருத்தி என்னும் விருத்திகளையும், ஏகபாத நூற்றந்தாதி, நவமணிக்காரிகை, நிகண்டு, மாலைமாற்றுமாலை, இன்னிசை இருநூறு, சந்தத்திருவடி மாலை. வள்ளுவர் நேரிசை ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். அப்படியா? இவை எங்கே கிடைக்குமென ஆவலோடு கேட்கிறீர்கள். அந்தோ ! அவையெல்லாம் அழிந்தொழிந்தன. சிற்சில பகுதிகள் ஆங்காங்கே கிடைக்கின்றன.

திருக்குறளின் முதற் குறள்,

*"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு"*

என்பது. இந்தக்குறளில் கடவுள் ஒருவர் உண்டு என வள்ளுவர் கூறுகின்றார். ஒரு பொருளின் உளதாம் தன்மையை உணர்த்த அளவைநூலார், காட்சி அளவு, கருதல் அளவு, நூல் அளவு என மூன்று அளவைகளால் அளந்து விளக்குவர். அகக் காட்சியுடையார்க்கேயன்றிப் புறக்காட்சிக்குப் புலனாகும் பொருள் கடவுள் அன்று. நூல் அளவை எனப்படும் ஞானியர் உரையை எல்லோரும் ஒப்புவர்

என்பதற்கில்லை. எனவே காட்சி அளவை, நூல் அளவை என்னும் இரு அளவைகளையும் விடுத்துக் கருதல் அளவை எனப்படும் அனுமான அளவையால் கடவுளின் உளதாம் தன்மைகூறி அவன் பேரியல்பினை விளக்குகின்றார் திருவள்ளுவர்.

உலகம் ஆதிபகவனாகிய முதலையுடையது. இந்த உண்மையை விளக்குவதற்கு எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன என்னும் ஓர் உவமையை எடுத்தாளுகின்றார். தமிழ் எழுத்துக்களுக்கு அகரமே முதல். அந்த முதலிலிருந்தே ஏனைய எழுத்துக்கள் தோன்றியுள்ளன. அந்த அகரமாகிய முதல், முதலில் ஓசையாகத் தோன்றி, ஒலியாக மாறும் இருவகைத் தன்மையையும் உடையது. இவற்றுள் மூலாதாரத்தில் சூக்குமை வாக்காகத் தோன்றும் அகரமே எழுத்துக்களுக்கு முதலாகும். இதற்கு ஆதிபகவன் என்பதிலுள்ள ஆதி என்னும் அடை மொழியினை அகரத்திற்கும் கூட்டி ஆதி அகரம் எனப் பொருள் காண வேண்டுமென்பார் அரசன் சண்முகனார்.

நாத தத்துவம் மூலாதாரத்தில் சூக்குமையாகத் தோன்றி, நாபியில் பைசந்தியாகி, மார்பில் மத்யையாக நின்று, வாக்கில் வைகரியாக ஒலிக்கும் வைகரி ஒலியே நம்புறச் செவிக்குப் புலப்படுகின்றது. ஏனைய மூன்று நிலைகளிலும் அது ஓசை எனப்படும். அவ்வோசை அகச்செவியுடைய ஞானிகளுக்கே புலப்படும். இதனைத் தொல்காப்பியர்,

*"அகத்துஎழு வளிஇசை அரில்தப நாடி*
*அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே" எனவும்*
*அஃதுஇவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்*
*மெய்தெரி வளி இசை அளபுநுவன் றிசினே"*

எனவும் கூறியுள்ளார். அகத்தெழுவளி இசை என்பது ஓசையையும் மெய்தெரி வளி இசை என்பது ஒலியையும் குறிப்பனவாகும்.

சூக்குமையில் தோன்றும் ஆதி அகரம் எழுத்துக்களுக்கு முதலானாற் போன்று ஆதிபகவனே உலகுக்கு முதலாகும். இவ்விதம் ஓசையாகி ஒலியாகும் அகரமே மனித முயற்சியால் முதலிற் தோன்றும் ஒலியாகும். வாயைத்திறந்த மாத்திரத்தில் பிறக்கும் முதல்ஒலி அகரமாகும். தமிழரேயன்றி எம்மொழியுடையாரும் வாய்திறந்த மாத்திரத்தில் அகரமே பிறக்கும். மொழியறியாக் குழந்தைகளின் வாயைத்திறப்பதற்கு அ, அ, ஆ, வெண்டு, ஆவெண்டு என்று தாய் தன் வாயைத் திறந்து ஒலித்துக் காட்டிக் குழந்தைகளின் வாயைத் திறக்கச் செய்வதைக் காணலாம். எனவே ஆவெண்டால், ஆஎன்று சொன்னால் வாய் திறபடும். வாய்திறந்தால் ஆபிறக்கும். இதனை எந்த மொழிக்குழந்தை செய்யினும் அகரமே தோன்றும். இங்ஙனம் முதலிற் தோன்றும் அகரத்தை தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்தாகக் கொண்டுள்ள சிறப்பும் உணரத்தக்கது.

இதனாலேயே தொல்காப்பியர், "அ,.ஆ அங்காப்புடைய" என விதி வகுத்தார். அங்காத்தல்; வாய் திறத்தல்; வாய்திறந்த மாத்திரத்தே அ,ஆ, பிறக்கும் என்பது பொருள்.

மேலும் அகரமாகிய முதல் எழுத்தின் ஒலிக்கூறு ஏனைய எழுத்துக்களிலெல்லாம் கலந்துள்ளது. அது போல உலக முதல்வனாகிய இறைவனும் உலகெலாம் கலந்து இறைந்து இறைவனாக நிற்கின்றான். இதனையே,

*"அகர உயர்போல அறிவாகி எங்கும்*
*நிகரில் இறைநிற்கும் நிறைந்து"*

என உமாபதி சிவாச்சாரியாரும் கூறியுள்ளார்.

ஞானிகளுக்கு ஞானியாகிய வள்ளுவக் கடவுள் அருளிய குறளில் கலைகளைத் கருத்திற் கொள்ளாத ஞானிகளும் தம் உள்ளத்தைப் பறி கொடுத்துள்ளனர். வள்ளுவத்துக்குப்பின் தோன்றிய எல்லா நூல்களிலும் வள்ளுவத்தின் செல்வாக்கு அகரம் போலக் கலந்து இருப்பதைக்காணலாம். ஞான நூல்கள் பல திருக்குறளைப் பொன்னே போற் போற்றி மணியிடைப் பவழம் போற் பதித்துவைத்துள்ளன.

வள்ளுவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்களுள் " வள்ளுவக்கடவுள்" எனும் இரு சொற்கள் பதித்த தொடர் ஒப்புயர்வற்ற போற்றுதல் மொழியாகும்.

************

# "திருக்குறளின் உள்கிடை சைவசித்தாந்தமே"

************

*சைவப்புலவர் - அ. பரசுராமன்*
*ஈச்சிலம்பற்றை, திருக்கோணமலை.*

திருவள்ளுவர் அருளிய திவ்விய நூல் திருக்குறளாகும். வெண்பாவில் குறள் வெண்பா என்று ஒரு வகையுண்டு. அஃது இரண்டு அடியாலாகிய குறள் வெண்பாவால் ஆக்கப்பட்டதால், திருக்குறள் என்னும் பெயர் பூண்டது. இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெய்வப் புலமைத் திருவள்ளுவரினால் உலகின் கண்ணுள்ள மக்களெல்லாம் உய்யும்பொருட்டு இயற்றப்பட்ட ஓர் அரிய பெரிய தமிழ்நூல். இந்நூலின் சிறப்பும், பெருமையும் நோக்கி திருக்குறள் முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொய்யா மொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, தெய்வமறை என்ற பெயர்கள் வழங்குகின்றன.

"அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன்" என்றபடி நான்கு புருடார்த்தங்களையும் கூறும் நூலாகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பகுப்புடையது. இதில் நூற்றிமுப்பத்தி மூன்று அதிகாரங்கள் உண்டு. ஒவ்வோர் அதிகாரமும் பத்துக் குறட்பாக்கள் கொண்டது. ஆகவே நூல் முழுவதும் ஆயிரத்து முன்னூற்றி முப்பது குறட்பாக் களையுடையது.

தமிழுக்கே சிறப்பாக அமைந்த திருக்குறள் "அகரமுதல........." என்று தமிழ் எழுத்துக்களுள் முதலாய அகரத்தில் தொடங்கி "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்று ஈராகிய னகரத்தில் முடிந்தமையால் பெறப்படுகின்றது.

திருவள்ளுவரது நூலைப் படிப்போமானால், சாதி, குலம் என்னும் சுழிபட்டுத் தடுமாறுகின்ற தன்மை அவரிடம் இல்லை என்பதை அறியலாம். தொழில் வேற்றுமையால் உலகில் பாகுபாடு உண்டேயன்றிப் பிறப்பினால் பாகுபாடு இல்லை என்பது அவருடைய கருத்து.

*"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்*
*சிறப்பொவ்வா செய் தொழில்*
*வேற்றுமையான்"*

என்ற குறளே குலத்தைப்பற்றி அவர் கொண்டிருக்கும் சான்றாகும். திருக்குறள் ஒரு சாதியினருக்குச் சிறப்பாகக் கூறப்படுகின்ற நூலல்ல என்பதுவும், உலகத்து மக்கள் யாவருக்கும் பொது நூல் என்பதுந்தெளிவு.

மக்கள் ஒவ்வொருவரும் பல எண்ணக் கருத்துக்களையுடையவர்கள். அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்கு மார்க்கம் வேண்டும். உலகில் பல மார்க்கங்கள் உள. அவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று மாறுபட்டன. ஆனால் யாவர்க்கும் பொதுவான நியாயமான எண்ணமொன்று வேண்டும். அப்படியான நிலைக்குப் பெரிதும் பயன்படுவது திருக்குறளே. ஒழுக்கச்சார்பு விளங்கத் திருக்குறள் விளங்குகின்றது. ஒழுக்கமும், சமயமும் ஒன்றே. ஒழுக்கமே உயிர். மக்களைச் சான்றோர் என்றும், கயவர் என்றும் அன்பு, நாண், ஒப்புரவு , கண்ணோட்டம் என்ற இலட்சணங்களைக் கொண்டே அறிதல் வேண்டும். மனிதன் விலங்கு நிலை நீங்கித் தெய்வநிலை பெறுவதற்கும் இந்நூல் சாதனமாகும்.

மக்களாகப் பிறந்தோர் யாவரும் இன்பநாட்டம் உடையவர்களாய் விளங்குகின்றனர். துன்பத்திலிருந்து விடுதலைபெற்று இன்பத்தை அடைதலே மக்கட்பிறவியின் நோக்கமாகும். நிலையில்லாத உலக இன்பங்கள் யாவும் ஈற்றில் துன்பமாவதைக் கண்ட மக்கள் நிலையான

பேரின்பத்தை அடைவதற்கு நாடுகின்ற வழிகள் பலவாகும். அவ்வழிகள் அவரவர் அறிவு நிலைக்கேற்ப அமைகின்றன. அவ்வாறு அமைந்த வழிகளே சமயங்களாகும். பேரின்பத்தைப் பெறுவதற்குச் செய்ய வேண்டிய சாதனங்களையும் தெரிவிப்பது சைவ சமயமாகும். அச்சமயம் தெளிவாகக் கூறுகின்ற கொள்கைகளே சித்தாந்தம்; ஆதலால் சிறப்புடையது.

சைவ சித்தாந்த சமயம் உலகிலுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் மூன்று பிரிவில் அடக்கியுள்ளது. இவற்றை முறையே பதி-பசு-பாசம் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இம் முப்பொருள்களையுமே சித்தாந்த அடிப்படை உண்மையாகக்கொண்டு விளங்குகின்றது.

சைவ சித்தாந்தமென்றால் முடிந்த முடிவு எனப் பொருள் படும். சைவசித்தாந்தம் என்னும் கோட்பாடு நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் நிலவி வந்ததாகும். ஆனால், அக்கொள்கைக்கு இலக்கண நூல்கள், சாத்திர நூல்கள் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும், சித்தாந்தத்தைத் திறம்படக்கூறும் இலக்கியங்கள் பல இருந்தன. அவற்றுள் திருமுறைகள் தலை சிறந்தவையாகும். சைவ சித்தாந்தம் என்னும் தொடரை முதன்முதலாகக் கூறியவர் திருமந்திரம் அருளிச்செய்த திருமூலர் என்னும் யோகியாவர். உமாபதி சிவாச்சாரியார் இதனை வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்பர். இது சைவ சமயத்தவர்களுக்கு நல்லொழுக்கங்களைப் போதிப்பது.

சைவாசாரங்கள் ஆகமங்களிலும் திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் முறையாகக் கூறப்பட்டுள்ளன. அவை சைவத் திறனெனவும் வழங்கும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். இவற்றுள் சரியை, கிரியை, யோகம் என்பவற்றை மெய்யன்போடு அனுஷ்டித்தால் சிவபெருமான் ஞானாசிரியர் மூலம் அருள் செய்து மேலான முத்தி கொடுத்தருளுவர்.

திருக்குறளும், சைவசித்தாந்தமும் ஒன்றுக்கொன்று எத்துணை நெருங்கிய தொடர்புடையன என்னும் உண்மையை யாவரும் மேலும் அறிந்து கொள்ளலாம். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் தமிழ் வேதமே பசுவாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகமமே, அப்பசுவின் பாலாகவும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமுறைகளே அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார், அருள்நந்திசிவம், உமாபதிசிவம் என்னும் சந்தான ஆசிரியர்கள் இயற்றிய நூல்களே அந்நெய்யின் சுவையாகவும் அமையச் சிறந்து விளங்குவது சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை. இவ்வாற்றால் சைவ சித்தாந்தம் நம் தமிழ் நாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் உரிய தமிழ் மொழியாதல் தெளிவானது.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் எல்லாம் திருக்குறளில் செறிந்துகிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மைகளை நடுநிலைமை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். ஒருநாடு, ஒருகாலம், ஒரு மொழி, ஓர் இனம் என்பனவற்றிற்கே உரித்தாக்கிவிடாமல், எல்லாக்காலமும், எல்லாநாடும், மொழியும், இனமும் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முற்பட்டும் இருந்த மக்களுட் பெரும்பாலோர் இன்பமே வாழ்க்கையில் முதன் முதலான குறிக்கோள் எனக் கருதினார். தனிமனித வாழ்வின் நலத்திற்கு இன்பம் முதன்மை. சமுதாய வாழ்வின் நலத்துக்கு அறம் முதன்மை என்று அறத்துக்கு முதலிடம் அளித்தவர் திருவள்ளுவரேயாவர். அறவாழ்வு அல்லது ஒழுக்கம் நிலைபெறுவதற்குக்கூட இறையுணர்வும், வழிபாடும் மிகமிக இன்றியமையாதன என வற்புறுத்தியவர். ''அறவாழி அந்தணர் என்றும்..........'' ''பொறிவாயில் ஐந்தவித்தான்..........'' ஒழுக்க நெறி என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருத்தல் ஈண்டு கருதி உணரற்பாலது.

கடவுள் வாழ்த்து என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, ''உலகு இயற்றியான்'', ''வகுத்தான் வகுத்த வகை'', ''உலகத்தார் உண்டு என்பது'', ''முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு இறை.........'' என வரும் தொடர்களாலும் திருவள்ளுவர் கடவுள் உண்மையினையும் வலியுறுத்தியுள்ளார். திருவள்ளுவர் திருக்குறள் இயற்றிக் கடவுள் உண்மையினையும்,

வழிபாட்டினையும் வற்புறுத்திய பிறகே தமிழ் நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வணக்கம் செய்யும் வழக்கம் ஏற்படுவதாயிற்று. திருவள்ளுவர் முதல் எட்டுக் குறள்களிலும் கடவுள் இன்ன இன்ன குணம் உடையவர் என்று வகுத்துக்கூறி, ஒன்பதாவது குறளில், அவ் எட்டுக் குணங்களையும் தொகுத்துக்கூறி இத்தகைய பேரறிவும், பேரன்பும், பேராற்றலும் உடைய கடவுளை மக்கள் மனத்தால் நினைந்து, நாவினால் வாழ்த்தி, உடம்பால் வணங்கி வழிபட்டாலன்றி, உலக வாழ்வின் பயனாகிய பிறவிப் பெருங்கடலை நீந்துதல் முடியாது என்று பத்தாவது குறளில் வலியுறுத்தியருளினார்.

"உலகம் கடவுளால் படைத்து இயற்றப்பட்டது. எனவே, அதற்குத் தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழில்கள் உண்டு. உலகம் கடவுளையே முதலாக உடையது" என்பது வள்ளுவர் கொள்கை. "உலகியற்றியான்....", "ஆதி பகவன் முதற்றே உலகு........" என்னும் திருக்குறள் தொடர்களால் இவ்வுண்மை விளங்கும்.

"தன்னுயிர்க்கு இன்னாமைதான் அறிவான்.....", "மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்...........", "உடம்போடு உயிரிடை நட்பு......." என்றாற்போலப் பலஇடங்களிலும் திருவள்ளுவர் உயிரைக் குறித்துள்ளார்.

கொலை வேள்விகளை அவர் பெரிதும் வெறுத்தார்.

1. ***"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்<br>கொன்றாகும் ஆக்கம் கடை"***

2. ***"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்<br>உயிர் செகுத்து உண்ணாமை நன்று"***

என்னும் குறட்பாக்கள் இவ்வுண்மையைச் சான்றுபகரும். விருந்தோம்புதல் முதலியவற்றை வேள்விகள் எனத் திருவள்ளுவர் சிறந்தெடுத்துக் குறிப்பிடுதலும், இங்கு சிந்தித்தற்குரியது. திருவள்ளுவர் ;

***"ஒழுக்கம் விழுப்பம் தரலான்<br>ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"***

என்று வலியுறுத்தி, ஒழுக்கமுடைமை, கூடாவொழுக்கம் என்னும் அதிகாரங்களையும் வகுத்தருளினார். ஒருவன் தன் வசதிக்கேற்ப ஒன்றுக்கு மேல் நான்கு மனைவியரை மணந்துகொள்ளலாம் என்பது போன்றிருந்த சில சமய சமுதாய பழக்கங்களும், கொள்கைகளும் திருவள்ளுவர்க்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனும் என்பதே வள்ளுவர் கொள்கை.

***"இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்<br>கண்ணிறை நீர் கொண்டனர்".***

புலால் உண்பதைக் கூறுமிடத்து, பல சமயக் கொள்கைகளைக் கண்டித்து ;

***"தினற் பொருட்டாற் கொல்லாதுல கெனின்யாரும்<br>விலைபொருட்டால் ஊன்தருவார் இல்"***

என்னும் திருக்குறளால் நன்கினிது மறுத்திருத்தல் காணலாம்.

***"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி<br>எல்லா உயிரும் தொழும்"***

ஒருயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை எல்லா உயிரும் கைகுவித்துத் தொழும் என்றும் கூறுவது நோக்கற்பாலது. திருவள்ளுவர் கொல்லாமை அறத்தினைப் பெரிதும் போற்றியவர். நோய்க்கு மருந்தாதற்காகவேனும், நேர்த்திக்கடன் செலுத்தும் முறையாகவேனும், சாந்திசெய்தற் பொருட்டாக வேனும், வேறு, பிற எக்காரணங்கள் குறித்தேனும், ஒருவன் பிறிதொன்றின் உயிரைக் கொல்லுதல் ஆகாது என்பது திருவள்ளுவரின் கட்டளை.

***"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான் பிறிது,<br>இன்னுயிர் நீக்கும் வினை"***

பசிநோய் தீரும்பொருட்டு கொடிய வன்னெஞ்சம் உடையவராய்ப் பிற உயிர்களிடத்துச் சிறிதும் இரக்கம் இன்றி, அவற்றைக் கொலைசெய்து, அவற்றின் ஊனைத் தின்பவர்கள் விலங்கின் தன்மையை அடைவார்கள்.

***"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்<br>பிறவினை எல்லாம் தரும்".***

அறவினை என்பது கொல்லாமை. ஒருயிரையுங் கொல்லாமையாம். அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகளெல்லாவற்றையும்

தானே தரும். கொல்லாமை தானே பிற அறங்களெல்லாவற்றின் பயனையும் தரும். கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ்நாளின் உயிருண்ணுங்கூற்று செல்லாது என்றும் திருவள்ளுவர் தமது திருமறையில் கூறியுள்ளார்.

மனத்தூய்மையுடைய ஒருவன் ஏழைக்குச் சிறு உதவி செய்யினும், வேறெது நினைப்பினும், சொல்லினும், செய்யினும் அறமாகும்.

*"அழுக்கா(று) அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"*

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களையும் நீக்குவதே மனத்தூய்மையும், அதனாலாகிய அறமுமாகும்.

"அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்று கூறுகின்றார். எனவே, முறையாக வாய்மையால் அவாவின்மையும், அவாவின்மையால் மனத்தூய்மையும், மனத்தூய்மையால் அறமும் உண்டாகும்.

அன்புடையார் தம் உடலையும் கொடுக்கத் தயங்கார். இந்த அன்புதான் காதலாகவும், பாசமாகவும், நட்பாகவும், பக்தியாகவும் வளர்ந்து வளர்ந்து இறுதியில் எவ்வுயிரையும், தன்னுயிர் போல் பேணும் அருளாக மலர்கிறது. அன்பிலிருந்து அருள் தோன்றுவதால்தான் இதனை, "அன்பின் அருளென்னுங் குழவி.........." என்று அன்பைத் தாயாகவும், அருளைத் தந்தையாகவும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

கொலை, கொள்ளை, சூது, கள், காமம் ஆகியவை ஐம்பெருங் குற்றங்களாகும். இக்குற்றங்களைத் திருவள்ளுவர் கொல்லாமை, கள்ளாமை, சூது, கள்ளுண்ணாமை, வரவின் மகளிர் பிறனில் விழையாமை முதலிய அதிகாரங்களால் கண்டிக்கின்றார். ஆமைபோல் ஐம்புலனடக்கி, நீர் நிலை முதலைபோல் இடமறிந்து செயலாற்றி வென்று, தூண்டில் மீன்போல் ஏமாறாமல், சூது முதலிய குற்றங்கள் நீங்கி வாழ்தல்வேண்டும் எனத் திருவள்ளுவர் தமது குறள் வெண்பாக்களின்மூலம் கூறியுள்ளார்.

திருவள்ளுவர் கூறும் துறவறம் நாட்டைத்துறந்து காட்டிற்குச் சென்று தவம்செய்யும் துறவறமோ, சமுதாயத்தைவிட்டு விலகி வாழும் துறவறமோ அன்று. குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு, காமம் அடங்கிய பிறகு, பற்றற்ற இறைவனைப்பற்றி ஏனைய பற்றுக்களைத் துறந்து, இயன்றவரையில் சமுதாயத்தொண்டு செய்துவர்பும், தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் வாழ்வே தேவர் கூறும் துறவறம். ஆதலின், துறவறவியலும் இல்வாழ்க்கையின் வளர்ச்சியைக் கூறுவதேயாகும். இக்குறளின் பொருட்பாலும், காமத்துப்பாலும் இல்வாழ்க்கைக்கு வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகைக்குப் பல்வேறு வகையில் துணை செய்வனவேயாகும். எனவே, திருக்குறள் முழுவதுமே மனித வாழ்வின் இன்றியமையாப் பகுதியாகிய இல்வாழ்க்கையைப்பற்றிக் கூறும் நூலெனலாம்.

திருவள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை முரண்பட்ட இரவும், பகலும் இணைந்தே முழு நாளாவதுபோல, முரண்பட்ட ஆண்மையும், பெண்மையும் இணைந்ததே இல்வாழ்க்கையாம். பண்பு, கல்வி, வயது முதலியவற்றால் ஒத்த ஒருவனும், ஒருத்தியும், கணவனும் மனைவியுமாக இணைந்து அன்புபூண்டு, நன்மக்களை ஈன்று, அறநெறியில் பொருளீட்டி, அறவோர்க்கு அளித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடல் முதலிய அறங்களாற்றி, இன்சொல் இயம்பி, செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கம், ஒழுக்கம், கற்புநெறி, பொறுமை முதலிய குணங்களைப்போற்றி, அழுக்காறு, வீணாசை, புறங்கூறல், பயனிலபேசல், தீவினையாற்றல் முதலியவற்றை அறவே நீக்கி ஒப்புரவறிந்து, ஈகையாற்றி, அழியாப் புகழுடன் வாழும் வாழ்வே இல்வாழ்க்கையாகும். இம்முறைகளிற் தவறாமல் வாழ்வோரே உலகிலேயே உயர்ந்தோராவர்.

சைவசித்தாந்த தனிப் பெருஞ் சிறப்பு நூலாகிய சிவஞானபோதம் என்னும் செந்தமிழ் தத்துவநூலை இயற்றியவர் ஆசிரியர் மெய்கண்டார். காணப்பட்ட உலகத்தாலேயே, காணப்படாத கடவுளுக்கு உண்மை கூறவேண்டுதலின் "உலகு ஆதிபகவன் முதற்றே........."எனத் திருவள்ளுவர் அறிவுறுத்திய முறையைத் தழுவியே மெய்கண்டாரும் காணப்படும் பிரபஞ்சத்தைக்கொண்டு, காணப்படாத பதிப் பொருளின் உண்மையை வலியுறுத்துகின்றார்.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் செய்ந்நன்றி மறத்தலை உய்தி இல்லாத ஒரு மாபெரும் குற்றமாக உரைத்துள்ளார். நன்றி மறத்தலை இன்னும் ஒரு பெருங்குற்றமாக வலியுறுத்தி அழுத்தம் திருத்தமாக, வேறு பிறர் எவரும் திருள்ளுவரைப்போலக் கூறியதாகத் தெரியவில்லை.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை,*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

இக்குறளின் அருமையை உணர்ந்த மெய்கண்டார், இதனைத் தமது சிவஞானபோதத்தில் மிகவும் தகுதியுறப் பொருத்தமானதோர் இடத்தில் பொன்னேபோல போற்றிக்கொண்டுள்ளார்.

*"தன்னை அறிவித்துத் தான் தானாய்ச் செய்தானைப்*
*பின்னை மறத்தல் பிழையலது.........."*

என்னும் சிவஞானபோத வெண்பாவில் குருவழிபாட்டின் இன்றியமையாமையினை வலியுறுத்தும் இடத்தில் செய்ந்நன்றி அறிதல்பற்றித் திருவள்ளுவர் கூறிய கருத்தை மெய்கண்டார் எடுத்தாண்டிருப்பதைக் காணலாம்.

இறைவனின் அருளைப் பெறுவதற்குரிய அறங்கள் இவை என்று கூறுமிடத்து, திருக்குறளின் அறத்துப்பால் முழுவதையுமேசாரமாகப் பிழிந்து ஒருங்கே தொகுத்துச் சிவஞான சித்தியார் கூறுகின்றது. உலகத்தோடு ஒட்ட ஒழுகல், யாவர் மாட்டும் நேயமுடைமை, எல்லோரிடத்தும் இரக்கமுடைமை, நூல்களில் விதித்தபடி நடத்தல், தக்கோர்க்குப் பணிவிடை புரிதல், யாவர் மாட்டும் கலந்து பழகுதல், நற்குணமுடைமை, ஐம்பொறி அடக்கல், தக்கோர்க்கு உவகையொடு இயன்றன கொடுத்தல், மூத்தோரை வழிபடுதல், பணிவுடைமை, மெய்மை கடைப்பிடித்தல், பிறன் மனைவியையும், வரைவில் மகளிரையும் விழையாமை, தீநெறிகள் செய்யாமை., நன்று தீது நாடி உணர்தல், சான்றோர்களைப் பேணி, நல்லனவற்றைப் போற்றுதல் முதலிய பதினாறு பண்புகளும், இவை போல்வன பிறவும், இறைவனின் அருளைப் பெறுவதற்குரிய முயற்சியாகிய அறங்கள் ஆகும். இக்கருத்தினைக் கொண்டு:

*ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்*
*உபசாரம், உறவு, சீலம்*
*வழுக்கிலாத் தவம் தானங்கள்*
*வந்தித்தல் வணங்கல் வாய்மை*
*அழுக்கிலாத் துறவு அடக்கம்*
*அறிவொடு அர்ச்சித்தல் ஆதி*
*இழுக்கிலா அறங்கள் ஆனால்*
*இரங்குவான் பணி அறங்கள்.*

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், திருக்குறள் அறத்துப்பாலின் தெளி பொருட் சாரமாகும்.

அருள்நந்திசிவம் சிவஞான சித்தியார் நூலின் பிறிதொரு இடத்திலும், திருக்குறளினை ஒட்டிச் சிறந்ததொரு விளக்கம் செய்தருளுகின்றார். "அடியவர்களுக்கு அன்பில்லாதவர்கள் இறைவனிடம் அன்பில்லாதவர்கள் ஆவர். இறைவனிடத்து அன்பில்லாதவர்கள் உலகிலுள்ள எவ்வுயிர்களிடத்தும் அன்புகொள்ள இயலாதவர்களேயாவர். எவ்வுயிர் களிடத்தும் அன்பு செய்யாதவர்கள் எவ்வுயிர்க்கும் அன்பில்லாதவராகவே முடிவர். தம் உயிர்களுக்கு நலம் தேடிக்கொள்ள விரும்பும் எவரும் பிற உயிர்களுக்கு அன்புசெய்து நலம் புரிவார்கள். இக்கருத்தைத் திருக்குறளின் அடி ஒட்டியே அருள்நந்திசிவம் சிவஞான சித்தியாரில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"ஈசனுக்கு அன்பு இல்லார்*
*அடியவர்க்கு அன்பு இல்லார்*
*எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார்*
*தமக்கும் அன்பு இல்லார்"*

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுட்பகுதிக்கு ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் வகுத்தருளிய நயம் இக்கருத்துக்கு இணங்க இருப்பதைக் காணலாம்.

உமாபதி சிவம் என்னும் சித்தாந்தப் பேராசிரியரும், திருக்குறளைப் பெரிதும் போற்றிப் பின்பற்றியவர் என்பதும் பல சான்றுகளால் புலனாகின்றது.

1. *அகரஉயிர்போல...............(1ம் அதிகாரம்)*
   *பதிமுதுநிலை - 1ஆம் குறள்*
2. *பிறந்தநாள்போலும்....... (2ம் அதிகாரம்)*
   *உயிரவைநிலை - 1ஆம் குறள்*
3. *ஊமன்கண்போல......... (2ம் அதிகாரம்)*
   *உயிரவை நிலை -9ஆம் குறள்*
4. *அருளிற் பெரிய......... (4ம் அதிகாரம்)*
   *அருளது நிலை - 1ஆம் குறள்*
5. *புலனடக்கித்தம்முதற்......... (10ம் அதிகாரம்)*
   *அணைந்தோர்தன்மை - 4ஆம் குறள்*

எனவரும் திருவருட்பயனின் குறள் வெண்பாக்கள் முறையே..............தொடர்குறள்:

1. *"அகரமுதல........"* *(1ஆம் அதிகாரம்)*
*கடவுள் வாழ்த்து –1ஆம் குறள் (01)*

2. *"துறந்தார் பெருமை.......(3ஆம் அதிகாரம்)*
*நீத்தார் பெருமை –2ஆம் குறள் (22)*

3. *"பகல்வெல்லும் கடகையை...." (49ஆம் அதிகாரம்)*
*காலமறிதல் –1ஆம் குறள் (481)*

4. *"அருளில்லார்க்கு........." (25ஆம் அதிகாரம்)*
*அருளுடைமை –7ஆம் குறள் (247)*

5. *"ஒருமையுள் ஆமைபோல......." (13ஆம் அதிகாரம்)*
*அடக்கமுடைமை – 6ஆம் குறள் (126)*

என்னும் திருக்குறட்பாக்களின் கருத்துக்களை உள்ளடக்கிக்கொண்டிருத்தல் காணலாம்.

சைவசித்தாந்தமாவது திருக்குறள் ஆகிய தமிழ் வேதத்தையும், மெய்யடியார்கள் இயற்றிய பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், திருமந்திரம் ஆகிய சிவாகமத்தையும் அடிப்படையாகக்கொண்டு விளங்குகின்றது.

சைவசமயக் குரவர்கள் இயற்றிய தேவாரப் பாடல்களிலும், திருக்குறள் சொற்பொருள் கருத்துக்கள் யாவும் செறிந்திருப்பதைக் காணலாம். இவ்வாறே மாணிக்கவாசகரும், தமது திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பெருநூல்களிலும், பற்பல திருக்குறள்களை எடுத்தாண்டிருப்பதைக் காண்கின்றோம்.

திருநாவுக்கரசரின் "முன்னம் அவனுடைய நாமம்........" என்னும் திருத்தாண்டகமும், திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தாகக் கூறிய பத்துக்குறள்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, அவற்றின் வெளிவந்த தீம்பிழிச்சாரமாய் மிக்க சுருக்கமும், சுவைநலமும் மிகுந்து திகழ்கின்றது.

1. "ஆதிபவன்" (திருவள்ளுவர்) "அவனுடையகாமம்" (திருநாவுக்கரசர்)

2. "வாலறிவன்" (திருவள்ளுவர்) "அவனுடைய ஆரூர்" (திருநாவுக்கரசர்)

3. "மண்மிசை ஏகினன்" (திருவள்ளுவர்) "அவனுடைய ஆரூர்" (திருநாவுக்கரசர்)

4. இறைவன் பொருள்சேர் புகழ்புரிதல் (திருவள்ளுவர்) "அவனுக்கே பிச்சியானாள்" (திருநாவுக்கரசர்)

5. "பொறிவாயில் ஐந்த வித்தான்" (திருக்குறள்) "அத்தனையும் நீத்தல்" (திருநாவுக்கரசர்)

6. "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்து மனக்கவலைமாற்றல்" (திருக்குறள்) "அகனிடத்தார் ஆசாரம் அகலுதல்" (திருநாவுக்கரசர்)

7. "பொருளும்புகழும் ஆகிய பிறவழி நீந்துதல்" (திருக்குறள்) "தன்னை மறத்தல்" (திருநாவுக்கரசர்)

8. "எண்குணத்தான் தாளை வணங்கிப்" (திருக்குறள்) "தன் நாமம் கெடுதல்" (திருநாவுக்கரசர்)

9. "பிறவிப்பெருங்கடல் நீந்தி இறைவன் அடி சேர்தலே" (திருக்குறள்) "தலைவன்தாள் தலைப் படுதல்" (திருநாவுக்கரசர்)

எனத் திருவள்ளுவரின் அடியொற்றித் திருநாவுக்கரசரால் குறிக்கப்பெற்றுத் திகழ்கின்றது.

திருவள்ளுவரும், திருநாவுக்கரசரும் தமக்குள் எத்தகைய ஆன்மீக அறிவுத் தொடர்புகள் உடையவர்கள் என்பதை அறியலாம்.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட் பாலிலுள்ள பின்வரும் அதிகாரங்களின் தலைப்புக்கள் வேறுபாடின்றித் திருமந்திரத்திலும் இருப்பதை அவதானிக்கலாம்.

| அதிகாரம் | அதிகாரம் |
|---|---|
| 08. அன்புடைமை | 35. துறவு |
| 12. நடுவு நிலைமை | 37. அவா அறுத்தல் |
| 16. பொறியுடைமை | 38. ஊழ் |
| 19. புறங்கூறாமை | 40. கல்வி |
| 25. அருளுடைமை | 41. கல்லாமை |
| 26. புலால் மறுத்தல் | 42. கேள்வி |

27. தவம் 43. அறிவுடைமை

28. கூடாவொழுக்கம் 45. பெரியாரைத்துணைக்கோடல்

30. வாய்மை 93. கள்ளுண்ணாமை

33. கொல்லாமை 105. நல்குரவு

அறத்துப்பால், பொருட்பால்களின் கீழுள்ள மற்றைய அதிகாரங்களின் தலைப்புக்களும், சிறிது வேறுபட்டாலும், அறம் பொருளால் அடையும் இன்பத்துக்கே வழிகாட்டுகின்றன.

திருக்குறள் திருமந்திரம் கூறும் நெறி அடிப்படையில் உள்ளது. இல்லறம் என்பது, இல்லறத்தில் மனைவி மக்களுடன் வாழ்ந்துகொண்டு அறம் செய்தலைக் குறிக்கும். துறவறமாவது, இல்லறத்தைத் துறந்து அறம் செய்வதாகும். அறம் என்றால், இறைவனின் திருவடியான ஐந்தெழுத்தின் அகார எழுத்தை நினைந்து தியானம் செய்தல். இதனை, "அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்........." என்னும் திருமந்திரம் விளக்குகின்றது.

தெய்வப் புலவர் திருவள்ளுவரும் குறள் வாயிலாக;

***"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது"***

என்கிறார்.

திருமூலரும் இக்கருத்தையே பல பாடல் வாயிலாக விளக்கியுள்ளார். மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் மாத்திரமன்றி, இல்லற வாழ்விலும் பாசம் நீங்கி பற்று அற்று வாழ்ந்து பேரின்பத்தை அனுபவித்துள்ளார்கள். இக்குறளில் உலகத்தோடு ஒட்டி, வாழ்பவர்களுக்குப் பிறப்பின் நோக்கமாகிய மெய்ஞ்ஞானஅறிவை உணர்வதற்குப் பாயிரத்தைவிட மற்றும் அதிகாரம் மூலம் கூறியுள்ளார். அதிகாரம் 36, மெய்யுணர்தல். இவை திருமந்திரம் கூறும் உண்மைகளையே விளக்குகின்றன.

தமிழ் மூவாயிரத்தினின்றும் திருவள்ளுவர் எடுத்தாண்ட பகுதிகளில் சிலவற்றை ஈண்டு தருகின்றோம்

**01. ஆரும் அறியார் அகாரம் அவனென்று.......... திருமந்திரம்**
**"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்............**
**திருக்குறள்**

**02. அறிவுடையார் நெஞ்சொடு ஆதிபகவன்.....திருமந்திரம்**
**"ஆதிபகவன் முதற்றேயுலகு........... திருக்குறள்**

**03. போதுகந்தேறும் புரிசடையானடி.............திருமந்திரம்**
**"மலர்மிசை ஏகினான்.............. திருக்குறள்**

**04. பொருளதுவாய்நின்ற புண்ணியன்........ திருமந்திரம்**
**"இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்.........**
**திருக்குறள்**

**05. எண்சக்தி தூய்மையும்.........திருமந்திரம்**
**"எண்குணத்தான்............ திருக்குறள்**

**06. தன்னையொப்பார் ஒன்றுமிலாதலைமகன்..........**
**திருமந்திரம்**
**"தனக்குவமையில்லாதவன்..........திருக்குறள்**

**07. அறவாழி அந்தணன் ஆதிபராபரன்....... திருமந்திரம்**
**"அறவாழி அந்தணன்தாள்.......... திருக்குறள்**

**08. விளைக்கும் தவம் அறம் மேல்துறையாமே...........**
**திருமந்திரம்**
**"தானம் தவம் இரண்டும்.......... திருக்குறள்**

**09. முழக்கி எழுவன மும்மதவேழம்...........**
**திருமந்திரம்**
**"உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காத்தல்....... திருக்குறள்**

**10. ஆமேகலை ஒளியூறோசை நாற்றம் ...........**
**திருமந்திரம்**
**"சுவை ஒளியூறோசை நாற்றமென்றைந்தின் ........**
**திருக்குறள்**

**11. அந்தண்மைபூண்ட அறவோர் ஆகமத்துச்.........**
**திருமந்திரம்**
**"அந்தணர் என்போர் அறவோர்.........**
**திருக்குறள்.**

இன்னும் எத்தனையோ உள. இதனால் தமிழ் மூவாயிரம் (திருமந்திரம்) திருவள்ளுவர் காலத்துக்கு முற்பட்டது என்றும், இப்போது தமிழில் உள்ள தத்துவ நூல்களில் தலையாயது என்றும் உணர்கிறோம். இதனைப்போல் திருக்குறள் தெய்வப்

புலவர் திருவள்ளுவரால் உலகின் கண்ணுள்ள மக்களெல்லாம் உய்யும்பொருட்டு இயற்றப்பட்ட ஓர் அரிய பெரிய தமிழ் நூலாகும்.

இன்னோரனைய பல சான்றுகளால் திருக்குறளும், சைவ சித்தாந்தமும் எத்துணை நெருங்கிய தொடர்புடையன என்பதும் "திருக்குறளின் உள்கிடை, சைவ சித்தாந்தமே" என்னும் உண்மையும் யாவரும் ஆராய்ந்துணர்ந்து கொள்ளலாம். திருக்குறளின் சிறப்பையுணர்ந்து அதனைப் பல சமயத்தவர்களும் போற்ற முற்பட்டனர். சைவ சமயக் குரவர்கள், மெய்யடியார்கள், சைவ சித்தாந்தச் சான்றோர்கள் அனைவரும் தொன்றுதொட்டே திருக்குறளைத் தமது விழுமிய வேதப் பெருநூலாகக் கொண்டு ஒழுகி வந்துள்ளனர். திருக்குறளுக்கு மாறுபட்ட எந்தவொரு சிறு செய்தியையும், சைவ சமயத் திருமுறைகளிலோ, சித்தாந்த நூல்களிலோ காண இயலாது. ஒருசில சமயங்கள் இல்லாமல் திருக்குறளை முழுமையாக ஏற்று, உட்பட்டுத் தழுவிப் போற்றி நிற்பது தமிழ் மக்களுக்குரிய சைவ சித்தாந்தமே என்பதனைத் திட்டவட்டமாகக் கூறலாம்.

# சைவசித்தாந்தத்தின் அநாதிப்பொருளியல்

முனைவர் கி.லோகநாதன், மலேசியா

எல்லா சமயங்களின், பண்பாடுகளின், ஏன் எல்லா வகை அறிவியல் துறைகளின் அடிப்படையாக விளங்குவது அநாதிப் பொருளியல் ஆய்வு ஆகும். எந்தத் துறை, எந்தச் சமயம் இந்த அநாதிப் பொருளியலை ஐயந்திரிபற தக்க முறையியலோடு அணுகி நிறுத்தவில்லையோ அத்துறையும் அச்சமயமும் காலப்போக்கில் பொய்யாகி மடியும். ஆகவே இந்த அநாதிப் பொருளியல் மீண்டும் மீண்டும் ஆராயப்பட்டு உண்மை காணப்பட வேண்டியவொன்றாக இருக்கின்றது. இதுவே, அறிவியல் துறைகள் பற்பல செழித்தோங்கி வளர்ந்த போதிலும் காலத்தில் அழியாத பெருந்துறையாக மெய்யறிவு ஆய்வாகத் திகழ்ந்து வருகின்றது.

சைவசித்தாந்தம் என்பது இப்படிப்பட்ட அடிப்படையான மெய்யறிவாய்வில் அடங்குவது என்பதோடு தனக்கென ஓர் அநாதிப்பொருளியல் கொள்கையையுங் கொண்டுள்ளது. பதியாகிய இறைவன் அநாதி என்பதோடு, பசுவும் பாசமும் பதியினைப்போல் அநாதி என்பதே சைவசித்தாந்தத்தின் அநாதிப் பொருளியல் தெளிவாகும். எக்கோட்பாடு இதனை மறுக்கின்றதோ, அது 'சைவசித்தாந்தம்' என்று பகரக் கூடிய இலக்கணத்தினை இழந்துவிடுகின்றது. இந்த அநாதிப் பொருளியல் திருமந்திரத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டு, தேவாரத் திருமுறைகளால் பெரிதும் வளர்க்கப்பட்டு மெய்கண்ட சாத்திரங்களில் அளவையியல் வழி சோதிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் மெய்யென நிறுத்தப்பட்ட ஒன்றாகும். இந்தப் பழைய உண்மைகளை மீண்டும் அலசி இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு சிந்தனைப் போக்குகளோடு மோதவிட்டு, சைவசித்தாந்தத்தின் அநாதிப் பொருளியல் கொள்கையே உண்மை; பிறவெல்லாம் அல்ல என்று இக்கட்டுரை விளக்குகின்றது.

மூன்று சூத்திரங்களில் நுணுக்கமாக ஆலவித்தென கூறிவிட்டு, பிறகு அவற்றிற்கு விளக்கவுரை எழுதும் முகத்தானே கடாவிடைகளினால் உண்மைகள் நிறுத்தப்படுகின்றன.

## முதலாவது- பதியுண்மை

சூத்திரம் 1.

*அறிவின் திறனும் அவாவின் போக்குந்நூன்*
*நெறியின் ஆய்வர் நுழைவுகட் பெற்று*
*பெயராப் பெயர்க்கும் பெரும்பொருட் காண்பர்.*

இச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், தக்க உத்திகள் வழி தான் பெயராது அசலனாக நின்று பிறவனைத்தையும் பெயர்க்கும் பேரறிவும் பேராற்றலும் உடைய பதியாகிய இறைவனை அனைவரும் ஞானக்கண்ணிற் கண்டு மகிழலாம் என்பது.

**அறிவின் திறனாவது** சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனப்படும் பஞ்சாவத்தைகளின் வழி பசுகரணம் , சிவகரணம் எனப்படும் இருவகைக் கரணங்கள் வழியாக, வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக் காட்சி, விஞ்ஞானக் காட்சி, சிவஞானக் காட்சி எனப்படும் காட்சிகள் வழியாக அறியாமை போக்கி ஞானத்தெளிவுகள் பெற்று மகிழும் பண்பாகும்.

**நுழைவுகள் பெறுதலாவது** ஆழ்கடல் பயணம் போன்றும், இருட் செறிந்து பற்பல கிளைகளை உடைய நெடுங்குகைக்குள் செல்வது போன்றும் திகழும் மெய்யறிவாய்வில், தெளிவாகாது கிடக்கின்ற மறைஞானங்களை தெளிந்து மகிழும் ஞானநிலங்கள் புகுதலே நுழைவுகள் பெறுதல். பள்ளத்தில் விழுவதும், உயர்ந்து ஞானநிலங்கள் அடைவதுமாக மெய்யறிவு ஆய்வு செல்லும். தகுந்த பக்குவம் எய்தியோர்க்கே, மறையாக நிற்பவை சன்னஞ் சன்னமாக மறைபோக்கி தெள்ளறிவுகளாக மலரும், பக்குவ முதிர்ச்சி மெய்யாகும் என்றவாறு.

**பெயராப் பெயர்க்கும்** பெரும்பொருளாவது மேற்கூறிய சாக்கிரம் போன்ற அறிவின் அவத்தை நிலைகளையும், அவற்றோடு வரும்

இச்சாப்போக்குகளையும் எழுப்பி, சடப்பொருட்களையும் சித்துப்பொருட்களையும் சலித்து பல்வேறு முனைப்புகளோடு திகழ வைக்கின்றவோர் பொருள், இவற்றோடு உடங்கியைந்து இருக்கவேண்டும் என்றாயிற்று. உலகத்தில் காணக்கிடக்கும் எல்லாவகை சலிப்புகட்கும் காரணமாக இவற்றோடு அத்துவிதமாக நின்று, தான் அசலனாக அகண்டிதனாக பிறவனைத்தையும் கண்டித்தும் சலித்தும் நிற்கும் ஓர் பொருள் தேவையாகின்றது.

இனி இந்த சலனங்களை இவை தாமே தோற்றும் எனில் அது பொருந்தாது. சடப்பொருட்கள் அறிவிலதாதலின் தாமே இன்னொரு இருப்பு நிலையைத் தேற்றி அது தானாகும் முனைப்பொடு பெயரா.

இனி எல்லா சித்துப்பொருட்களின் தொழிற்பாடுகள் பக்குவ முதிர்ச்சியையும், பரிணாம வளர்ச்சியையும் கொண்டு வருவதற்கு ஏதுவாக இருப்பதன் காரணமாக தன் அறிவு எல்லைக்குள் படாத இருப்பு நிலைகளை உண்டாக்கி நிறுத்தி அது தானாக வேண்டும் என்ற முனைப்பொடு செய்வதாக இவற்றை தாமே செய்யா. இவை அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

மேலும், ஆன்மாக்களின்பால் நிற்கும் சுத்தாசுத்த விவேகமும், சுத்தத்தின் பால் நிற்கும் உள்ளிழுப்பும், அதனால் எழும் அறவுணர்வும் கட்டறிவு ஆன்மாக்களால் படைக்கப்படுவன அல்ல. புண்ணிய பாவ உணர்வுகள் கற்பிதங்கள் அல்ல. கற்பிதங்கள் எனில் உயிர்க்கு உறுதி துணையாகி மேலான சுத்தநிலைகளை அடைவதற்கும் உதவா.

**அவாவின் போக்காவது** இச்சைகளின் பல்வேறு வடிவங்கள், ஆன்மாக்களின் பல்வேறு நாட்டங்கள். பல்வேறு இன்பங்களை நாடிச்செல்லும், புறவுலகின் மேம்பட்டு உயர்ந்து செல்லவேண்டும் என்ற ஊக்கத்தோடு அதிகாரம் கேட்பதும், பொருள் கேட்பதும், இவற்றில் உவர்ப்புத் தட்ட பற்பல கலைத்தொழில்களில் ஈடுபட்டு அறிவினைப் பெருக்குவதும், பிறகு இவற்றிலும் உவர்ப்புத் தட்ட மேலான சிவஞானத்தை வேட்பதுமாகவும், மேலும் எல்லா நிலைகளிலும் மரணத்தை வெறுப்பதும் அதனோடு தொடக்குற்ற நோய்கள், கிலேசங்கள், சஞ்சலங்கள், அவதிகள் போன்றவற்றை வெறுப்பதுமாக இவ்விச்சைகள். மேலும் பற்பல காரியங்களை செய்யும்போது அறத்தோடு நிற்கவேண்டும் என்ற முனைப்போடு திகழ்வதுமாக இந்த வேட்கைகள் ஆழிமுப்புக்களின் காரணமாகத் தோன்றி மானுட வாழ்க்கையை உகத்திணை, அகத்திணை, புறத்திணை என்ற வகையில் முத்திறக் கூற்றதாக அமைக்கின்றன.

**நூன் நெறியாவது**, மெய்யறிவாய்வின் முறையியலாகும். இயலிய நூன்னெறி என்பதுவும் இஃதே. அறியாமை அகத்திலே செறிந்திருப்பதின் காரணமாக அறிவினைப் பெறவேண்டும் என்ற வேட்கைகள் எழுகின்றன. அதுபொழுது தற்போதைய செருக்குகளை ஒழித்து கற்பனா சேட்டைகள் வசப்படாது, ஆயப்படும் பொருளொடு ஒன்றித்து அத்துவிதமாக நின்று, அந்தப் பொருள் தன்னை எவ்வாறு வெளிப்படுத்துகின்றதோ அவ்வாறே பிழையின்றி அறியுங்காலே அந்தப் பொருளின் இயல்புகள் அறியவரும். இதுவே இயல்நெறி என்பது. இனி இவ்வாறு நிற்கையில், உள்ளுறை உவமைகளாக, சின்னங்களாக, குறிகளாக பொருட்கள் தோன்ற, அவை குறிப்பாக நின்றுணர்த்தும் பொருளை பிழையின்றி பெயர்த்து தெற்றென அறிவது நூன்னெறியாகும். சொப்பனாவத்தைகள் போன்றவற்றில் வெளிப்படும் உருக்கள் இத்தன்மையன என்பதால், அங்கு ஆடப்படுவது ஓர் குறிப்பு மொழி (symbolic language) என்பதால், இத்தகைய பெயர்ப்புக்கள் தேவை என்பதாயிற்று. கனவுகள் காண்பது வேறு, அவற்றின் பொருளை மெய்ப்பட அறிந்து தெளிவது வேறு. பெயர்த்து, தெளிந்து உணர்த்தப்படுபவற்றை உணர்த்தப்படுவண்ணம் அறிவாக்குவதே நூன்னெறி என்பது. சொப்பனாவத்தைகளின் மேலான அவத்தைகளிலும் இவ்வாறு.

தான் இருக்கின்ற பக்குவத்திற்கு அப்பாலானவை இப்படிப்பட்ட மறைபொருளாகவே வெளிப்படும் என்பதால், இயலிய நூன்னெறி மெய்யறிவாய்விற்கு அடிப்படையானவொன்றாகும். இல்லையேல் பக்குவ முதிர்ச்சி சித்தியாகாது, அறிவு வீண் கற்பனைகளில் மயங்கி சிறைப்பட்டு உண்மைகளைக் காணாதொழியும்.

இனி **பெரும் பொருள்** என்பது ஏன் எனின், தான் அனைத்தையும் உள்ளடக்கி வியட்டியாக்கி, தன்னை பேறு யாரும் உள்ளடக்காது சமட்டியாக நிற்பதாலும், தனக்குத் தானே தலைவனாக எல்லா அதிகாரத்தையும் கொண்டு நிற்பதாலும் என்க.

இனி மானிட றிவு சிற்றறிவு எனினும், யாதாவதோர் வகையில் அறிவிற் படுவதாகலின்

இதனைப் பொருள் என்பதாயிற்று. முற்றிலும் அறிவிற்குப் படாமற் போவது சூன்யமாகலின், அதற்கு மாறாக **இருக்கும் ஒன்று** என்று அறியப்படுதலின், இதுவும் ஓர் பொருள் ஆயிற்று.

அனைவற்றொடும் அத்துவிதமாக நின்று, சலித்து இயக்கி தான் சலியாதும் அவற்றில் தாக்குறாதும் யாண்டும் ஒருபடித்தாய் நீக்கமற நிற்கின்ற இப்பெரும் பொருளே பதி என்பதாம்.

அனைத்தோடும் அத்துவிதமாய் நிற்கின்ற பேற்றின் அகண்டிகனாய், சர்வவியாபியாய், அநந்நியமாய் நின்றறியும் பேற்றின் சர்வக்ஞனாய், அனைத்தையும் சலித்து விளையாடுகின்ற பண்பின் காரணமாக எண்குணத்தனாய், பேராற்றல் உடைமையின் யாண்டும் சத்தியோடு பிரிவற நிற்கின்ற சிவமாய் இப்பதி உணரப்படுகின்றது.

**காண்பர்** என்பதின் கருத்து யாதெனின், பதியாகிய இப்பெரும்பொருள் இயலிய நூநெறி வழி உண்டு என்றும், இற்று என்றும் உணர்தல் மாத்திரையல்லாது கண் கூடாக கண்டு மகிழும் பொருளுமாம் என்று தெளிவு படுத்தலாம். நிதர்சனமாக யாது காணப்படுகின்றதோ அது உண்டென்பதற்கு வேறு தடையில்லை. காணும் அச்செயலே எல்லா வகை ஐயப்பாடுகளையும் போக்கவல்லது.

இங்கு காண்பது எனும் தொழில் பொறிபுலக் காட்சியாகிய வாயிற்காட்சிகளும், அந்த கரணங்களால் மெய்யாகும் மானதக் காட்சிகளும் அல்ல. இவை பசு கரணங்களாக, மறையாக நின்று அனைத்தையும் சலித்து தொழிற்படுத்தும் இறைவனைக் காட்டா. இவற்றிற்கு மேலாக பக்குவ முதிர்ச்சியால் வரும் கடப்புரு காண் திறத்து விஞ்ஞானக் காட்சியாலும் இனி அதற்கு மேலாகிய சிவஞானக் காட்சியாலும் இறை தரிசனம் சித்திக்கும் என்றாயிற்று. இத்தகைய காட்சிகள் சிவகரணங்கள் வழியாக அமைவதாம்.

கடப்புரு காண் திறனாவது, உறக்கக் கனவுகள் விழிக்கனவுகள் போன்ற அவத்தை நிலைகளில் மந்திர யந்திர சொரூபங்கள் எவ்வாறு உலகத்து நிகழ்ச்சிகளை மெய்யாக்குகின்றன என்பதையும், தன்னுள் எவ்வாறு இறைசத்திகள் விளையாடி பல்வேறு பூதிகளை மெய்யாக்குகின்றன என்றும் அறிந்து தெளிவதாம்.

இனி இவ்வாறு கண்டு கண்டு இன்னும் தெளிந்து பக்குவத்தில் முதிர்கின்றான் ஒருவன். இவ்விறையறி வினைப் பெருக்கி உலகத்தைக் காண அனைத்தும் இறைவனது திருவிளையாடலே என்றும், எல்லாம் சிவச் செயலே என்றும் அறிவன். அவ்வறிவோடு இன்னும் செல்ல சுத்தாவத்தைப் பட்டு பரைதரிசனம், பரைபோகம் போன்ற பரஞான நிலைகளை அனுபவித்து பிறகு நாதாந்த நிலை எய்தி பரசிவனைக் கண்ணாரக் கண்டு சிவானந்தம் புசிப்பன் என்பதாம்.

## இரண்டாவது - பசுவுண்மை

இனி இவ்வாறான பதி அல்லது பரசிவம் அமையும்; எங்கெங்கு அறிவு இருக்கின்றதோ அங்கெல்லாம் இப்பரசிவனே வெளிப்பட்டு நிற்கின்றான். கடத்துச் சூரியன் போலவெனின், அதனை மறுத்து இப்பதிக்கு வேறாக அநாதிப் பொருளாக சித்துப் பொருளாக எண்ணிறந்த பசுக்களும் இருக்கின்றன என்பது அடுத்து விளக்கப்படுகின்றது.

சூத்திரம் 2.

*நோக்கி னெழுவது நுதல்வ தனைத்தும்*
*பார்க்கி னங்கு பரனொடு பாசத்தளையின்*
*பலவா றியங்கும் பாழிற் பசு*

என் நுதலிற்றோ வெனின் மேலே தெளிவிக்கப்பட்ட பதிக்கு வேறாக பாசத் தளைகளோடு கூடிய சித்துப்பொருட்களாக, யாண்டும் அழியாது அநாதியே எண்ணிறந்த பசுக்களும் இருக்கின்றன என்பதை தெளிவாக்கல் நுதலிற்று.

**நோக்கின் எழுவது நுதல்வது அனைத்தும்** என்பது, உயிர்களின் வினையு டைமையை விளக்குவது. உயிர் எனப்படு வதனைத்தும் ஒன்றினைக் கருதி அதனை அடைவான் வேண்டி ஒன்றினைச் செய்யும் பண்பின. எல்லாக் காரியங்களும் கருதி செய்யப்படுவது இல்லை. எனினும், செய்யப்படும் பலவற்றுள் கருதிச் செய்யப்படுவன பலவுண்டு. இவையே இதனை வேண்டி இதனைச் செய்கின்றேன் என்ற தெள்ளறிவோடு செய்யப்படுவனவாம். இப்படிப்பட்ட செயல்கட்கு, எதிர்காலத்து தன்னிலையொன்று வேண்டப்படுவதாய் அமைவதாய், அதுவே நோக்கு எனப்பட, அதன் காரணமாக இத்தகைய செயல்கள் என்பதாம். இனி, தான் அறியாத போதும், மறைமுகமாக இத்தகைய நோக்குகள் நின்று உந்த பிற காரியங்களும் செய்யப்படுகின்றன. இவை புத்தி பூர்வமாக செய்யப்படுவதும், அபுத்தி பூர்வமாக

செய்யப்படுவதுமாகும். இத்தகைய நோக்கங்கள் எதிர்காலம் என்ற உணர்வோடு ஒன்றினை வேண்டி நிற்கும் நிலையிற் தோன்றும் குறிப்புக் காலவுணர்வில் (Temporality) உயிர்களை படுத்துகின்றமையின், இத்தகைய செயல்கள் நுதல்வது, ஆன்மாக்களை இன்னும் மெய்யாக பிறிதோர் இருப்பு நிலைக்கு கொண்டு செல்வதாகின்றன.

**பார்க்கின் அங்கு** என்பது உயிர்களின் இத்தகைய இருப்பு நிலைகளை ஆய்ந்து தெளிதல் என்பதாம். உலகத்தில் நின்றிலங்கும் பஞ்சகிருத் தியங்கட்கு மாறாக, உயிர்களின் கிருத்தியங்கள் அமைவதையும், மேலும் இவையும் அந்த பஞ்ச கிருத்தியங்கள் வழியேதான் தோன்றுகின்றன என்பது. உயிர்களின் கிருத்தியங்கள் குறிப்புக் காலவுணர்வோடு, ஆகவே சுட்டறிவுத் திறத்தோடு திகழ்வன. இந்நிலையில் அக்குணங்கள் இல்லா பஞ்சகிருத்தியங்கட்கு வேறாக திகழ்வன.

**பரனொடு பாசத்தளையின் பலவாறியங்கும் பசு** என்பது, உயிர்களின் கிருத்தியங்கட்கும் பஞ்சகிருத்தியங்கட்கும் காலவுணர்வு அடிப்படையில் வேற்றுமை தோன்ற, சுட்டறிவு பட்டவையாய் விளங்கும் உயிர்களின் கிருத்தியங்கள் பல்வேறு பாசத்தளைகளால் கட்டுண்ட பண்பால் எழுவன என்றாயிற்று. பாசத்தளைகள் என்பன இங்கு உலகியல் விருப்பு வெறுப்புகட்கு ஆளாகி, அதன்வழி பல நோக்கங்களைத் தேற்றி அவற்றை அடைவான் பொருட்டு பற்பல செய்தலாகும். பற்றற்ற நிலை தலைப்படாது, பல்வேறு வகையில் பற்று உற்று நின்று, அதன்வழி காலவுணர்வோடு பற்பல செய்யப்படுவதால் பாசத்தளையில் பட்டு பலவாறியங்கும் உயிர் என்பதாயிற்று.

இனி இவ்வாறு இருந்தும் அதன்வழி பொய்யறிவுகளோடு, பொய்யலா மெய்யறிவுகளாகிய, காலவுணர்வுகளோடு வரும் அசத்தறிவுகளை பெற்றும் பலவாறியங்கும் இவ்வுயிர்கள், இத்தகைய அறிவுகட்கு மேலாகிய காலவுணர்வு கழன்று நின்றும், சுட்டு நிலை சுழன்றும், பற்றற நின்றும், பாசத்தளைகள் செற்றும் அறியாதறிகின்ற சத்தறிவும் வல்லன வாதலின், இச்சத்தறிவு பரனது அறிவாகலின், அப்பரனையும் ஒருவாறு உணர்கின்றவையாகத் திகழ்கின்றன. ஆகவே இந்த உயிர்கள் சத்தறிவும், அசத்தறிவும் ஒருங்கே கைவல்ல சதசத்துக்களாக, பரனோடு அத்துவிதமாக நிற்கின்ற பசுக்கள் எனப்படுகின்றன.

ஆகவே உலகத்தில் யாங்கு அறிவின் நிகழ்ச்சி ஆங்கு பரனொடு, அவனுக்கு வேறாகிய பசுவும் உண்டென்பதாம்.

**பாழிற் பசு** வென்பது, இவ்வாறான சத்தறிவும் அசத்தறிவும் அறிகின்ற சதசத்தறிவானது பசுத்துவத்தை நீக்க பசுத்துவமிழந்து தானும் பரசிவனாகி சூன்யமாய் முடியும் எனும் சிவாத்துவிதத்தை மறுத்து, எந்நிலையிலும் பசுவென்பது, பதிக்கு வேறாகி நிற்பதாய் என்று அழியாத நித்தியப் பொருளாய் இருக்கும் என்பதாம்.

பசுத்துவம் நீங்க சிவத்துவம் எய்தி சத்தறிவே தன்னறிவாய் நிற்கும் ஆன்மா, பதியாகிய பரசிவன் தானாகாது, அவன் அருளாலேயே அந்த சிவத்துவப் பேற்றை பெறுவதோடு அல்லாது அனுபவித்தும் நிற்கும் என்றவாறு.

சத்தறிவே தானாகும் ஆன்மாவிற்கு உண்டாகும் சிவானந்த புசிப்பே, முத்தான்மாவாகிய நிலையிலும் பொருள் நிலையில் தான் பதிக்கு வேறதாய் நிற்பதைக் காட்டுகின்றது. சச்சிதானந்த சொரூபியாகிய இறைவனுக்கு புசிப்பின்கண் எழும் ஆனந்தம் இல்லாதவொன்று. சிவானந்தப் பேறு, ஓர் புசிப்பின் வழி எழுவது என்பதால், முத்தி நிலையில் அதனை புசிப்பது ஆன்மாவே என, முத்தி நிலையிலும் ஆன்மா பதிக்கு வேறதாய் இருப்பு நிலை கொண்டு இருக்கின்றதென்று அறிக.

இனி, இது அத்துவிதக் கொள்கைக்கு முரண்பாடு எனின், அல்லை! இங்கு கூறப்படுவது பொருளத்துவிதமல்ல, அறிவத்துமிதமென்க. அனைத்தையும் ஒரே பொருளினின்று எடுப்பதும் பிறகு அதனில் ஒடுக்குவதும், அல்லது ஒரே பொருளின் பல்வேறு மயக்கு காட்சிகளை உலகு என்பதுவும், இவை போன்ற பிறவும் பொருளத்து விதமாகும். இவற்றிற்கு மாறாக இருவேறு அறிவுகள், தத்தம் தனித்துவம் மறவாது ஆனால் அறிவினில் வேறுபடாது ஒருமையுணர்வோடு முற்றிலும் ஒத்து நிற்கும் நிலையே அறிவத்துவிதம் என்பதாயிற்று.

அசத்தறிவு சத்தறிவு என அல்லற்படும் சதசத்தான்மா, முத்தி நிலையில் பசுத்துவம் கழன்று அசத்தறிவுகள் பிரகாசியா நிலை எய்தி சத்தறிவே, சிவஞானமே, தன் ஞானமாய் நிற்கின்றபோது, சிவஞானமே தன் வடிவாக நிற்கும் பரசிவனோடு அறிவினில் வேறுபடாது ஒன்றாகி முற்றிலும் ஒத்துப்போய் நிற்கும். இவ்வாறு முற்றிலும் ஒத்துநிற்றலே, ஒருமையுடன் இறைவனது திருவடிகளை அனுபவிக்கின்ற பேறாம். இஃது பொருள் வகையில்

இருமையாலும், அறிவு வகையில் ஒருமையாலும் வருகின்ற பேறு என்பதால், பாழிற் பசு என்றாயிற்று.

மூன்றாவது - பாசவுண்மை

இனி பதியுண்டு, எண்ணிறந்த சித்துக்களாகிய பசுக்களும் உண்டு. ஆனால் இப்பதியே ஈசுவரனாக நின்று சித்துமாய் அசித்துமாய் ஆகி, அசித்தாகிய பாசவுலகினை தன்னிடமிருந்து வெளிப்படுத்தி அருளுவன் என்பதால், பாசம் என்றவோர் அனாதிப்பொருள் இல்லை என்பாரை மறுத்தற்கு எழுந்தது அடுத்து வரும் சூத்திரம். இதன் வழி பதியினைப் போலும், எண்ணிறந்த பசுக்களைப் போலும் பாசமும் அநாதி என்பதாயிற்று.

சூத்திரம் 3.

*சுட்டறிவி னான்மா சுட்டறி பெற்றிமை*
*உற்றிடல் பரனினெதிரா உயிரோ டனாதியே*
*நிற்றிடல் நீக்கரு பண்பின் பாசம்*

என் நுதலிற்றோவெனின், சர்வ வியாபியாய் எங்கும் பிரகாசித்து அனைத்தினோடும் அநந்நியமாய் நின்று சுட்டறிவு இறந்து நின்று சத்தறிவே தன் அறிவாய் நிற்கக் கூடிய, சிவஞானமே தன் ஞானமாய் நிற்கக்கூடிய வல்லமை உடைய ஆன்மா, சுட்டறிவின் வழியே அறிந்து அல்லற் பெற்றித்தாய் இருப்பதற்கு காரணம் பதியினைப் போலும், பசுக்களைப் போலும் அநாதியே நிற்கின்ற பாசங்கள் என்பதை உணர்த்துதல் நுதலிற்று.

**சுட்டறிவின் ஆன்மா என்பது** இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்றவாறு சுட்டுக்காலம் வழியும் குறிப்புக்காலம் வழியும் உலகியல் நிகழ்ச்சிகளை மரபுவழிப்பட்டதாக பாரம்பரிய ஒட்டத்தில் பட்டதாக அறிதலும், மேலும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பன போன்ற திசைகள் வழியும் அது, இது, உதுவென வரும் சுட்டுக்கள் வழியும் அவற்றைத் தெளிதலும் வல்லதாகிய ஆன்மாவை சுட்டறிவின் ஆன்மா என்றது. இஃது ஆன்மா சிற்றறிவினனாகிய கிஞ்சிக்ஞன் என்பதனையும், ஓர் கட்டிமைக்குள் விளங்கும் அறிவோடு கூடியவொன்று என்றும் உணர்த்துகின்றது.

**சுட்டறி பெற்றிமை என்பது** சர்வ வியாபியாய் நின்று அனைத்தையும் அதுவிது அங்கு இங்குவென சுட்டறியாது, அதுவே தானாய் அநந்நியமாய் நின்று அறிவதற்கு மாறாக காலவுணர்வோடும் இடவுணர்வோடும் அனைத்தையும் அறிகின்ற திறன் என்றவாறு. இப்பெற்றிமையின் வழி பெறப்படுகின்ற மெய்யறிவுகள் அசத்தறிவுகளாம் – கட்டிமையோடு தோன்றி பிறகு இல்லாதுபோய் கட்டற்ற சத்தறிவினில் மறைந்து விடுவதாம்.

**இதனை உற்றிடல் என்பது** அத்திறத்தோடே சாதாரணமாக வாழ்வதும், அறிவதும், அனுபவிப்பதும் ஆகும். மேலும் ஆன்மாக்களின் சொரூபம் சத்தறிவோடு சர்வ வியாபியாய் இறைவனோடு முற்றிலும் ஒன்றித்து ஒத்துப்போய் நிற்பதென, அதற்கு விரோதமாக இச்சுட்டறிபெற்றிமை வந்திருப்பதால் உற்றிடல் எனப்பட்டது. படவே இது அநாதி செயற்கை என்றாயிற்று. ஆகவே நீக்க வல்லது என்றும் உணர்த்தப்பட்டவாறு, இருக்கின்ற நிலை இஃதெனினும் முடிவான நிலை, இன்னும் புதையுண்டு வெளிப்படாது மறையாக நிற்கின்ற அந்த மோனமொழியின் முத்திநிலையே என்பதாலும் இவ்வாறு.

**பரனின் எதிரா என்பது** பரனோடு தொடக்குற்று ஆன்மா பரனோடேயே ஒன்றித்து நிற்குமெனின் அது சத்தறிவே தன் அறிவாய், அசத்தறிவு யாதும் பிரகாசியா சிவஞானத்தோடே நிற்கும். சிவஞானமே உடம்பாக நிற்கின்ற ஞானமயனாகிய பதியொடு தொடக்குற்று நிற்கும் போதெல்லாம், சுட்டறிவாகிய அசத்தறிவு பகலைக் கண்ட இரவைப்போல பிரகாசியாது ஒடுங்கும். இதனால் ஆன்மாக்களின் சுட்டறிவு பெற்றிமைக்குக் காரணம் பதியாகிய இறைவன் ஆகான் என, அந்த சிவப்பிரகாசத்திற்கு எதிராக இருக்கின்ற வேறு பலவே காரணமாக இருக்க முடியும். அது ஆன்மாவுடன் சகசமாய்க் கிடக்க, அதன்வழி அகட்டறிவாகிய சத்தறிவினை வேண்டும் ஒன்றாக, அதே பொழுது சுட்டறிவுகளாக பற்பல சுட்டறிவுகளையே தன்னறிவாக மகிழும் பெற்றிமை ஆன்மாக்களுக்கு மெய்யாகின்றது என்பதாம்.

இதனால் பரனின் எதிரா ஆன்மாக்களை சுட்டறிவு பெற்றிமை பால் வீழ்த்தும் ஒன்று பரனின் வேறாய் பசுக்களின் வேறாய் உண்டு என்பதைப் பெற்றாம்.

**உயிரோடு அநாதியே** என்பது இந்த சிவஞானப் பகைப் பொருள், சிவஞானப் பரஞ்சுடராகிய பரசிவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல என்றவாறும், செம்பிற் களிம்பென பசுக்களோடு இயல்பாகவே கலந்து நிற்கும் ஒன்று என்றும் விளக்கப்பட்டவாறு ஞானமயனாகிய இறைவன் ஞானப்பகையாகிய ஒன்றை தோற்றுவியான். மேலுங் கருணையே வடிவாகிய இறைவன் எல்லா வேதனைகட்கும், இடர்கட்கும், இடுக்கண்கட்கும்

காரணமாகிய இப்பகைப்பொருளை பசுக்களோடு நின்று நிலவுமாறு செய்யவுமாட்டான். ஆகவே யாராலும் உண்டாக்கப்படாது அநாதியே நிற்கும் இந்த ஞானப்பகை, சகசமாகவே பசுக்களோடு கிடந்து அவை சுட்டறி பெற்றிமையோடு திகழுமாறு செய்கின்றன என்பதாம்.

**நிற்றிடல்** என்பது எளிதாக ஒதுக்க முடியாது பலவாறு முயன்றும் தொடர்ந்து பற்றிக்கொண்டே இருப்பதாக, எண்ணிறந்த பிறவிகள் எடுப்பதற்குக் காரணமாகி சன்னஞ்சன்னமாக படிப்படியாகவே விடுதற் பண்பினதாக திகழ்கின்ற இயல்பிற்றாம் என்றவாறு. பிராந்தி ஞானத்திற்கு பட்டான் ஒருவன் அந்த பிரமை நீங்கி தெளிவறிவு அடைகின்றான். அப்படிப்பட்ட பிரமை இதுவல்ல என்றலுமாயிற்று. பல்வேறு இன்னல்கட்கும் இடர்கட்கும், வேதனைகட்கும், கிலேசங்கட்கும், கலக்கங்கட்கும், சஞ்சலங்கட்கும் காரணமாகி அரிய பெரிய தவங்களைச் செய்தே சுத்தமாகுதல் சாலுமென்பதால், ஞானப்பகையாகிய இஃது மிக மிக வல்லிதாய் ஆன்மாக்களை பற்றிக்கொண்டு நிற்கின்றது என்பதாம். மேலும் கழற்றிய பிறகும் சூன்யமாகாது மறையாக தொடர்ந்து அழியாதே ஆங்கு நிலவுவதால் நிற்றிடல் என்றாயிற்று.

**நீக்கரு பண்பின்** பாசம் என்பது, இப்பகைப் பொருள் பற்றி நிற்கும் பண்பின் வெளிப்பாடுகளாகிய பாசங்கட்கு மூலகாரணமாக நிற்கும் என்பது. அற்ப பாசநேசங்கட்கு காரணமாக இருப்பதால், ஆகுபெயரால் அவற்றை தோற்றுவிக்கும் மூலப்பொருளும் பாசம் எனப் பட்டது.

பற்றுக்கள் பலவில்லவெனின் சுட்டறிவுகளும் இல்லையாம். ஞானத்திரோதமாக, அகத்திருளைத் தருவதாக, மயக்கவறிவுகட்கு ஏதுவாக இது இருப்பதின் காரணமாகவே நோக்கங்கள் தேற்றப்பட்டு சுட்டறிவின் காரணமாக தற்போது முனைப்போடு கூடிய செயல்கள் பிறக்கின்றன. இவ்வாறான பற்றுக்கள் தோன்றுதற்கும், அதன் வழி பல பாச நேசங்கள் தோன்றுதற்கும், காரணமான மெய்ப்பொருளாக இருப்பதால் பாசம் எனப்பட்டது.

இனி இதனை நீக்கரு பண்பினது என்பது, இறையருட் துணையொடு மேலான சிவஞானம் அடைந்தாலன்றி இதனின்று விடுபட முடியாததாகும் என்பதால் என்க. ஞானப்பகையாக நின்று, பற்றுநிலை பட வைக்கும் இதனை, சிவஞானப் பெருந்தெளிவே போக்கவல்லது என்பதை சுட்டும் பொருட்டு என்க. சுட்டறியப்படுவனவெல்லாம் காலவுணர்வு திசைவுணர்வு ஆகியவற்றோடு வரும் சுட்டறிவுகளாகிய அசத்தறிவுகளாம். இத்தகைய அசத்தறிவுகளை எவ்வளவு பெற்றாலும் சுட்டறி பெற்றிமையை நீக்காது என்பதால் இந்தப் பாசத்தையும் நீக்காது என்பதாம். சுட்டறிவு பெற்றிமையை இல்லாது போக்கும் சிவஞானமே இந்த கழற்சியை மெய்யாக்கும் பிறவல்ல என்பதால் பாசத்தினை நீக்கரு பண்ணினது என்றாயிற்று. அரியதாகிலும் நீக்கப்படும் கழற்றிடப்படும் என்றும் குறிப்பதாம்.

இம்மூன்றுசூத்திரங்கள் வழி அநாதி பொருட்களாக பதி, பசு, பாசம் என்பவை நிறுத்தப்பட்டுள்ளன. சித்துப் பொருட்களாக பதியும் பசுக்களும் இருக்க, அசித்துப் பொருளாக பாசம் இருக்கின்றது. பசுக்கள் பாசத்தளையில் கட்டுண்டவையாக பதி அனைத்தோடு ஒன்றித்து அத்துவிதமாக நிற்கும். அதேபொழுது, அவற்றால் பந்திக்கப்படாது வேறாக நின்று, தன் அளப்பரிய பெருங்கருணையின் காரணமாக ஐந்தொழில்கள் இயற்றி அனைத்தையும் சலித்து, பசுக்கள் இந்த பாசத்தளைகளின் கட்டிலிருந்து கழன்று தன்னோடு ஒத்து நின்று உய்ய உதவுகின்றன என்றும் பெறப்பட்டது.

# நமச்சிவாய வாஅழ்க

பண்டிதர் மு.கந்தையா
ஏழாலை, இலங்கை

'தத்துவமசி', 'அஹம்ப்ரமாஸ்மி' என வேதாந்தத்தில் மஹா வாக்கியங்கள் பிரசித்தி பெற்றிருப்பது போலப் பிரசித்தி பெற்றுள்ள சித்தாந்த மஹா வாக்கியம் 'நமச்சி வாய வாஅழ்க'. சைவசித்தாந்தப் பொருட்பரப்பெல்லாம் தன்னுள்ளடங்கச் செறித்துக் கொண்டிருக்கும் 'நமச்சிவாய' மந்திரத்தை எடுத்தவாக்கில் இங்ஙனம் வாழ்த்தும் முறையானே தோத்திர நூல்களுள் தனக்காம் தனித்துவத்தைத் தோற்றி நிற்கின்றது திருவாசகம்.

பொதுவில் வாழ்த்துக்கள் எல்லாம் போற்றுதல் பொருளாக அமைந்தவை. 'ஆறிரு தடந்தோள் வாழ்க', 'அறுமுகம் வாழ்க' 'சேவலும் மயிலும் வாழ்க' 'வாழ்க அந்தணர் வானவரானினம்' போல்வன அத்தகையனவாம். அஃதாக, இத்திருவாசக வாழ்த்தானது, போற்றுதல் மாத்திரமன்றிப் பொருளியல்புரைத்தலுந் தன் பண்பாகக் கொண்டிருத்தல் விசேடமாகக் கருதத்தகும்.

சைவ சித்தாந்த அடிப்படை உட்பொருள்களான பதி, பசு, பாசம் எனும் மூன்றும் முப்பொருள் எனப்படுதல் பிரசித்தம். அவற்றுள் பதி என்பது போக மோக்ஷங்களைக் கொடுத்து ஆன்மாக்களை இரட்சிக்கும் பேரறிவுப் பெரும்பொருள். பசுவென்பது அப்பெரும் பொருளின் ஆற்றலினால் வினைப் போகங்களிற் செலுத்தப்பட்டு வந்து வினைப்பற்றொழியுங்காலத்து அதனாற்றலினாலேயே சிவனை அடையப்பெற்றுப் பரமானந்தமுறுதற்காம் பொருள். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மூவகையினதாய் ஆன்மாவை ஒட்டியிருத்தல் மூலம் ஆன்மாவின் போகாநுபவத்துக்குக் காரணமாம் பொருள்.

இறைவனாகிய பதி உயிரின் பொருட்டாக எது செய்யினும் சக்தியாகிய தன் ஆற்றலினாலன்றிச் செய்வதில்லை என்பது நியமம். அதற்கிணங்க இறைவன் சக்தியானது ஆன்மாக்களுக்குப் போகமூட்டும் நிலையில் திரோதான சக்தி எனவும், மேல் சிவாநுபவமூட்டி மோட்சமடைவிக்கும் நிலையிற் பராசக்தி எனவும் பெயர்பெறும். இவ்வாற்றால் மேற்குறித்த முப்பொருளும் ஐம்பொருளாம் வகை நேர்கிறது..

நமச்சிவாய மந்திரத்தில் அடங்கும் இவ்வைம் பொருளும் அதிலுள்ள ஐந்தெழுத்துக் களினாலும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொன்று என்ற கிரமத்தில் உணர்த்தப் படலாம் பாங்கு சிவாகமங்களாற் கண்டு காட்டப்பட்டுள்ளது. அக்கிரமத்தில் அவற்றின் விபாகம் பின்வருமாறு அமையும்.

*ந – திரோதான சக்தி*
*ம – பாசம் (ஆணவம், கன்மம், மாயை)*
*சி – சிவம்*
*வா – திருவருட்சக்தி*
*ய – ஆன்மா*

இங்கு இறைவனின் ஒரே சக்தியே திரோதான சக்தியும் பராசக்தியுமென இருவிதமாய் நிற்றல் பற்றிய விபரம் முதற்கண் அறிதல் தகும். திரோதானம் என்றசொல், சொல்வழிப் பொருளமைதிப்படி மறைதல், மறைத்தல் என்ற இருபொருளுந் தரும். இறைவன் சக்தி ஆன்மாவுக்கு வினைப்போகம் ஊட்டும் நிலையில், தன்னியல்பு அதற்குத் தோன்றாவண்ணம் தான் மறைந்துகொண்டிருக்கும். அதேவேளை வினைப் போகம் நுகரும் ஆன்மாவுக்கு அதன் முன்பின் அநுபவச் சார்புகள் தோன்றாமல் மறைத்துக் கொண்டும் இருக்கும். இதற்காம் விளக்கம் வருமாறு:-

ஆன்மா அநுபவித்தற்காம் போகங்கள் சுகபோகமான இன்பம் என்றும், துக்க துயரமயமான துன்பம் என்றும் இருவகை. அவ்விருவகைப் போகங்களாகவும் ஒரு ஆன்மாவின் பேரில் இருக்கக்கூடியவை ஏராளம். முழுப் போகங்களும் ஒழிந்தாலல்லது ஆன்மா சிவாநுபவப்பேறான மீட்சிக்குரியதாகாது. இதற்குரிய காலத்தில் இறைவன் சக்தி ஆன்மாவுக்குத் தரிசனமாகுமேல் ஆன்மாவின் போகாநுபவத்திற் குழப்பம் நேர்ந்து

அதன் மீட்சிக்குக் குந்தகமாகும். தன் பாடத்தைப் படித்து முடிக்கும் முகாந்தரத்தில் இருக்கும் குழந்தைக்கு, இடையிலே அம்மா தரிசனப் பட்டால் படிப்பிற் குழப்பம் நேர்தல் தவிர்க்க முடியாததாய் விடும். இந்த உதாரணத்திற்சார்த்தி அதனை ஒருவாறு விளங்கிக்கொள்ளமுடியும். அத்துடன் அந்நிலையிற் சக்தி தன்னைத் தோற்றினாற்கூட ஆன்மாவுக்கு அதனைக் காணுந் தகுதியில்லை என்பதும் ஒன்று.

இனி மறைத்து வைத்து அநுபவ மூட்டுதல் என்பதும் தாய் பிள்ளைக்கு மறைத்து வைத்து முலையூட்டுதல் என்ற உதாரணத்திற் சார்த்தி ஒருவாறு விளங்கப்படுதல் கூடும். தாய் அவ்வாறு செய்வது, சூழ்நிலைக் கவர்ச்சிகளாற் குழந்தையின் கவனம் சிதறுண்ணாது சிரத்தையுடன் முலை சுவைக்க வைக்குங் கருணையினால். இறைவன் சக்தி ஆன்மாவுக்கு மறைத்து வைத்து வினைப்போக மூட்டுவதும் இத்தகையதே. இதைச் சற்று விரிவாய்ப் பார்க்க வேண்டும்.

ஆன்மாவுக்கு வினையநுபவங்கள், இன்பம் துன்பம், கௌரவம் அகௌரவம், ருசி அருசி (அருவருப்பு), சுசி அசுசி என்ற இரட்டையியல்புகள் கொண்டதாயிருப்பதும் பெரும்பாலும், இவ்விரட்டைகள் தம்முள் ஒன்றுமாறி யொன்று அநுபவத்துக்கு வருதலுங் கண்கூடு. ஒரு பெரிய இன்பாநுபவத்தில் ஆன்மா ஈடுபட்டிருக்கையில், அதற்கு அடுத்துவர இருக்கும் துன்பாநுபவத் தோற்றந் தென்படுமேல், அதற்கு அவ்வின்பாநுபவத்தில் அமைதி பிறக்காது. அதனால் அவ்வநுபவம் முற்றாதொழியும். இது போன்றே இதன் மறுதலையுமாம். இந்நிலையில், அப்பாலிப்பாற் காட்சிகளால் இடையீடுபடுத்தப்படாமல் கன்மமொன்றில் ஆன்மா முழுமையான அநுபவம் பெற வைத்தற்கு ஏற்ற உபாயமொன்றின் தேவை உளதாகின்றது. அவ்வகையில், பின்வர இருப்பதனைத் தோன்றாமல் மறைத்தலும், முன்பட்ட அநுபவத்தை உடனுக்குடன் மறப்பித்தலுமாகிய உபாயம் சக்தியினாற் கடைப் பிடிக்கப்படுகின்றது. இம்மறைத்தலில் இன்னு மோரம்சமுளது. அது பின்வருமாறு. சிலர் சிலபோது ஈடுபடும் கன்மாநுபவங்களை நோக்க மற்றவர்க்கு உவாந்திக்கின்றது. ஆனால் சம்பந்தப்படும் அவருக்கோ அதில் சுவாரஸ்யமான ஈடுபாடும் ஆத்ம திருப்தியும் உற்சாகமும் சிலபோது தற்பெருமை கூட நிலவக் காண்கிறோம். சம்பந்தப்படும் அவருணர்வுக்கு அவ்விழிதர அம்சங்கள் மறைக்கப்பட்டாகின்றன என்பதே இதன் அர்த்தமாகும். மேலும், ஒவ்வோரான்மாவுக்கும் அதனதன் வினைப்போகங்கள் அதனதன் புத்தி தத்துவம் பற்றுக் கோடாகவேயிருப்பவை. இருந்தும் தனக்கு அடுத்து நிகழப்போவதை ஒருவனுந்தான் அறியமுடியாதிருப்பதன் அந்தரங்கம் இச்சக்தியின் மறைப்பிலே தங்கியிருத்தலும் இங்கு அறியத்தகும்.

இவ்வாறான இருதிற மறைப்புகளின் சார்பில் அறியவருவது யாதெனில், ஒவ்வோரான் மாவுக்குமுள்ள ஒவ்வோர் வினைப்போகமும் எத்தந்திரோபாயத்தினாலாவது சம்பூர்ணமாக அநுபவித்தொழிக்கப் படக் காண்டல், இறைசக்தியின் புனித தர்மக்கடமை என்பதாம். இது சைவ சித்தாந்தத்தில் மட்டுமே காணப்படக் கூடிய மெய்யியல் விளக்க உண்மையாகும். ***பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை*** என்ற திருவெம்பாவை வாசகம் போற்றுஞ் சக்தியிலக்கணம் இதுவேயாம். பேதித்தல் – வேறுபடுத்தல், விளங்கியிருத்தலே தன்னியல்பான இறை சக்தி தானே தன்னை மறைத்துத் திரோதானமாதல் ஒருவித பேதிப்பும் வினையூட்டும் முகாந்தரத்தில் உயிருணர்வில் மறைப்புகளை விளைத்தல் மற்றொருவித பேதிப்பும், என்ற இரண்டும் இதிலடங்கும். ஆன்மாவின் கன்மாநுபவ ஒழிவு மட்டும் இருப்பது இந்நிலை. மேல் உபகரிக்க உள்ள பராசக்தியின் நிலை இதற்கு நேர்மாறாம். அதற்கு வெளிப்பு நிலையேயன்றி மறையுமியல்போ மறைக்குமியல்போ இல்லையாகும். பௌஷ்கரம், பாரமேச்வரம் போன்ற ஆகமங்கள் இவை பற்றி இவ்வாறே கூறும்.

மேற்கண்ட ஒழுங்குக்கியையத் திரோதான சக்தியைக் குறிக்கும் **'ந' வும்** பாசத்தைக் குறிக்கும் **'ம' வும்** நமச்சிவாய மந்திரத்தின் முற்பகுதியில் அமைகின்றன. இது ஆன்மா, திரோதான சக்தி மூலம் பாச அநுபவமான வினைப் போகங்களிற் செலுத்தப் படுதலை உணர்த்துங் குறிப்பாம். **'வா'வும் 'ய'வும்** அம்மந்திரத்தின் பிற்பகுதியாய் அமை கின்றன. அது, திருவருட் சக்தியால் ஆன்மா சிவாநுபவத்திற் செலுத்தப்படுங் குறிப்பாம். ஆன்ம வரலாற்றில் முன்நிகழ வேண்டுவதும் பின்நிகழ உள்ளதும் என்ற நோக்கில் இவை இவ்வாறமை கின்றன. சைவ சித்தாந்த பரிபாஷையில் இம்முன்னது 'பந்தம்' எனவும் பின்னது மோக்ஷம் எனவும் பெயர்பெறும்.

இனி, இப்பந்தமாயினுஞ் சரி, மோக்ஷமாயினுஞ் சரி இறைவனான சிவனாலேயே ஆகற் பாலதாம். அத் தொடர்களில் முன்னைய 'நம' வுக்கும்

பின்னைய 'வாய' வுக்கும் இடையில் சிவனைக் குறிப்பதாய 'சி' அமைகிறது. இதனால், 'நடுவுநிற்பான்' என்பது சிவனுக்கு விசேட இலக்கணமாயிற்றாம். 'நன்றுயிர்ப்பானே நடுவுநின்றானே' என்னும் திருமூலர், ஆன்மாவுக்கு நன்மை (நன்று) உயிர்க்கும் (தளிர்க்கும்) பொருட்டுச் சிவன் **'நடுவுநின்றான்'** என்று சிவனது நடுவுநிற்றற் காரணமும் உடன் தோன்றவே கூறியுள்ளார்.

சிவனது நடுவுநிலை, உலகம் வேண்டுஞ் சகலவித நடுவுநிலை உண்மைகளுக்கும் உரைகல் போல்வது. பக்கஞ்சாராது வெறுமனே நடுக்கொள்ள நிற்றல் மட்டில் அமையாது நடுவுநிலை, பக்கச் சார்பற்ற நிர்ணய வலுவினால் வேண்டியவருக்கு வேண்டிய நன்மை விளையவும் உதவ வேண்டியது நடுவுநிலை. அந்த உண்மை சிவனது நடுவுநிற்றலிற் செவ்வையாய் அமையும். சிவன், ஆர்தான் எவ்வளவுதான் அழுது கரைந்தாலும் பந்த மொழியாதவர்க்கு மோட்சங் கொடார். உண்மையிற் பந்தமொழிந்தவரை மீளவும் பந்தத்திலமுத்த எத்தனை சூழ்ச்சிகள் எழினும் விடவே விடார். அனைத்து இடையூற்றுக்குந்தான் இடையூறாய் நின்று காரியம் நிறைவேற்றியே தீர்வார். அது அவர் சர்வாதிக்கத்தனமோ எனில் அன்று. உயிர்க்கு நன்றுயிர்த்தல், நன்மை விளைத்தல் என்ற உயர் அறம் பற்றியதே அவர் நிலை.

இங்ஙனம் ஆத்ம ரஞ்சகமான இத்தனை விளக்கமுந் தன்னிடத்தில் அமையுமாறு தன் எழுத்துக்களில் ஒவ்வொன்றாற் சைவசித்தாந்த விழுமியங்களில் ஒவ்வொன்றை உட்கொண்டு நிற்கின்றது நமச்சிவாய மந்திரம். இவ்வரிய மந்திரப் பொருண்மை அடியாருள்ளங்களில் நிரந்தர நினைவாயிருக்க வேண்டியது. அது வாழ்க என்பதே நமச்சிவாய வாஅழ்க என்பதன் தாற்பரியப் பொருளாம்.

திருவாசக அநுபூதி உரைகாரர் எனப் பிரசித்தி பெற்ற காழித் தாண்டவராய சுவாமிகள் இத்தொடர்க்கு விளக்கமாகத் தந்திருப்பது இங்கு கவனிக்கத்தகும். ***ஐவகைப் பொருளாகிய தேவரீர் அடியேனிடத்து அபேதமாகத் தானாய் நிற்கும் முறை பிரியாதிருக்க அருள்'*** க என்பது அது.

இனி, நமச்சிவாய மந்திரத்தின் எழுத்தமைதி சார்பில், ஐந்து பொருளுண்மை குறிக்க ஐந்து எழுத்துக்கள் தானே வேண்டற்பாலன. இதில் 'ச்' என ஒரெழுத்துக் கூடுதலாக வருவதென்னையோ? தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலிய சகல சைவ தோத்திரங்களிலும் இவ்வாறேயிருப்பதால் அது, செய்யுளோசைக்காக 'ச்' மிகுந்ததாயிருக்கலாமோ என ஆசங்கிப்பாருமுளர். அது அவ்வாறல்ல என்பது பின்வருமாற்றான் விளங்கும்.

'நமச்சிவாய' என்பது மந்திர மொழி. மந்திர மெல்லாம் தன்னியல்பான நாதவடிவில், ரிஷிகளாற் கேட்கப்பெற்று அவர்களால் உலகறிய வருபவை. அவற்றைக் காண்பிடம் வேதம், சிவாகமம் என்னும் ஈரிடமே தான். மெய்ஞ்ஞானிகளின் அருளிச் செயல்களிலும் அவை இடம் பெறும். நமச்சிவாய மந்திரத்தின் நிலையுமிதுவே. இம்மந்திரங் காணப்படும் ஆதிப்பழநூல் யசுர்வேதம். அதிலுள்ள 'ருத்ரப்ரஶ்ன' பாகத்தில் வரும் மந்திரங்கள் முந்நூறில் 252 ஆவது மந்திரமாக இடம்பெற்றுள்ளது இது. அங்கு,

*"நம : சங்கராய ச மயஸ்கராய ச*
*நம : சிவாய ச சிவகாயச"*

என்ற தொடரில் இது அமைகிறது. இதில் நம என்பதனோ டொட்டி(:) என ஒரு குறியீடிருத்தல் கவனிக்கத் தகும். சமஸ்கிருதத்திற் பெயர் வழக்குக்கு இன்றியமையாத ஒருவித ஒலிக்குறியீடு அது. 'ஹ' (Ha) என்ற ஒலியைப்பட்டதுபடாமல் மெத்தெனவாக ஒலிக்கும் அளவினது அவ்வொலி. (இக்குறியீடு விசர்க்கம் எனப் பெயர் பெறுவது) சமஸ்கிருதத்திற் பெரும்பாலான சொற்களுக்கு அவ்வொலி சேராவிடத்து அர்த்தம் கொள்ளப் படுவதில்லை. வெறுமனே ராம என்றால் ஒரு ஆளைக் குறிக்கும் அர்த்தம் அதற்கில்லை. **ராம :** என்றால் மட்டுமே ஆண் ஒருவரை உணர்த்தும் அர்த்தம் அதற்காகும். அதுபோல் வெறுமனே 'நம' என்றால் அர்த்தமில்லை. **நம :** என்றால் மட்டுமே வணக்கம் என்ற அர்த்தம் உளதாம். இத்தேவை பற்றியே விசர்க்கமெனப்படும் அவ்வொலிக் குறியீடு, நமவுடன் சேர்ந்திருத்தலை முதலில் அறிதல் தகும்.

இனி, அவ்விசர்க்கத்தோடுள்ள ஒரு சொல் முன்மொழியாயிருக்கப் பின் மொழியாகவருவது, 'ஶ' என்ற எழுத்தில் அல்லது 'ச' என்ற எழுத்தில் தொடங்குமாயின் அவ்விடத்தில் அவ்விசர்க்க ஒலி '**ஶ்**' ஒலியாக மாறும் என்பது சமஸ்கிருதப் புணர்ச்சி

இலக்கண விதியாம். அதற்கிணங்க நம :ஶிவாய என்ற இருசொற் சேர்க்கையில் நமஶ் ஶிவாய என்ற வடிவம் நேரும். ஸ்ரீருத்ரத்தில் நம : ஶி வாய என உள்ளது எழுத்துருவில் அப்படியிருக்கிறதே தவிர உச்சரிப்பில் நமஶ் ஶிவாய என்றே அமையும். எழுத்துருவிற் கூட அப்படியேயமைந்த இடங்களும் பலவுள. பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம் என்ற பிரகரணத்திற் சுலோகந்தோறும் 'நமஶ் ஶிவாய' என்றேயிருத்தல் காணலாம். சமஸ்கிருத இலக்கணமான பாணினி வியாகரணத்தில் மட்டுமல்ல அதைத் தழுவி 'மக்டொனால்ட்' 'விற்னி' முதலியோர் எழுதிய ஆங்கில நூல்களிற் கூட, குறித்த எழுத்து மாற்றத்திற்கு ஆதாரவிதிகள் உள்ளன.

இத்தன்மைகளோடு சமஸ்கிருதத்திற் பஞ்சாக்ஷரம் என உள்ள இந்த மந்திரமே தமிழில் ஐந்தெழுத்தென ஏற்று வழங்கப்படுவதாகும். சைவ சித்தாந்தத்துக்குத் தமிழ், சமஸ்கிருதம் இரண்டும் ஒத்த உரிமையன. இருமொழியிலுஞ் சைவசித்தாந்த நூல்கள் எழுந்துள்ளன. பாரத நாட்டில், தமிழ் வழங்காப் பகுதிகளிற் காலாகாலமாகச் சமஸ்கிருதமே சைவசித்தாந்த போதனாமொழியாயிருந்து உதவுகின்றது. சைவத்திலுஞ் சைவசித்தாந்தத்திலும் ஆட்சி பெற்றிருக்கும் மந்திரங்கள் பரிபாஷைச் சொற்கள் பலவற்றைத் தரும் சிவாகமங்களுஞ் சமஸ்கிருத நூல்களே.

மிகப் பிற்காலத் தெழுந்த இனவாத மொழிவாதத் தோற்றங்களுக்கு முன்பெல்லாம், குறித்த இரு மொழிகளும் ஓரினத்தார் மொழிகள் என்ற பாங்கில் தழுவப்பெற்றிருந்தமைக்காதாரங்களு பல. சமஸ்கிருதம், தமிழ் என்ற மொழி வேறுபாடு இனவேறுபாட்டைப் பொறுத்ததன்று, புத்திவிருத்தியில் அமையுந் தள வேறுபாட்டைப் பொறுத்தது; அதிலுள்ள 'ஆரியத்துவம்' என்ற தளத்தில் தோன்றுவது சமஸ்கிருதம். அருள் நோக்கு என்ற தளத்தில் தோன்றுவது தமிழ் எனச் சமீப காலத்தில் தோன்றிய யாழ்ப்பாணப் படைப்பாகிய கைலாசபதி ஸ்மிருதி தெரிவிக்கும்.

ஆகவே, சமஸ்கிருத பஞ்சாக்ஷரம், தமிழ் ஐந்தெழுத்து என்ற பேத வழக்கிற்கிடமில்லை. இரண்டும் ஒன்றே. கால கணியத்தின் படி முன்னைய தான யசுர் வேதத்து ருத்ரப்ப்ரச்னத்தில் சமஸ்கிருதத்திலிருக்கும் நமஶ்ஶிவாய மந்திரம் தமிழில் தழுவப்படுகையில் தமிழ்க்கியல்பான மாற்றங்களைப்பெற வேண்டியாயிற்று. சமஸ்கிருதச் சொல்லொன்று நேர்வரவாகத் தமிழில் தழுவப்படுகையில் தமிழ்க்கில்லாத சமஸ்கிருதச் சிறப்பொலிகளைக் கொண்ட எழுத்துக்கள்தமிழொலிக் கிசைவான எழுத்துக்களாக மாற்றம் பெறுதல் தமிழிலக்கணத்துக்கும் உடன்பாடே. அவ்வகையில், சமஸ்கிருதத்தில் சிறப்பெழுத்தான 'ஶ்', தமிழில் 'ச்' எனவும், 'ஶி' தமிழிற் 'சி' எனவும் மாற்றமுறவே நமஶ்ஶிவாய மந்திரம் தமிழில் 'நமச்சிவாய' ஆயிற்றாம்.

எனவே, மேற்கண்டவாறு, சைவசித்தாந்த ஐம்பொருள்களை குறிக்கவுள்ள ஐந்தெழுத்துக்களுக்கும் அதிகமாகத் தமிழ் ஐந்தெழுத்தில் 'ச்' என ஒன்று இடம் பெறவந்தது, தமிழிற் செய்யுளோசை இசைவு முதலாகச் சொல்லக் கூடிய வேறு காரணங்களுக்காகவன்று. உண்மையான பஞ்சாக்ஷரத்தில் உள்ள ஒலிவடிவையும் அது குறிக்கும் அர்த்தப் பயனையும் எஞ்சாமல் தழுவும் பொருட்டேயாம் என்க.

மந்திர மொழி வடிவங்களுக்கு அவற்றின் ஆதார நூல்களிற் காணும் வடிவமே பிரமாணம். சமஸ்கிருத நூல்களில் 'நமஶ்ஶிவாய' வடிவமே ஏகபோகமாயுள்ளது. தமிழ் நூல்களிலும் 'நமச்சிவாய' வடிவமே ஏகபோகமாயிருத்தல் கண்கூடு. ஆதலின், எழுதும் போதெல்லாம், உச்சரிக்கும் பொழுதெல்லாம் 'நமச்சிவாய' என்றே எழுதியும், உச்சரித்தும் பயன்படுத்திக் கொள்ளல் நம்மவர் தலைக்கடனாகும். இம்மரபு தழுவப்படுவதன் அவசியத்தை வற்புறுத்துவது போல் அமையும் திருமந்திர மேற்கோள் ஒன்று இங்கு கருதத் தகும். திருமந்திரம் 905 ஆஞ் செய்யுளில் முதலடி 'வாறே சிவாயநமச்சிவாயநம' என்றிருக்கும். இங்கு சொல்ல வந்தது நமச்சிவாய மந்திரம் பற்றியல்ல. அதன் மறுநிலையாகிய 'சிவாயநம:' பற்றியது அது. அச்சிவாயநம: என்பதை இருமுறை சொல்லிய தொடர்பில் முதற்சொல் நம : என முடிய அடுத்த சொல் சிவாய எனத் தொடங்க நேர்கிறது. இந் நம: வில் உள்ள விசர்க்க ஒலிப்பயனும் அர்த்தப்பயனும் வழுவாமற் கொள்ளும் பாங்கில் திருமூலர் அதன் (விசர்க்க) மாற்றொலியாகிய 'ஶ்' குச் சமமான 'ச்' ஒலி கொடுத்து, 'சிவாயநமச்சிவாய நம' என இங்கு மொழிந்திருக்கிறார்.

இதன் மூலம் அவர், சமஸ்கிருதத்தில் உள்ள விசர்க்க மாற்றமான 'ஶ்' ஒலிக்குச் சமமான 'ச்' ஒலி தமிழ் ஐந்தெழுத்தில் வழுவாமற் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார் ஆகின்றார்.

## பிற்குறிப்பு :

'நமஃப் ஶிவாய' என்ற மந்திரப் பொருளையே, கோஷமாக எடுத்துரைக்கும் பொருட்டு எழுந்த தொடர் வாக்கியமே, நம்மிடைப் பிரபல்யமாயிருக்கும்.

*'நம : பார்வதீ பதயே'*

என்ற கோஷம்,

***நம : ஶி வாய – வணக்கம் சிவனுக்கு***
***நம : பார்வதீ பதயே – வணக்கம் பார்வதி*** பதிக்கு (சிவனுக்கு)

என்ற பொருளொற்றுமை இவற்றிடை உண்டு.

முன் '**ஶி**' இன் முன் வந்த விசர்க்கம் 'ஶ்' ஆக மாறியொலித்தமை கண்டோம். அதுபோல் இங்கு 'பா' வின் முன் வரும் விசர்க்கமும் 'ஃப்' என ஒலி மாற வேண்டிய விதி சமஸ்கிருத இலக்கணத்துக்கு உண்டு. இவ்வொலியானது 'ப்' ஒலியைப்பட்டது படாமல் ஒரு அரைகுறை ஒலியாக உச்சரிக்குமளவினதாம். ஆகவே இதனை உச்சரிக்கும் போதும், எழுதும் போதும் (தமிழில்) **நமஃப் பார்வதீ பதயே** என உச்சரிப்பதும் எழுதுவதும் முறையாம். அன்றி, விளக்கவீனமாக,

*'நமப்பார்வதீ பதயே'*

என உச்சரிப்பதும் எழுதுவதும் முறையன்றாம்.

வெறுமனே நம பார்வதீ பதயே என யாருஞ் சொல்லார். தவறாகவாவது 'ப்' சேர்த்தே சொல்வர். இதே கடைப்பிடி 'நமச்சிவாய' வழக்கிலும் இருத்தல் அவசியமாகும்.



# சைவ நாற்பாதங்கள்

காயத்திரி பாண்டுரங்கன். 'பாக்கிய வித்தியாலயம்' மாத்தளை

நான்காவது உலக சைவ மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுள் மத்திய பிரிவில் முதற் பரிசு பெறும் கட்டுரை

பரந்து கிடக்கின்ற இந்தப் புண்ணிய பூமியிலே மனிதனாக பிறப்பெடுத்த நாம் இவ்வுலகில் செயற்கரிய செயல்களைச் செய்து முத்தி இன்பத்தை அடைவதே எமது முக்கிய குறிக்கோள் ஆகும். அதற்கான மார்க்கங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நெறிகளையும் எமது சைவசித்தாந்திகள் வகுத்து உள்ளனர். இந்த நான்கு நெறிகளையும் கடைப்பிடித்து முத்தியடைந்த நாயன்மார்கள் பலரை அவர்களுடைய வரலாறு வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. எமது ஆன்மீக வாழ்வு அரும்பி, மலர்ந்து, காய்த்துக் கனியாவதற்கு வாய்த்த நான்கு சைவ சாதனங்களாக மேற்கூறிய நான்கு நெறிகளும் விளங்குகின்றன. முத்தியில் நாட்டமுடையோர் இவற்றுள் எதைப் பின்பற்றி ஒழுகினாலும் அது முடிவிலே ஞானத்துக்கு இட்டுச் சென்று இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய பரமபதத்தை நல்கியே விடும்.

சரியை மார்க்கமானது கடவுளுக்கு நமது, மனம், மொழி, மெய் ஆகியவற்றாலே தொண்டு செய்தலாம். அடியார்கள் தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றை இறைவனுக்காக்கி வாழ்ந்தனர் என்று மெய்யடியார் சரித்திரங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. சரியை நெறியை "தாச மார்க்கம்" என்று சொல்வது வழக்கம். தாதன் அல்லது தாசன் என்றால் அடிமை அல்லது தொண்டன் என்பது கருத்து. திருநாவுக்கரசர் இறைவனை வழிப்பட்ட நெறி இது.

*"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி என்றும்*
*அலைபுனர் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே"*

என்று அவருடைய பாடல் அறிவிக்கின்றது. அடியார் தினங்களைக் கொண்டாடுதல், அடியாரை வழிபடுதல், மகேசுவர பூசை செய்தல் என்பன யாவும் சரியைத் தொண்டில் அமைகின்றன. சரியை மார்க்கம் ஆணவத் தடிப்பைக் குறையும்.

கிரியை என்பது விதிப்படி செய்யும் சிவ பூசையாகும். புதிய வாசனையுள்ள மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது என்பன இதற்கு உபகரணங்கள். பூசைத் திரவியங்கள் முதலியவற்றை மந்திர செபத்தாற் புனிதப்படுத்தி இறைவனை அவ்விடத்தில் எழுந்தருளச் செய்து மனம், மொழி, மெய் ஒருமித்து பக்தி சிரத்தையுடன் பூசை செய்தலே கிரியை வழிபாடாகும். இறைவனைத் தந்தையாக பாவனை செய்து வழிபடும் முறை இது. எனவே, இதனை "சற்புத்திர மார்க்கம்" என்று வழங்குவர். கிரியாவான்களை "முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்" என்று சுந்தரர் வணங்குகிறார். பூசலார் என்ற மெய்யடியார் உருவாக்கிய மனக்கோயிலிலே இறைவன் விரும்பி எழுந்தருளினான் என்று பெரியபுராணம் கூறுகின்றது. அவர் கிரியை நெறி நின்று கடவுளை அடைந்தவர். சண்டேஸ்வர நாயனாரும் கிரியை வழிபாடு செய்து முத்தியடைந்தவர்.

கிரியை நெறியின் பயன் கடவுளுக்கு அருகில் செல்லும் பேறுபெறல். "நான்,எனது" என்ற அகங்காரத்தை தகர்த்தெறியும் நெறியாக இது விளங்குகிறது.

இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் நெறி யோகம் எனப்படும். இதை "சக மார்க்கம்" என்றும் குறிப்பிடுவர். யோகம் என்பதன் கருத்து "சேர்க்கை" என்பதாகும். யோகப் பயிற்சியினால் ஆற்றல் பெறலாம்.

ஞானியர் தம் வாழ்விற் காணப்படும் அளவிறந்த அற்புதங்கள் இந்த ஆற்றலின் வெளிப்படையாகும். எனினும் மெய்யடியார்கள் இந்த அற்புதங்களை ஒரு பொருட்டாக மதித்திலர். திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மாருடைய வாழ்க்கையில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றைச் செய்யும் ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. ஆனால் அவர்கள் தமது ஆற்றலால் அவற்றை செய்ததாக ஒருபோதும் எண்ணினாரல்லர். இறைவன் அருளால் அவை நிகழ்ந்ததெனக் கொண்டனர். யோகம் எட்டு அங்கங்களைக் கொண்டது. அதனால் அதனை அட்டாங்க யோகம் என்பார் பெரியோர். இவை முறையே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரனை, தியானம், சமாதி என்பனவாகும்.

சரியை, கிரியை, யோகம், ஆகிய மூன்று சாதனங்களும் கைவரப்பெற்ற ஒருவர் ஞானசாதனைக்கு உரியவராகின்றார். உண்மையிலே முதற் சொன்ன மூன்றும் இறுதிச் சாதனைக்கு இட்டுச் செல்லும் படிகள் என்று சொல்லாம். நான்கு வேதங்களும், புராணங்களும், ஆகமங்களும், ஞானமே முத்திக்கு வழி என்று உறுதி கூறுகின்றன. இந்த ஞானமாகிய மெய்யுணர்வைப் பெறுவதற்கு ஒருவர் ஆகமங்கள், புராணங்கள் சாத்திரங்கள் முதலிய சமய நூல்கள் எல்லாவற்றையும் கற்றுணர்தல் வேண்டும். அவ்வாறு கற்றுணரும் போது சைவசித்தாந்தம் தவிர்ந்த பிற எல்லாம் ஆன்ம அறிவுக்கு உட்பட்டவை என்றும் கீழானவை என்றும் தோன்றும். பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் தன்மையை உள்ளவாறு உணரத்தரும் சித்தாந்த ஞானமே மேலான உண்மையான ஞானம் என்ற தெளிவு பிறக்கும். இதனை திருவள்ளுவர்,

*"எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள்*
*மெய்பொருள் காண்ப தறிவு"*

என்று கூறுகின்றார்.

இத்தகைய ஞானத்தை பெறுவதற்கு நல்ல வழி ஒன்று உண்டு. அது "ஞான பூசனை" எனப்படும். ஞான நூல்களை ஒருவர் படித்தல், தாம் படித்தவற்றை மற்றவர்களுக்கு படிப்பித்தல்,, மெய்ப்பொருளை ஞான ஆசிரியரிடம் கேட்டல், தாம் கேட்ட பொருளை பக்குவமுடையோருக்குச் சொல்லுதல், அந்த மெய்ப்பொருள் பற்றிச் சிந்தித்தல் ஆகிய ஐந்துமே ஞான பூசனை என்று சொல்லப்படும். நம்முடைய சமய குரவர்களுள் மாணிக்க வாசகர் ஞான மார்க்கத்தில் நின்று முத்தி பெற்றவர். சீவன் முக்தராயிருந்த நிலையில்,

*" முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்*
*பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்*
*சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"*

என்று பாடியுள்ளார்.

முத்தியில் நாட்டமுடையோர் இந்த நான்கு நெறிகளில் எதைப் பின்பற்றினாலும் முத்தியின்பம் அடையலாம் என்பது திண்ணம். ஞானத்தை நாம் ஒரு கனிக்கு ஒப்பிட்டால் சரியை அரும்பு என்றும் கிரியை மலர் என்றும் யோகத்தை காய் என்றும் கூறலாம். அரும்பாகத் தோன்றியது இடையூறு ஒன்றும் இல்லாவிட்டால் படிப்படியே வளர்ச்சியடைந்து கனியாவதே இயல்பு. அது போலவே சரியை நெறியை கடைப்பிடிப்பவர் அவமரணம் போன்ற இடையூறுகள் நேரா விட்டால் படிப்படியே பருவம் முதிர்ந்த ஞானம் எய்தி முடிவிலே மேலான வீடுபேற்றை அடைவது உறுதி. சாதாரண மக்களுக்குச் சரியை நெறியை பின்பற்றுவது எளிதாயிருக்கும். அந்த நெறியில் பயிலத் தொடங்கினால் ஏனைய படிகளுக்கு ஏறுவதும் இலகுவாகக் கை கூடும். ஆனால் முற்பிறப்பில் விட்ட குறையைத் தொடருவோர் சிலர் எடுத்த எடுப்பிலேயே ஞான நெறியையேனும், யோக நெறியையேனும் கிரியை நெறியையேனும் கடைப்பிடித்து விரைவிலே முத்தி எய்திவிடுவர். அத்தகையோர் சரியை நெறியைக் கடைப்பிடித்தாலும் விரைவிலே ஞானப்படியேறி முத்தி பெற்று விடுவர். பெரிய புராணம் கூறும் நாயன் மாருடைய வாழ்க்கையில் வைத்து இதனை விளங்கிக் கொள்ளலாம். முன்பு செய்த தவத்தின் ஈட்டம் முடிவிலே இன்பமான– அன்பினை எடுத்துக் காட்டி ஆறு நாளிலே ஞானம் பெற்றுப் பரமுத்தியை அடைந்தார் வேடராகிய கண்ணப்பர். இங்ஙனம் சைவநாற்பாதங்கள் ஆன்மாக்களை பிறப்பிறப்புத் துன்பங்களினின்றும் விடுவித்து ஈடேற்றத்திற்கு வழி சமைக்கின்றன.

# திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

கே. ரவிச்சந்திரன், கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை

நான்காவது உலக சைவ மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுள் மேற்பிரிவில் முதற் பரிசு பெறும் கட்டுரை

*'தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி*
*அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே- எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவாசகம் என்னும் தேன்"*

இவ்வருமையான வெண்பா, திருவாசகத்தை "தேன்" எனக் குறிப்பிடுகின்றது. துன்பம் நீக்கி இன்பம் பயக்கும் உயர் பொருள் என்று உறுதியாகக் கூறுகின்றது. பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்குகந்த பற்றுக்கோடு எனத் திட்டமாகக் கூறுகின்றது.

தேன் சுவையுடையது; இனிமை நிறைந்தது; பலவித ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியது; நோய்க்கு மருந்தாக அமைவது. வண்டுகள் இன்னிசை பாடி நன்மலர் நாடி சிறுசிறு துளிகளாக சேகரித்ததுதான் தேனாகக் கிடைக்கின்றது. இதே போன்ற சிறப்புடையதுதான் திருவாசகமும்.

திருவாசகம், அது அழகிய வாசகம், சிறப்புடைய வாசகம், பெருமதிப்பு உள்ள வாசகம், வீடு பேற்றை விரும்புவோரது உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருட்பாக்களால் ஆகிய நூல் என்பது இதன் பொருள். திருவாசகம், படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். இந் நூலை ஒருமுறை ஓதினாலும் உயிர் சிவத்தன்மை எய்தும். எளிய சொற்களால், இனிய அமைப்பால், உயர்ந்த பொருள்களால், நிறைந்த இசையால் எல்லோரையும் தன்வசப்படுத்தும் தனிப் பெருந்தகவுடையது. வேதத்திலும் உயர்ந்தது. ஆகமச் சிறப்பை அள்ளித்தருவது. மணி போன்ற சொற்களால், பக்திப் பரவச உணர்வினால் அழுது அழுது அவனடியடையவும், அன்பு நெறியினால் ஆனதுதான் தித்தித்தமுதூறும் திருவாசகத்தேன். இறைவனால் மணிவாசகர் என்று போற்றப்பட்ட திருவாதவூரடிகளே இந்நூலின் ஆசிரியர். தித்திக்க தித்திக்க திருவாசகத்தேன் பாடிய மாணிக்கவாசகர் என்று இவர் உயர்வாக அழைக்கப்படுகிறார். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது உலகமொழி.

*"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்*
*காரணன் உரையெனும் ஆரண மொழியோ?*
*ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்*
*மலர்வாய்ப்பிறந்த வாசகத்தேனோ?*
*யாதோ சிறந்த தென்குவீராயின்*
*வேதம் ஓதி, விழி நீர் பெருக்கி*
*நெஞ்சு நெக்குருகி, நிற்பவர் காண்கிலேம்*
*திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின்*
*கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்*
*தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய*
*மெய்ம்மயிர்ப் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி*
*அன்பர் ஆகுநர் அன்றி*
*மன்பதை உலகில் மற்றையர் இலரே"*

என்று சிவப்பிரகாச சுவாமிகள் மிகத் தெளிவாக திருவாசகப் பெருமையை விளக்கியிருக்கிறார். மேலும் திருவாசகத்தை 'தேன்' என்றே அவரும் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய சீரும் திருவும், செந்தமிழ்ப் பொழிவும் மிக்க திருவாசகம் இறைவனால் எழுதப்பட்டது. மாணிக்கவாசகர் பாடியதைக் கேட்டு மகிழ்ந்த தான் மட்டுமல்ல தன்னடியார்களும் பாடிப்பரவி பக்திச்சுவையில் திளைக்க வேண்டும் என்ற நோக்கில் அவற்றை எழுதினார். **வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது** என்று குறிப்பெழுதியதுடன் அழகிய சிற்றம்பலமுடையான் என்ற ஒப்பமும் இட்டு, இப்பாடல்களின் பொருள் சிவனே என்று அனைவரும் அறியச் செய்தருளினார். திருவாசகத் தேன் என்று கூறினால் அந்த திருவாசகத்தின் பொருளாகிய சிவனும் தேனான தேனிலும் உயர்ந்தவனாகத் தானே இருக்க முடியும்?.

தேனையும், பாலையும் கன்னலையும் ஒத்தினிய கோன் என்று கூறிய மாணிக்கவாசகர் சிவனை "தேனைப்பாலை கன்னலின் தெளிவை" என்று குறிப்பிடுகின்றார். "தேறலின் தெளிவே" என்றும் "ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த

